உ

கடவுள்துணை.

# மார்க்கண்டேயர்புராணம்

## மூலமும்உரையும்.

இது

திரிசிரபுரம் புத்தகயாபாரம்

**ஆறுமுகம்பிள்ளையவர்கள்**

கேட்டுக்கொண்டபடி

புதுவை,

**குழந்தைவேலுக்கவிராஜர்**

பாடியருளினமூலத்துக்குப்

பாட்டுகளின்பதங்தோறும்பிரதிபதங்தோன்றப்

பொழிப்புரையாக

மஹாவித்வஜ்ஜனசேகரராகிய- ம-ா-ா-ஸ்ரீ- திரிசிரபுரம்

**வி-கோவிந்தபிள்ளை**

அவர்களாலே செய்வித்து

புரசைப்பாக்கம்

**ஏழுமலைப்பிள்ளையவர்களால்**

தமது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது.

REGISTERED COPY RIGHT.

1871.

உ

கடவுள்துணை.

# மார்க்கண்டேயர் புராணம்

## மூலமும்-உரையும்.

## காப்பு.

வித்தைமுத்தி விளங்கும்பராபர
சத்தியீன்றகரிமுகத்தாணுவைப்
பத்தியாகப்பணிந்தொருவேதியன்
பெற்றபேற்றை யுலகினிற்பேசுவாம்.

(இதன்பொழிப்புரை.)

ஞானரூபமாகவும் மோக்ஷரூபமாகவும் விளங்குகின்ற பராபரசத்தியானதேவிபெற்ற யானைமுகக்கடவுளை முன்னே பத்திவிசுவாசத்துடனே வணங்கிக்கொண்டு பின்பு மார்க்கண்டேயரென்கிற ஒருபிராமணர் பெற்ற சிவபூசைப்பலனை உலகத்தாரெல்லாம் அறியும்படி புராணமாகப்பாடுகிறோம் என்றவாறு.

## பாயிரம்.

### கடவுள்வாழ்த்து.

விநாயகர்.

காரடர்ந்தமேனியனைப்பெருநால்வாயானைமறைக்கதைகடாழ்ந்த
பாரடர்ந்தசெவியானைமும்மதங்கொளைங்கரனைப்பழமையான
சீரடர்ந்தகுஞ்சரனைத்தமிழுகந்ததிரவியனைத்திருக்கண்ஞானப்
பேரடர்ந்தகுடவயிறுமுடையானைப்பணிந்தேத்திப்பேசுவாமே.

(இ-ள்) கருமைசெறிந்த திருமேனியையும் பெரிதான அசைகிறவாயையும் வேதசரித்திரங்களை அடியார்கள்சொல்லக் கேட்பனவான விரிவுகொண்டசெவிகளையும் மூன்றுமதங்களையுங்கொண்ட ஐந்துகைகளையும் பழமையான சிறப்புப்பொருந்தின யானைமுகத்தையும் தமிழ்ப்பாடல்களைத் திரவியம்போல் விரும்புதலையும், திருக்கண்களிலே ஞானப்பெருமையும்பொருந்தின குடம்போல் வயிற்றையுமுடைய கணபதியை வணங்கித்துதித்துமார்க்கண்டேயர் சரித்திரத்தைச்சொல்லக்கடவோம் என்றவாறு. (உ)

பரசிவம்.

மலைமகளையிடத்தில்வைத்துமதியணிசெஞ்சடையானைமழுக்கையானைச்
சிலைமதனன்றனையெரித்தநுதலோனைநடனபதச்சேர்வையானை

நிலையளவுக்கடங்காதபழம்பொருளையஞ்செழுத்தினிலைநின்றேனை
வலைவிசிறும்பெருமானைக்கறைமிடற்றண்ணலைவணங்கிவழுத்துவாமே.

(இ-ள்.) பார்வதியை இடப்பாகத்திலேகொண்டு சந்திரனை அணிந்த சிவந்தசடையையுடையராய் மழுவைக்கையிலேகொண்டு கரும்புவில்லையுடைய மன்மதனைத் தகனம்பண்ணின நெற்றிக்கண்ணைக்கொண்டவராய் ஆனந்தக்கூத்தாடுகிற சேர்க்கையுள்ள திருவடிகளையுடையவராய் நிச்சயித்துச்சொல்லு மளவுக்கடங்காதிருக்கிற புராதனப்பொருளானவராய், பஞ்சாக்ஷரத்திலே நிலைகொண்டுள்ளவராய், வலைவீசின பெருமையுள்ளவரான நீலகண்டக்கடவுளை வந்தனைசெய்து மார்க்கண்டேயர் புராணத்தைச் சொல்லக்கடவோம்—எ-று. (௩)

## பராசத்தி.

முதிராதமுலையாளாலிலைவயிற்றினுடையாளைமூத்தாடன்னைப்
புதியாளைப்பழையவளையுலகமெலாம்பெற்றெடுத்தபுவனத்தாளைக்
கெதியாளைமலைமகளையெவ்வுயிர்க்குமுயிரானகிருபையாளை
விதியாளைமுக்கணனார்பதியாடன்மலரடியைவிரும்பிக்கொள்வாம்.

(இ-ள்.) முதிர்ச்சியாகாததனங்களையும், ஆலிலைபோல்வயிற்றையும், எல்லாருக்கும் மூத்தவளாந்தன்மையையும், புதியதன்மையையும், பழையதன்மையையும், எல்லாவுலகங்களையும்பெற்றுக்கொண்ட இருநூற்றிருபத்து நாலுபுவனங்களையுடையவளாந்தன்மையையும், எல்லாருக்கும் கதிரூபமாயிருத்தலையும், மலையரசனுக்கு மகளாயிருத்தலையும், எந்தஉயிர்களுக்கும் உயிர்போலிருக்கிறகிருபையையும், எல்லாச்செய்கைகளையும் விதிக்குந்தன்மையையும், திரிநேத்திரதாரியை நாயகராகவுடைமையையும் உள்ள பராசத்தியினுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைவிரும்பித் துதிசெய்து மார்க்கண்டேயர் புராணத்தைச் சொல்லுவாம்—எ-று. (௪)

## திருமால்.

இருள்வெளியாயொளிக்கிருளாயெவ்வுலகுக்குமோர்பொருளாயேகமானை,
பெருமுதலைமலரோனைத்தந்தோனைப்பாண்டவர்க்குப்பெருந்தூதோனைத்,
திருவிருக்குமார்போனைப்புயநான்குமுடையோனைத்திரண்டமேகப்,
பருவநிறமேவியனைச்சங்காழிப்பெருமானைப்பணிதல்செய்வாம்.

(இ-ள்.) இருளுக்குவெளியாகவும், ஒளிக்கு இருளாகவும், எந்தவுலகங்களுக்குந் தானே ஏகவஸ்துவாகவும், தானே தானாகவிளங்குகிற பெரிய முதற்கடவுளாகவும், திருவுந்திக்கமலத்திலிருக்கிற நான்முகனைச்சிருஷ்டித்தும், பாண்டவர்களுக்குப் பெரிதான தூதனாகியும், லட்சுமிவிளங்குகிற மார்பையும், சதுர்ப்புஜங்களையும், கூட்டங்கொண்ட பருவகாலத்து மேகநிறம்போலுந் திருமேனியையும், சங்குசக்கரங்களைக்கொண்ட பெருமையையுமுடைய திருமாலை வணங்கி மார்க்கண்டேயர் புராணத்தைப் பாடுகிறோம்—எ-று. (௫)

## முருகவேள்.

வேளிர்மலைச்சார்புதனிற்றினைப்புனத்தில்வள்ளியர்க்காய்வேங்கையான
ஆழியன்றன்மருகோனையாயிரங்கண்ணன்புதல்விக்கதிகமோகப்
பாழியனைப்பரமகுருநாதாந்தக்குருபரனைப்பழையவென்னை
யாளியனைப்பன்னிருகையறுமுகன்றனிணைமலர்த்தாட்கன்புசெய்வாம்.

(இ-ள்.) வேளிர்மலையென்கிற அந்தமலைப்பக்கத்திலே தினைப்புனங் காக்கின்ற வள்ளியம்மைக்காக வேங்கைமரமாகி சக்கராயுதக்கடவுளுக் குமருமகனாகியும், இந்திரன்குமாரியான தெய்வயானைக்கு அதிகமோக விகாரத்தையுடைய பரமகுருவான நாதாந்தகுருதேசிகனாய் பழைய அடியானான என்னை அடிமைகொண்டருளின பன்னிரண்டுகைகளைக்கொண்ட ஆறுமுகக்கடவுளுடைய இரண்டுதாமரைமலர்போலும் பாதங்களுக்குப் பத்திவிசுவாசஞ்செய்து மார்க்கண்டேயர் புராணத்தைப் பாடுகிறோம்—எ-று. (௧)

## நாமகள்.

வடகலைக்குந்தென்றமிழ்க்குமறைமுதற்குமந்தவிதம்வகுத்தநூற்கும்
அடைவுடனேவளந்தெரியவயனுடையநாவிலகலாமனின்ற, நடைமுத
லைப்பாரதிவெண்டாமரைமேற் றமிழ்ஞானங்டக்கைபூண்ட, சுடர்மதிய
முகத்தாளைவெண்ணிறத்தாள்மலர்த்தாளைத்துணையாக்கொள்வாம்.

(இ-ள்.) ஆரியமொழிக்கும், தமிழ்மொழிக்கும், வேதமுதலியவைகளுக்கும், அவ்விதமாகவே இருஷிகள் சொன்ன புராணமுதலியவைகளுக்கும், கிரமத்துடனே அவைகளின் உண்மைவளந்தெரிவதாக பிரமாவினுடைய நாவினின்று நீங்காதிருக்கிற காயத்திரிரூபமாக வுலாவுகின்ற தலைவியானபாரதியாய் வெண்டாமரை மலர்மேலிருந்து எல்லாருந்தமிழறிவதாக நடத்துதலைச்செய்கிற பூரணசந்திரன்போலுமுகமும் வெள்ளைநிறமுமுள்ள சரஸ்வதியினுடைய தாமரைமலர்போலும் பாதங்களை மார்க்கண்டேயர்புராணம்பாட துணையாகக்கொண்டு பாடுகிறோம்-எ-று

## நந்திதேவர்.

தாழ்சடையோன்றழற்கரத்தோன்றவஞானப்பிரணதியன்சமயவேத
வாள்கரத்தன்அமரர்முடிதாக்கியிருபதஞ்சிவந்தவரப்பிரசாதன்
வேள்மதனன்றனையெரித்தவிமலர்கயிலைக்காவல்மேன்மைபூண்ட
நாளதியனெனையாண்டநந்திதிருதாளிணையைநாவிற்சேர்ப்பாம்.

(இ-ள்.) தொங்குகின்றஜடையையும், நெருப்பைத்தாங்குகிறஒருகை [illegible]முடையகடவுளைக்குறித்துத்தவஞானம்வேண்டி எல்லாரும்வணங்குந்தகைமையும்ஆறுசமயங்களுக்குமிடமானவேதமாகியவாளையேந்துகிறகை[illegible]ம்தேவர்கள்வணங்குகிறதினாலே அவர்கள்தலைகளிலுள்ளகிரீடங்களப்பட்டுச்சிவந்திருக்கிறஇரண்டுபாதங்களும்யார்க்கும்கேட்டவரங்களைக் கொ[illegible]த்தலும் மன்மதவேளை யெரித்த பரிசுத்தருடையகயிலாசமலைக்குக்

காக்குந்திறமையுங்கொண்ட காலாதீனராய் அடியேனையும்அடிமையாக ஆண்டருளின நந்திதேவருடையஇரண்டுதிருவடிகளையும் மார்க்கண்டேயர்புராணம்பாட நாவிலேகொண்டுதுதிப்போம்—எ-று. (அ)

## அறுபத்துமூவர் முதலியோர்.

முளைவாரியமுதளித்தமாறனடியுந்தொழுதுமுன்னாளெச்சில்
அழல்கரத்தாற்குணவளித்தவரதனடிதொழுதேத்தியரிவைமோகங்
குழையவனுகாமல்முத்திபெறுநீலகண்டரடிகொழுகியேத்தி
மழலையறுத்தடியார்க்குவிருந்தளித்ததொண்டரடிவணங்குவாமே.

(இ-ரை.) நெல்முளைவாரிவந்து சிவனடியாருக்கு அமுதுசெய்வித்த இளையான்குடிமாறனுடைய திருவடிகளையும் வணங்கிக்கொண்டு முன்னாளிலே தாமுண்டு ருசியறிந்தவுணவை மழுவேந்தினகையையுடைய கடவுளுக்கு உண்ணும்படிதந்த கண்ணப்பநாயனருடைய பாதங்களையும்வணங்கித்துதித்து வருந்துவதாகப் பெண்மயக்கம்வராமற்காத்துமோக்ஷம்பெற்ற திருநீலகண்டக் குயவனுருடையபாதங்களை மனங்கனிந்து தோத்திரஞ்செய்து பிள்ளையையறுத்துச் சிவனடியாருக்குவிருந்துசெய்த சிறுத்தொண்டருடையபாதங்களையும் மார்க்கண்டேயர்புராணம்பாட வணங்குவாம்—எ-று. (கூ)

முத்திபெறுமறுபத்துமூவரடியுந்தொழுதுமுதிர்ந்தஞான
பத்தியிலாமாமயிடசங்காரிபதமிறைஞ்சிப்பத்திரகாளி
சுத்திமலரடிவணங்கியஷ்டதிக்கும்புகழ்காவற்றுணையாய்நின்ற
வெற்றியுளநிஜரூபவெம்பிரான்வயிரவர்தாள்விரும்பிக்கொள்வாம்.

(இ-ரை.) அப்படியே மோக்ஷம்பெற்ற அறுபத்துமூன்று நாயன்மார்கள்பாதங்களையும்வணங்கி முதிர்ச்சியான ஞானபக்திகளில்லாத பெரிய மகிடாசுரனைச் சங்கரித்த துர்க்கையினுடைய பாதங்களையும் வணங்கிப் பத்திரகாளியினுடைய பரிசுத்தமானமலர்போலும் பாதங்களையும்வணங்கிஎட்டுத்திக்கும் புகழும்படிகாக்குந் துணையாகிநிற்கிற ஜயம்பொருந்தினநிஜவடிவுகொண்ட எமதுகடவுளான வயிரவருடையபாதங்களை வேண்டி மார்க்கண்டேயர்புராணம்பாட மனத்தாலேதியானிப்போம்—எ-று.()

திருநாவுக்கரசரையுஞானசம்பந்தரையுநனிசெழுமையான
திருவாதவூரரையும்விடையோனைத்தூதுகொண்டதிறமையான
பெருமாளையும்புகழ்ந்துதந்தைபதஞ்சிதைத்திடுமெம்பிரானைப்போற்றி
இருநெறியோர்தமைவாழ்த்தித்தில்லைவாழந்தணர்தாளிறைஞ்சுவோமே.

(இ-ரை.) திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தரையும், மிகவுஞ் செழிப்புள்ள திருவாதவூரரையும், பரமசிவனைத்தூதுபோகச்செய்தசார்த்தியரான சுந்தரமூர்த்தியையும்தோத்திரஞ்செய்து தகப்பனுருடைடகாலைவெட்டின தண்டீசுவரரையும் துதித்து இன்னமும்பெருமைபொ

ருந்தின சைவமார்க்கத்திலுள்ளவர்களையும் கொண்டாடி தில்லைவாழந்தணர்பாதங்களையும் மார்க்கண்டேயர்புராணம்பாடவணங்குவாம்-எ-று.

மாதவத்தோர்தங்களையும்வானவர்களனைவரையுமகிழ்ந்துபோற்றி
வேதமொழிதவறாதவியாசரையும்பணிந்தேத்திவிந்தையோர்கள்
பாதமலரைத்தொழுதுகவிவாணர்தண்மலர்த்தாள்பணிந்துபோற்றிப்
பூதலத்திற்றென்கூடற்சங்கத்தார்மலர்ப்பதமும்போற்றுவோமே.

(இ-ள்.) பெரியதபோதனர்களையும், முப்பத்துமுக்கோடிதேவர்களையும் களிகூர்ந்துகொண்டாடி தவறாத வேதப்பிரசுரரான வேதவியாசரையும்வணங்கித்துதித்து அஷ்டசித்திகளையும் பெற்றவர்களுடைய பாதபுஷ்பங்களையும்வணங்கி கவிராஜர்களுடையகுளிர்ந்தமலர்போலும் பாதங்களையும்வணங்கித்துதித்து உலகத்திலே மதுரையிலிருந்த சங்கத்தாருடைய மலர்போன்றபாதங்களையும் துதிப்போம்—எ-று. (௰௨)

## புராணவரலாறு. வேறு.

திருக்கடவூர்சூழ்சிறப்பையுநகரச் சிறப்பையுமுரைத்தொருமறையோன்
விருப்பமதாகமகவினைவேண்டிவெள்விடையனிற்றவமியற்ற
வுருப்பொறுவயதுமெண்ணிரண்டாகவுதித்ததுந்தந்தைதாய்சலித்திட்
டிருக்கவுமகன்றண்டிருக்கடவூரினிறைவயிற்றவமியற்றியதும்.

(இ-ள்.) திருக்கடவூரைச்சூழ்ந்த நாட்டுச்சிறப்பையும் நகரச்சிறப்பையுஞ்சொல்லி ஒருமிருகண்டுமுனிவரான பிராமணர் வெண்மைபொருந்தின இடபவாகனக்கடவுளைக்குறித்து விருப்பத்துடனே பிள்ளைவேண்டித் தவத்தைச்செய்ய அத்தவத்துக்காக உடம்பைப்பொறுத்த வயது பதினாறுகப்பிள்ளைபிறந்ததும் பதினாறுவயதளவுதானே நமக்குப்பிள்ளையென்று தகப்பனுந்தாயும் வியசனத்துடனிருக்குமளவில் அந்தப் பிள்ளையானவர் குளிர்ச்சிமிகுந்த திருக்கடவூரிலேபோய்ப் பரமசிவனைக்குறித்துத் தவஞ்செய்ததுவும்—எ-று. (௰௩)

சென்றிடவயதுமெண்ணிரண்டாண்டுசென்றதென்றெமன்பிடித்திடவே
அன்றவன்றூதையனுப்பியவாறுமந்தணன்வர்களைத்துரத்தி
வென்றதுமிவ்வாறெற்றர்போயமன்முன்விளம்பியவாறுமம்மறலி
கன்றிடவெழுந்துபூசுரனுயிரைக்கவர்பொழுதவனெதிர்த்துரையும்.

(இ-ள்.) அப்படிப் பூசையாகியதவஞ்செய்துகொண்டு காலங்கழியவயதுபதினாறுயிற்றென்று யமன் பிடித்துவரும்படி அக்காலத்திலே அவனுடையதூதர்களை யனுப்பினதும் அந்தப்பிராமணப்பிள்ளை சிவபூசைப் பலத்தினாலே அந்தத் தூதர்களைத்துரத்தி ஜயித்ததும் இப்படித்தங்களைத்துரத்தி ஜயித்தபடியைத் தூதர்கள்போய் யமனுக்குமுன்னே சொன்னபடியும் அதற்கு அந்தயமனானவன் மனங்கொதிக்க எழுந்துவந்து அ

ந்தப்பிராமணப்பிள்ளையின் உயிரைப்பிடிக்கும்போது அந்தப்பிள்ளை எதிர்த்துப்பேசினதும்—எ-று. (௰௪)

விண்டவனெதிர்த்தமொழியினுல்மறலிவெந்தழலெனவழன்றெழுந்து
கண்டர்தாட்கன்ப னென்றறிந்துயிரைக் கவர்தலாற்சிவன்முனிந்தெழுந்
பண்டைமாலயனுந்தேடியபதத்தாற்பகடனைச்சாடியபண்பும் [து
பிண்டமீரேழுசகங்களுமனுக்கள்பெருத்திடப்புவியுளோர்மொழியும்

(இ-ரை.) அப்படி அந்தப்பிள்ளை வேறுபாடாக எதிர்த்துப்பேசினபேச்சினுலே யமனுனவன் வெப்பமான நெருப்புப்போற்கொதித்தெழுந்து நீலகண்டக்கடவுள் பாதத்துக்குப் பத்தியுள்ளவனென்று தெரிந்தும் அந்தப்பிள்ளை உயிரைப் பிடித்ததினுலே பரமசிவன் கோபங்கொண்டெழுந்து முன்னே விஷ்ணுவும் பிரமாவும் தேடுவதானதிருவடியினுலே எருமைக்கடாவாகனத்தையுடைய யமனை உதைத்ததும் அண்டபிண்டங்களான பதினுலுலகங்களிலும் ஜீவகோடிகளதிகமாக உலகத்தார் யமன் அழிந்துபோனுனென்று சந்தோஷித்துப்பேசுகிறதும்—எ-று. (௧௫)

நன்றெனக்கேட்டு முகுந்தனுந்தேவர் நாயகனேடுரைத்ததுவும், கொன்
றைவேணியன்கேட்டெதிர்மொழியுரைத்துக் கூற்றினைமறுபடியெழுப்பி
அன்றுகட்டளையிட்டருளியப்படியு மவனுலகுயிரெலாங்கவர்ந்து, வென்
றிகொண்டதுவுமிப்பெருந்தமிழால் விளம்பினேந்தரணியோர்முன்பால்.

(இ-ரை.) அப்போது நன்ருயிற்றென்று திருமால் தெரிந்து பரமசிவனுடனே ஜீவகோடிகளதிகமாயினவென்றுசொன்னதும், அதற்கு கொன்றைமாலைதரித்த ஜடாமுடியையுடையகடவுள் விடைகொடுத்து மறுபடியும் யமனை எழுப்பிவிட்டு அப்போது அவனுக்குமுன்போல் நடக்கக் கட்டளைசெய்தருளினதும், பின்பு அந்தயமன் உலகத்துள்ள உயிர்களையெல்லாம்பிடித்து ஜயங்கொண்டதும் இந்தப் பெரிய தமிழ்நூலாலே உலகத்தார்முன்புசொன்னேம்—எ-று. ஆல்-அசை. (௰௬)

நன்னெறிக்கதையைஐமுகக்கடவுள்மலைமகணுயகிக்குரைக்கப்
பன்னிருகரத்தோன்கேட்டதைவேதவியாசர்பாற்பகர்ந்தனனவனு
மன்னதைச்சூதமாதவற்குரைக்கவவனுமங்நைமிசாரணியந் [தார்
துன்னியமுனிவர்க் கருள்கிரந்தமதாய்ச் சொன்னதைத்தமிழினுல்வகுத்

(இ-ரை.) இந்த நன்மார்க்கமுள்ள சரித்திரத்தை ஐந்துமுகங்களையுடைய கடவுள் மலைமகளான தமது நாயகிக்குச்சொல்லஅதைப்பன்னிரண்டுகைகளையுடைய முருகவேள் கேட்டிருந்து வேதவியாச முனிவருக்குச்சொன்னுர் அந்தவேதவியாசர் அந்தக்கதையை சூதபுராணிகருக்குச்சொல்ல அந்தச்சூதபுராணிகர் அந்தநைமிசாரணிய வனத்திலிருக்கிற முனிவர்களுக்குக் கிருபையுடனே கிரந்தவகையாகச் சொன்னதை தமிழ்விருத்தங்களாலே பெரியோர்கள் சொன்னுர்கள்—எ-று. (௰௭)

## நூலாசிரியர்.

ஆதிநாள்பெரியோர் மொழிந்திடும்விருத்த மாயதொண் ணூற்றெருடொன்
பதையு, நீதியாயறு நூற்றெருடுசிலவாகநிலைபெறவுரைத்ததாரொன்னில்
மேதினிபுகழும்புதுவையம்பதியில்விளங்கியவோச்சவீரப்பன்
மாதவக்குழந்தைவேலனற்றமிழாற்பெரியவர்மாபினில்வகுத்தான்.

(இ-ள்.) முன்னாளிலுள்ள பெரியோர்கள் சொன்ன விருத்தமாகிய தொண்ணூற்றென்பதையும் காவியவகையாக அறுநூறுடனே சில கூடவிரித்துச்சொன்ன நியாயொன்றுகேட்டால், உலகமெல்லாம்புகழுநின்ற புதுவைநகரிலேவிளங்குகின்ற ஓச்சனான வீரப்பன்செய்த பெரியதவத்தாற்பிறந்த குழந்தைவேலுக்கவிராஜன் நல்ல தமிழ்விருத்தங்களாகப் பெரியோர்கள் முன்னே சொன்னமுறையாகவேசொன்னான்—எ-று.()

## அவையடக்கம்.

சொற்கவிவாணர்முன்புநாயடியேன்சொன்னவிக்காதைபுமெதுபோல்
முற்கவிவாணர்மொழிதமிழாற்றின்முதுபுனல்விரசெனவோடப்
பிற்கெனப்பொசிசிற்றூறனீரோடல்போலெனச்சிறியவன்பிதற்ற
நற்கவியிதெனத்தமிழ்வலோரனைத்துநாடியெப்பிழைகளும்பொறுப்பார்

(இ-ள்.) எல்லாரும்புகழும்படியான கவிராஜர்களுக்குமுன்னே நாய்போன்ற அடியேன்சொன்ன இந்தச்சரித்திரமு மெதுபோலாமென்றால், முன்னுள்ள கவிராஜர்கள்சொன்ன தமிழ்க்கவிகளாகிய ஆற்றின்பிரவாகஜலமானது விரைவுகொண்டுசெல்ல அவ்வாற்றுக்குப் பின்புறங்களிலே கசிந்தூறுகிற சிறிய ஊற்றுநீரும் ஓடுதல்போலாமென்று சிறியேனை நான்குழறக்கேட்டு இது நல்லகவிதானென்று தமிழில் வல்லவர்கள் முழுதும் ஆராய்ந்து எவ்விதமானகுற்றங்களையும் பொறுத்தருளுவார்கள்—எ-று. (௰௧)

இன்னதென்றறியாச்சிறியவனுரைத்தவிளஞ்சொலைக்கவிவலோர்பொறுத்து, நன்னெறித்தமிழாய்க்கொள்வர்களிதனைநவின்றவர்கேட்டவரின்ப,
மின்னிசைக்கயிலைப்பராபரச்சுடர்வா ழின்பநற்பெருமைகள்பெற்றுத்
துன்னியகோடிகிளையுடனாலாஞ்சுவர்க்கவீட்டடைவர்கடிண்ணம்.

(இ-ள்.) தமிழ்வகை இன்னதென்றுதெரியாத, சிறியேன்சொல்லிய இளஞ்சொற்களையும் தமிழ்க்கவிகளில் வல்லவர்களான பெரியோர்கள் பிழைபொறுத்தருளி நன்மார்க்கமுள்ள தமிழ்க்கவியாகவே அங்கீகரிப்பார்கள் ஆகையால் இந்தச்சரித்திரத்தை விசுவசித்துப் படிப்பவர்களும் கேட்பவர்களும் இன்பம்விளங்குகின்ற கீர்த்திகொண்ட கயிலாயத்திலே பராபரச்சோதிபோல் வாழ்வதான இன்பரூபமான சாரூப்பியமாகுகிற நல்லபெருமைகளைமுன்னே பெற்றுப்பின்பு தம்மோடுகூடின கோடிகிளைகளுடனே நாலாம்பதவியான சாயுச்சியத்தையும் மெய்யே பெறுவார்கள்—எ-று. (௰௨)

பாயிரம் - முற்றிற்று.

# நாட்டுச்சருக்கம்.

பார்புகழ்ந்திடுநைமிசாரணியத்துப்படிமைச்
சீர்விரும்பினரனைவருந்திரண்டொருசார்பிற்
றார்விரும்பியசிவகதிமகிமைகள்சமயப்
பேர்பெறுங்கதைமொழிந்தனரிருந்தனர்பின்பு.

(இ-ள்.) உலகமெல்லாம்புகழ்வதான நைமிசாரணியவனத்திலே தவக்கோலமாகிய சிறப்பை வேண்டின எல்லா முனிவர்களுங்கூடி ஒருபுறத்திலேயிருந்து கொன்றைமாலையை அணியவேண்டின பரமசிவனுடைய மோக்ஷமகிமைகளையும் அந்தச்சிவசமயத்திலே பெருமைபெற்ற கதைகளையும் சொல்லிக்கொண்டிருந்தார்கள் பின்பு—எ-று. (க)

அகத்தியன்சதானந்தன்மாபுலத்தியன்புரோசன்
மகத்தவான்மிகன்சனகனன்கவுதமன்வதிட்டன்
பகுத்தறிந்தமாமுனிக்குழாமனைவரும்பாங்காய்
வகுத்தஞானங்கள்பழுத்திடுஞ்சூதனைவணங்கி.

(இ-ள்.) அகத்தியர் சதானந்தர் பெருமைபொருந்தின புலத்தியர் புரோசர் மகத்துவங்கொண்ட வான்மீகர் சனகாதிகள் நல்லகவுதமர் வதிஷ்டர் போற்பகுத்தறிவுள்ள பெரியமுனிவர் கூட்டங்களெல்லாரும்நன்றாகச்சொல்லுகிற ஞானக்கனிகள்கனிந்து கொண்டிருக்கிற சூதபுராணிகரைவணங்கி—எ-று. (உ)

யோகஞானமுஞ்சரிதையுங்கிரியையுமோது
மாகநூல்களுந்தவங்களுமுத்தியுமடைய
வேகநாதனையிவ்வுலகத்தினிற்பெறுவ
தாகயாரெனும்பெற்றதைப்பகரெனவறைந்தார்.

(இ-ள்.) யோகமும் ஞானமும் சரிதையும் கிரியையும் விளங்கச்சொல்லுகிற ஆகமசாஸ்திரஞானமும் தவங்களும் தெரிந்து செய்து மோக்ஷத்தையும் அடைய ஒன்றான பரமசிவத்தை இந்தவுலகத்திலே தெரிசிக்கவேண்டியாராயினும் தவஞ்செய்து காணப்பெற்றகதையைச் சொல்லுமென்று கேட்டார்கள்—எ-று. ஆகமநூல்களென்க-நூல்களைத்தெரிந்து தவங்களைச்செய்து எனத்தகுதி பற்றிவருவிக்க. (ங)

அன்னகாலையிற்சூதனுமகமகிழ்ந்துருகிச்
சொன்னமாதவமுனிவரைநோக்கியேசொல்வான்
முன்னநாளையிலனந்தம்பேர்முக்கண்ணர்பதத்தைத்
துன்னுமாக்கதையருளினேமின்னமுந்தொகுப்பாம்.

(இ-ள்.) அந்தமுனிவர்க ளப்படிக்கேட்டபோது சூதபுராணிகர் மனமகிழ்ந்து அன்புருகி அப்படிக்கேட்ட பெரிய தவமுனிவர்களைப்பார்த்துச்சொல்லுகிறார் முற்காலத்திலே அநேகம்பேர்கள் சிவகதியையடைந்த

பெரியசரித்திரங்களைச் சொன்னோம் இன்னமும் உங்களுக்குச் சொல்லுகிறோம்—எ-று. (ரு)

கேட்டபேர்களினவின்றவர்க்கதிகமாங்கெதிகள்
சூட்டுமெம்பிரான்மலைமகள்பாகன்றன்சுருதி
ஈட்டமுந்தைநாளிருபிறப்பாளனுக்கிசையத்
தீட்டுமுத்தியைக்கேண்மினென்றறைகுவான்சிறிது.

(இ-ள்.) இந்தக்கதையைக்கேட்டபேர்களுக்குக்கிடைப்பதுபோலவே சொன்னவர்களுக்கும் மேலானகதிகளைத் தருவதாகும் எமது கடவுளாகிய பார்வதி சமேதருடைய ஆகமசாஸ்திரங்கள் சொன்னபடியே பூசை பண்ணின ஒருபிராமணப்பிள்ளைக்குத் தகுதியாக எழுதிக்கொடுத்தமோக்ஷகதையைக்கேளுங்களென்று சுருக்கிச்சொல்லுகிறார்—எ-று. சுருதிக்கிடாக என்க. (௬)

மேரடர்ந்திடுந்தென்றிசையதனிலேவிளங்கும்
பார்புகழ்ந்திடுங்காவிரிநதிக்கரைப்பக்கஞ்
சீரிலங்கியசோழமண்டலமெனுஞ்சிறப்பாற்
பேரிலங்கியஅந்தநாட்டுள்ளநற்பெருமை.

(இ-ள்.) மகாமேருவைச்சார்ந்த தெக்ஷணதிசையிலே விளங்காநின்ற உலகமெல்லாங் கொண்டாடப்பட்ட காவேரிநதி தீரத்தின்பக்கத்திலேசிறப்போடுவிளங்குகிற சோழமண்டலமென்கிற சிறப்புடனேஅந்தச்சோழநாடென்கிற பெயரையேகொண்டு விளங்குகிற அந்தநாட்டிலே உள்ள பெருமையாவது—எ-று. (சு)

கொண்டல்சூழ்ந்திடுந்தென்றல்வந்தேகமாய்க்குலாவும்
உண்டுதிங்கள்பொய்த்தாலுமும்மாரியோயாது
விண்டுதாழ்வருச்செல்வமேற்செல்வமாய்விளங்குஞ்
சண்டனார்பகையணுகிடாசைவநன்னாடு.

(இ-ள்.) மேகங்கள்சஞ்சரிப்பதான சோலையினின்றுந்தென்றற்காற்று வந்து நாடுமுழுதும் வீசிக்கொண்டேயிருக்கும் மாதம்பொய்த்தாலும்மும்மாரிபெய்வது பொய்யாமல் தப்பாமற்பெய்வதுண்டு நீங்கிப்போகுதலில்லாமற் செல்வத்தின்மேற் செல்வமாகவே அந்தநாடு விளங்கிக்கொண்டிருக்கும் யமனுடையபகையும் வாராது அந்தச்சைவநெறி விளங்குகிற புண்ணியநாட்டில்—எ-று. (எ)

நாள்மடிந்திடுநாழிகைமடியுமந்நாட்டில்
வாழுமாந்தருமற்றுளசீவனுமடியார்
வேள்வருத்தமல்லாதுபின்வேறொருவிசனம்
சூழ்வதொன்றிலையின்பமிக்குயர்ந்திடுஞ்சுகமே.

(இ-ள்.) முப்பதுநாழிகைகொண்டநாள்களே மடிவனவாகும் அந்நாள்களுக்குள்ளான நாழிகைகளு மடிவனவாகும் அந்நாட்டிலே வாழு

மனிதர்களும் மற்றுமுள்ள ஜீவராசிகளுமடியார்கள் மன்மதனலே வரு கிற வியசனமேஅல்லாமல் பின்னொரு வியசனமுமுண்டாகுவதில்லை-சந் தோஷமிகுதியாலே சுகமே அதிகசுகமாயிருக்கும்—எ-று. (அ)

மாய்வதொன்றிலைவினையிடர்மாய்வதேயொழியத்
தேய்வதொன்றிலைச்சந்தனந்தேய்வதேயல்லாற்
காய்வதொன்றிலையுலைமுகங்காய்வதேயல்லாற்
சாய்வதொன்றிலைகதலிநெற்குலைகள்சாய்வனவே.

(இ-ள்.) அந்தநாட்டிலே தீவினையால்வருகிற துன்பம் அழிகிறதேயல் லாமல் வேறொன்றும் அழிவதில்லை சந்தனக்கட்டை தேய்கிறதேயல்லா மல் வேறொன்றுந் தேய்கிறதில்லை உலைமுகங் கொதிப்பதே யல்லாமல் வேறொன்றுங் கொதிப்பதில்லை வாழைக்குலைகளும் நெற்குலைகளுஞ் சா ய்கிறதேயல்லாமல் நீதிமுதலான எதுவுஞ் சாய்கிறதில்லை—எ-று. (சு)

பகைகள்வேறிலைபகைப்பவரங்கிலைவறுமைத்
தகைகள்சோகங்கள்சலிப்பிலைதருவதொன்றில்லை
மிகையுஞ்செல்வர்களவரவராயினுமிடுக்காற்
புகையடர்ந்தகோளில்லைமற்றங்குளபுனிதம்.

(இ-ள்.) வேறுபாடாகிறசத்துருக்களுமில்லை இனிமேலாவதுபகைசெ ய்வோரும் அவ்வூரிலேஉளராகுவதில்லைதரித்திரத்தகுதிகளும் அதனலு ளவாகின்ற துக்கங்களும் சலிப்புகளுமில்லை அவ்வூரிலுள்ள அவரவர்க ளும் மேன்மேலான ஐசுவரியவான்களாகையாலே அவர்களுக்கொருவர் கொடுக்கவேண்டுவதொன்றுமில்லை ஆனலும் தங்கள் சாமர்த்தியச்செய் கைகளாலே கோபக்குறி தோன்றுவதான கொள்கைக ளெதுவுமில்லை இப்படியிருக்கிறதே அவ்வூரிலுள்ள புண்ணியபலம்—எ-று. (எ)

மறுகும்வான்றுளிநீரலான்மற்றுமங்நாட்டின்
மறுகுவோரில்லைவேதனைவேறிலைமதனன்
நறுமலர்க்கணைநாரியர்கட்கணையொழிய
வெறுமைவேறில்லையத்தர்கள்விருந்திலாவெறுமை.

(இ-ள்.) மழைத்துளிநீர்சுழலுமேயல்லாமல் இன்னமும் அந்தச்சோ ழநாட்டிலே துன்பத்தாலே சுழலுகிறவர்களில்லை மன்மதனுடைய நல் லபூங்கணைகளாலும் பெண்கள் கண்களாகிய கணைகளாலும் உளவாகிற வேதனையேயல்லாமல் வேறே வேதனைகளில்லை சிவனடியார்களுக்கு வி ருந்துசெய்கிறதிலே போதாதவெறுமையே யல்லாமல் வேறொருவெறு மையுமில்லை-வெறுமை-இல்லாமை—எ-று. (௧௧)

ஆழமாகியசெல்வங்களீண்டியேயடர்ந்து
சூழவோங்கியேவாழ்வர்கள்சுருதிகள்மணக்கு
நீழனற்றமிழுரைத்திடும்பொய்மெய்யாய்நிலைக்குஞ்
சாழலோதியவறங்களுஞ்சமயமுந்தழைக்கும்.

(இ-ள்.) நெடுங்காலங் கொட்டுண்டான ஐசுவரியங்கள் மேன்மேலாகப்பெருகி விசேஷமாய் வளர்வதாக வாழ்வார்கள் வேதார்த்தங்கள்கூடின குளிர்ந்தநலமுள்ள தமிழ்நூல்கள் அலங்காரவகையாற் சொல்லும் பொய் மெய்யாய்நிலைபெறுமே யல்லாமல் வேறொரு பொய்யுநிலைபெறாது நெடிதாகச்சொல்லுகின்ற சிவபுண்ணியங்களும் சிவசமயமுமே தழைத்திருக்கும்—எ-று. (௰உ)

நீருலாவியபாழியின்பெருமையுநீண்ட
காருலாவியசோலையின்செழிப்புஞ்செங்கனகப்
பேருலாவியகீர்த்தியும்பிரபலப்பெருக்கும்
வாருலாவியமங்கையர்கொங்கையின்வடிவும்.

(இ-ள்.) ஜலநிரம்பின குளங்களின்பெருமையும் மேகங்கள்சஞ்சரிக்கின்ற சோலைகளின் செழிப்பும் செவ்விதான சுவர்ணாதிகளாலே பெருமை விளங்குகின்ற கீர்த்தியும் பிரபலமகிமையும் பெண்களுடைய ரவுக்கை பொருந்தின கொங்கைகளின் அழகுமே தழைத்திருக்கும்—எ-று. (௰ங)

கருமுகிற்குலமன்னநாட்டரிவையர்குழல்கண்
டுருவம்வேறுகொண்டொழிந்திடுநம்முருவொப்பில்
வருவதேதெனமயங்கியேவானவர்கோன்முன்
வெருவுமாங்குடியாகிடுமெல்லியர்குழலால்.

(இ-ள்.) அந்தநாட்டுப்பெண்களுடைய கூந்தலைக்கண்டு கறுத்தமேகக்கூட்டங்கள் நம்முடைய நிறமோ நீரைப்பெய்துவிட்டால் வெளுத்துப்போம் இப்படிக்கிருக்க கூந்தலுக்கு நிகர்சொல்லுவதில் வருகிறதென்ன காரணமென்றுமயங்கி இந்திரனுக்குப் பயப்படுங் குடிகள்போலிருக்கும் என்னென்றால் அப்பெண்கள் கூந்தல்நிறத்தினாலே—எ-று. (௰ச)

திங்களங்நலவஞ்சியர்முகங்கண்டுதிகைத்தே
இங்கணேதுநம்முருவமொப்பெனவொளிமறைந்து
மங்கிநாணியேமழுவுடையோன்முடிதனைவிட்
டெங்கணேகுவோமெவ்விடத்திருப்பமென்றிரங்கும்.

(இ-ள்.) அந்தநாட்டிலுள்ள அழகியபெண்களுடைய முகத்தைப்பார்த்துச் சந்திரனானவன்மயங்கி இப்பெண்கள் முகத்துக்கு நம்முடையவடிவு எவ்வளவும் ஒப்பாகாதென்று தனதொளிமறைதலாய்மங்கி வெட்கத்தையடைந்து சிவனுடையமுடிமேலேபோய் ஒடுங்கியிருந்துகொண்டு எவ்விடம்போவோம் இவ்விடத்தைவிட்டு எவ்விடத்திலே யிருப்போமென்று துன்பப்படுவான்—எ-று. (௰ரு)

கயல்களஞ்சிடும்விழியினலிதழ்க்கண்டுபவளம்
பயிலரக்கெனுங்குலமெலாம்பதறியுள்ளொளிக்கும்
முயலுடார்ந்திடுகொங்கைகண்டம்பொன்மாமேரு
வியலுமாசிவமங்கையோகங்கையென்றியம்பும்

(இ-ள்.) அப்பெண்கள்கண்களைக்கண்டுகெண்டைமீன்கள்நீருள்மறைந்திருக்கும் இதழைக்கண்டுபவளமும் ஒன்றிலொட்டுவதான அரக்கு என்பது முதலான சிவந்தராசிகளெல்லாம் பதறுதலாய் ஒவ்வொன்றுள்ளே ஒளிவனவாகும் புருஷர்களை மயலாலேவெல்லுவனவான தனங்களைக்கண்டு அழகியபொன்மலையான மகாமேருவானது எங்கும் வியாபகமான பரசிவத்துள்ளபார்வதியோகங்கைஅன்று என்றுசொல்லும்-பார்வதிநேர்வது கொங்கை கங்கைநேர்வதுதானென்றுகொண்டு பார்வதிக்கொப்போ கங்கையென்பது கருத்து—எ-று. (௰௬)

மின்னொளிக்குலமங்கையரிடைகண்டுவெருவ
நன்னெறிப்பெருநாட்டினிலேதெனுநாணும்
துன்னுமங்கையர்நிதம்பங்கண்டரவங்கடுணுக்குற்
றென்னவோவெனப்படம்விரிக்காமனின்றியங்கும்.

(இ-ள்.) அந்தநாட்டு யௌவனப்பெண்களுடைய இடையைக்கண்டு ஒளியைக்கொண்ட மின்னுக்கொடிகள் பயந்து இந்த நன்மார்க்கமுள்ள நாட்டிலே இது ஏது நமக்கு நிகரானது என்று நிலைசிக்கும் வெட்கமுங்கொள்ளும் அங்குள்ள அப்படிப்பட்ட பெண்களுடைய நிதம்பத்தைக் கண்டு பாம்புகள் திகிலெடுத்து இது யாதோவென்று தங்கள் படத்தை விரியாமல் நெடுங்காலமுந்திரியும்—எ-று. (௰௭)

அருணகாந்தியோவழனிறமணிகொலோவடைவே
நிரவுமாமரகதங்கொலோநீலமோநினைக்கிற்
பெருமைசேர்புடபராகமோமேதமோபேணும்
பருவநாட்டுமங்கையர்நிறம்பகர்குவதெவனே.

(இ-ள்.) யாரும்விரும்பத்தக்க யௌவனபருவத்தையுடைய அந்த நாட்டுப்பெண்களின் நிறமானது சூரியோதயகாந்திதானோ, நெருப்புநிறமுள்ளமாணிக்கந்தானோ, முறையாகவிலை நிரம்பினபெருமையுள்ள மரகதந்தானோ, நீலமணிதானோ எண்ணுமிடத்தில் பெருமைபொருந்தின புஷ்பராகமோ, கோமேதகமோ, செம்மை பசுமை பொன்மையாகிய நிறங்களில் எந்தநிறத்தைச்சொல்லத் தகுவதாகும்—எ-று. (௰அ)

பூவைமார்மயற்கடலினிலாடவர்புகுந்து
சாவகாசமாயிரவிற்சையோகஞ்செய்தவர்கள்
பாவமோசனக்காவிரிமூழ்குவர்பகலில்
ஈவதேயலால்மற்றொருவேலையுமிலையே.

(இ-ள்.) புருடர்கள்அந்தப்பெண்களுடையஆசைக்கடலிலேவிழுந்து இராத்திரியிலே நெடுநேரவளவு சையோகங்கள்செய்து அப்பெணகள் பாவனைதீரக் காமரசமான காவேரிஸ்நானஞ்செய்வார்கள் பகலிலே இரப்பவருக்குக் கொடுக்கவேண்டுகிற செய்கையேயல்லாமல் அப்புருஷர்கள்பெரும்பாலும் வேறே வேண்டுஞ்செய்கைகளில்லை—எ-று. (௰௯)

மோகமங்கையர்கொழுநனைவாட்டிமோகத்தாற்
போகவாரிதிக்கடலிலேபுகுத்திடும்வேலை
ஆகந்தோய்பவர்க்கன்புறுவேலையுமயரா
நாகமங்கையர்க்கொப்பரந்நாட்டுமங்கையரே.

(இ-ள.) ஆசையைவிளைவிக்கிற பெண்கள் ஊடுதலாலே புருஷர்களை வாடச்செய்துஇரவிலேமிகுந்தஆசையினாலே தங்கள்போகக்கடலிலேமுழுகச்செய்கிறசெய்கையும், பகலிலே தங்கள்மார்பையணைகிற நாயகர்களுக்குத் தங்களிடத்தன்புமிகச்செய்கிற செய்கையும்செய்து தேவகன்னிகளுக்கொப்பாயிருப்பார்கள் இப்படியே அந்த நாட்டிலுள்ள பெண்களெல்லாம்—எ-று. (௨௰)

இன்னடக்கையும்பெருகியசெல்வமுமீண்டி
தன்னில்வாழ்பவர்குறைகளுந்தளர்ச்சியுமிலராக்
கன்னல்செந்நெல்கள்காய்க்குலைத்தெங்குகள்கதிப்பப்
பொன்னினாடெனப்பொலிந்ததுபொன்னிசூழ்நாடு.

(இ-ள.) நல்லநடக்கையும் பெருகுகின்ற செல்வமுமுள்ளதான இந்த நாட்டிலே வாழுகிறவர்களெல்லாரும் ஏதேனுங் குறைவுபாடுகளும் அவற்றாலே வருந்துதலு மில்லாதவர்களாயிருக்க கரும்பும்நெல்லும் காய்த்தகுலைகளையுடைய தென்னமரங்களுமுதலானஎல்லாம்அதிகமாகத்தேவரிருக்கிற விண்ணாடுபோல் விளங்குகின்றது இந்தக்காவேரிசூழ்ந்த நாடுமுழுதும்—எ-று. இதன்னிலென விரித்தல் விகாரம். (௨௧)

அப்பெருந்தகைநாட்டினிலணிமணியாகச்
செப்பமோடன்னசத்திரஞ்சாலைகள்சிறப்ப
ஒப்பிலாதநல்வேள்விகளிலங்கியவொழுங்கு
மிப்புதுமையுமறங்களுந்தவங்களினியல்பும்.

(இ-ள.) அந்தப்பெரிதான அழகுள்ளநாட்டிலே அந்தநாட்டுக்கணிந்த ஆபரணங்களிலுள்ள ரத்நங்கள்போல் விளங்க செவ்வைகொண்ட அன்னசத்திரங்களும் கல்விச்சாலைகளும் அதிகமாக நிகரில்லாத நல்ல யாகங்கள் விளங்குகின்ற ஒழுங்குகளும் ஆகிய இந்தவிசேஷங்களும் இல்லறவகைகளும் துறவறவகைகளும் மிக்குள்ளன—எ-று. (௨௨)

ஈதுசோழமண்டலமெனவறைப்வரியல்பாற்
போதுலாவுபொன்னாடெனச்சாற்றுவர்புலவோர்
தாதுலாமலர்த்தண்டலைமேகத்தைத்தழுவ
ஆதவன்றனைமறைத்திடுமருள்புரிநாட்டில்.

(இ-ள.) இந்தநாடு சோழமண்டலமெனச் சொல்லுவார் சுவபாவத்தினாலே சூரியனுலாவுவதான ஆகாயத்திலே பொன்னாடொன்றுண்டென்று புலவர்கள் சொல்லுகிறார்கள் சோழமண்டல மென்பதின்

றேல் பொன்னாடு மின்றென்றேதோன்றும் ஆகலால் பாகங்களுநிறைந்
தின்ற பூஞ்சோலைகள் மேகமண்டலத்தை அளாவுதலாலே சூரியனும் த
ன்னைச்சோலைகள் அளாவாமல்தானே அஸ்தகிரியிலேபோய் மறைவாகி
றான் இரக்கமே விசேஷமாயுள்ள நாட்டிலே—எ-று. (உ௩)

பூதநாயகனாலயப்பூசையும்பூமி
மாதுநாயகன்பூசையுந்தொண்டரைவணங்கிப்
பாதசேவையும்பண்ணியப்பதிநெறிபூண்டு
நீதவான்களாய்முசியறவாழ்வர்மெய்நிதமும்.

(இ-ள்.) பூதகணங்கள் சேவிதரான சிவாலயப்பூசையும் விஷ்ணுகோ
யிற்பூசையும் அடியார்களைப் பாதபூசைபண்ணி வணங்கிச் சேவித்தலும்
செய்து அந்தஊரூர்தோறும் நீதிநெறியைக்கொண்டு நல்லநீதிமான்களா
கவே எப்போதும்யாதொருதுன்பமுமில்லாமல் மெய்யேவாழ்வார்கள்()

சிறந்தமாதவச்சோழநாட்டியல்பினைச்சிலநான்
அறிந்தமாத்திரமியம்பினேனினியந்தநாட்டி
லறந்தழைந்ததோருறொனுமப்பதிவளமை
நிறைந்ததவ்வளங்கேண்மினென்றம்முனிநிகழ்த்தும்.

(இ-ள்.) இப்படிச்சிறந்துள்ள பெரியதவங்கள் மிகுந்த சோழவளநா
ட்டுச் சிறப்பை நான்தெரிந்தமட்டும் சிலசொன்னேன் இனித் தருமமே
மிகுந்துள்ளதனாலே தனக்கு நிகரில்லாதது ஊரொன்கிற நகர் வளத்தால்
நிரம்பினது ஆகலால் அந்த நகர்வளத்தையுங் கேளுங்களென்று அந்தச்
சூதபுராணிகர் சொல்லுகிறார்—எ-று. (உ௫)

நாட்டுச்சருக்கம் - முற்றிற்று.

ஆகப் பாயிரமுள் படத் திருவிருத்தம் - ௩௫.

## நகரச்சருக்கம்.

முக்கணாயகனாம்முகக்கடவுண்முன்முனிவர்
மெய்க்கஆடியசோழநன்னாட்டினில்விளங்கி
திக்கெலாம்புகழ்திருக்கடவூரெனச்சிறப்பால்
மிக்கதாகியமகிமையைப்பேசுவாம்வேண்டி.

(இ-ள்.) திரிநேத்திரதாரியான ஐந்துமுகக்கடவுள் முன்னாளிலே பத
ஞ்சலிவியாக்கிர பாதரொன்கிற முனிவர்கள் கொண்டாடத் திருநடன
ஞ்செய்த சோழவளநாட்டிலே ஒருநகராக விளங்கி எட்டுத்திக்கும்புகழ
ப்பெற்ற திருக்கடவூரொன்கிற பெயர்ச்சிறப்பினாலே மேம்பட்டிருப்ப
தான மகத்துவத்தை வேணுமென்று சொல்லுகிறோம்—எ-று. (க)

வேறு.

கொடுமுடிக்காந்தியப்பதிநகரின்கூடகோபுரங்களுமாட
நடுநிலைச்சாலைத்தெருவுகளெல்லாநடைபதிமடங்களுஞ்சூழத்

தொடுவில்மண்டபமுமிலங்குசாவடியுந்தோரணநிரைகளும்வயங்கும்
அடுநிலையரங்குமற்றுளவெவையுமவிர்பசும்பொன்னினாலாங்கே.

(இ-ள்.) மலையினுச்சி யொளிபோலே அந்தக்கடவூர்நகரில் கூடகோபுரங்களும் மாடமாளிகைகளும் நடுவேநின்று போகத்தக்க சாலைத்தெருவுகள்முழுதும் பிரயாணிகள் தங்கத்தக்க திருமடங்களும் சுற்றிலுங் கட்டியிருக்கிற ஒளிபெற்ற திருமண்டபங்களும் மிகவிளங்குகின்ற சாவடிகளும் தோரணவரிசைகளுமே உயர்ந்துவிளங்கும் சமையற்கூடமும் நாட்கசாலைகளும் இன்னமுள்ள எல்லாஇடங்களும் உயர்ந்த மாற்றுள்ள பசும்பொன்னாலே செய்யப்பட்டிருக்கும் அவ்வூரில்—எ-று. (௨)

தெருவெலாஞ்சுவணப் பொடியெனுங்குவிய றிரண்டிருபுறத்தினுமலைவி
உருவெனத்தோன்றுங்கதிரவன்பிரபையொளிர்மணிமாடத்துமாத [ன்
ரரிவைகள்விளங்குமாற்றினாலத்தவளைபொடிக்குப்பைமற்றிரட்டி
வருடியவ்வாசல்முன்பதாயெறிந்தமாமணிக்குப்பைகளனந்தம்.

(இ-ள்.) அவ்வூர்த்தெருவுமுழுதும் சுவர்ணப்பொடிகளென்கிற குவியல் திரண்டு இருபுறத்திலும் உதயகிரிகள்போல் விளங்கும் சூரியகாந்திகள்போல் விளங்குகின்ற ரத்நகசிதமான வீடுகளிலே அழகுள்ள பெண்கள் நடையாடுகிறதினாலே உதிருகிற பொடிக்குப்பைகள் அஸ்தகிரிகளிரண்டுள்ளனபோல் விளங்கும் ஊழியகாரிகள் கூட்டிக்குவிக்கிறதினாலே ஒளிவீசுகிற பெரிய மாணிக்கக்குப்பைகள் சூரியர்போல் வாசலுக்குமுன்னே அநேகங்களாக விளங்கும்—எ-று. (௩)

அம்மனைதோறுமரிவையர்விளையாட்டயர்ந்திடுநவமணிசொன்னஞ்
செம்மணிக்கிரணந்திரண்டவுப்பரிகைதிருத்தியவழகினாலிலங்குங் [ங்
கொம்மைசேர்தளங்கள் துலங்கியமடவார்முகமெனக்கொழுக்குமந்நகர
கம்மெனக்களபம்வீசியவசந்தகாலமெந்நாளினுங்கதிக்கும்.

(இ-ள்.) அந்தவீடுகளெல்லாம் பெண்கள் விளையாடிக்கொண் டிருப்பனவாக நவரத்நங்களாலும் சுவர்ணங்களாலும் சிவந்த மாணிக்கங்களாலும் ஒளிதிரண்டுள்ள உபரிகைகள் செவ்வையான அழகுடனே விளங்கும் வட்டமான வாசற்றளங்கள் அங்கேவிளங்குகிற பெண்கள்முகங்கள் போலவே குளிர்ந்தொளி வீசுவனவாயிருக்கும் இன்னமும் அந்தப்பட்டணமுழுதும் கம்மென்று மணம்பரிமளிக்கத்தென்றற்காற்று வீசி எப்போதும் வசந்தகாலம்போலவே அதிகரித்திருக்கும்—எ-று. (௪)

அந்நகர்மடவார்தமனியமேடையமைத்தவுப்பரிகையினின்று
தன்னிருட்கூந்தல்விரித்தனருலர்த்துந்தகைமைகண்டம்மயிற்றோகை
இன்னிதாய்விரித்தங்காடிடும்பின்னையிந்துவையரவுமிழ்வதுபோன்
மின்னியல்முகமம்புலிநிகராகமென்குழல்விடுபணிபோலாம்.

(இ-ள்.) அந்தப்பட்டணத்துள்ளபெண்கள் பொன்மயமான மேடைகளிலும் உயர்த்துக்கட்டின வுபரிகைகளிலும் நின்றுகொண்டு தனக்குத்

தானே நிகரான இருள்போன்ற கூந்தலைவிரித்து உலர்த்துகிறபோதுகண்ட அந்தமயில்கள் தம்முடைய வாலை நன்றாகவிரித்து அங்கெல்லாம் ஆடுவனவாயிருக்கும் பின்னும் சந்திரனைப் பாம்புவிழுங்கிஉமிழ்வதும்போலிருக்கும் ஒளிவிளங்குகின்ற முகமே சந்திரனாகவும் மெல்லிய கூந்தலே அந்தச்சந்திரனை உண்டு கக்குகிற பாம்புபோலிருக்கும்-சடையுமுகமுஞ் சேரக்கண்டால்சந்திரனைப் பாம்புவிழுங்கி உமிழ்வதுபோலவே எங்கும் விளங்குவனவா யிருக்குமென்க—எ-று. (௫)

மின்னெனிமாதர்க்கிசைந்திடுங்காதில்விளங்கியநவமணியோலை
துன்னியபிரபையங்நகர்முழுதுந்துலங்குமம்மயமெனப்பின்னை
இந்நிலக்கதிரோனுதிப்பதுமுளதாலென்னெனிலுயர்ந்தவவ்வூரில்
நன்னெறிக்கதிரோனையமாயுதித்துநடப்பதாமாதர்கள்மேனி.

(இ-ள்.) மின்போல்விளங்குகிற பெண்கள் சேர்க்கையான காதுகளிலே விளங்குகின்ற நவரத்நம் பதித்துள்ள ஓலைகளிலே பொருந்தின பிரபையானது அந்தப்பட்டணமுழுதும் அந்தஒலை வடிவாகவே தோன்ற விளங்கும் பின்பு இந்தவுலகத்திலே சூரியன் உதையமாகிறதும் உண்டேயென்றால் உயர்ச்சியுள்ள அந்தவூரிலே நன்மார்க்கத்தைச் செய்விக்கிற சூரியன் ஏதென்று சந்தேகிக்க உதயமாகிச் செல்லுகிறதாயிருக்கும் அந்தப்பெண்களுடைய தேககாந்தி மிகுதியினாலே என்றால் அவ்வூர்க்குச் சூரியன் வேண்டுவதில்லையென்று கருத்து—எ-று. (௬)

இருளணுகாதாலங்நகர்மாதர்க்கிலங்கியகுழலிருளாக
அரிவையருருவாற்கதிரின்முன்மாயையகல்வதுபோலிருளகலும்
தெரிவையர்க்கெழுந்தகனதனங்கண்டுசிலைமதன்முடியெனவுயர்தெங்
கருளியகுரும்பைக்கணிமணிக்கின்னமலரிபோய்மறைவதாமன்றே.

(இ-ள்.) இருளேவருகிறதில்லை அவ்வூரிலிருள் பெண்கள் கூந்தலேயாம் இன்னம் அப்பெண்கள் மேனியொளியினாலே ஞானசூரியனுக்கு முன்மாயை நீங்குதல்போல் இருள்விலகிப்போம் பின்னும் அப்பெண்களுக்குண்டான கனத்த தனங்களைக்கண்டு கரும்புவில்லையுடைய மன்மதன் தனக்கு மணிமுடியாக வேண்டுவான் உயர்ந்த-தென்னமரம்பெற்ற குரும்பைபோன்ற தனங்களிலணிந்த மாணிக்கமாலைகளுக்குப் பயந்தே சூரியன் அஸ்தகிரியிலேபோய் மறைவதென்க—எ-று. (௭)

மோகமங்கையர்கடிடியிடைப்பிரபைமுழுமதிப்பிரபையைத்தாக்கு
நாகமுற்றல்குலொழுங்கினையெவரானவில்வதற்கமைபுமோபின்னை
வாகனரியர்தாள்கரங்களிலணிந்தவளைகடகஞ்சிலம்போசை
ஆகமமுழங்குமங்நகரெல்லாமாரணமொழிகளேயரவம்.

(இ-ள்.) மோகத்தை விளைவிக்கிற பெண்களுடைய உடுக்கைபோலிருக்கிற இடையொளியானது பூரணச்சந்திரனொளி குறைந்து தேயமோதுவனவாம் சர்ப்படம்போன்ற அல்குலின் ஒழுங்கையாவராலே சொ

ல்லி அளவுப்படுதலாகும் பின்னும் அழகுள்ள அப்பெண்கள் கால்களி லும் கைகளிலும் அணிந்திருக்கிற வளையல் கங்கணம் சிலம்பு முதலான வைகளின் சத்தமும் ஆகமங்களு முழங்குவனவாயிருக்கும் இவைகளை யல்லாமல் அவ்வூரிலே வேதகோஷங்களே முழக்கமென்று சொல்வதா கமுழங்கும்—எ-று. (அ)

இதம்படுகொழுநரரிவையருடனேயினியதோர்கலவிபாராட்டிப்
பதம்பெறவாழ்வாரறநெறிக்குள்ளபண்பதாய்ச்செல்வமேமிகுந்துங்
கதமிலாப்பெரியோர்தங்களுக்கீந்துகண்ணுதல்பாதத்தைமறவார் [றே
மதஞ்செருக்கில்லாத் தன்மையோர்தருக்கள் மாகத்தைமறைத்திடு மன்

(இ-ள்.) உரிமையான நாயகர்கள் பெண்களுடனே சந்தோஷமாய்க் காமலீலைகள் அதிகமாகவும்தருமநெறிக்குள்ளகுணங்களுடனேபின்சிவக தியடைவதாகவும் வாழ்வார்கள்அவர்களுக்குச்செல்வம்அதிகமாயிருந்து ம்கோபநீங்கின பெரியோர்களுக்குக் கொடுத்து சிவனடியைமறவாதிருப் பார்கள், பின்னும் மதமாச்சரிய முதலான தீயகுணங்க ளில்லாதவர்க ளாயிருப்பார்கள் அவ்வூரில் மரங்களோ ஆகாயத்தை அளாவி வெயில் மேலே படாமற்செய்யும்—எ-று. (கூ)

வேறு.

மலர்வனங்களிற்சுரும்புகள்மதுவருந்துதற்கே
அலறுங்கிதமோடம்மதுக்குடமுடைந்திடவே
நிலநனைந்துபேராறெனவேரிகணிறைந்து
புலநனீர்மடைவழியதாய்க்கழனியிற்போக.

(இ-ள்.) பூஞ்சோலைகளிலே வண்டுகள் தேன்குடிப்பதற்குப்பாட்டுக ளுடனேபோய் அலறுநிற்கும் அப்போது குடமுடைந்தாற்போல் தே ன்பெருகி நிலமெல்லாநனைந்து பெரிய ஆறுபோல்பாய்ந்து குளங்கள் நிரம்புதலாய் அடுத்த அந்தக்குளத்து நீர்மடைவழியாகப்பெருகி வயல் களிலேபோய்ப் பெருகுமளவில்—எ-று. (௰)

அன்னகாலையின்மள்ளரேருழுதல்செய்தவண்
தன்னில்வித்துகள்வித்திடமதுப்புனலுவிச்
செங்கெல்முத்துகளீன்றிடுஞ்செழித்துநற்கன்னல்
மன்னிமுத்துகளுயிர்த்திடக்களிக்குமாநகரம்.

(இ-ள்.) அப்போது மள்ளர்கள் ஏரால் உழுதல்செய்து அந்த வயல்க ளிலே விதைகளைவிதைக்க தேனும் நீரும்பாய்ந்து செவந்தநெற்பயிர்கள் நன்றாய்விளைந்து முத்துகளையும் பெறுவனவாயிருக்கும் நல்லகரும்புகள் செழித்து வளர்ந்து அவைகளு முத்துகளைப்பெறுவதாய் அவ்வூரெல் லாம் ஆனந்தமயமாகவிளங்கும்—எ-று. (௰௧)

நயனுலாவியகழனியின்புறத்துளசோலை
வெயிலவன்றனை நெருக்கியதகைமையால்வெருவி

வயமிகுந்திடுபுரவிகள்வழியிலாதமையா
லயலொதுங்கியேகுடகடல்சென்றினிதமையும்.

(இ-ள்.) கெண்டைமீன்கள் சஞ்சரிப்பதான வயலுக்குப் பக்கத்திலே யிருக்கிற சோலைகள் உயர்ந்து சூரியமண்டலத்தை நெருக்குகிறதினாலே வெற்றிமிகுந்துள்ள சூரியன் தேர்க்குதிரைகள் பயந்து தமக்குவழிகிடையாமல் பக்கத்திலே ஒதுங்கி மேலைக்கடலிலேபோய்ப் பயந்தீர்வனவாகும்—எ-று. (௰௨)

செல்வமோங்கியதிருக்கடவூரினிற்சிறந்த
நல்வளமையும்நான்மறையோசையுநயந்த
கல்வியோசையும்வேள்வியுமறங்களுங்கதித்து
வில்விநோதமும்வீணையுமிசைகளும்விளங்கும்.

(இ-ள்.) இப்படிச் செல்வமிகுத்த திருக்கடவூரிலே சிறப்பான நல்ல வளங்களும், நான்கு வேதகோஷமும், விரும்பத்தக்க கல்விப்பெருக்கமும் தருமங்களும் அதிகமாய் வில்விநோதங்களும்வீணைகளினோசையும் பாட்டொலியுமாகவே விளங்கும்—எ-று. (௰௩)

அணிகள்போன்மறைவேதியரகரங்கள்கோடி
கணிதமானகத்திரியர்கள்தெருவொருகோடி
வணிகராகியவைசியர்தெருவதுகோடி
தணிவிலாதசூத்திரர்தெருவோசதகோடி.

(இ-ள்.) ஆபரணவரிசைகள்போல் வேதப்பிராமணர்கள் அக்கிராரமோகோடி அளவுகொள்கிற க்ஷத்திரியர் வீதிகளொருகோடி வர்த்தகஞ்செய்கிற வைசியர் வீதிகளுமொருகோடி நீங்குதலில்லாத சூத்திரர்வீதியோ நூறுகோடியென்னலாக நிறைந்திருக்கும்—எ-று. (௰௪)

சீரிலங்கியமுனிவரோதிருக்கடவூரிற்
பேரிலங்கியவெம்பிரான்மலைமகள்பெருமான்
தாரிலங்கியபோலவேசத்தியம்விளங்கப்
பாரிலங்கிடவாழ்ந்தனர்பனிமதிச்சடையோன்.

(இ-ள்.) சிறப்புப்பொருந்தின முனிவர்களே அந்தத்திருக்கடவூரிலேயுள்ள பரமசிவமென்று பேர்பொருந்திய எமது கடவுளாகிய பார்வதிசமேதருடைய மாலைகள் வரிசைவரிசையாக விளங்குகிறதேபோல் சத்தியம் நிலைபெறுவதாக உலகமெல்லாம் விளங்குவதாகவும் நால்வகைச்சாதிகளும் சுகித்திருந்தார்கள் அவ்வூரிலே சந்திரசேகரக்கடவுளுக்கு.()

ஆலயம்பெரிதங்கர்நடுவினிலமைத்து
வேலைசெம்பொனால்விளங்கியதிருமதில்விளங்க
நீலங்கோபுரமரகதங்கொடிமரநிரைத்த
சாலமாணிக்கம்பீடங்கீழ்த்தளமெலாம்பச்சை.

(இ-ள்.) கோயிலும் பெரிதாக அவ்வூர்நடுவிலே உண்டுபண்ணி சிவந்த பொன்னாலே வேலைகள்செய்திருக்கிற திருமதில்களும்விளங்க நீலரத்நங்கள்பதித்த கோபுரங்களும் மரகதரத்நங்களாலேபதித்திருப்பதான கோடிமரங்களும் மிகவு மாணிக்கங்கள் பதித்துள்ள பீடங்களும் கீழே தளவரிசைகளெல்லாம் பச்சை ரத்நங்களாகவும் விளங்கும்—எ-று. (௰௬)

இலங்குமாவயிடூரியத்தூணினையிசைத்து
நலங்கொண்மற்றுளமணிகளானடத்தியவேலை
நிலங்கொள்ளாதுகாண்விண்ணவர்துலங்குநீளொளியால்
இலங்குமண்டபந்தொடுத்ததுமதிக்கவுமெளிதோ.

(இ-ள்.) விளங்காநின்ற பெரியவயிடூரியத்தூண்களைநிறைத்து நன்மையுள்ள இன்னம்பலவகை ரத்நங்களாலே செய்திருக்கிறவேலை இந்தவுலகத்தாராலே அளவிடக்கூடாது தேவர்களேவந்து மிகவுநெடியவொளிகொண்டு விளங்கச்செய்திருக்கிற அந்த மண்டபத்தழகைத் தொடுத்துச்சொல்ல வேண்டினாலு மெளிதில்முடியுமா முடியாது—எ-று. (௰௭)

ஒளிவிளங்கியவிமானமுமுடையவனுகந்து
களிகொளாலயவொழுங்கையுநாவினானவில
வெளிதிலாகுமோவிறையவனந்நகர்மனுக்கள்
களிகொள்முத்தொழிற்காரணநடத்திடுங்கருத்தால்.

(இ-ள்.) ஒளிவிளங்குகின்ற அந்தக்கோயில் விமானமும் அந்தக்கோயிலையுடைய கடவுள் சந்தோஷிக்கப் பெருமைகொண்டு விளங்குகிறகோயிலொழுங்கையும் எனது நாவினாலேசொல்ல எளிதிலே முடியுமா முடியாது கடவுள் தாமே அவ்வூரிலிருந்து மனுமுதலான யாவரும் சந்தோஷிக்கும்படி சிருஷ்டி திதிலயங்களான செய்கைக்குக் காரணராய்நடத்திவருகிற உண்மையினாலே ஒருவராலும் சொல்லிமுடியாதென்க—எ-று.

வேறு.

அந்நகரமர்ந்தசோதி யைமுகப்பெருமானை
கன்னியோர்பாகமூர்த்திக் கறைமிடற்றண்ணலாரைப்
பொன்னுலகோர்மண்ணுள்ளோர் பொற்பதம்வணங்கியேத்தி.
நன்னெறிக்குடையோராக நாளுமெந்நாளும்வாழ்வார்.

(இ-ள்.) அவ்வூரிலே எழுந்தருளியிருக்கிறபராபரச்சோதியான ஐந்துமுகக்கடவுளாய்ப் பார்வதிசமேதரான நீலகண்டக்கடவுளை விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் வணங்கித்துதித்துத் தினமும் நன்மார்க்கத்துக்கே பாத்தியராக எக்காலமும் வாழ்வார்கள்—எ-று. (௰௯)

மாதவமுனிவரோநீர் மகிழ்ச்சியாய்ச்சொல்லக்கேண்மின்
திதிலாப்பெருமைகொண்ட திருக்கடவூரின்செய்கை
ஓதவும்வெகுநாட்செல்லு மொருதொகைப்பாதியான
பாதியிற்பாதிதள்ளிப் பாதியிற்சிறிதுசொன்னோம்.

(இ-ரை.) மிகுத்த தவமுனிவர்களே நீங்கள் சந்தோஷமாகக்கேளுங்கள் யாதொருதோஷமுமில்லாத பெருமையையுடைய திருக்கடவூரின் பெருமையைச் சொல்லவேணுமானல் வெகுகாலம்வேணும், ஒருதொகையிலே பாதியான பாதியிலே பாதிதள்ளி அந்தப்பாதியிலுஞ் சிலசொன்னேம்—எ-று. ஒன்றிலேபாதி-அரை-அரையிலேபாதிதள்ளினல்-கால் அந்தக்காற்பங்கிலுஞ் சில சொன்னேமென்க, (உ௯)

ஆனதாற்கீர்த்திபெற்ற தங்கவொருநூலாளன்
மான்மழுக்கரத்திலேந்து மலைமகள்பாகன்றுளை
மோனமாய்வணங்கிப்போற்றி முத்தியையடைந்ததன்மை
மேன்மையோடறையக்கேண்மி னென்றனன்வியந்துசூதன்.

(இ-ரை.) ஆனபடியினலே மிகவுங்கிர்த்திகொண்டுள்ளதான அந்தவூரிலே ஒரு சாஸ்திரியானவர் மானையு மழுவையுங் கையிலேகொண்ட பார்வதிசமேதருடைய பாதத்தை மௌனமாகவணங்கித்துதித்து மோக்ஷம் பெற்ற சரித்திரத்தை மேலான குணயோக்கியதையுடனே நான் சொல்லக்கேளுங்களென்று அதிசயத்துடனே சூதபுராணிகர்சொல்லுகிருர்.()

நகரச்சருக்கம் - முற்றிற்று. ஆகத்திருவிருத்தம்- ௬௬.

## மிருகண்டமாமுனிச்சருக்கர்.

மான்மைகளுயர்ந்த திருக்கடவூரென் பதிதனக்கரசதாயுதித்த
நான்மறையுணர்ந்த வேதியர்குலத்தி னவமுகிற்கண்டர்தாமருளும்
வான்மையான்வேத வாக்கியன்சிறந்த வண்மையும்புகழுமேநிறைந்த
மேன்மையாநீதி விளங்கியமரபான் மிருகண்டனென்றெருவேதன்.

(இ-ரை.) நீதிமுறைமைகளுயர்ந்துள்ள திருக்கடவூரென்கிறநகருக்குத் தலைவராகப்பிறந்த நான்குவேதங்களுந்தெரிந்த பிராமணர்குலத்திலே புதுமையைத்தருவதான மேகம்போற் கறுத்த நீலகண்டக்கடவுள் தாமே அருள்செய்யப்பெற்ற பரிசுத்த குணத்தையுடையவர் வேதவாக்கியப்படியே சிறப்பான உதாரகுணமும் புகழுமேநிறைந்த மேம்பாட்டையுடையவர் நீதிநெறியே விளங்குவதான மரபினையுடையவர் மிருகண்டமகாமுனிவரென் றெருரு பெயரையுமுடைய வேதங்களிற்சிறந்தவர்.()

ஆகமவேதபுராணசாத்திரங்களாய்ந்திடும்வாய்மையானறிவால்
யோகமுஞானபோதமுமிகுத்தவுற்பனசூத்திரவொழுங்கான்
பாகனமொழியார்பாவகத்தொடக்குபொய்கலைவஞ்சனைபகர்ந்த
சூகரையணுகான்சற்குணத்தழகன்சோதியைத்தொழுதிடுமனத்தான்.

(இ-ரை.) ஆகமங்கள் வேதங்கள் புராணங்கள் சாஸ்திரங்கள் முதலானவைகளையெல்லாம் ஆராய்ந்து தெளிந்துபேசவல்லவர் புத்தியினலும்

யோகக்கிரமங்களாலும் ஞானபோதனையினாலும் மிகுந்த பிறப்பினாே கோத்திர சூத்திர ஒழுங்குள்ளவர் தேன்பாகுபோலும் வசனமாதுரிமுள்ள பெண்கள்பாவனையான பற்று பொய் கொலை வஞ்சனைகள்செய்கிற மூடரைச்சேராதவர் நல்லகுணத்தினாலே விசேஷித்தவர்பரஞ்சோதியான கடவுளையே தியானிக்கு மனமுள்ளவர்—எ-று. (௨)

நித்தமெந்நாளும்வேள்விகணடத்தியிருநெறிக்குள்ளதாய்நின்றும்
வித்தகன்கடவூர்மேவியபொருளைவிளக்கியகீர்த்தனைப்பிரியன்
பத்தரிற்பத்தன்புத்திமெய்ஞ்ஞானம்பழுத்திடுங்கூறெனவெடுத்த
சுத்தர்கள்விரதத்துவத்தொடையான் சுற்றத்தார்வாழ்ந்திடவாழ்வோன்.

(இ-ள்.) எக்காலமும் தினந்தினம் யாகங்கள்செய்து பெரிதான நன்மார்க்கத்துக்குள் ளடங்கிநின்றும் ஞானசொரூபியான திருக்கடவூரிலே விளங்குகின்ற பரம்பொருளை விளங்கச்சொல்வதான கீர்த்தனைகளிலே அதிகபிரியமுள்ளவர் பத்தர்களிலெ சிறந்த பத்தியுள்ளவர் புத்தியும்மெய்ஞ்ஞானமும் கனிந்துள்ளபாகமென்றுகொண்டபரிசுத்தர்களிலேவிரதத்துவமானமாலையணிந்தவர் தம்முடைய உறவினரெல்லாம் சுகித்திருக்கத்தாமுஞ் சுகித்திருப்பவர்—எ-று. (௩)

புண்ணியநிறைந்தபுகழ்பெருங்கொடையான் புயபலத்தாட்டிகன்றவங்கள், நண்ணியவிதத்தான்பிறர்மனைபுதல்வன் றன்மனைக்குரியநாயகத்தான் அண்ணலெண்ணான்காமறங்களுக்கரசன் சார்ந்தவர்க்கன்புடைமனத்தான், எண்ணியகருமமுடித்திடுங்கருத்தானிருபிறப்பாளரிலொருவன்.

(இ-ள்.) தருமநிரம்பின புகழுடனே பெரிதான உதாரகுணமுமுள்ளவர்புஜபலபராக்கிரமமுள்ளவர் தவங்கள்பலவகையுஞ்செய்தவர் பிறர்மனைவிகளுக்குப் புத்திரனானவர் தமது மனைவிக்கேதகுந்த சிறப்புள்ளவர் பெருமைபொருந்தின முப்பத்திரண்டுவகையானதருமங்களிற்சிறந்தவர் தம்மையடுத்தவர்களுக்கு அன்புசெய்கின்ற மனமுள்ளவர் நினைத்தகாரியங்களெல்லா முடிக்குங்கருத்துள்ளவர் இப்படி பிராமணர்குலத்திலே ஒருவருண்டாயினார்—எ-று. (௪)

நன்னெறிக்கடவூர்க்கதிபதியாகவிருக்குநான்மறைக்குலத்தலைவன்
மின்னியபவுசுபாக்கியமிகவும்விளங்கியேவாழ்ந்திடுங்குணத்தாற்
றன்னிலையறிந்து நடக்குமெய்ப்புகழான் சமயசஞ்சாரணசரித, னின்னிசைக்கிசைந்தவில்லவள்வரலாறியம்புவோங்கேண்மினென்றிசைத்தான்

(இ-ள்.) நன்மார்க்கமுள்ள திருக்கடவூருக்கு ராஜாவாக இருக்கின்ற நான்குவேதங்களுக்குமுரித்தான குலத்திற்சிறந்தவர் விளங்குகின்றபெருமையுள்ள பாக்கிய மேன்மேலாகவிளங்கி வாழ்ந்திருக்கிற குணத்துடனே ஆத்மஞானந்தெரிந்து மெய்யானபுகழுள்ளவர் எல்லாச்சமயங்களிலுஞ்சஞ்சரித்துள்ள ஒழுக்கமுள்ளவர் இப்படிப்பட்டவருடைய இனி

தான கீர்த்திக்குத் தகுந்தமனைவியாருடைய வரலாறுஞ்சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்லுகிறார்—எ-று. (௫)

உந்தியிலுதித்தோன்மனையவள்தானேவும்பர்நாயகன்மனையவளோ
சந்திரசேகரன்றன்மனையவடானேசாரங்கபாணிதன்மனையோ
சந்திரமதியோமதன்மனையவளோசண்முகற்கினியமூத்தவளோ
பிந்தினமனையாம்வள்ளிமாதாவோபின்னையானறிந்திலன்வடிவம்.

(இ-ள.) திருவுந்திக்கமலத்திலே பிறந்த பிரமதேவர் மனைவியான சரஸ்வதியோ தேவர்க்கரசனான இந்திரன்மனைவியான இந்திராணியோ- பரமசிவன் மனைவியான பார்வதியோ விஷ்ணுமனைவியான லட்சுமியோ அரிச்சந்திரன்மனைவியான சந்திரமதியோ மன்மதன்றேவியான இரதிதேவியோ முருகக்கடவுளுக்கு மூத்தமனைவியான தெய்வயானையோ- இளையமனைவியான வள்ளியம்மையோ- அந்த மிருகண்டுபத்தினியானவளுடைய உருவை நானறிந்துசொல்ல வல்லேனல்லேன்—எ-று. (௬)

படத்தினிலெழுதப்படாவடிவுடையபற்பனிவடிவம்யார்பகர்வார்
நடத்தையுங்குணமுங்கற்புளநெறியுநாயகன்மொழிந்திடும்வார்த்தை
கடக்கொணுவளமைக்குறுதியோடன்புங்கணவனைத்தெய்வமாயெண்ணு
மடக்கமுமீவுமிரக்கமுந்தயவுமருத்துதியெனும்பெயருடையாள்.

(இ-ள.) படத்திலு மெழுதிமுடியாத அந்தப்பதுமினிஉருவை யார்தான் சொல்லவல்லவர்கள் நல்லநடக்கையும் நல்லகுணமும் பதிவிரதாதருமமும் கணவன்சொன்ன சொல்வழுவாமனடக்கிறநன்மைக்குத்தகுந்த உறுதியுடனே அன்பும் கணவனைத்தெய்வமாக எண்ணுகிற அடக்ககுணமும் ஈகைக்குணமும் இரக்கமும் தயவுமுள்ள மருத்துதியென்னும் பெயருள்ளவள்—எ-று. (௭)

தன்னுடைநாதன்றுளிணைவணங்கித்தாழ்விலாமகிழ்ச்சியாயன்பாய்
நன்மையாய்மோகக்கல்வியாராட்டிநாயகன்றன்னுடனவில்வா [சேர்
ளென்மனதினிலே மகவிலாவறுமை யிருக்குதென்றவள்சொல வெழில்
கன்னியைப்பார்த்துமிருகண்டவேதன்கழறுவான்மனத்துயருடனே.

(இ-ள.) அப்படிப்பட்ட மருத்துதியானவள் தனதுநாயகர்பாதங்களை வணங்கி யாதொருகுறைவுமில்லாத சந்தோஷத்துடனே அன்புகொண்டுநன்றாகக் கிரீடைமுதலான மோகரஸமெல்லாஞ்செய்து கணவனைநோக்கிச்சொல்லுகிறாள், ஓநாயகா என்மனத்திலே பிள்ளையில்லாத துக்கமிருக்கின்றதென்று சொல்லக்கேட்டு அந்த அழகுள்ள நாயகியைப்பார்த்து மிருகண்டமகாமுனிவர் மனோவியாகுலத்துடனேசொல்லுகிறார்.()

அறநெறிவழுவாதென்றனக்கிசைந்தஅரிவையேயரிவையர்க்கரசே
நறையொழுகமிர்தவசனமென்கிளியேநாமிருபேருமிவ்வுலகி
லிறையவனருளாற்பிறந்துநீபாரியென்பதாயன்புடனிருந்துங் [னோல்.
குறைவிலாச்செல்வத்தனுபவத்திருந்துங் குற்றமொன்றிருக்குதாகையி

(இ-னா.) தருமநீதிதப்பாமல் எனக்கு மிகவுஞ் சம்மதமானபெண்ணே பெண்களுக்கெல்லாஞ் சிறந்தவளே தேனொழுகுவதான அமிர்தவசனமுள்ள மிருதுவான கிளிபோன்றவளே நாமிருவரும் இந்தவுலகத்திலே கடவுளருளாலே பிறந்து நீபாரியாகவும் நான்புருஷனாகவும்அன்புடனே கூடி குறைவுபடாத ஐசுவரியானுபவத்திலே யிருந்தும் ஏதோ பிள்ளையில்லாத ஒருதோஷமுண்டாயிருக்கின்றது ஆனபடியினாலே —எ-று. (௬)

கதித்திடுமதுபவுசுபண்டாரங்காக்கவுமிந்நகர்நிலைமை
மதித்திடவாண்டுவரவுநம்மிருவர்மாய்வுநாட்கடன்கழித்திடவும்
விதித்தவேதாவுநமக்கொருமகவைவிதித்திலனுமவன்றனக்கு
மெதிர்ப்பெருங்குற்றம்யாதுநாஞ்செய்தோமென்றவனின்னமுமியம்பும்.

(இ-னா.) மேன்மேலாகுகின்ற நமது பவுசு பண்டாரங்களைப்பாதுகாக்கவும் இவ்வூர்நிலைமைபோகாமல் எல்லாருமதிக்க அரசாட்சிசெய்து வரவும் நாம் இருவருமிறந்தகாலத்திலே கருமங்கள்செய்யவும்நம்மைச் சிருட்டித்தபிரமன் நமக்கொருபிள்ளையுண்டாகச் செய்திலன் ஆகையால் நாம் அந்தப்பிரமாவுக்காவது யாருக்காவது எந்தவகையிலே என்ன குற்றஞ் செய்திருக்கிறோமென்று பின்னுஞ்சொல்லுகிறார்—எ-று. (௰)

கறைமிடற்றண்ணலைம்முகக்கடவுள்கன்னியையிடத்தினில்வைத்து
மறைமுடிவினுக்குந்தெரியொணுநங்கள்வள்ளலுக்கென்குறைசெய்தோ
நிறைமுகின்மேனிமாயவன்றனக்குநீள்குறையேதுநாஞ்செய்தோம் [ம்
பறையெறிபுலகின்றேவதைகளுக்கும் பயனிலாப்பணிகள்செய்திலனே.

(இ-னா.) நீலகண்டதேவராய் ஐந்துமுகக்கடவுளாய்ப் பார்வதியை இடப்பாகத்திலேகொண்டுவேதமுடிவுக்குந் தெரியப்படாதிருக்கிற நமது குலதெய்வத்துக் கென்ன குறைவுபண்ணினோம் நிறைந்தமேகம்போன்ற நிறமுடைய திருமாலுக்குப் பெரியகுற்றங்கள் என்னநாம் செய்தோம் பறையறைந்து கொண்டாடத்தக்க உலகத்துள்ள மற்றத்தெய்வங்களுக்குத் தான் யான் பயனில்லாத காரியங்களொன்றுஞ் செய்திலேனே—எ-று. (௰௧)

பொய்கொலைகளவுசெய்துமோபிறர்தம் பொருள்களைக்கவர்ந்திடுக்கங்கள், செய்துமோசிவன்றன்னடியரைவணங்காதிருந்துமோமறைவலோர்களையும், வைதுமோவுலகிற்பாவியென்றிடவேவாழ்ந்துமோவஞ்சனைசூதால், நைதுமாயொருவர்க்கிவதைவிலக்கிநடுக்கங்கள்செய்திருந்தோமோ.

(இ-னா.) பொய்கொலை களவுமுதலான பாவங்கள் செய்தோமோபிறருடைய பொருள்களை அபகரித்துக்கொண்டு அவருக்குத் துன்பங்களைச்செய்தோமோ சிவனடியார்களை வணங்காதிருந்தோமோ வேதப்பிராமணர்களைத் தூஷித்தோமோ உலகத்திலே பாவியென்னும்படி வாழ்ந்தோமோ வஞ்சனைசூதுகளாலே வருந்தச்செய்வோமாய் ஒருவருக்

கொருவர் கொடுப்பதைத் தடுத்துத் துன்பங்களையே செய்துகொண்டிருந்தோமோ—எ-று. (௰உ)

கோளிளையுரைத்துமெளியரையடித்துங் கோவிலையிடித்தகங்குறைத்தும்
வாழ்வதைக்கெடுத்தும்வழக்கினையழித்தும் வழிப்பறிபறித்துமோவேள்
வி, யாளரைவதைத்தும்பெண்கொலைசெய்து மறவினை யழிவுசெய்தோ
மோ, தாழ்விலாத்தவங்க டமைமறந்தோமோ தவத்தவர்க் கிடர்விளைத்
தோமோ.

(இ-ள்.) கோள்கள்சொல்லியும் எளியவர்களை வருத்தப்படுத்தியும் கோவில்களையிடித்தும் அகவிலையைக்குறைத்தும் ஒருவர் வாழ்கிறதைக் கெடுத்தும் வழக்கைக்கெடுத்தும் வழிபறித்துண்டும் வேள்விசெய்கிறவர்களையுங் கெடுத்தோமோ குறைவில்லாத தவங்களை மறந்தோமோ தபோதனர்களுக்குத் துன்பஞ்செய்தோமோ—எ-று. (௰௩)

இட்டுணாதிருந்துஞ்சுற்றங்கடாழவிரப்பரைப்பின்னைவாவென்று
மட்டுறும்பூங்காவனங்களையழித்துமார்க்கமாமறைக்குலத்தொழுக்கம்
விட்டடங்தமேனைதப்பினமோநல்வித்துவான்களைப்பழித்தோமோ
கட்டுங்காவலுமாயிருக்குங்கற்புடையகன்னியரைக்கெடுத்தோமோ.

(இ-ள்.) பிச்சையிடாமலும் பந்துக்கள் குறைவுபட யாசகர்களை நாளைக்குவாவென் றலையச்செய்தும் தேன்பொருந்தின பூந்தோட்டங்களைக்கெடுத்தும் நன்மார்க்கத்தையுடைய பெரியவேதியர் குலத்தொழுக்கங்களை விட்டு அந்த நிதானந்தப்பி நடந்தோமோ நல்லவித்துவான்களை இகழ்ச்சிபண்ணினோமோ கட்டுங்காவலுமாயிருக்கிற கற்புள்ள பெண்களைக் கெடுத்துவிட்டோமோ—எ-று. (௰௪)

எல்லைமாருட்டிவட்டிமேல்வட்டிக்கிசைகடன்கொடுத்துவாங்கினமோ
தொல்லைகள்விளைத்து நிறைகுளமுடைத்துஞ் சொற்குருமொழிதனையிக
ழ்ந்து,நல்லறங்குலையக்காய்மலர்நிறைந்தநன்மரந்தறித்துமோவாழ்ந்தோ
ரில்லினினெருப்பையிட்டுமோமாதே யெக்குறையேதுநாஞ்செய்தோம்.

(இ-ள்.) அளவு மாருட்டம்பண்ணி வட்டிக்கு மேல்வட்டிக்குச்சம்மதியாய்க் கடன்கொடுத்துவாங்கினோமோ துன்பங்களை யுண்டுபண்ணி நிறைந்தகுளங்களை உடைத்துவிட்டும் உபதேசம்பண்ணின குருவாக்கியத்தைத்தூஷித்து நல்லதருமங்கள் கெடுதலாக காயும்பூவுநிறைந்தநல்ல மரங்களைவெட்டினோமோ நன்றாய்வாழுகிறவர்கள்வீட்டிலே நெருப்பை யிட்டோமோ பெண்ணே யின்ன மெந்தெந்தக்குறைகளை எந்தக்குற்றங்களைச்செய்தோமோ—எ-று. (௰௫)

அப்பெருங்குறைகள்யாதொன்றுமறியோநம்மையுமருண்மலருறைவோ
னிப்பெரும்புவியின்மலடதாய்ப்பிறப்பித்திருந்துயரெய்திடவிடுத்தான்
முற்பிறவிகளிலென்னபாவத்தைமுயன்றுமோவில்லையென்றரனா
செப்பியமொழியோதேவர்கள்முனிவர்சாபமோதெரிகிலேன்மாதே.

(இ-ள.) அப்படிப்பட்ட பெரியகுறைவுகள் ஏதாயினு மொன்றுஞ் செய்தறியோம் இப்படிக்கிருக்க நம்மிருவரையும் தயவுடனே பிரமதேவன் இந்தப்பெரிதான வுலகத்திலே மலடாகப்பிறக்கப்பண்ணி பெரிய துன்பமடையும்படிவிட்டான் முன் ஜன்மங்களிலே என்னபாவங்களைச் செய்தோமோ அதனுலே ஈசுவர ரிவர்களுக்குப் பிள்ளையில்லையென்று கட்டளையிட்டிருக்கிருரோ தேவர்களாவது முனிவர்களாவது சொன்ன சாபங்களுண்டோ பெண்ணே எதுவென்று தெரிந்திலேன்—எ-று.(மசு)

தாணியோர்நகைக்கவிண்ணுளோர்நகைக்கச்சராசரவுயிர்களுநகைக்கத்
திரவியோர்நகைக்கவிந்கர்நகைக்கச்செகமெலாம்பாவியென்றிடவே
அரனயன்மாயனம்மையுமலடாயமைத்தனரானதினுலே
வரவெனுமாதேபுவிதனிலுமும்வாழ்ந்ததுமலட்டுவாழ்வாமே.

(இ-ள.) உலகத்தார் சிரிக்கவும் ஆகாசவாசிகள் சிரிக்கவும் சராசரவுயிர்களெல்லாஞ்சிரிக்கவும் திரவியவான்கள் சிரிக்கவும் இந்த வூராரெல்லாஞ் சிரிக்கவும் உலகமெல்லாம் பாவிகளென்னும்படி பிரமா விஷ்ணு ருத்திரர்கள் நம்மிருவரையுமலடாகச்சிருஷ்டித்தார்கள் ஆனபடியினுலே பிள்ளையுண்டாக நினைக்கிறபெண்ணே உலகத்திலே நாமிருவரும் வாழ்ந்தது மலட்டுவாழ்வே ஆம்—எ-று. (மஎ)

நாடியவுலகினுமிருவோருமிருந்துவாழ்ந்துண்டதாலென்ன
நீடியசெல்வப்பவுசுபண்டாரபோகங்கணிறைந்துதானென்ன
கூடியேயாகஞ்செய்ததாலென்னகோதையேசுதரில்லாதவர்கள்
வீடியகாலமரியமோட்சத்திலடைந்திடார்வேதநன்மொழியே.

(இ-ள) நாம் சம்பாதித்துள்ள இந்தவூரிலே நாமிருவருமிருந்து நெடுங்காலம்வாழ்ந்துண்டதினுலே என்னபயன் அதிகமானஐசுவரியம் பவிசு பண்டாரசுகங்கள் நிறைந்திருந்துதான் என்னபிரயோசனம்கூட்டங்கூடி வேள்விகள் செய்ததனுலேதான் என்னபலன் பெண்ணே பிள்ளையில்லாதவர்கள் இறந்தபின்பு அரிதான மோட்சவீட்டிலே செல்லார்கள், இது வேதவாக்கியமே ஆம்—எ-று. (மஅ

அனந்ததீர்த்தங்களாடினுமிகுத்தவறங்கள்மாதவங்கள்செய்திடினும்
அனந்தமாய்ப்பூமியளிக்கினுமுலகமனைத்தையும்வலஞ்செய்துவரினும்
அனந்தமாயசுவமேதயாகங்களயர்கினுங்கன்னிகாதானம்
அனந்தமாய்ச்செயினுமப்பலனடையாவரிவையேசுதனிலாதவர்பால்.

(இ-ள.) அநேகதீர்த்தங்களாடினுலும் மிகுந்ததருமங்கள் பெரியதவங்கள் பண்ணினுலும் அநேகமாகப் பூமி தானங்கள்செய்தாலும் உலகமெல்லாம் வலஞ்செய்துவந்தாலும் அநேகமாய் அசுவமேதயாகங்கள் பண்ணினுலும் அநேகமாகக் கன்னிகாதானஞ்செய்தாலும் அந்தப்பலன்களிலேதுவும் பிள்ளையில்லாதவர்களுக்குப் பலிதமாகாது-எ-று. ()

ஆலயமனந்தமுடிக்கினுமன்னமளிக்கினுமகரங்கள்கோடி
சோலைகளனந்தம்வளர்க்கினுங்கனகஞ்சொரியினுநாளுமுவண்ண
மாலயன்றேடும்வள்ளலைப்பூசைவழங்கினுஞ்சுதரிலாதவர்கள்
மேலையம்பதவிப்பேறுகளடையார்சுருதியின்மொழியிதுமெய்காண்.

(இ-ள்.) அனேகங்கோயில்கள் கட்டிமுடித்தாலும் அன்னதானங்கள் பண்ணினாலும் அக்கிராரங்கள்கோடிகட்டுவித்தாலும் அநேகநந்தவனங்கள் வளரச்செய்தாலும் ஒருநாளாவது தப்பாமல் பிரமா விஷ்ணுக்கள் தேடும்படியான கடவுள் பூசையைச்செய்தாலும் பிள்ளையில்லாதவர்கள் இனிமேலடைவதான மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தை அடையார்கள் இது வேதவாக்கியமான சத்தியமே—எ-று. (உ௰)

ஆகையானம்மைமலடதாய்மறையோ னமைத்ததுக்காணநாம்நோவோம்,தோகையேநானுமித்துயரதனாற்சோர்ந்துமென்னுவிபோய்ச்சுருங்கி
மோகவெங்குணத்தாற்றளர்ந்தனென்றயரமோகவம்மனையவள்கேட்டு
ஓகையேபெருகியினியதோர்கொழுநன்மலரடிபணிந்தவளுரைப்பாள்.

(இ-ள்.) ஆனபடியினாலே நம்மை மலடாகப் பிரமா சிருட்டித்ததற்காக நாம் யாரைநொந்துகொள்ளுவோம் பெண்ணே யான் இந்தத்துக்கத்தினாலே சோர்வாகியு மெனதுபிராணன் மிகவுமொடுங்கி வெவ்விபமயக்கச்செய்கையினாலே தளர்ந்துபோனேனென்று கிலேசிக்கக்கண்டு அவருக்கு அதிமோகியான அந்தமனையவளாகிய மருத்துதிகேட்டுச்சந்தோஷமிகுந்துதனக்கின்பஞ்செய்கிற ஒப்பற்றநாயகருடைய பாதபுஷ்பங்களிலே வணங்கிச் சொல்லுகிறாள்—எ-று. (உக)

வேறு.

எந்தனக்குகந்தகோவேயென்பிராணநாதாகேண்மோ
புந்தியின்மகவைவேண்டிப்பொருதுயர்க்கடலிலாழ்ந்தே
சிந்தனைப்படுவதானாற்றீருமோமயங்கலாமோ
வந்திடுங்கருமநம்மால்மாற்றவுமெளிதோபின்னும்.

(இ-ள்.) எனக்கு அதிபிரியமானதலைவரோ என்பிராணநாதரோகேளும் உம்முடையமனத்திலே பிள்ளைவேண்டி இப்படி பெரியதுன்பக்கடலிலேமுழுகி வியசனப்பட்டதினாலே தீர்ந்துபோகுமோ இப்படி நீர் மயங்கலாமோ நமக்குவருவதான கருமத்தை நம்மாலே விலக்க எளிதோ இன்னமும்—எ-று. (உஉ)

தன்னுளேசெய்தபாவந்தனையடைந்திடுமேயல்லாற்
பின்னையுமொருவர்பக்கம்போகுமோபிராணநாதா
முன்னமேநாமுஞ்செய்தவினைப்பயன்முயன்றுநீக்க
மன்னியவிண்ணோர்பூமிமனிதர்க்குமரிதுக்கண்டீர்.

(இ-ள்.) தனக்குள்ளே தானேபண்ணினபாவம் தன்னையடையுமேயல்லாமல் பின்பு வேறொருவரிடஞ்செல்லுமோ ஓபிராணநாதா முன்

னே நாமிருவரும் பண்ணினதீவினைப்பயனை முயற்சிசெய்து போக்கிக் கொள்ள ஆகாயத்திலிருக்கிற தேவர்களுக்கும் இவ்வுலகிலுள்ள மனிதர்க்கும் முடியாது இது நீருமறிந்ததே—எ-று. (உங)

செயமெனுங்காலம்வந்தாற்சேரொணுப்பொருளுஞ்சேரு
நயமுடனினைத்தவெல்லாநாடியேமுடிக்கலாகும்
பயமுடன்போங்காலத்திற்பட்சிகள்பறந்தாற்போல
மயலுளநிதிசேர்செல்வவாழ்க்கையுமாயுமன்றே.

(இ-ள்.) செயகாலம்வந்தால் கிடையாதபொருளெல்லாங் கிடைக்கும் நன்மையுடனே நினைத்தகாரியங்க ளெல்லாம் ஆராய்ந்து முடித்துக் கொள்ளலாம் பிரயோஜனத்துடனே போங்காலம்வந்தால் பட்சிகள் பறந்து போனாற்போல் மயக்கத்தைத் தருகிற திரவிய முதலான ஐசுவரியவாழ்வுகளெல்லாம் அழிந்து போம்—எ-று. (உச)

ஆனதால்வேதனம்மையமைத்தகட்டளைப்படிக்கு
மானமாமனதுநொந்து மகவினால்வருந்தவேண்டாம்
தானவனானசோதி சருவநாயகனாரான
வானவன்கயிலைநாதனிரங்கியேமகவையீவான்.

(இ-ள்.) ஆனபடியினாலே பிரமதேவன் நம்மை உண்டாக்கின கட்டளைப்படி நடக்கிறதற்கு மானமுள்ள மனம்வருந்தி பிள்ளையினாலே வருந்தப்படவேண்டியதில்லை தானே தானான சோதிமயமாய் சருவலோகநாயகராகியகடவுள் தேவர்க்கும் தேவனாகிய கயிலாசபதியானவர் நமக்கு மனமிரங்கிப் புத்திரனுண்டாகச்செய்வார்—எ-று. (உரு)

என்றவளுரைத்துமற்றுமியமபுவாள்முன்னைநீர்தாம்
நன்றிசெய்மகவிலார்க்கு நாடியஅறங்கள்வாயா
தென்றுநற்பதவிசேரா ரெரிநரகடைவரென்றீர்
துன்றியமுன்னோர்யாவர் சுதர்களாற்கதிபெற்றார்கள்.

(இ-ள்.) என்கிறதாக அந்த மருத்துதியம்மாள்சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறாள் யாதென்னில் நன்மையைச் செய்யக்கடவரான பிள்ளையில்லாதவர்களுக்கு நினைத்தகாரியங்கள்பலியா, எக்காலத்திலு நல்லகதியையடையார்கள், நெருப்புமயமான நரகத்தையடைவார்களென்று நீர் சொன்னீரோ அப்படிஉலகத்திலே முன்னுள்ளவர்களிலே மோக்ஷத்தையடைந்தவர்கள் யார்சொல்லும் என்றனள்—எ-று. (உசா)

என்றுதன்மனைவிகேட்க வியம்புவார்மிருகண்டேயர்
மன்றல்சேர்கூந்தலாளே மனுநெறிச்சோழனின்ற
நன்றிசேர்மைந்தனுலு நரபதிதருமனுலும்
வென்றிசேர்சாபசாலி பாண்டுவும்வீடுபெற்றார்.

(இ-ள்.) என்று தமதுபாரியைகேட்க, மிருகண்டேயர் சொல்லுகிறார் பரிமளம்பொருந்தின கூந்தலையுடையவளே மனுநீதிச் சோழனென்புவ

னும் தான்பெற்ற நல்லகுணமுள்ள புத்திரனாலும்- தருமராஜனாலே வெற்றிபொருந்தின வில்லாளியான பாண்டுமகாராஜனும் மோக்ஷம்பெற்றார்கள்—எ-று. (உஎ)

புகழ்பெறுதசரதன்றன் புதல்வனால்வீடுபெற்றான்
பகிரதன்றவத்தால்மாண்ட பிதிர்க்களும்பரத்தைச்சார்ந்தார்
மகவினாற்சிறுத்தொண்டன்றான் வள்ளலார்பதவிபெற்றான்
தகைமைசேர்மதியத்தொண்டன் றனையனால்வீடுபெற்றான்.

(இ-ள்.) கீர்த்திபெற்ற தசரதமகாராஜன் தன் புத்திரனாலேமோக்ஷத்தையடைந்தார், பகிரதன் தவத்தினாலே இறந்த பிதுர்க்களும் உயர்கதியையடைந்தார்கள், பிள்ளையினாலே சிறுத்தொண்டநாயனாரும் சிவகதியடைந்தார், பெருமைபொருந்தின மதியத்தொண்டனென்பவனும் பிள்ளையினாலே மோக்ஷமடைந்தான்—எ-று. (உஅ)

மிகுதவநாசுகேதாலொருமுனிவீடுசேர்ந்தான்
புகழ்மிகுவாசுதேவன் புதல்வனாற்பேறுபெற்றான்
சகம்புகழ்சந்தனுவும் தனயனால்வீடுபெற்றான்
மகவினாலநேகம்பேர்கள் வான்பதம்பெற்றாரன்றே.

(இ-ள்.) மிகுந்ததவத்தைக்கொண்ட நாசுகேதுவென்கிற ஒருபிள்ளையாலே அவனைப்பெற்ற முனிவர் மோக்ஷம்பெற்றார் - கீர்த்திமிகுந்த வாசுதேவர் தமதுபிள்ளையான கண்ணனாலே அதிர்ஷ்டசித்திபெற்றார் - உலகம்புகழுகின்ற சந்தனுமகாராஜன் தன்பிள்ளையான தேவவிரதனாலே மோக்ஷம்பெறறான் - இன்னம்பிள்ளையாலே மோக்ஷம்பெற்றவர்கள் அநேகருண்டு—எ-று. (உகூ)

இப்படியிருக்கநாமுமெழிற்செல்வத்தோடுங்கூடிச்
செப்பமாயுலகில்வாழ்ந்தாற்சிவகதியுண்டோமாதே
ஒப்பிலாமகவுண்டானாலுயர்ந்திடுஞ்சுற்றமெல்லாம்
அப்பணிசடையோன்பாதவருளுமுண்டாகுமன்றே.

(இ-ள்.) இப்படிமுன்னே நடந்திருக்கச்செய்தே - நாமும் நல்லஐசுவரியத்துடனே கூடியிருந்தும் நன்றாகஉலகத்திலே சுகித்தால் சிவகதிசித்திக்குமோ - கிடைக்காது - தகுதியானபிள்ளையைப்பெற்றால் கிளைகளெல்லாமேன்மேலாகும்கங்கைச்சடையரானகடவுள் பாதத்தனுக்கிரகமும் கிடைக்கும்—எ-று. (ங஌)

என்றுமிவ்வாறுவெதன்மங்கையோடியம்பிச்சிந்தை
கன்றியேவெகுவாய்நொந்துகதறியேசோகமாகி
கின்றெரிதன்னில்வீழ்ந்தமெழுகுபோலுருகிநெஞ்சம்
பொன்னுவார்தமைப்போல்வீழ்ந்துபுரண்டுமேபுலம்புங்காலை.

(இ-ள்.) என்பதாகவுமிப்படிமிருகண்டேயர் மருத்துதிபுடனேசொல்லி மனசுகன்றி மிகவும்நொந்து கதறிச்சோகமுள்ளவராய்நின்று நெரு

ப்பிலேவிழுந்த மெழுகுபோலுருகிச்சாகிறவர்கள் போற்கீழேவிழுந்துபு ரண்டு புலம்புகிறபோது—எ-று. (கூக)

அழனிகர்கற்புமாதுமன்புடனேடிவந்து
கொழுநனைப்பரிவாய்த்தூக்கிக்கூறுவாளேதுநீர்தான்
சுழலுறுமகவினலேதுயரமாய்ச்சோகமாகி
உழலினுமெளியதாகவுறுமதோவுலகத்தோர்க்கே.

(இ-ள.) நெருப்புக்கு நிகரானகற்புள்ள மருத்துதியம்மாள் அன்புடனே ஓடிவந்து தன்புருஷனைப்பரிவுடனே எடுத்தணைத்துச்சொல்லுகிருள் - என்னகாரணம் நீர்துன்பத்தைச்செய்கிறபிள்ளையினலே இப்படித் துன்பங்கொண்டு சோகமாய்வருந்தினதினலே உலகத்தாருக்குள்ளே உமக்கு எளிதாய்க்கிடைக்கத்தக்கதோ—எ-று. (கூஉ)

தொலைவழியேகினலுஞ்சுருதியையாராய்ந்தாலும்
மலையின்மேலேறினலுமுலகத்தைவலஞ்செய்தாலும்
தலையதுகீழாய்நின்றுதவமிகச்செய்திட்டாலும்
அலைகடலேகினலுமமைத்ததேகிடைக்குமன்றே,

(இ-ள.) தொலைதூரம் யாத்திரைபோனலும் வேதங்களைஆராய்ந்தாலும் மலைமேலேறினலும் உலகத்தையெல்லாம் வலம்வந்தாலும் தலைகீழாக நின்றுமிகுந்ததவம்பண்ணினலும் அலைகளையுடைய கடலின்மேற் கப்பலேறிப்போனலும் நமக்குப்பிரமா அமைத்துவைத்ததே கிடைக்கும்.—எ-று. (கூகூ)

கன்னியையிடத்தில்வைத்தகடவுளைத்தியானஞ்செய்து
துன்னியதவங்கள்யாவுஞ்சுருதியின்முறையேசெய்தால்
அன்னவனமக்குமன்புதயவுடனிரக்கமாகி
நன்மைசேர்மகவையீவார்மெய்யிதுநாடுகென்ருள்.

(இ-ள.) பார்வதியை இடப்புறத்திலே கொண்டபரம சிவனைத்தியானித்து சாஸ்திரங்களிலே சொல்லுகிறதவங்களை யெல்லாம் வேதவிதிப்படிசெய்தால் - அந்தப்பரமசிவனனவர் அன்புமிகுந்ததயவுடனே இரக்கமுங்கொண்டு நன்மையுள்ள புத்திரபாக்கியமுந்தருவார்இதுசத்தியமேயாகும் ஆலோசித்துப்பாருமென்றுசொன்னள்—எ-று. (கூச)

தன்மனைச்செல்விசொல்லத்தாபதனெழுந்துசாற்று
நன்மைசேர்மாதேஉன்போல்நானுமப்படிநினைந்தேன்
என்மனம்போலநீயுமிசைத்ததாலுண்மையாகத்
தொன்மறையவனும்போகத்துணிந்துபின்கழறலுற்றுன்.

(இ-ள.) அப்படித்தன் மனையாளான பாக்கியவதி சொல்லக்கேட்டுப் பெண்ணே நான்அப்படித்தான் எண்ணினேன் - நீயும் என்எண்ணத்தின்படியே சொன்னய் - மெய்யாகவேதவத்துக்குப் போகச்சம்மதித்துள

ழுந்து நன்மையான என்மனதுக்கிசைந்தபெண்ணே கேளென்றுபின்னு ஞ்சொல்லுகிறார்மகாதபோதனரானமிருகண்டேயர்—எ-று. (௩௫)

எத்தலமேகிப்போய்நாமெவ்விடத்திருந்துதேவ
ரத்தனைத்தவத்தாற்காண்போமென்றவனயருங்காலை
குற்றமொன்றில்லாமாதுங்கூறினுள்கொழுநன்முன்பே
அத்தனுிருப்பிடங்களறைவதற்கெளிதோகண்டீர்.

(இ-ள்.) எந்தச் சிவஸ்தலத்துக்குப் போய் நாம் எவ்விடத்திலேயிரு ந்து - தேவர்நாயகனுன கடவுளைக்குறித்துத் தவஞ்செய்து காணக்கட வோ மென்று அவர்வியசனப்படுகிறபோது யாதொரு தோஷமுமில்லா தமருத்துதியம்மாள் தனதுநாயகன்முன்னே நின்றுசொல்லுகிறுள் - க டவுளிருக்கு மிடங்களை இவ்வளவென்றுநம்மாற் சொல்லுவதற் கெளி தோ - நீர் தெரியாததல்லவே—எ-று. (௩௬)

மலரினில்வாசம்போலும்வண்டமிழுரைகள்போலுங்
கலைமதிக்கழகுபோலுங்கரும்பினிற்சுவைகள்போலுந்
திலமதிலெண்ணெய்போலுந்தெளிவினிலொளிவுபோலும்
பலனிடுதவங்கள்போலும்பரமனுிருப்பர்பின்னும்.

(இ-ள்.) பூவிலேவாசம்போலவும் அழகிதானதமிழில் அர்த்தங்கள் போலவும் -பூரணச்சந்திரனிலே அழகுபோலவும் கரும்பிலேஉருசிபோ லவும் - எள்ளிலே - எண்ணெய்போலவும் - தெளிவிலே ஞானம்போல வும் - பலனைத்தருகிறதவங்களிலே யோகம்போலவும் கடவுள்நிறைந்தி ருப்பார் இன்னமும்—எ-று. (௩௭)

உடலினிலுயிரைப்போலுமுள்ளத்தினினைவுபோலும்
நடையினில்விசைகள்போலுநறுங்கனிரசங்கள்போலும்
இடமதின்மயங்கள்போலுமிரவியிற்பிரபைபோலும்
விடமுளகண்ணிபங்கனுலகெல்லாம்விளக்கமாவான்.

(இ-ள்.) உடலிலுயிரைப்போலவும் உள்ளத்தில்நினைவைப்போலவும் நடையிலேவேகத்தைப்போலவும்-நல்லபழங்களிலேரஸங்கள்போலவும் மண்ணிலே பலவகைநிறங்கள்போலவும் - சூரியனிலேஒளிபோலவும் - விஷம் போற்கறுத்தகண்களை யுடையபார்வதி சமேதரானவர் உலகமெ ல்லாம் விளங்கிக்கொண்டிருப்பார்—எ-று. (௩௮)

விண்ணுடன்மண்ணுமாகிவிளைந்திடுமுயிருமாகி
நண்ணியவறங்களாகியங்கியாய்ப்புனலாய்நாடித்
தண்ணெனுமேகம்வாயுவருணனுப்ச்சதுரமாகிக்
கண்ணொளிவெயிலுமாகிக்கலைமதிக்குளிர்ச்சியாகி.

(இ-ள்.) ஆகாயத்துடனே மண்ணுமாய் மண்ணிலேதோற்றுகி[illegible] உயி ருமாய் - அந்தவுயிர்களுக்குள்ளதருமங்களுமாய் - நெருப்புமாகிநீருமாகி

க்குளிர்ச்சியென்பதான மேகம்வாயுவருணனாய் நாகரிகமுமாகி கலைகள் பொருந்தின சந்திரனிலே குளிர்ந்தசோதியாய்—எ-று. (௩௯)

வாரிதியேழுமாகி மந்திரவெழுத்துமாகிக்
காரினிற்கறுப்புமாகிக் கலந்தவனின்றனெங்கு
மாருதம்போலுமன்பாய்ப்பத்தர்கள்மனத்தினிற்பான்
ஆருமெய்ப்பொருளையின்ன விடத்தெனவமைக்கலாமோ.

(இ-ள்.) கடல்களேழுமாய் மந்திராக்ஷரங்களுமாய் மேகத்திலே கரியநிறமுமாய் எங்கும் வியாபித்து அந்தக்கடவுளிருக்கிறார் இன்னமும்காற்றைப்போல் அன்புகொண்டு பத்தர்களிருதயத்திலே விளங்குவார் அப்படிப்பட்டமெய்ப்பொருளை இன்னஇடத்திலிருப்பாரென்று நிச்சயித்து யார்தானுவது சொல்லக்கூடுமோ—எ-று. (௪௰)

ஆனதாலுமதுசிந்தைக் கன்புமெய்யறிவுண்டானு
லானதிலேறுமைய னருள்செய்வானுகையாலே
வானவர்முனிவர்சித்தர் மானிடர்வணங்கமுத்தி
தானதையளிக்குமிந்தத்தலமதின்மேவிநின்றேன்.

(இ-ள்.) ஆனபடியினாலே உம்முடையமனத்திலே அன்புள்ளமெய்ஞ்ஞானமுண்டானால் இடபவாகனத்திலேறுகின்ற கடவுள் கிருபைசெய்வார் ஆகையால் தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் மனிதர்கள் எல்லாரும் வணங்க மோக்ஷத்தைத்தருவார் இந்தத்தலத்திலிருக்கிறகடவுள். ()

வேதனார்முடியைக்கிள்ளும் விமலனைவிடமுண்டோனை
மாதினையிடத்தில்வைத்துத் திருக்கடவூரில்வாழு
நாதனைவேண்டிச்செய்தா னமக்கொருமகவையீவான்
ஆதலாலுறுதியாகப் போமெனவறைந்தாளன்றே.

(இ-ள்.) பிரமாவின்தலையைக்கிள்ளின பரிசுத்தரான நஞ்சுண்டகடவுளென்கிற பார்வதிசமேதராய் திருக்கடவூரிலேவாழுகின்ற சுவாமியை வேண்டித் தவம்பண்ணினால் நமக்கு நல்லபிள்ளையை அனுக்கிரகஞ்செய்வார் ஆனபடியினாலே மனவுறுதியுடனே அவரிடம்தவஞ்செய்யப்போமென்று மருத்துதிசொன்னாள்—எ-று. (௪)

அன்னமென்னடையாள்கூறவகமகிழ்ந்தொளிநூன்மார்பன்
கன்னியைநோக்கியுன்றன்கைத்திருநீறுதாவென்
றன்னவள்கொடுக்கவாங்கியணிந்துமெய்க்கடவூரானை
யுன்னியேதவங்கள்செய்யவொருமித்தான்மிருகண்டேயன்.

(இ-ள்.) அப்படி அன்னம்போலு மெல்லியநடையுள்ள மருத்துதி சொல்ல மனமகிழ்ந்து விளங்குகின்ற முப்புரிநூலணிந்த மார்பையுடைய மிருகண்டேயர் - அந்தமருத்துதியைப்பார்த்து உன்கையாலே விபூதி கொடென்று அந்த அம்மாள்கொடுக்க வாங்கிப்பூசிக்கொண்டு மெய்யா

ண திருக்கடவூரிலுள்ள கடவுளைத்தியானஞ்செய்து தவங்கள் பண்ணுமனி வொருமையாயினர் அந்தமிருகண்டேயர்.—எ-று. (கங)

மிருகண்டமாமுனிச்சருக்க-முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-ாக.

# மிருகண்டேயர் தவநிலைச்சருக்கம்.

நாடியமகவினாலேநான்மறைக்குலத்தோன்றானு
நீடியதவங்கள்செய்யநிறைபொன்னிநதிநீராடி
வீடுயர்விபூதிசாத்திவியனியமங்கள்செய்தே
ஆடுமம்பலத்தான்மேவுமாலயநெருங்கிப்புக்கான்.

(இ-ள்.) தமக்குப்பிள்ளை வேண்டியதனாலே நான்குவேதக் குலத்தாரான மிருகண்டேயர் - நெடிதானதவங்கள் செய்யவேண்டிநிறைந்து வருகிறகாவேரிநதியிலே ஸ்நானஞ்செய்து - மோக்ஷலோகத்துக்கு உயர்த்துவதான விபூதிருத்திராட்சங்களணிந்து பெரிதானநியமங்களெல்லாஞ் செய்துகொண்டு பொன்னம்பலத்திலே கூத்தாடுகின்ற கடவுள்வாசஞ் செய்கிறகோயிலுக்குள்ளே சமீபித்துப்போனர்—எ-று. (க)

கந்தரம்வந்திலங்குங்கடவூரில்வாழ்ந்திலங்குஞ்
சந்திரசேகரனைப்பஞ்சாட்சரப்பொருளானதேவை
ஐந்துமாமுகனையெந்தையானதற்பரனைவாக்காற்
சிந்தையாலன்புகூர்ந்துதிருவடிவணக்கஞ்செய்தான்.

(இ-ள்.) எப்போது மேகசஞ்சாரங்களுள்ள திருக்கடவூரிலே வாழ்வுகொண்டு விளங்குகின்ற சந்திரசேகரனும் பஞ்சாக்ஷரப்பொருளும் அதற்குத்தெய்வமும் ஐந்துமுகங்களுள்ள எமதுகடவுளுமான தானேதானவரை வாக்காலேதுதித்து மனத்தாலேதியானித்து மிகுந்தபத்தியுடனே திருவடிகளைக்கண்டு வணங்கினர்—எ-று. (உ)

வேறு.

எண்ணியாயிரத்தெட்டுடன்மெய்வலமியற்றிக்
கண்ணுமூன்றுடைக்கடவுளைவாலைகாதலனை
நண்ணியன்பதாய்நமஸ்கரித்தெனக்கருணாதா
அண்ணலேயடியேன்பிழைபொறுத்திடென்றறைந்தான்.

(இ-ள்.) எண்ணி ஆயிரத்தெட்டுதரம் கோயிலைத்தேகத்தாலேவலஞ்செய்து திரிநேத்திரதாரியான பார்வதிநாயகனைக்கண்டு அன்புடனே நமஸ்காரஞ்செய்து அடியேனுக்குக் கிருபைசெய்புநாதனே மகாதேவனே அடியேன்செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருள வேணுமென்றார்—எ-று. (ங)

முன்னைநாரணனுரணன்றேடியமுதலே
யென்னையாளுடையிறைவனேயேழைபங்காளா
ஒன்னலார்புரநகைத்தெரித்திடுமுமைநாதா
நின்னைத்தஞ்சமென்றடைந்தனன்காத்தருணியே.

(இ-ள்.) முன்னாளிலே பிரமாவிஷ்ணுக்கள் தேடின முதற்கடவுளே-என்னை அடிமையாகவுடைய கர்த்தனே பார்வதிசமேதனே சத்துருக்கள் திரிபுரத்தைச் சிரித்தெரித்த பார்வதிநாயகனே உன்னையே கதியென்று அடைந்தேன் ஆகையாலே நீயே-என்னைரட்சித்தருள வேணும்—எ-று.

தந்தைதாயிலைதமரிலைமகவிலைசகத்திற்
சொந்தமாகியதுணையிலைநியலாதுண்டோ
சிந்துலாவியதிருக்கடவூரினிற்சிறந்த
இந்துசூடியவிறைவனேயென்னையாள்பவனே.

(இ-ள்.) அடியேனுக்குத் தகப்பனுமில்லை, தாயுமில்லை, உறவுமில்லை, பிள்ளையுமில்லை, உலகத்திலே சொந்தமானதுணையுமில்லை, எல்லாம் நீ யல்லாமல் வேறுண்டோ கடல்சூழப்பட்ட திருக்கடவூரிலே சிறந்து விளங்குகின்ற சந்திரனைச்சூடின கடவுளே என்னை அடிமை கொண்டவனே—எ-று. (௫)

திக்கெலாந்திரிந்தலைந்தொருவகையின்றிச்சிறியேன்
புக்குமெவ்விடங்காண்கிலேன்புரமதையெரித்த
முக்கணாதனேதிருக்கடவூர்முதற்பொருளே
தக்கநன்மகவொன்றுநீதந்தருள்சரணம்.

(இ-ள்.) அடியேன் எட்டுத்திக்கிலுந் திரிந்தலைந்து ஒருவகையுங்கிடையாமற் சிறியேனாகிய நான்போன எந்தஇடங்களிலும் ஆதரவுகாண்கிலேனாகி திரிபுரதகனம்பண்ணின திரியம்பகக்கடவுளே திருக்கடவூரிலேதங்கின மூலமானபொருளே இனி எனக்குத்தகுதியான நல்லபிள்ளை ஒன்றுதரவேணும் உன்பாதமே சரணம்—எ-று. (௬)

என்றுமாமறையோனந்தவிந்துவேணியையு
மன்றல்சேரிமவானருள்மயிலையுமிறைஞ்சி
அன்றவாலயமணுகியேவடபுறமருள்சேர்
துன்றுநல்லிடம்வேண்டியேயவ்விடந்தொடர்ந்து.

(இ-ள்.) என்று அந்தவேதப்பிராமணரானமிருகண்டேயர் அந்தச்சந்திரசேகரக்கடவுளையும் வாசனைபொருந்திய பர்வதராஜன்பெற்ற பார்வதியையும்வணங்கிக்கொண்டு அன்றைத்தினமே அந்தக்கோயிலுக்குள்ளேபோய் வடபுறத்திலே சிவன் அனுக்கிரகம்பெறுவதாயுள்ள நல்ல இடத்தைவேண்டி அந்த இடத்துக்குப்போய்—எ-று. (எ)

நாடியிவ்விடந்தன்னினுமகவினைவேண்டிக்
கோடிரந்தனிற்கங்கையையணிந்தருள்கோனைப்

பாடிநற்றவம்புரிவமென்றேபயில்சாலை
சூடினுனிலைகோலினுன்சுருதிநான்மறையோன்.

(இ-ள்.) இப்படி ஆலோசித்து இந்தஇடத்திலே நாம் பிள்ளைவேண்டி சடையிலே கங்கையணிந்தகடவுளைத்துதித்து நல்லதவஞ்செய்வோமெ ன்று தாமிருப்பதற்குப் பன்னசாலையுங்கட்டி நிலையும்வைத்தார் அந்த மிருகண்டேயர்—எ-று. (அ)

இருவிழிகளுமூடியேதிருக்கரமேந்தி
ஒருமனதுடனஞ்செழுத்தானதையோதி
அருவிபோலிருவிழிகளாலானந்தம்பெருகக்
கருணையாளன்றன்பதத்தினைக்கருத்தினிலிருத்தி

(இ-ள்.) இரண்டுகண்களையுமூடிக்கொண்டு தமதிரண்டுதிருக்கைகளை யுமேந்துதலாய் ஒரேமனதாய்ப் பஞ்சாக்ஷரத்தைச்சபித்து அருவிபோ லானந்தக்கண்ணீர்பெருக அந்தக்கிருபாமூர்த்தியானகடவுள்பாதங்களை இதையத்திலே தியானித்து—எ-று. (௯)

வாசலொன்பதுமடைத்தவன்மனத்தையுமடக்கி
நேசமாகியகரமதையுச்சியினெறியா
பூசல்விட்டவனுலகினிலாசையையொறுத்துப்
பேசொணுத்திருஞானமந்திரங்களைப்பெருக்கி.

(இ-ள்.) நவத்துவாரங்களையுமடைத்து மனமுமடங்கப்பண்ணி அன் புள்ளகைகளை உச்சிவழியாகச்செல்லவிட்டு உலகத்தாசையை வெறுத் துச்சொல்லப்படாததிருஞானமந்திரங்களைமிகவுமுச்சரித்துக்கொண்டு(

உள்ளமீதுள்ளகள்ளவஞ்சனையெல்லாமொருவி
வள்ளலார்பதமிருத்தியேமறைக்குலத்தவனும்
விள்ளொணுத்தவமியற்றினன்மகவினைவேண்டத்
தெள்ளுநான்மறைத்திருக்கடவூரார்வந்திலரோ.

(இ-ள்.) உள்ளத்துள்ள கள்ளவஞ்சனைகளெல்லாம்போகவிட்டு கட வுள்பாதத்தை மனத்திலே நிலைபெறவைத்துமிருகண்டேயர் பிள்ளைவே ணுமென்றுசொல்லி முடியாத தவத்தைச்செய்தார் அதற்கு நான்கு வேதங்களு முழங்குவனவான திருக்கடவூர்க்கடவுள் பிரத்தியக்ஷராக வில்லை—எ-று. (௰க)

இப்படிச்சிலநாடவ்மியற்றியுமெனக்கின்
றப்பனும்மெனதன்னையுமிரங்கலரானல்
ஒப்பிலாத்தவஞ்செய்வனென்றருந்தவனுகந்தும்
அப்பணிந்திடுமரனையேதொழுதினிதெழுந்தார்.

(இ-ள்.) இப்படிச்சிலகாலம் தவம்பண்ணிப்பார்த்து ஐயோ எனக்கு இக்காலத்திலும் தந்தையும் தாயுமான இருவரு மனமிரங்கவில்லையே

யென்று இனி உக்கிரமான தவம்பண்ணுகிறேனென்று மனதுசந்தோஷத்துடனே அந்தக்கடவுளையே வணங்கிக்கொண்டெழுந்தார்—எ-று()

வேறு.

தெரியழற்குண்டஞ்சமைத்ததினடுவேசெப்புநாராசமுமிருத்தி
அரிதெனமுனையிலெலுமிச்சம்பழத்தையடுக்கிமேலூசியைநிறுவி
மருமலர்புனைந்துமரனையேநினைந்துமறையவன்றவிசினிலேறிப்
பரிவுடன்சிரசுகீழதாயிருதாண்மேலவாய்நின்றவன்பணிந்தான்.

(இ-ள்.) எங்குந் தெரிவதாக அக்கினிக்குழிஉண்டாக்கி அதனடுவே செம்பாலேசெய்த நாராசங்களைநட்டு அவைகளின் முனைகளிலே அருமையென்றுசொல்ல எலுமிச்சம்பழங்களையடுக்கி அவற்றின்மே லூசியைநிறுத்தி மணம்பொருந்தின மலரை அணிந்தும் சிவனையே தியானித்தும் மிருகண்டேயர் அதன்மேலாசனமிட்டு ஏறி அன்புடனே சிரசுகீழாகவும் கால்மேலாகவு மிப்படிநின்று கடவுளைவணங்கினர்—எ-று.()

சோதியேசுடரே சுடர்நுனிக்கொழுந்தே சுருதியின்பொருளதாய்நிறைந்தே, ஆதியுநடுவுமீறுமில்லாதவப்பனேயொப்பிலாவமுதே
சாதிபேதங்களானதத்துவனேயெளியவர்பங்கினிற்சார்ந்த
நீதிநாயகனேயன்பர்கள்மனத்தினிலைத்திடுமுத்திசாதனனே,

(இ-ள்.) சோதியாகியும் விளக்காகியும் விளக்கி னுனிக்கொழுந்தாகியும் வேதப்பொருளா யெங்குநிறைந்து ஆதிமத்தியாந்தரஹிதனான அப்பனே ஒப்பில்லாத அமுதமுமானவனே சாதிபேதங்களாக விளங்குகின்ற தத்துவசொரூபியே எளியவர்களிடத்திலே சார்ந்துநிற்கின்ற நீதிக்கடவுளே அடியார்கள் மனத்திலே நிலைகொண்டுவளருகிற மோக்ஷசாதனமானவனே—எ-று. (௰௪)

ஓமெனுமெழுத்தாய்விண்ணதாய்மண்ணுயுயர்ந்திடுமுயிரதாய்நின்ற
வாமனேவிரிந்தவண்டமிழ்ப்பொருளேமாரனையெரித்தநாயகனே
சோமனைச்சடையிற்றரித்திடுமரசேசுந்தரன்றூதனேயனந்த
நாமனேசருவநாதனேதொண்டர்நண்ணியவுற்பனவடிவே.

(இ-ள்.) ஓங்காரமென்கிற அக்ஷரவடிவாகி ஆகாசரூபமாய் மண்ணுருவாய் உயர்ந்திருக்கிற ஜீவசொருபமாய் நிலைகொண்டிருக்கிற பார்வதிசமேதனே விரிவான அழகிய தமிழ்ப்பாடையின் அர்த்தரூபமானவனே மன்மதனைத் தகனம்பண்ணினகடவுளே சந்திரனைச் சடையிலே அணிந்ததெய்வமே - சுந்தரமூர்த்திக்குத்தூதானவரே-அனேகம்பெயர்களுள்ளவனே - சருவலோகநாயகனே அடியார்கள் வேண்டினவடிவாய் விளங்குகின்றவனே—எ-று. (௰௫)

ஆணதாய்ப்பெண்ணு யலியதாய்மிக்க வஞ்செழுத்தாயவற்புதனே
ஊணதாய்ச்சுவையா யொருவருமறியா வோரெழுத்தாகியமுதலே

வேணுவின்வடிவே யருவுருவான விமலனேயிடபவாகனனே
தாணுவேயன்பர் சமயசஞ்சீவியே சச்சிதானந்தசின்மயனே.

(இ-ள்.) ஆணாகியும் பெண்ணாகியும் அலியாகியும் சிறந்த பஞ்சாக்ஷர சொருபமான ஆச்சரியரூபனே-உணவுமாய்அவ்வுணவிலே சுவையுமாய் ஒருவராலும் அறியக்கூடாத ஏகாக்ஷரரூபமான முதற்பொருளே வேயி ன்ற முத்தானவரே அரூபனே ரூபமானபரிசுத்தனே இடபவாகனக்கட வுளே - நிலையானவஸ்துவே அடியார்களுக்குச் சமயசஞ்சீவியாயிருப்ப வரே-சச்சிதானந்தவடிவான சின்மயவுருவே—எ-று. (௰௬)

வேறு.

நீரணிவிமலாபோற்றிநிட்களரூபாபோற்றி
ஆரணத்தயன்மாறேடுமைம்முகப்பொருளேபோற்றி
காரணவரதாபோற்றிகாளகண்டத்தாய்போற்றி
வாரணிதனத்தெமன்னைமலைமகள்கொழுநாபோற்றி.

(இ-ள்.) கங்காஜலத்தைத் தரித்த பரிசுத்தனே நிட்களரூபா வேதங்க ளுணர்ந்த பிரமா விஷ்ணுக்கள் தேடுவதான ஐந்துமுகத்தையுடைய பொ ருளே எல்லாவற்றுக்குங் காரணவடிவாய் வரந்தருமவனே காளகண்ட த்தையுடையவனே கச்சணிந்த தனங்களைக்கொண்ட எங்கள் தாயான பார்வதிநாயகனே போற்றிபோற்றி போற்றிபோற்றி—எ-று. (௰௭)

முக்கண்வானவனேபோற்றிமூலகாரணனேபோற்றி
தக்கனைத்துணித்தாய்போற்றிசருவசங்காராபோற்றி
எக்கியப்பொருளேபோற்றியென்மனக்கொழுந்தேபோற்றி
செக்கரஞ்சடையாய்போற்றிசிவசிவாபோற்றிபோற்றி.

(இ-ள்.) திரியம்பகக்கடவுளே மூலகாரணவஸ்துவே தக்கனைக்கொன் றவனே சருவசங்காரமூர்த்தியே எக்கியசுருபியே எனதுமனத்தில் விள ங்கும் ஒளிக்கொழுந்தானவனே சிவந்த அழகிதான சடையையுடையவ னே சிவசிவா போற்றிபோற்றி போற்றிபோற்றி—எ-று. (௰௮)

## அகவல்.

சிவசிவாசிவனே சிந்துரமுரித்தோய்
தபனநாயகனே சதாசிவப்பொருளே
வித்தினிலுதித்தோய் வேதநாயகனே
சுத்தமெய்ஞ்ஞானச் சுடரொளிப்பொருளே
அண்டபிண்டங்க ளனைத்தையும்படைத்தோய்
தொண்டர்கண்மனத்திற் றோன்றியசோதீ
திரிபுரந்தனைநகைத் தெரித்தசேவகனே
அரவுமம்புலியு மணிந்தவற்புதனே
சுந்தரற்காகத் தூதுசென்றவனே

கந்தனையீன்ற கற்பகத்தருவே
எரிமழுமானை யேந்தியகரத்தோய்
விரிவுளபொருளே விறபனவடிவே
ஒருவருமறியா வுற்பனமுதலே
இருவருமறியா ஏகநாயகனே
நன்மையுந்தீமையு நாளுநாழிகையின்
றன்மையாய்நின்ற தயாபரப்பொருளே
சுடலையினடனஞ் செய்ததூயோனே
விடமதையுண்டருள் வித்தகப்பொருளே
தந்தைதாய்சுற்றமி லாததற்பரனே
மந்திரசொரூபா மலைமகள்கொழுநா
மேருவைத்தனுவாய் வளைத்தவில்வீரா
நீரணிசடையாய் நிர்மலவடிவே
பாண்டியன்கூடலிற் பாவையும்வருந்தி
வேண்டியகூலியா ளாகவேவந்து
பிட்டதைவாங்கிப் பெருகியகையில்
வெட்டிமண்சுமந்திட வேகமாய்மாறன்
கையினிற்பிரம்பாற் கண்டடிபட்ட
செய்தவப்பொருளே தேவர்நாயகனே
வெள்ளியம்பொருப்பில் வீற்றிருந்தோனே
யெள்ளிலெண்ணெய்போ லெங்குநின்றோனே
வானவர்தானவர் மாதவர்மானிடர்
நானிலத்தேவதை நாயிறுதிங்கள்
அயனெடுமாலு மறுமுகன்விநாயகன்
புயல்போற்கணங்கள் பூதபதாதிகள்
தும்புருநாரதர் சூதர்மாகதர்
அம்புவியுடையோ ரட்டவயிரவர்
கெந்திருகின்னரர் கெருடகாந்திருவர்
நந்திமகேஸ்வரர் நாதவேதாந்தர்
புந்தியில்வைத்துன் பொன்னடிபோற்ற
ஐந்துமுகமு மரவாபரணமும்
இந்துபுனல்மல ரிலங்கியசடையும்
மந்திரமுரைத்த மான்மழுக்கரமுட
னெந்தனையாள வேற்றுவாகனத்தில்
வந்துமையாளுடன் மகிழ்ந்துநீவரங்கள்
தந்திடவேணுந் தனையனையெனக்குச்
செந்திருவளர் திருக் கடவூர்ச்சிவனே.

வேறு.

இம்மொழியினுற்றுதித்தேயிருபிறப்போனழனடுவேயிளைத்துவாடி
வெம்மைபனிரண்டாண்டுசென்றுதவமியற்றினதான்மெய்களெல்லாம்
பொய்மைமணலடர்ந்துசிதலரித்துவண்டற்புற்றடர்ந்துபுதற்கள்சூழ்ந்து
விம்மியதாலான்முளைத்துவிழுதோடிநிலங்கிழியவேர்களோடி.

(இ-ளை.) இந்தவசனங்களாலே தோத்திரஞ்செய்து அந்தப்பிராமணரான மிருகண்டமகாமுனிவர் நெருப்பினடுவேநின்று இளைத்து வாடுதலாகி வெப்பமாக பனிரண்டுவருஷங்கழியத் தவஞ்செய்கிறதினாலே உடம்பெல்லாம் இல்லையென்னும்படி மணல்மூடி கறையான்அரித்து வண்டலாய்ப் புற்றாகி புதல்களும் சூழப்பட்டு இப்படிப் பெரிதானதினாலே ஆலம்வித்து விழுந்து முளைத்து விழுதுநீளும்படி பூமிபிளந்து வேர்களோடுவனவாகி—எ-று. (௰௯)

ஆவியெலாமயர்ந்தடங்கியறிவுநினைவும்மறந்துமாண்மைசோர்ந்து
மேவியதோரங்கமெல்லாங்கழிந்தயர்ந்துவிழுந்திடவேமிருகண்டேயன்
றாவியகற்பேயறிவுதற்பரன்றாண்மேனோக்கித்தவங்கள்செய்யக்
காவிமலர்மதிச்சடையோன்றிருவுளஞ்சற்றேயிரங்கிக்கழறலுற்றார்.

(இ-ளை.) உயிர்முழுதும் சோர்ந்து அடங்குதலாய் அறிவும் நினைவு மறந்தும் ஆண்மைகுறைந்தும் உடம்பிலேபொருந்தின எலும்பெல்லாம் கழிந்து வெவ்வேறாகி விழவு மிருகண்டேயர் தாம்செலுத்தின பேறிவானது கடவுள் திருவடியைக் கருதித் தவத்தையேசெய்ய அப்போது நீலமுதலானவைகளை மலரச்செய்கிற சந்திரனைச் சடையிலேகொண்ட கடவுள் சற்றே திருவுள்ளமிரங்கிச் சொல்லுகிறார்—எ-று. (௨௰)

வேறு.

எளியவர்க்கெளியனானவெம்பிரானாதிமூர்த்தி
ஒளிமருங்குடையாளானவுமைதனைநோக்கிச்சொல்வார்
களிசுரும்பாற்றுங்கூந்தற்கன்னியேகேண்மோசோலைத்
துளிமதுக்கடவூர்வாழுந்தொன்மறைக்குலத்தனானேன்.

(இ-ளை.) எளியவர்களுக் கெளியவனாய் எமதுகடவுளான ஆதிமூர்த்தியானவர் ஒளிபொருந்தினஇடையையுடையவளான பார்வதியைப் பார்த்துச்சொல்லுகிறார் என்னவென்றால் மதுக்களிப்பினாலேவண்டுகள்சத்திப்பனவான கூந்தலையுடைய மலைமகளேகேள் சோலைகளெல்லாம்தேனைத்துளிப்பனவான திருக்கடவூரிலே வாழுகிற ஒருபிராமணன்—எ-று. ()

மெத்தவுமகவினாலேமேனியும்வெளிறிநொந்து
சித்தமதெம்மைவைத்துத்திருத்தவஞ்செய்யலுற்றான்
மூத்தெனுநகைசேர்மாதேபாரொனமுன்னோன்கூற
அத்திருமூலகமீன்றவன்னையுமுரைப்பதானாள்.

(இ-ள்.) மிகவும் பிள்ளையில்லாத வருத்தத்தினாலே உடம்பெல்லாம் விளர்த்து நொந்து என்னைத் தன்மனத்திலேகொண்டு சிறந்ததவஞ்செய்கிறான் அவனை முத்துப்போலும் பல்வரிசைகளுள்ள பெண்ணே நீ பார் என்று முதற்கடவுளானவர் சொல்ல கடல்சூழ்ந்த வுலகமெல்லாம் பெற்ற தாயான பார்வதிதேவி சொல்லத்தொடங்கினாள்—எ-று. (௨௨)

காமனைக்காய்ந்தநாதா கடல்விடமுண்டகோவே
நாமமாயிரங்கள்கொண்ட நற்றவக்கொழுந்தேயாதி
ஓமெனுமெழுத்தேயென்னை யுகந்திடுமரசேமிக்க
சோமனைமுடித்தவேணிச் சுருதிநாயகனேகேண்மோ.

(இ-ள்.) மன்மதனைத் தகனம்பண்ணினவரோ-கடல்விடமுண்டவரோ-சகஸ்திரநாமங்களுள்ளவரோ - நல்லதவங்களுக்குக் கொழுந்தானவரோ-முதலில் ஓமென்கிற எழுத்தானவரோ-அடியேனைவிரும்பிகொண்டதலைவரோ-ஒளியாற்சிறந்த சந்திரனையணிந்த சடையையுடையவேதநாயகரோ கேளும்—எ-று. (௨௩)

மைந்தர்கடமக்குநோய்கள் வறுமைகளிடர்கள்வந்தாற்
றந்தைதாயன்றோதீர்க்குந் தகைமையர்வேறுமுண்டோ
எந்தையாளுநாதா மிருகண்டனிடத்தினும்போய்ச்
சிந்தையாகுலத்தைத்தீர்த்தா டிருவுளமறியேனென்றாள்.

(இ-ள்.) பிள்ளைகளுக்கு வியாதிகள் தரித்திரங்கள் துன்பங்கள்வந்தால் அவைகளைத் தகப்பனுந் தாயுமல்லவோ தீர்க்கத்தக்கவர்கள் வேறே யாவர்தீர்ப்பார்கள் என்னை அடிமைகொண்டநாயகரோ-மிருகண்டரிடத்தில் நாமிருவரும்போய் அவர் மனோவியாகுலத்தைத்தீர்க்கவேணும் என்மன மிப்படியானால் எல்லாரையும் ஆளுகின்ற உம்முடைய திருவுள்ளமெப்படியோ என்றாள்—எ-று. (௨௪)

நாயகாவுலகமெல்லாம் படைத்ததுநாமேயானா
னேயமாயவர்கடாமே நினைப்பதுகடனேகண்டா
யாகையாலவர்துன்பத்தை யகற்றுநிரந்தணற்குச்
சேயருள்செய்யவேண்டு மென்றனள்திருவின்மிக்காள்.

(இ-ள்.) சுவாமீ உலகங்களையெல்லாம் நாமே உண்டாக்கினதென்றால் அந்தவுலகத்துள்ளவர்கள் நம்மைநினைக்கிறதுநியாயமே ஆகையால் அவர்கள் துன்பத்தைப்போக்குகிறதன்மைபோல் அந்த மிருகண்டமகாமுனிவர் சந்தோஷிக்கப் புத்திரனுண்டாகும்படி வரங்கொடுத்தருளவேணுமென்றாள் லட்சுமியிலுஞ்சிறந்த பார்வதிதேவி—எ-று. (௨௫)

பாகிலுமினியசொல்லாள் பகர்ந்ததேபுண்மையாக
யோகியர்க்கருளுந்தெய்வ முளமகிழ்ந்துமையாளோடு
தாகமாமிருகண்டேயர் தமக்கருள்செயவேகூர்ந்து
வேகமாய்க்கணத்தைப்பார்த்துவிடைதனைக்கொணர்மினென்றார்

(இ-ள்.) தேன்பாகிலும் அதிக மாதுரியமான சொற்களையுடையபார்வதிதேவி சொன்னதே மெய்யாகக்கொண்டு யோகஞானிகளுக்குப் பிரசன்னமாகுகின்றகடவுள் மனமகிழ்ச்சியாய்ப் பார்வதிதேவியுடனேகூடி மிகுந்த இளைப்புடனே தவஞ்செய்கிற மிருகண்டேயருக்குக் கிருபைசெய்ய உட்கொண்டு அவசரத்துடனே கணநாதர்களைப்பார்த்து நமது இடபவாகனத்தைக் கொண்டுவாருங்களென்றார்—எ-று. (உசு)

விடைதனையலங்கரித்து விமலர்முன்னடியார்செல்ல
அடைவுடனுமையாளோடு மையனுமெழுந்தபோது
குடைதனைப்பிடிக்குங்குண்டோ தரன்குகன்விநாயகன்மால்
படைவிழிச்சசிதன்கேள்வன் விரிஞ்சனும்பரிவிற்சூழ்ந்தார்.

(இ-ள்.) இடபத்தை அலங்கரித்துக்கொண்டு கடவுள்முன்னே அடியார்கள்வரக்கண்டு கிரமத்துடனே பார்வதிசமேதராக இடபவாகனத்தின்மேலெழுந்தருளினபோது குண்டோதரன் குடைப்பிடிக்க-சுப்பிரமணியர் விநாயகர் திருமால் வாள்போலுங் கண்களுள்ளஇந்திராணிநாயகனான இந்திரன் பிரமன் முதலானவர்களும் அன்புடனே கூடினார்கள்.()

வானவர்முனிவர்சித்தர் மாகதர்சிவகணங்க
ளானதிலேறுருத்திர ரரியகாந்திருவர்யோகர்
நானிலந்துதிவதிட்ட னாரதர்மருத்துவர்க
ளேனமும்பணியுநாத ரிருபக்கஞ்சூழ்ந்ததன்றே.

(இ-ள்.) தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் மாகதர்கள் சிவகணங்கள் இடபத்திலேறுகின்ற உருத்திரகூட்டங்கள் அருமையான காந்திருவர்கள் யோகர்கள் நான்குதிக்குந் துதிக்கத்தக்க வதிட்டர் நாரதர் மருத்துவர்கள் எல்லாம் வராகமானவர் வணங்கும் பெருமைபெற்றகடவுளிருபுறத்திலுஞ் சூழ்ந்தார்கள்—எ-று. (உஅ)

உமையொருபாகந்தோன்ற விடையினிலெழுந்துமைய
னிமையவர்செயசெயென்னக் கயிலைவிட்டிறங்கிவந்தே
சமயநூல்விளங்குமிக்க திருக்கடவூரின்சார்பிற்
கமைவுடன்றவஞ்செய்வேதன் கருத்தினைநோக்கிக்கூறும்.

(இ-ள்.) பார்வதிதேவி ஒருபுறத்திலேதெரிய இடபத்தின்மேலேறிவந்து பரமசிவனானவர் தேவர்கள் செயசெயவென்று கட்டியங்கள்கூறக் கயிலாசமலையி னுச்சியைவிட்டுக் கீழேயிறங்கிவந்து பலவகைச்சமய சாஸ்திரங்களெல்லாம் மிகவும்விளங்குகின்ற திருக்கடவூருக்குவந்து அங்கே கிரமத்துடனே தவஞ்செய்கிற மிருகண்டேயர் உள்ளக்கருத்தைப் பார்த்துச்சொல்லுகிறார்—எ-று. (உகூ)

வித்தகர்முனிவர்சித்தர் விண்மண்ணிலெவர்களாலு
மித்தவஞ்செய்வோரில்லை யரிதிதுவென்றறிந்து

மத்தனுமுமைக்குக்கூறி யதிசயமுடனேநாதன்
மெய்த்தவமறையோன்றன்னை விரைவுடனெழுப்புங்காலை.

(இ-ள்.) அறிவுள்ளவர்களான முனிவர்கள் சித்தர்கள் இன்னம் ஆகாயம் பூமிகளிலுள்ள யாவரானாலும் இப்படிப்பட்ட அரிதானதவஞ்செய்வோர்களில்லை இத்தவமருமையானதென்று தெரிந்து கடவுளானவர்பார்வதிக்குச்சொல்லி ஆச்சரியத்துடனே எழுந்தருளிவந்து மெய்யான தவத்தைச்செய்கிற மிருகண்டேயனை அவசரத்துடனெழுப்பும்போது()

புனிதனுமகிழ்ந்துகூவப்பூசுரனங்கங்கூடிக்
கனிவுடனெழுந்துசோதியிறைவனைக்கரங்கள்கூப்பி
நனைமலர்சொரிந்துவிழ்ந்துநாரணனயனுங்காணுத்
தனியனேசரணமென்றுதாளிணையிறைஞ்சிக்கூறும்.

(இ-ள்.) அப்படிக் கடவுள் சந்தோஷித்துக்கூப்பிட மிருகண்டேயருக்கு எலும்புகளெல்லாம் ஒன்றுபட்டுக்கூடிச் சந்தோஷத்துடனே எழுந்துபரஞ்சோதியான கடவுளைக்கண்டு கைகுவித்து அரும்புகளுடனே பூச்சொரிந்து விழுந்து சேவித்து பிரமா விஷ்ணுக்களாலே காணப்படாத ஒப்பில்லாதவரோ இதோ வந்தனமென்று இரண்டுகால்களிலும் வணங்கிச்சொல்லுகிறார்—எ-று. (௩௧)

அண்டபிண்டங்களாகியாதியாயனாதியாகித்
தொண்டர்கள்மனத்துள்ளாகித்தொல்லுலகேழுமாகி
விண்டுவுமயனுமாகிவிண்ணவர்க்கன்பாயால
கண்டனேயென்னையாண்டகடவுளேபோற்றிபோற்றி.

(இ-ள்.) அண்டபிண்ட சராசரங்களும் ஆதியும் அநாதியும் நீயேயாகி அடியார்கள் மனத்துள்ளுநிறைந்து பழையதான் ஏழுலகங்களும் வியாபித்து விஷ்ணுவும் பிரமாவுமான்தன்றித்தேவர்களுக்காகப்பிரீதியுடனே நஞ்சுண்ட நீலகண்டனுமானவனே என்னை அடிமைகொண்டசுவாமிபோற்றிபோற்றி—எ-று. (௩௨)

உயிர்க்குயிராகியெங்குமுள்ளொளிப்பிரபையாகி
இயற்கையுஞ்செயற்கையாகியிறப்பொடுபிறப்புமில்லாக்
கையிற்கொளும்பொருளுமாகிக்கருத்தும்பேரறிவுமாகி
மயக்கந்தீர்த்தென்னையாளும்வள்ளலேபோற்றிபோற்றி.

(இ-ள்.)உயிர்களுக்கெல்லா முயிராய் எங்கும் உள்ளொளியுமாகி அவ்வொளியின்பிரபையுமாய் இயற்கைப்பொருளுஞ் செயற்கைப்பொருளுமாய் இறப்பும்பிறப்புமில்லாத ஒருவர் கைவசப்படுத்துக் கொள்ளுகிறவஸ்துவுமாய் கருத்தும் பேரறிவுமாய் அஞ்ஞானத்தைப்போக்கி என்னை அடிமைகொண்டருளும் கடவுளே போற்றிபோற்றி—எ-று. (௩௩)

வித்தினிலுதித்தாய்போற்றிவிண்ணவர்க்கிறையேபோற்றி
அத்தியையுரித்துப்போர்த்தவையனேபோற்றிபோற்றி

சித்துருவடிவாய்போற்றிதிருக்கடவூராபோற்றி
சுத்தனேயென்னையாளவந்தருள்சுடரோபோற்றி.

(இ-ள்.) வித்திலே முளையானவனே போற்றி தேவர்களுக்கெல்லாந் தேவனானவனேபோற்றி யானையையுரித்துப் போர்த்துக்கொண்ட சுவாமி போற்றிபோற்றி சித்துவடிவான சோதியேபோற்றி திருக்கடவூரானேபோற்றி சுத்தனே என்னை அடிமைகொண்டருள எழுந்தருளினசுடரோ போற்றிபோற்றி—எ-று. (௩௪)

தஞ்சமென்றோர்கள்பக்கற் சார்ந்திடுஞ்சிவமேபோற்றி
நஞ்சினையமுதாய்க்கொண்ட நாயகாசரணம்போற்றி
பிஞ்சிளமதியைச்சூடும் பித்தனேகயிலைநாதா
கஞ்சனார்முடியைக்கொய்த கடவுளேபோற்றிபோற்றி.

(இ-ள்.) நீயேகதியென் றடைந்தவர்கள்பக்ஷத்திலே கூடினபரமசிவமேபோற்றி-விடத்தை அமுதமாகக்கொண்டருளின கடவுளே உமது திருவடிகள்போற்றி - மிகவும் இளமையான சந்திரனைச்சூடின பித்தனே கயிலாசபதியாகிப்பிரமதேவன் தலையைக்கிள்ளின சுவாமி போற்றி போற்றி—எ-று. (௩௫).

மலப்பொதிபாண்டமான மனுவடிவெடுத்துமுன்ற
னலப்பதஞ்சேராப்பாவி நாயினுங்கடையாய்நின்றேன்
மலைக்கொடிபாகாவுன்றன் மலரடிகாணமுன்னாள்
பலத்தவமுயன்றதேதோ வறிகிலேன்பழமையோனே.

(இ-ள்.) மலம்பொதிந்த சரீரமுள்ள இந்தமானிடதேகத்தைக்கொண்டும் உமதுநன்மையுள்ளதிருவடியை அடையமாட்டாதபாவியான நாயைப்பார்க்கிலுங் கீழ்மையானநான் பார்வதிசமேதா உமது தாமரைமலர்போலுந் திருவடிகளைத் தெரிசிப்பதற்கு முன்னாளிலே பலனைத்தருவதான எந்தத்தவத்தைச்செய்தேனோ அறியேன் ஓபுராதனக்கடவுளே.()

இன்மைநன்மைகளிதென்றேயியலறியாதமூடத்
தன்மையோடிருந்துமுன்றன்றாண்மலர்காணப்பெற்றேன்
முன்னம்யான்செய்தபாவத்தொடர்பையுமுலகில்வந்த
ஜென்மமுமடியேன்செய்ததீமையுந்தீர்ந்திட்டேனே.

(இ-ள்.) இதுநன்மை இது நன்மையின்மைஎன்று அதனதனிலக்கணமறியாத மௌட்டியத்துடனே கூடியும் உனது பாததாமரைகளைத் தெரிசிக்கலானேன் முன்னாளிலே நான்செய்திருந்த பாவசம்பந்தங்களும் உலகத்திலேபிறந்த இத்தஜன்மத்தி லடியேன்பண்ணின பாவங்களும் தீர்ந்து கிருதார்த்தனானேன்—எ-று. (௩௭)

துய்யனேயுன்றன்பாதங்காணவுந்தொழவும்பெற்றேன்
பொய்யெனும்பிறவியற்றேன்பொன்னடிக்காளாய்நின்றேன்

வெய்யவனுலகுதன்னில்விண்ணிலுமெவரானாலு
மையனேயென்றன்பேறுமடைபவரொவருங்காணேன்.

(இ-ள.) பரிசுத்தரான தெய்வமே உமது திருவடிகளைத்தெரிசிக்கவும் பெற்றேன் இந்தப்பொய்யான பிறவியுந்தீர்ந்தேன் உமதுபொன்னடிகளுக்கு அடிமையாய் நாய் போன்ற நான் சூரியன்விளங்குகின்ற இந்தவுலகத்திலும் அந்தத் தேவருலகத்திலும் யாரானாலும் நான்பெற்ற பேற்றையும் பெற்றவர்களுண்டோ ஒருவரையுங்காணேன்—எ-று. (௩அ)

என்றிருபிறப்போன்றானுமெரிசடைக்கடவுடன்னைத்
தன்றிருவாயாலேத்தித்தாழ்ந்துகைத்தலங்கள்கூப்பி
இன்றுநீகருணைசெய்வாயெனத்தொழுதிறைஞ்சுங்காலை
மன்றினினடனஞ்செய்யும்வள்ளலுங்கருணைகூர்ந்து.

(இ-ள.) என்பதாக வேதப்பிராமணரான மிருகண்டேயர் நெருப்புப்போற்சிவந்த ஜடையையுடைய கடவுளைத் தமது திருவாக்காலே துதித்துவணங்கிக் கைகளைக் குவித்துக்கொண்டு சுவாமிநீரிப்போதுதானே கிருபை செய்யவேணுமென்று பின்னும் வணங்கித் துதிசெய்யும்போது சிதம்பரத்துப் பொன்னம்பலத்திலே நடனஞ்செய்கின்ற கடவுள் பரிபூரணதயவுண்டாகி—எ-று. (௩௯)

அருமறையவனைப்பார்த்தேயஞ்சலென்றருளிநீதா
னிருமித்ததவங்களாலேநேசம்வைத்துன்பால்வந்தோம்
இருநிலந்தனிலுன்போலவியற்றுவாரொருவருண்டோ
கருதியகருமஞ்சொல்லுகென்றரன்கழறுங்காலை.

(இ-ள.) அருமையான வேதப்பிராமணரைப்பார்த்து பயப்படாதேயென்று அருளிச்செய்து நீர் நிருமிதமாகக்கொண்டு செய்ததவங்களைக் குறித்து அன்புண்டாயும்மிடத்துக்கு வந்தருளினேம் ஆனு லிந்தப் பெரியவுலகத்திலே உம்மைப்போற் றவஞ்செய்தவர்க ளொருவருமில்லை ஆகையாலே நீர்நினைத்துத் தவஞ்செய்கிறகாரியத்தை இன்னதென்று தெரியச்சொல்லுமென்று கடவுள் சொல்லும்போது—எ-று. (௪0)

தூசினையொடுக்கிக்கையால்வாய்மலர்புதைத்துத்தூய
நேசமாய்த்தொழுதுநின்றுவேதனுநிகழ்த்தலுற்றான்
வாசனேயடியேனிந்தமானிடவாழ்க்கைதன்னிற்
பாசம்வைத்திடரினைந்தேன்பண்ணியபாவந்தன்னால்.

(இ-ள.) ஒருகையாலே வஸ்திரத்தை ஒடுங்க அடக்கிக்கொண்டு நல்ல அன்புகொண்டு வாயை ஒருகையால் மூடிநின்று மிருகண்டேயர்.சொல்லுகிறார் எங்கும் நிரந்தரமாய் வாசஞ்செய்கிறகடவுளே அடியேன்இந்த மனிதவாழ்விலே அதிகபக்ஷங்கொண்டு நான்செய்த பாவத்தினாலே மிகவும் துன்பத்திலே வருந்தினேன்—எ-று. (௪௧)

இங்குளோரெனைநகைக்கவினமொடுபிறருமேச
மங்கினேன்மகவிலாதமலடெனும்வாய்மையாலே
பொங்கரவணிந்தநாதாபினையொருபொருளும்வேண்டே
னெங்கள்வுங்கிஸமீடேறவெனக்கொருமகவையீவாய்.

(இ-ள்.) இந்த வுலகத்துள்ளவர்க ளெல்லாரும் சிரிக்க என்சாதியாரு மற்றுமுள்ளவர்களும் என்னைத்தூஷிக்கவும் அதனாலே நான்மிகவும்சோர்தலானேன் என்னென்றால் பிள்ளையில்லாத மலடனென்கிற சொல்லினாலே மிகுந்த பாம்பாபரணமணிந்த கடவுளே எனக்கு வேறொருபொருளும் வேண்டியதில்லை ஆனாலும் இனி எங்கள் குலகோத்திரமெல்லாம் தழைத்தோங்கும்படி எனக்கொருபிள்ளையை நீர் அருளிச்செய்யவேணும்—எ-று. (சஉ)

செய்தவனுரைக்கவெங்கள்சிவபெருமானுங்கூறும்
பொய்கொலைகளவுகாமம்போக்கிநற்றவங்கள்செய்வோர்க்
கெய்திடநினைத்தவெல்லாமியலுடன்கொடுப்போங்கண்டாய்
மெய்யுள்வேதியரோகேண்மோவிரிதிரையுலகில்யார்க்கும்.

(இ-ள்.) அப்படித் தவஞ்செய்த மிருகண்டேயர் சொல்ல சிவபெருமான் சொல்லுகிறார் பொய்-கொலை-களவு-காமம்-ஆகிய - இவைகளைவிட்டு நல்ல தவஞ்செய்கிறவர்களுக்கு எண்ணின எல்லாப்பொருளுங் கிடைக்கும்படி நாமே கொடுக்கக்கடவோம் ஆகையாலே மெய்யான இருதையமுள்ள மிருகண்டேயரோ விரிந்த அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட உலகத்திலே எல்லாருக்கும் கொடுக்கிறவன் நானே ஆதலால் சொல்லக்கேளும்—எ-று. (சங)

ஆகையாலொருவர்செய்யாத்தவத்தினையரிதிற்செய்தா
யோகையாலுனக்குநாமுமொருமகவுதவுவோமென்
றேகநாயகனும்பின்னுமெழின்மறையவனைப்பார்த்துத்
தாகமாயன்பாயொன்றுசாற்றுவோங்கேளுமென்றார்.

(இ-ள்.) நீர் ஒருவராலுஞ் செய்யப்படாத தவத்தை மிகுந்தவருத்தத்துடனே செய்தீர் ஆகையால் உம்மிடத்தில் நமக்குண்டான சந்தோஷத்தினாலே உமக்கு நாம் ஒருபிள்ளையுண்டாக வரங்கொடுத்தோமென்று பின்னையு மிருகண்டேயரைப்பார்த்து மிகுந்த அன்புடனே ஒன்று சொல்லுகிறோம் கேளுமென்றார் ஒன்றானகடவுள்—எ-று. (சச)

மறைபுகழுலகந்தன்னில் வஞ்சனைகொலைபொய்சூது
முறையிகழ்ந்தசடனாக மூடனுய்க்காமியாக
நிறைதவிர்குணக்கேடாக விரக்கமொன்றில்லானாக
வுறைசுதனாருண்டாக வளித்துமோவுணர்த்துகென்று.

(இ-ள்.) வேதங்களாலேகொண்டாடப்பட்ட இந்தவுலகத்திலே- வஞ்சனை-கொலை-பொய் - சூது-இவைகளையுடையனாகி நீதிதப்பி அசடனாக

வும், மூடனாகவும், காமியாகவும், கிரமந்தப்புகிற குணக்கேடனாகவும் இரக்கமெவ்வளவுமில்லாதவனாகவு மிருக்கிறபிள்ளை நூறுவயதுள்ளவனாக நாம் கொடுத்தல்செய்யவா சொல்லுமென்று பின்னுஞ் சொல்லுகிறார் கடவுள்—எ-று. (௪௫)

சுருதிவல்லவனாயோக சொரூபனாய்நமையெப்போதுங்
கருதியவறிவுளோனாய்க கடாட்சவிட்சணமுள்ளோனாய்த்
தருமசற்குணனாய்மிக்க தவத்தவர்க்கருள்செய்வோனாய்
அருமையாய்ப்பதினாறுண்டி லருளவோவென்றானையன்.

(இ-ஙா.) வேதசாஸ்திரங்களிலே வல்லவனாய் யோகத்தியானனாய்எப்போதும் நம்மைத்தானே சிந்திக்கின்றஞானியாய் நம்முடைய கடாக்ஷவீக்ஷண்ணியமுள்ளவனாய் தருமசற்குணமுள்ளவனாய் மிகுந்ததவயோகிகளுக் கன்புள்ளவனாய் அருமையாகப் பதினாறுவயதுள்ளபிள்ளை ஒன்று கொடுக்கவா சொல்லுமென்றார் கடவுள்—எ-று. (௪௬)

ஐயனேயரனேயுன்ற னடியிணைகாணப்பெற்றுஞ்
செய்யநற்றவங்கள்செய்துஞ் சிறுமையோடிருந்துமிப்பாற்
பொய்கொலைகட்காமஞ்செய் திடும்பொறைநிறையிலாத
பைவிடநாகம்போன்ற பாலனேவேற்கவந்தேன்.

(இ-ஙா.) ஐயாசுவாமி உம்முடைய பாதங்களைத் தெரிசிக்கப்பெற்றும் செவ்வையான நல்லதவங்களைச்செய்தும், சிறுமைப்பட்டும் இன்னமும் பொய்-கொலை-கள்-காமம் - முதலானவற்றைச்செய்கிற பொறுமையும் அடக்கமுமில்லாத படத்தையும் விடத்தையுமுடைய பாம்பைப்போன்ற பிள்ளைவேணுமென்றே உம்மைக்கேட்கவந்தேன்—எ-று. (௪௭)

நதிகடலாடிப்பாவ நடந்திடாநடக்கைபோலு
மதிவெயிலொளிகள்கண்டு மையிருணீங்காபோலு
மதிகவாலயங்கண்டோர்கட் கருவினையகலாபோலும்
பதிதனேனானுன்பாதங் கண்டுமென்பவநீங்காதோ.

(இ-ஙா.) மகாநதிகளிலும் கடலிலும் ஸ்நானஞ்செய்துந் தீராதபாவத்தைப்போலவும்-சந்திர சூரியப்பிரகாசத்தைக்கண்டும் - நீங்காத கறுத்த இருள்போலவும் அநேகம் சிவாலயங்கள் தெரிசித்தவர்களுக்கு நீங்காத தீவினையைப்போலவும் - பாவியான நான் உமது பாதசேவைகண்டும் என்னுடையபாவந் தீராதிருக்குமோ—எ-று. (௪௮)

மாதவர்தம்மைக்கண்டால் வல்வினையகன்றிடாதோ
சேதுவைக்கண்டாற்பொல்லாத் தீவினையகன்றிடாதோ
காதலாயுன்னைக்கண்டுங் கருமவேதனைகளுண்டோ
பாதகனானபாலன் றனைக்கண்ணாற்பார்க்கமாட்டேன்.

(இ-ஙா.) பெரியதபோதனனைக்கண்டால் வலிதான பாவம்நீங்காதா-சேதுஸ்நானஞ்செய்தால் தீராதபாவமெல்லாந்தீராதா-அப்படி அன்புட

னே உம்மைத்தரிசித்தால் - தரிசித்துங் கருமவேதனைகளுண்டாகுமா- இனி-பாவியானபிள்ளையை நான் கண்ணாலேபார்க்கமாட்டேன்—எ-று.()

மாதவமியற்றியுன்றன் மலரடிபணிந்துநின்றும்
பாதகநரகுக்கேற்ற பாலனைத்தருவனென்றீர்
நீதனேயதிலுமுன்போல் மலடெனுநேர்மைநன்று
நாதனேகடவூரானே நான்சொலும்விண்ணப்பங்கேள்.

(இ-ள்.) பெரிதானதவத்தைச்செய்து உம்முடையபாததாமரைகளைக் கண்டுவணங்கி நின்றும் இன்னமும் பாவபலனை யனுபவிக்கிற நரகத்துக் கே தகுதியானபிள்ளையைத் தருகிறேனென்கிறீர் நீதியுள்ளகடவுளே-அ ப்படிப்பாவியானபிள்ளையைப் பெறுவதிலும் முன்போல்மலடனென்று சொல்லும்படியிருக்கிற ஒருவகை ஒப்புமையே நல்லது சுவாமி திருக் கடவூரடிகளே இனி அடியேன்சொல்லும் விஞ்ஞாபனத்தைக்கேட்டரு ளவேணும்—எ-று. (ருய)

நஞ்சுமாயிரக்கலங்க டேடிலுநாடொணாது
கொஞ்சமானாலுந்தேவா வமிர்தமேகொடுத்திட்டாலும்
விஞ்சியகிளைகளெல்லாம் வீடுபெற்றுயருங்கண்டீர்
அஞ்சொலாள்பாகாநல்ல மகவினையருளவேண்டும்.

(இ-ள்.) ஆயிரங்கப்பலுக்கேற்றலானது விடமானாலும் அதைத்தேடு வதுமில்லை பார்ப்பதுமில்லை தேவாமிர்தம்கொஞ்சமாய்க்கொடுத்தாலும் அதனாலே மிகுந்த கிளை கோத்திரங்களெல்லாம் நல்ல மோக்ஷத்தைப் பெற்று உயருவார்கள் ஆகையால் பார்வதிசமேதரே - நல்லபிள்ளையை எனக்குக்கொடுத்தருளவேண்டும்—எ-று. கலம் என்பதோ ரளவெனவு மாம். (ருக)

மாத்திரையளவானாலும் வளமையுள்ளவனேநன்மை
கோத்திரங்குலங்களெல்லாங் குறைவிலாநெறிகள்சேர்வார்
ஆத்திவேணியனேபாவத் தொழில்புரியசடனூருண்
டேற்றிருந்தாலுமந்த மகவினாலிகழ்ச்சியாமே.

(இ-ள்.) ஒரு க்ஷணப்பொழுதானாலும் சரியே-நல்லகுணமுள்ளபிள் ளையினாலே நன்மைகிடைக்கும் குல கோத்திரங்களெல்லாம் குறைவில் லாத பதவியையடைவார்கள், ஓ- ஆத்திமாலையணிந்த சடைமுடிக்கடவு ளே-பாவச்செய்கைகள்செய்கிற மூடப்பிள்ளை நூறுவயசுகொண்டிருந் தாலும்-அந்தப்பிள்ளையினாலே அந்தக்குலத்துக்குஇழிவுண்டாகும்-எ-று

நீதியுநெறியுமானநேர்மையுங்குணமுமன்பும்
போதமுஞானநூலின் பொருளினையறியுந்தன்மை
யாதியஞ்செழுத்துளோனுயதிகநற்றவத்துளோனுய்ச்
சோதியேபதினாறுண்டிச்சுதனெனக்கருளுகென்றான்.

(இ-ள்.) நீதியும் சன்மார்க்கமும் மானத்துக் குடன்படுகையும் நல்ல குணமும் ஈசுவரபக்தியும் சொரூபக்ஞானமும் ஞான சாஸ்திரார்த்தந் தெரிவுதான குணமுள்ள பிரதானபஞ்சாக்ஷர விபூதிசாதனமுள்ளவனாய் நல்ல தவச்செய்கையுள்ளவனாய் பதினாறுவயதுள்ள பிள்ளையொன்று கிருபைசெய்தருளவேணும் பரஞ்சோதிஎன்றார் மிருகண்டேயர்—எ-று.

இப்படிமிருகண்டேயரியம்பிடக்கருணைகூர்ந்து
செப்புநேர்முலையாளோடுசேவினிலெழுந்துநின்றும்
ஒப்பிலாத்தவஞ்செய்வோய்கேளுனக்கொருமகவைநாமே
அப்படியருளினோமென்றையருமுரைக்கலுற்றார்.

(இ-ள்.) இப்படி மிருகண்டேயர் சொல்லக்கேட்டு மிகவும் தயவுண்டாகி செப்புப்போலுந் தனங்களையுடைய பார்வதிதேவியுடனே இடபவாகனத்தி லெழுந்தருளி நின்றுகொண்டு ஒப்பில்லாத மகாதவம்பண்ணின மிருகண்டேயரே உமக்கு ஒருபிள்ளை நீர்கேட்டபடியே உண்டாக வரந்தந்தோமென்று பின்னுங் கடவுள்சொல்லுகிறார்—எ-று. (௫௪).

அருமறைக்குலத்தில்வந்தவந்தணாவுனக்குநாமுங்
கருணைசெய்மகவையீந்தோங்களிப்புடனிருந்துமப்பா
லொருபதினாறுமாண்டின்மடிவதுமுண்மையென்று
திருமொழிவழங்கிப்பின்னுஞ்சிவபிரானருளலுற்றார்.

(இ-ள்.) அருமையான வேதவமிசத்திலே பிறந்த மிருகண்டேயரே உமக்கு நாம் தயவுசெய்து பிள்ளைவரங்கொடுத்தோம் அந்தப்பிள்ளை உள்ளஅளவும் சந்தோஷத்துடனே வாழ்ந்திருந்து பதினாறுவயசு நிரம்பினவுடனே மடிவது மெய்யேஎன்று திருவாக்குக்கொடுத்துப் பின்னும் அந்தச் சிவபெருமான் சொல்லுகிறார்—எ-று. (௫௫)

அந்தணாநீயுமுன்னாளண்டரிலொருவனாக
இந்திரலோகந்தன்னிலீலைமாபுரமென்றூரில்
நந்திலவகரங்கோடிநடுத்தெருவூடேநீயும்
உந்தியேபோகும்போதங்குள்ளவேதியர்சிறார்கள்.

(இ-ள்.) ஓய்மிருகண்டேயரே முன்னே நீர் தேவரிலொருவன் இந்திரலோகத்திலேயுள்ள லீலைமாபுரியென்னும் ஊரிலே கெடுதலில்லாத கோடிவீடுகளுள்ள ஒரு அக்கிராரம் அந்த ஊர் நடுத்தெருவிலே அவசரமாய் தள்ளிக்கொண்டு போகிறபோது அங்கேநின்ற பிராமணப்பிள்ளைகள்—எ-று. (௫௬)

பார்த்துச்சற்றறிவினோடேபாலர்களெல்லாங்கூடித்
தோத்திரஞ்செயாமலுன்னைத்தொந்திரவவர்கள்செய்யச்
சீற்றம்வந்தவனைக்கல்லாலெறிதலுஞ்சிறுவனொன்றின்
காத்திரமதனில்வீழ்ந்துகடிதுயிர்போயிற்றன்றே.

(இ-ரை.) அப்படித் தங்களை விலக்கிக்கொண்டு போகிற உம்மைப்பார்த்து தங்கள் சிறுபிள்ளைத்தனத்தாலே புகழாம லும்மையிகழ்ந்து தொந்திரவுகள் செய்யக்கண்டு உமக்குக் கோபமுண்டாகி அந்தப்பிள்ளைகள் மேலே கல்லை எடுத்தெறிய அவர்களி லொருபிள்ளைமேலே அந்தக்கல் பட்டு விரைவிலே இறந்துபோயிற்று—எ-று. (ருஎ)

பாலர்களோடியங்கே பட்டவன்றாய்தந்தைக்குச்
சீலமாயொருவன்வந்து சினந்துங்களமைந்தன்றன்னைச்
சாலவேகல்லினாலே சாடியேகொன்றானென்னப்
பாலனைப்பார்ப்போமென்று பதறியேயவர்கள்வந்து:

(இ-ரை.) உடனே அந்தப்பிள்ளைகள் அங்கே இறந்துபோனபிள்ளையினுடைய தாய்தந்தைகளிடம் ஓடிவந்து நல்லவன்போலொருவன் வந்து கோபங்கொண்டு உங்கள்பிள்ளைமேலே ஒரு கல்லையெறிந்து கொன்றானென்றுசொல்ல அதைக்கேட்ட தாய்தந்தைகள் பதறிப் பிள்ளையைப் பார்ப்போமென்று ஓடிவந்து—எ-று. (ருஅ)

சிந்தைநொந்தழுதுள்ளேங்கிச்சிறுவனையெடுத்துப்பாங்க
ரிந்திளஞ்சேயைக்கொன்றதெவர்களென்றயரும்வேலை
முந்தவர்பக்கம்வந்துமுடிந்ததுமென்னாலென்றாய்
அந்தவெம்மொழியைக்கேட்டவவர்களுமுரைக்கலுற்றார்.

(இ-ரை.) மனசுநொந்து அழுது உள்ளே ஏக்கங்கொண்டு அந்தப்பிள்ளையையெடுத்துப் பக்கத்திலே கிடத்திக்கொண்டு இந்தப்பிள்ளையைக் கொன்றதுயாரென்று அவர்கள்தளரும்போது நீரே அவர்கள்முன்னேவந்துநின்று இந்தப்பிள்ளை யிறந்துபோன தென்னாலேதானென்றீர் அந்தக் கொடியசொல்லைக்கேட்ட பிராமணர்களான தாய்தந்தைகள் சொல்லுகிறார்கள்—எ-று. (ருகூ)

இளந்தலையறியாப்பாலனெக்குறைசெய்தானென்று
வளைந்துகல்லெறிந்துகொன்றாய்வம்பனேயெங்களெஞ்சு
முளைந்தளைந்தழுகவிட்டாயுனக்கிதுமேன்மைதானோ
வளந்தெரியாமற்பாவிவன்பழியேற்றுக்கொண்டாய்.

(இ-ரை.) இளவயசா யறியாதபிள்ளை என்னகுற்றஞ் செய்தானென்று சூழ்ந்து கல்லாலெறிந்துகொன்றாய் ஓவீணனே எங்கள் மனம்நொந்து வருந்த அழும்படிசெய்தாய் ஆனாலுனக்கிதனாலே நன்மையுண்டாகுமா ஐயோ ஆலோசியாமற் கொன்றுவிட்டாய் பாவி வலியபழியைச் சுமந்துகொண்டாயே—எ-று. (சூய)

பாலனைக்கொன்றதாலே பாவிநீபூமிதன்னி
னாலவர்குலத்திற்புக்கு நுவலருமகவிலாமற்
சாலவுமனதுநொந்து தாரணியோர்மலடென்றேசச்
சீலமில்லாமல்வாடித் தியங்கியேயலைவாயென்றார்.

(இ-ள்.) நீ சிசுஹத்திபண்ணினதினாலே பாவியாகப் பிராமணகுலத்திலேபிறந்து பேசும்படியான அருமையுள்ள பிள்ளையில்லாமல் மிகவு மனசுநொந்து உலகத்தார் உன்னைமலடனென்று தூஷிக்கும்படி நல்ல யோக்கியதையில்லாமல் வாடித்தளர்ந்து அலையக்கடவாயென்று சாபமிட்டார்கள்—எ-று. (௬௧)

என்றவருரைத்தமாற்றங் கேட்டலுமிறைஞ்சியையா
வென்றிகொள்பாலரென்னை வெகுண்டனர்வைததாலே
கன்றியகோபமுண்டு கல்லினாலெறிந்தேன்யானும்
பொன்றிடச்செய்தகுற்றம்-பொறுத்தருள்புரிவீரென்றே.

(இ-ள்) என்று அந்தத்தாய்தந்தைகள் சொல்லக்கேட்டவுடனே அவர்களைவணங்கி ஐயமீர்-அந்த ஜெயமுள்ள பிள்ளைகள்கோபித்து என்னைவைததனாலே நான் கோபங்கொண்டு கல்லாலெறிந்தேன் அதனாலே அந்தப்பிள்ளையிறந்துபோயிற்று-அப்படிப்பட்டதான் குற்றத்தை க்ஷமித்தருளவேணுமென்று—எ-று. (௬௨)

புரிந்திடுஞ்சாபந்தன்னைப் புனிதரோவிலக்கிச்சீற்றஞ்
செறிந்திடுமடியேனுக்குத் தியக்கமுற்றலைந்திடாமற்
பரிந்தருள்செய்வதுங்கள் பரமெனவிருகண்ணீர்கள்
சொரிந்திடப்பாதந்தன்னிற் றொழுதுவீழ்ந்திரங்கலுற்றாய்.

(இ-ள்.) நீங்கள் கொடுத்தசாபத்தை ஓ வேதபுண்ணியரோ விலக்கி-உங்கள்கோபத்தையேற்ற அடியேனுக்கு மன அலைவு முதலானவைகொண்டு மயங்காதபடி மனமிரங்கி அருள்செய்வது உங்களுக்கே சுமையென்று அவர்கால்களிலே இரண்டுகண்களிலும் பெருகுகிறகண்ணீர் சிந்த விழுந்து வணங்கி அழத்தொடங்கினாய்—எ-று. (௬௩)

இரந்திடஅவர்களஞ்ச லென்றுளமகிழ்ந்துவேலைத்
தரங்கஞ்சூழ்பூமிதன்னிற் பிறந்துநீதனையனாலே
புரந்தரனதிசயிக்கத் தவமதுபுரிவையாகிற்
பரம்பரன்வந்துனக்குப் பாலனைத்தருவார்பின்னும்.

(இ-ள்.) அப்படிப்பரிந்து பிரார்த்திக்கச்செய்தே அவர்கள்மனது சந்தோஷித்து கடலினலைகள் மோதப்படுவதான உலகத்திலே பிறந்து நீ இந்திரனும் அதிசயிக்கப்படுவதான தவத்தைச்செய்தால் அந்த ஒன்றான கடவுளே வந்து உனக்குப் புத்திரபாக்கியங் கொடுப்பாரென்று சொல்லிப் பின்னும்—எ-று. (௬௪)

எங்கள்பாலனுக்குநாறுண்டிருப்பதுண்டாகையாலே
அங்கதைப்பதினாறுண்டிலவமதாய்க்கொன்றாய்நீயே
இங்கிதப்புதல்வனாறுண்டெழிலுளனன்றியீசன்
சங்கையாயீரெட்டாண்டிற்றருவரிதுண்மையாமே.

(இ-ரை.) எங்களுடையபிள்ளைக்கும் நாறுவயதுண்டு அப்படி நாறுவய துள்ள பிள்ளையைப் பதினாறுவயதளவிலே நீகொன்றுவிட்டாய் ஆனப டியினாலே உனக்குச் செல்வமுள்ளபிள்ளை நாறுவயதளவில்லாமல் பதி னாறுவயதுள்ளவனாகச் சந்தேகங்கொள்ள கடவுள்கொடுப்பார் இதுமெ ய்யாய்முடியும்—எ-று. (சுரு)

அத்துயரதனைனியுமழுங்கியவாறுகண்டுன்
புத்திரன்றவத்தினாலேபோக்கியேமுத்திசேர்வா
யித்தகையென்றுசொன்னாரொழிலுலகதனில்வந்து
சத்தியவானாய்நான்குமறைக்குலத்தவதரித்தாய்.

(இ-ரை.) அப்படிப்பட்ட துன்பத்தினாலே நீ வியசனப்படுகிறதைக்க ண்டு உன்னுடைய்புத்திரனான பதினாறுவயதுள்ளவன் செய்யுந் தவத்தி னாலே துன்பத்தைப்போக்கிவிட்டு மோக்ஷத்தையடைவாயென்றிப்படி அந்தத் தாய்தந்தைமார் சொன்னார்கள் அப்படியே உலகத்திலே மெய் யானவனாகி நான்குவேதப்பிராமணர் குலத்திலே நீவந்துபிறந்தாய்-எ-று.

இப்படிநீமுன்செய்தவினையுநாமுரைத்தோமிப்பா
லொப்பிலாப்புதல்வன்றன்னையுகந்திடவீரெட்டாண்டு
செப்பியேதந்தோமந்தவயதுசென்றிட்டாலேமன்
கைப்பிடித்திடுவானென்றுகழறினான்கபாலமூர்த்தி.

(இ-ரை.) இப்படியென்று நீ முன்னேசெய்துள்ள பாவத்தொடர்ச்சி யையும் நாமேசொன்னோம் இனிமேல் யாதொருவரு நிகரில்லாதபதினா றுவயதளவுள்ள புத்திரனை உமக்குக்கொடுத்தோம் இனி அந்தப் பதினா றுவயது முடிவானவுடனே யமன்வந்து கைக்கொள்ளுவானென்று கபா லேஸ்வரனான கடவுள் திருவுள்ளம்பற்றினார்—எ-று. (சுஎ)

மறலியைக்கூப்பிட்டங்கேமறையவன்றனக்குநாமும்
அறமுள்குழவியீந்தோமாண்டுமீரெட்டதாகத்
திறமுடனறிவீரென்றுதேவர்மாதவர்களோடு
கறைமிடற்றண்ணல்வெள்ளிக்கயிலைவந்தமர்ந்தாரன்றே.

(இ-ரை.) உடனே யமனைவரவழைத்து அவ்வூரிலே ஒருபிராமணனு க்குப் பதினாறுவயதுள்ளதாக ஒரு தருமவானான புத்திரனுண்டாக வ ரங்கொடுத்தருளினோம் இதை உறுதியாக அறிந்துகொள்ளென்று சொல் லி தேவர்கள் முனிவர்களையும்பார்த்து நீங்களும் தெரிந்திருங்களென்று நீலகண்டக்கடவுள் வெள்ளிமலைவந்து சேர்ந்தார்—எ-று. (சுஅ)

மறைமுடிவானசோதிமறைந்திடமிருகண்டேயன்
குறைவெலாந்தீர்ந்துசிந்தைகுளிர்ச்சியாய்முகமலர்ந்து
தறையுளோர்துதிக்குமைந்தன்றனைப்பெறவரமும்வாங்கி
அறமதெண்ணான்குநீங்காமருத்துதியகத்தைச்சார்ந்தான்.

(இ-ள்.) அப்படி வேதாந்தப்பொருளான கடவுள் மறையவே மிருகண்டேயரானவர் தமது மனக்குறைவெல்லாந் தீர்ந்து பிள்ளைபெறுவதானவரமும் பெற்றவராய் முப்பத்திரண்டுதருமங்களும் விடாது நடத்துகின்ற மருத்துதியம்மா ளிருக்குமிடம்வந்து சேர்ந்தார்—எ-று. (சுசு)

மிருகண்டேயர் தவநிலைச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௬௭அ.

## மார்க்கண்டேயர் உற்பவச்சருக்கம்.

மிக்கமாதவரோகேண்மின்மீண்டும்வேதியன்றவத்தால்
முக்கணனருளினாலேமுறைநெறிமனையாடன்பாற்
றக்கபாலகனைப்பெற்றுச்சதுருடனிருந்தநன்மை
நக்கனாருளினாலேதமிழினானவிலுவோமே.

(இ-ள்.) மிகுந்த பெரிய தவமுனிவரோகேளுங்கள் இன்னமும் அந்த மிருகண்டேயர் சிவகிருபையாலே நீதிநெறியுள்ள மனைவியாரான மருத்துதி நல்லதகுதியான பிள்ளையைப்பெற்றுச் சந்தோஷத்துடனிருந்த சரித்திரத்தை நாமும் சிவகிருபையினாலே இனிமைதோன்றச் சொல்லுகின்றோமென்றார் சூதபுராணிகர்—எ-று. (க)

வேறு.

பூசுரன்றவமியற்றியேநற்பொருளடைந்து
வாசமாகியவில்லினிற்சென்றுதன்மனையா
ணேசமாகவேயவட்கருள்பெற்றதைநிகழ்த்தி
ஆசையோடுறவாழ்ந்தவரிருக்குமந்நாளில்.

(இ-ள்.) அந்தமிருகண்டேயர் தவத்தைச்செய்து நல்லபுத்திரபாக்கியத்தையடைந்து தாமிருக்கப்பட்டவீட்டிலே மனைவியார் சந்தோஷமாகத் தாம் அருள்பெற்றதைத் தெரியச்சொல்லி ஆசையுடன் மிகவும் வாழ்ந்து அவ்விருவருமிருக்கிற அந்நாளில்—எ-று. (உ)

திங்கள்வேணியனருளினாற்சிறந்திடுகருப்ப
மங்கையர்க்கரசாமெனுமருத்துதிவயிற்றிற்
றங்கியின்பமுற்றழகுடனுடலதுதளரக்
கொங்கைமீறியேமுலைக்கணுங்கறுத்துக்கோலமதாய்.

(இ-ள்.) சந்திரசடாதரனான கடவுளனுக்கிரகத்தினாலே சிறப்பான ஒருகருப்பம் பெண்களுக்கரசியாகிய மருத்துதியம்மாள் வயிற்றிலே தங்குதலாகிச் சந்தோஷத்துடனே அழகுகொண்டு உடம்புதளர்வாக கொங்கைகளுயர்ந்து கண்கள்கறுத்து ஒருவகைக்கோலமாயிற்று—எ-று. (௩)

மாதினாவிலைவயிற்றினிற்கருப்பமும்வளர்ந்து
மாதமானதுபத்துஞ்சென்றன்னைமார்மறுகக்

கோதிலாதகற்புடையதோர்மருத்துதிகுலைவாய்
வேதனைமிகவாகியேமெலிந்தவளன்பாய்.

(இ-ரை.) அந்தமருத்துதியம்மாளுடைய ஆலிலைபோன்றவயிற்றிலே கருப்பம்வளர்ந்து பத்துமாதமுங்கழியவே தாய்மார்கள் வருத்தங்கொள்ள யாதொரு தோஷமுமில்லாத பதிவிரதாசிரோமணியாகிய மருத்துதியம்மாள் மனங்குலைந்து மிகவும்வேதனைப்பட்டு மெலிவாகினவளாய்ப் பின்னும் பிள்ளைமேலன்புகொண்டு—எ-று. (ச)

அருமைமாமகவீன்றனளரனருள்வரத்தாற்
றிருவினாதனோவிரிஞ்சனோகயிலைவாழ்தேவோ
பொருவிலாதமாதவர்களிலுயர்ந்தபுண்ணியனோ
இருமைசேருலகத்தினில்வந்திழிந்தவனே.

(இ-ரை.) அப்படிவருத்தப்பட்டு அருமைபெருமைதோன்றப் பிள்ளையைச் சிவகிருபையினாலே மருத்துதியம்மாள்பெற்றாள் அந்தப்பெற்றபிள்ளை லட்சுமிநாயகனோ அல்லது பிரமாவோ அல்லது கயிலாசபதியோ இன்னமும் ஒப்பில்லாதமகாருஷிகளில்உயர்ந்தபுண்ணியவானோ யாரோ இந்தப்பெருமையுள்ள வுலகத்திலே வந்திறங்கினவன்—எ-று. (ரு)

வந்துதோன்றியமகவுதன்னழகதுவொளிதோ
யிந்துவின்னொளியென்னலாமுகிலொளியெனலாம்
அந்தியின்னிறமென்னலாமனலொளியெனலாஞ்
சிந்திரத்தினமென்னலாஞ்சிவகளையெனலாம்.

(இ-ரை.) அப்படிவந்து பிறந்தபிள்ளையின் அழகானது ஒளியைக்கொண்ட சந்திரப்பிரகாசமென்றுஞ்சொல்லலாம், மேகக்கொழுந்தென்றுஞ் சொல்லலாம், செவ்வானொளியென்றுஞ்சொல்லலாம், சுடர்க்கொழுந்தென்றுஞ்சொல்லலாம், கடலிலேதோன்றின மாணிக்கச்சோதியென்றுஞ்சொல்லலாம்—எ-று. (சா)

வெயிலவன்பிரபைக்கிதுநேரெனலாகும்
பயிலுமாநவமணியெனப்பகரலாம்பாங்கர்
சயிலதீபமென்றெண்ணலாம்புண்ணியஞ்சார்ந்த
வியலறங்களுக்கொருமுளையென்னலாமின்னம்.

(இ-ரை.) சூரியப்பிரகாசமென்றுஞ்சொல்லலாம், யாருங்கொண்டாடினவான நவரத்தினச்சோதியென்றுஞ்சொல்லலாம், அழகானமலைமேல்விளக்கென்றுஞ்சொல்லலாம், நன்மையாகக்கூடின இல்லறதுறவறங்களுக்கொரு முளையென்றுஞ்சொல்லலாம் இன்னமும்—எ-று. (எ)

மதனவேளிவனென்னலாம்வானவர்வணங்குஞ்
சதமகனிவனென்னலாஞ்சண்முகனெனலாம்
புதனின்மிக்கவனென்னலாம்பொறுமையிற்புகழிற்
கதமிலாரகுராமனேயிவனெனக்கருதும்.

(இ-ள.) இவன் மன்மதவேளேயென்றுஞ் சொல்லலாம் தேவர்கள் வணங்குகின்ற இந்திரனே இவனென்றுஞ்சொல்லலாம் புதனிலுஞ்சிறந்த புத்தியுள்ளவனென்றுஞ் சொல்லலாம் பொறுமைக்குணத்தினாலும் புகழுடைமையாலும் ரகுகுலதிலகனான ஸ்ரீராமனே இவனென்றுநினைக்கலாகும்—எ-று. (௮)

இலங்குகண்களுமுகமுநற்கரங்களுமெழில்கள்
துலங்குமார்பொடுமாலிலைவயிற்றொடுதொனிசேர்
சலங்கைகிண்கிணிபொருந்தியதாளொடுசெரியாய்
நலங்கொள்பூமியிலொப்பிலாமகவினைநயமாய்.

(இ-ள.) விளங்காநின்ற கண்களும் முகமும் நல்லகைகளும் அழகுகள்விளங்குகின்ற மார்புடனே ஆலிலைபோன்றவயிறும் தொனியுள்ளசலங்கைகள் கிண்கிணிகள்பொருந்தின கால்களும் புருஷலட்சணத்துக்கொத்தபடி நன்மைகொண்ட இந்தவுலகத்திலே ஒருவருநிகரில்லாத அந்தப்பிள்ளையை நன்மையான விருப்பத்துடனே—எ-று. (௯)

கண்டுதந்தைதாய்பிரியமுற்றுணர்ந்துகண்குளிர்ந்து
விண்டுவின்பரனாலயச்சிறப்பதுவிளக்கித்
தொண்டர்தங்களுக்கமுதளித்தவனியிற்றோன்றும்
பண்டைத்தெய்வங்களனைத்துக்குஞ்சிறப்பதுபண்ணி.

(இ-ள.) பார்த்து தகப்பனும்தாயும் மிகவும் பிரியங்கொண்டு ஆலோசித்து கண்கள் குளிர்ச்சியடைந்து விஷ்ணுகோயில் சிவன்கோயில் களுக்குச் சிறப்புகள்செய்வித்து ஈசனடியார்களுக்கு அன்னமிட்டு இன்னம் உலகத்திலேஉண்டாகி விளங்குகிற பழமையான தெய்வங்களெல்லாவற்றுக்கும் பூசைச்சிறப்புகள் செய்வித்து—எ-று. (௰)

பாவநீக்கிடுங்காவிரிநதிப்புனல்படிந்து
மேவியேயனுஷ்டானங்கள்சிவார்ச்சனைவிளைத்தும்
ஆவலாயடியாரொடுபோசனமருந்திக்
கூவியங்கையாலெடுத்தனன்மனமதுகுளிர.

(இ-ள.) எல்லாப்பாவங்களையும் போக்குவதான காவேரியாற்றிலே தீர்த்தமாடிவந்து அனுஷ்டானமுதலான சிவார்ச்சனையுஞ்செய்து சந்தோஷத்துடனே சிவனடியார்களுடனேகூடிப் போசனஞ்செய்து பின்பு பிள்ளையைப்பார்த்துக் கையைத்தட்டிக் கூப்பிட்டு மனங்குளிரத் தமதுகையா லெடுத்தருளினர் மிருகண்டேயர்—எ-று. (௰௧)

மோந்துமுச்சியைமுத்தமிட்டேமிகவன்பாய்
வாய்ந்தவில்லவடன்றனுடுமனமகிழ்வாகச்
சார்ந்தசற்குணப்பிரியனாயிருந்துதன்மகவை
யேந்துமர்முலைகையினிற்கொடுத்தனனியல்பாய்.

(இ-ள.) உச்சியைமோந்து முத்தமிட்டு மிகவும் அன்புடனே தகுதியான மனைவியுடனேகூட மனமகிழ்ச்சியாய்ப்பொருந்தின சற்குணநேசராயிருந்து பின்பு தம்முடையபிள்ளையை மனைவியார்கையிலே கொடுக்குமுறைப்படி கொடுத்தார்—எ-று. (௰உ)

கச்சுலாவியகனதனவில்லவளுடனே
விச்சைமைந்தனைநாளொருவண்ணமாய்வியந்தே
அச்சமுற்றவர்வளர்த்தனர்பாக்கியத்தளைந்தே
இச்சையாகவேவயதுமோராண்டுசென்றியல்பாய்.

(இ-ள.) ரவுக்கையணிந்த கனமான தனங்களையுடைய மனைவியாருடனே அநேகசாஸ்திர வல்லவனாகத்தக்க பிள்ளையைத் தினமொருவளர்த்தியுண்டாக அதிசயித்து என்னவருகிறதோவென்று பயத்துடனே அந்த இருவரும் வளர்த்தார்கள் அப்படி பாக்கியத்துடனேகூடி இவ்விருவருடைய இஷ்டப்படியே அந்தப்பிள்ளையும்வளர்ந்து வயதும் ஒருவருஷமாகிப் பின்பு அந்தவயதுக்குள்ள இலக்கணந்தோன்றி—எ-று. (௰௩)

வேறு.

ஆண்டதொன்றவர்க்கேநிறைவானபின்
வேண்டுநன்குடுமிக்கலியாணமும்
நீண்டிரண்டுவயதுநிறைந்தபின்
தூண்டுநண்புடன்சோபனமேத்தினர்.

(இ-ள.) அப்படி ஒருவருஷமானபின்பு அப்புறஞ் செய்யவேண்டுவதான நல்லகுடுமிக்கலியாணமும் செய்து பின்பு இரண்டுவயதானபின்பு வருகிற உறவினருடனேகூடிச் சோபனமுண்டாக வாழ்த்தினர்கள். ()

வேறு.

இனையதோராண்டுமூன்றுமேசென்றகாலையிலிருபிறப்பாளன்
றனையுறுதமர்களனைவருங்கூடித்தவமதாலுதித்தபாலகற்கு
வினையிகழ்நாமமார்க்கண்டனென்றுவிளம்பிமுன்னூற்சடங்காற்றி [ம்.
மனைவிடாவண்ணந்தமனியத்தொட்டி லேற்றிக்கண்வளர்த்தவாறறைவா

(இ-ள.) இப்படியே மூன்றுவருஷமானபின்பு அந்தமிருகண்டேயர் தம்மோடுகூடின உறவினரெல்லாருடனுங்கூடி மகாதவத்தினாலேபிறந்த பிள்ளைக்கு தோஷமில்லாதபேர் மார்க்கண்டேயனென்றுவைத்துப் பழையசாஸ்திரங்களிற் சொல்லுகிற சடங்குகளெல்லாங் குறைவில்லாமற் செய்து வீட்டைவிட்டு நீங்காதபடி பொன்தொட்டிலின்மேலே ஏறச் செய்து தூங்கப்பண்ணி அவர்கள் அந்தப்பிள்ளையை வளர்த்தவகையைச்சொல்லுகிறோம்—எ-று. (௰௫)

மலடிருந்தவர்க்குமனத்துயரகற்றமைந்தனுய்வந்தமாமணியோ
பலனிடுதவமோதந்தைதாயவர்க்குப்பரகதிகொடுக்குமாரமுதோ

இலகியவெங்கள்மனைக்குநாயகமோவிறந்தகாலெடுக்கவந்தவனே
குலமெலாம்விளங்கத்தேடியபொருளோகோதிலாஞானவாளெளியோ.

(இ-ள்.) மலடாயிருந்த எங்களுக்கு மனத்திலேஉள்ள துன்பத்தைப் போக்கப் பிள்ளையாய்ப்பிறந்த பெரிதான மாணிக்கமோ நீ கேட்டபல னெல்லாந் தருவதானதவவடிவோ நீ தாய்தகப்பனுனவர்களுக்கு மோக்ஷத்தைக்கொடுக்கப்பிறந்த அருமையான அமுதவடிவோ நீ விளங்காநின்ற எங்கள்வீட்டுக்குத் தலைவனுனவனீதானே அழிந்துபோன வமிசத்தை விருத்திசெய்யவந்தவனே நீ எங்கள்குலமெல்லாம்விளங்க நாங்கள்சம்பாதித்த பொருள்தானே நீ குற்றமில்லாதபெரிதான ஞானவொளிதானேநீ—எ-று. (௰௬)

மழலையின்சோகந்தீர்த்திடுமரசோவான்றவம்விளக்கியமணியோ
பழமறைக்கொழுந்தோதேவர்கள்புகழும்பண்டிதயோகசிற்பரனே
தழனிகர்மழுவைத்தரித்திடுமரனையிதயத்தில்வைத்ததற்பரனே
குழலினுமினியசொன்மருத்துதிதான்பெற்றிடுங்குஞ்சரக்கன்றே.

(இ-ள்.) புத்திரசோகத்தைத் தீர்க்கப்பிறந்த அரசனே நீ பெரிதான தவத்தை விளங்கச்செய்யவந்த ரத்நந்தானே நீ பழையவேதக்கொழுந்தோ நீ தேவர்களெல்லாம் புகழத்தக்க பண்டிதயோகியான அறிவாற்சிறந்தவனே நீ அக்கினிபோன்ற மழுவைத்தாங்குகின்ற சிவனை இதயகமலத்திலே கொள்ளத் தக்க தானேதானனவனே நீபொல்லாங்குழலினுமினிதான வசனத்தையுடைய மருத்துதியம்மாள் பெற்றயானைக்கன்றுதானே நீ—எ-று. (௰௭)

என்றுதாலாட்டிவளர்த்தைந்தாம்வயதிலெக்கலைநூல்களுங்கற்று
மன்றுக்டோறும்வாததர்க்கங்கள்வளமையாய்ப்பேசியுமறுகிற்
குன்றுநேரானபரியிரதங்களேற்றமுங்கொண்டுசாத்திரங்கள்
வென்றியுமுணர்ந்தபாலன்றனீர்மைகேட்டிடுமெனச்சொலிவிரித்தான்.

(இ-ள்.) என்றுசொல்லித் தாலாட்டிவளர்த்து ஐந்துவயசானவுடனே எவ்விதமான கலைஞானங்களுங் கற்றுணர்ந்து சபைகளெல்லாம் தர்க்கவாதங்கள் விவரமாகப்பேசி வீதிகளிலே மலைபோன்ற யானையேற்றம் தேரோற்றமுதலான எல்லாம்பழகி சாஸ்திரங்களாலே வெல்லவல்லமையுந்தெரிந்த அந்தப்புத்திரனுடைய குணங்களைக்கேளுங்கள் முனிவர்களேயென்று சூதபுராணிகர் சொல்லுகிறார்—எ-று. (௰௮)

தொண்டனாவணங்கினாளொருமூன்றுநேரமுமாலையந்தொழுது
வண்டணிகுழலாடாயொடுதந்தைவார்த்தையையொருமனதாகக்
கண்டதோரினியபண்டநன்மலனக்கடவுளர்க்களிக்கவெம்பெருமான்
பண்டைநன்மொழிகள்கேட்டிடநாவாற்பரமனையனுநினந்துதிக்க.

(இ-ள்.) சிவனடியார்களைக்கண்டு வணங்கி ஒருநாள் மூன்றுகாலமும் சிவாலயம்போய்த் தரிசித்து வண்டுகள்மொய்ப்பதான கூந்தலையுடை

யாளான தாயுடனே தந்தையும் ஒரேசிந்தையராக அவர்கள் நியமித்ததா னநல்லபூசைக்குரிய மலர்களைப்பறித்துவந்து சிவாலயங்கள் முதலான கோயிலுக்கு அர்ச்சனைபண்ணும்படி கொடுக்கவும்சிவபெருமானுடைய பழைய திருவிளையாடல்களைக் கேட்கவும் கடவுளையே நாவாலேஸ்துத் தியஞ்செய்யவும்—எ-று. (௰௬)

இனியசொல்லுரைக்கவறுமையோர்க்கிரங்கவெளியவர்க்கமுதுகளளிக்க
புனிதனார்பூசைபுரிந்திடநல்லோர்பெரியவரிடத்தினிற்பொருந்த [ப்
இனியபல்லுயிர்கடன்னுயிர்போற்போற்றிடவுநன்ஞானமோடிருந்தும்
பனிமொழிபாகன்றனைமறவாதபத்தியானெனச்சகம்பரவ.

(இ-ள்.) யாவர்க்கும் இன்சொற்சொல்லவும் ஏழைகளுக்கிரங்கவும் அந்த ஏழைகளுக்கன்னமிடவும் சிவபூசைபண்ணவும் நல்லோர் பெரி யோரிடம்போகவும் உலகத்திலினிதாயுள்ள பலவுயிர்களையும் தன்னுயி ர்போற்காக்கவும் நல்ல ஞானகுணத்துடனே கூடியிருந்தும் பார்வதிச மேதருடைய பத்திமறவாத பிள்ளையென்று உலகங்களெல்லாஞ் சொ ல்லவும்—எ-று. (௨௰)

அறிவுடன்விவேகவாண்மையுங்குணமுமருணெறிக்கரசனுய்நல்ல
குறியுடன்கருணையொழுகியமுகமுங் கொள்கையும்வளமையும்பொருந்
நெறிகளைமறவாவண்ணமுந்துதிக்குநீர்மையுங்கண்டவன்றந்தை [து
பிறிவிலாமனையாடன்முகம்பார்த்துப்பேசுவான்மிருகண்டவேதன்.

(இ-ள்.) ஞானத்துடனே விவேகச்செய்கையும் சற்குணமும் திருவ ருள்மார்க்கத்தே யோக்கியனான நல்ல லட்சணங்களுடன் கிருபைவழிகி றமுகமும் நல்லகொள்கையும் நல்லநடக்கையும் பொருந்தின நன்மார்க் கங்களை மறவாதிருக்கிறபடியும் ஸ்தோத்திரஞ்செய்கிற குணமுங்கண்டு அந்தப்பிள்ளையினுடைய தகப்பன் மிருகண்டேயர் நீங்காத தன்மனைவி யான மருத்துதியம்மாள் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறார். (௨௧)

எந்தன்மார்பகலங்கலந்திடுமாதேயிருவருமலடதாயிருந்தே
சிந்தைநொந்தழிந்துதிருக்கடவூரிற்செல்வனைத்தவமியற்றியநாள்
வந்தரனெனக்குமுத்திகளளித்துமகவையுந்தந்தனரப்பாற்
சிந்துரமுரித்தேயாடையாய்ப்புனைந்தார்செப்பியவதனைநீகேண்மோ.

(இ-ள்.) எனதுமார்போடணைந்து இங்கிதஞ்செய்யும்பெண்ணே மரு த்துதி நாமிருவரு மலடாகவேயிருந்து மனம்நொந்து வருந்தி திருக்கட வூரிலிருக்கிற கடவுளைக்குறித்துத் தவஞ்செய்தகாலத்திலே அந்தக்கட வுள் பிரசன்னராய்வந்து எனக்குவேண்டிய துக்கநிவிர்த்திக ளெல்லா ஞ்செய்து புத்திரபாக்கியமுங்கொடுத்துப் பின்பு யானைத்தோலை வஸ்தி ரமாகக் கொண்ட கடவுள் எனக்குச்சொன்னதை நீகேள்—எ-று. (௨௨)

மகிழ்ந்துதாங்கொடுத்தமகவினுக்கேநல்வயதுமீரெட்டெனப்பகர்ந்து
மிகுந்தவந்நாளின்மடிவதேயென்றுவிளம்பினரான்றெனக்குண்மை
அகந்தனக்குடையமாதுநம்மைந்தன்பிறந்துமஞ்சாண்டதுமாகி
முகிந்ததுபதினாறுண்டினிலிறப்பதுண்மையாமெனமொழிந்ததன்பின்.

(இ-ள்.) பரமசிவனானவர் சந்தோஷித்துத் தாம்கொடுத்த பிள்ளைக்கு நல்லவயதோ பதினாறுதானென்றுசொல்லி பதினாறுவயதுக்கு மேற்பட்டபோது இறந்துபோமென்று எனக்கு உண்மையுஞ்சொன்னார் ஆதலால் எனதுகிரகத்துக்குரியளான பெண்ணே மருத்துதிகேள்-நமதுபிள்ளை பிறந்து வயது அஞ்சாயிற்று - பதினாறுவயதானபின் மடிவது மெய்யேயென்று சொல்லிப் பின்னும்—எ-று. (௨௩)

வருந்தியுமலடாயாமிருந்ததற்குமாதவமியற்றியதற்கும்
விரிந்தபொற்சடையார்பாலனைநெடியவயதெனவிளம்பினரில்லை
பொருந்தியநூறுண்டிருக்கவுமந்தப்புதல்வனைப்பெற்றுநாமிருவர்
பரிந்துடன்வளர்த்துக்கண்களிகூரப்பாக்கியஞ்செய்திலோமலவோ.

(இ-ள்.) வருத்தத்துடனே நாமிருவருமலடாயிருந்ததற்காகவும்பெரியதவங்கள் செய்ததற்காகவும் விரிந்தபொன்மயமான ஜடையையுடைய கடவுள் தீர்க்காயிசுள்ள பிள்ளையுண்டாமென்று சொன்னாரில்லை - நூறுவயசுடைய பிள்ளையாய்ப்பெற்று நாமிருவரும் சந்தோஷத்துடனே வளர்த்துக் கண்களிகூரும்படியான பாக்கியத்தைப் பெறுவதான தவஞ்செய்திலோம் அல்லவோ—எ-று. (௨௪)

எவர்களுமிந்தப்புதல்வனைப்போலேயெவ்வுலகத்தினுமொருவர்
தவமுளமகவைப்பெறுவரோபெற்றாற்றனனிலையறிந்திடுஞானச்
சிவநெறிசார்ந்தகுணங்களுமன்புஞ்சிந்தையிற்கவலையுமில்லா
நவகண்டமகிழநன்மையுள்ளவனாய்வருவனோநானறிந்திலேனே.

(இ-ள்.) யாரானாலும் எந்தவுலகத்திலாவது இந்த நமது பிள்ளையைப்போல் தவமுள்ளபிள்ளையைப் பெறுவார்களா அல்லது பெற்றாலும் தனது ஆத்மக்ஞ்ஞாநங்கைவந்து சைவாசாரத்தைச்சார்ந்த குணங்களும் சிவநேசமுங்கொண்டு மனக்கிலேசமில்லாமல் நவகண்டப்பரப்புஞ் சந்தோஷிப்பதான நன்மையுள்ளவனாய்ப்பிறப்பானா நான்பார்க்கவும் சொல்லவுங்காணேன்—எ-று. (௨௫)

நாமிருவோர்க்குமுத்திகள்கொடுக்குநாயகமானகண்மணிபோல்
மாமணியுலகிலெவர்களுமிந்தமைந்தனைப்போலெவர்பெறுவார்
சாமிபேதயவில்லாமலேசெய்ததாழ்வினுக்கினியென்னசெய்வோம்
பூமக்ணிகொன்றேவியேயென்றுபுலம்பியுங்கலங்கிமெய்மறந்து.

(இ-ள்.) நாம் இருவருக்கு மோக்ஷத்தைத்தருவதான கண்மணிபோன்ற இந்தப்புத்திரனைப்போல் குலரத்நமாக உலகத்திலே யாராவதுபெ

றுவாருண்டா தில்லை கடவுளே தமக்குச்சம்மதமில்லாமல் செய்திருக்கிற குறைவுக்கு நாம் செய்யத்தக்கது என்னஇருக்கிறது ஒன்றுமில்லை, நாம்என்னசெய்வோம் லட்சுமிபோன்ற எனது பிராணநாயகியென்று புலம்பிக் கலக்கமாய் ஆயாசமாய்—எ-று. (உசு)

இருவரும்வருந்திப்பெற்றநம்மகவுமிறந்திடப்பின்னுநாமிருந்தே
அருமையாய்வாழக்கூடுமோகூடாதாகையாலென்பயனுகும்
உரிமையாய்ப்பிறந்தமைந்தனுல்மடியவொக்குமோவிருவர்தம்மனமும்
வருமதோவெனதுமங்கையேயென்றுமாதவன்மறுகிவீழ்ந்தயர்ந்தே.

(இ-ள.) நாமிருவரும் வருந்திப்பெற்ற நமதுபிள்ளைசாவ பின்னும் நாமிருந்து வாழக்கூடுமோ கூடாது ஆகையா லிப்போதே நாம் மடிந்துபோகிறதேநல்லது இருந்ததனுலே என்னபிரயோஜனமுண்டு நம்மிருவருக்குமிப்போதே சாவ மனஞ்சம்மதிக்கின்றதா கருமத்துக்குப் பாத்தியனைப் பெற்றபிள்ளையாலே சாகிறது சரியல்லவோவென்று பின்னும் என்பிராணநாயகி என்செய்வோமென்று அந்தமகாரிஷியானவர் மயங்கிக கிழேவிழுந்து சோர்ந்து—எ-று. (உஎ)

நமக்கிவன்றன்னைவிட்டொருகதியுநாடொணுதாகையால்மாதே
நமக்கிவன்கையாற்செய்திடுங்கருமநடத்திட வேணுமென்றழுங்கித்
தமக்குநேர்மனையாளிடத்தினிலுரைத்துத்தயிரியமிலாதுளங்கலங்கி [ன்.
யெமக்கிதுகிடைத்தவளமையோசிவனே யென்றவன்பின்னையுநவில்வா

(இ-ள.) இனி நம்மிருவருக்கும் இந்தப் பிள்ளையைப்பற்றி யல்லது வேறொருவகையாலு மோக்ஷம்லபியாது ஆனபடியினுலே பெண்ணே யென்னபண்ணுவோமென்று தயிரியமில்லாமல் மனங்கலங்கி ஓசிவனே எங்களுக்குவிதித்தது இப்படியோவென்று இனிநமக்கு இந்தப்பிள்ளையாலே நடத்திக்கொள்ள வேண்டியதைச் செய்துகொள்ள வேணுமென்று பின்னையுஞ்சொல்லுகிறுர்—எ-று. (உஅ)

அங்கயன்முடியைக்கொய்திடுஞ்சோதியருள்புரிந்திடவினியெனக்கு
நங்கையேமகனையிறந்திடக்கொடுத்துநாடுமோவிருக்கவுமனது
தங்குமோநம்முன்மைந்தனுர்மடியச்சகிக்குமோவாகையினுலே
அங்கவனிருக்கநாமுனமடிந்தாலவன்கையாற்சடங்குகள்செய்வான்.

(இ-ள.) அக்காலத்திலே பிரமாவின் தலையைக்கிள்ளின பரஞ்சோதியானகடவுள் அருளை முற்றப்பெருத எனக்கு இனிப் பெண்ணே பிள்ளையைச்சாவக்கொடுத்துப் பின்னுமிருக்க மனம்வருமா அல்லதுநமக்கு முன்னே பிள்ளைபிறந்தால் சகிக்கக்கூடுமோ அவனுயிரிருக்கச்செய்தே தானே நாமிறந்துபோனுல் நமக்கு அவன்செய்யுஞ் சடங்குகளெல்லாஞ்செய்வான்—எ-று. (உகூ)

ஒருமனதாகவிருவருமடிந்தாலுனக்குமென்றனக்குமென்மாதே [ன்
அருமையாய்ப்பெற்ற புதல்வனீர்க்கடன் நாற்றிமேலருங்கதிசேர்ப்பா

இருவருமின்றேயிறந்துமோவின்னம்பார்த்துமோவென்றழன்றழன்று
மருளனாய்ப்புலம்பிநெஞ்சகமுருகிமனையவளொடுமிருந்தனனே.

(இ-ள்.) என்பெண்ணே நாமிருவரு மேகமணதாயிறந்தால் உனக்கும் எனக்கும் நாம் அருமையாய்ப்பெற்றபிள்ளை நீக்கடனீர்க்கடன்களை முடித்து மேலான அரியமோக்ஷஞ்சேரச்செய்வான் ஆகையால் நாமிருவரு மிப்போதேஇறப்போமா இன்னஞ் சிலநாள்கழிந்துசாவோமா என்றுமனங்கொதித்து வருந்தி மயக்கங்கொண்டவராய்ப் புலம்பி மனமுருகிமனையாளோடுகூடி ஆலோசித்தார்—எ-று. (௫௰)

நித்தமுமிருவரிதுதொழிலாகநேசமாய்மனமதுகுலைந்து
சத்துவங்குறைந்துமுணதுவெறுத்துத்தங்கணித்திரைகளுமறந்து
பித்தெனப்பிதற்றிப்பயந்திடுந்தாய்தன்வயிற்றினிற்பெருகனல்கிளர
அத்தனைதுயரத்தழுகையும்பெருமூச்சாகவேவிதியினாலயர்ந்து.

(இ-ள்.) இப்படித் தினந்தினம் அவ்விருவருமதுவே நினைவாய்ப் புத்திரநேசத்தினாலே மனங்குலைகுலைந்து திடக்குறைவாய்ப் போசனத்தையும் வெறுத்து நித்திரையுமில்லாமல் பயித்தியங்கொண்டாற்போற் பிதற்றிக்கொண்டுபெற்ற தாய்வயிற்றிலே துக்கமாகிற நெருப்புமூள அவ்வளவுதுன்பத்துடனே அழுகிறதும் பெருமூச்சுவிடுகிறதுமாகி விதிவசத்தினாலே சோர்ந்து—எ-று. (௫௧)

வள்ளலேயயன்மாறேடும்வான்பொருளேமலைமகடனையிடமுகந்து[னே
வெள்ளியம்பொருப்பில் வீற்றிருந்தோனே விமலனேவெள்விடையோ
தெள்ளிமையுடையமைந்தனையருளிச்சிறியதாயாண்டுமீரொட்டாய்க்
கொள்ளெனவிடுத்துமித்துயர்ப்படுத்துங்கோலங்களேதெனவறியேம்.

(இ-ள்.) உதாரகுணத்தையுடைய கடவுளே பிரமனும் சிவனுந் தேடுவதான வஸ்துவே பார்வதியை இடப்பாகத்தேவிரும்பிக்கொண்டுவெள்ளிமலையிலெ வீற்றிருக்கின்றவரோ பரிசுத்தரான இடபவாகனமுடையவரோ நல்லதெளிவுள்ள ஒருபிள்ளையை எங்களுக்குக்கொடுத்தருளியும் அற்பாயிசாகச்செய்து பெறப்பண்ணி இப்படி துன்பத்தினாலே வருத்தப்படப்பண்ணுகிறது என்னவேடிக்கையோ நாங்களறியோம்—எ-று. ()

வையகமதனிலுயிர்க்குயிராகிவளர்ந்திடுமேகநாயகனே
பையரவணிந்தபரமனேயடியார்பழவினைதுடைக்கும்வான்பொருளே
பொய்யெனுமுடலன்றனக்கொருமகவைப் புன்மையாலீய்ந்ததாலடியே
மெய்யெலாமுடைந்துபுந்தியுங்கலங்கிவேகின்றேன்வேதநாயகனே. [ன்

(இ-ள்.) உலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லா முயிராகி வியாபித்திருக்கிற ஒன்றானதெய்வமே படத்தையுடைய பாம்பாபரணம்பூண்ட சுவாமி அடியார்களுடைய பழையவினைகளையெல்லாம் தீர்த்துரக்ஷிக்கும் வஸ்துவே பொய்யான சரீரத்தையுடைய எனக்கு ஒருபிள்ளையை அற்பா

யிசுள்ளதாகக் கொடுத்தபடியினாலே அடியேன் உடம்பெல்லாம் கரைந்து மனமுங்கலங்கி வேகிறேன் ஓ வேதநாயகனே—எ-று. (ரு௩)

நிறைந்திடும்வயதாய்மைந்தனைத்தந்தானின்பதந்தலைமுறையாகச்
சிறந்திடத்தொழுதுதுதிக்குநானலனேசெகத்துளோரேசுதற்கிடமா
யுறுந்தொழிலாளனென்னபாவத்தையுஞற்றினனேவதாற்புதல்வ
னிறந்தனனென்றுமேசுதற்கிடமாய்விடுத்தியோவெம்பெருமானே.

(இ-ள்.) பூரணவயசுள்ளபிள்ளையைக் கொடுத்தால் உம்முடையபாதத்தைத் தலைமுறைவழியாகச் சிறப்புடனே வணங்கித் தோத்திரஞ்செய்ய நான்மாட்டேனோ யாதுகாரணத்தினாலே இந்தவுலகத்தாரெல்லாம் நிந்திக்கும்படி தகுந்தசெய்கையையுடைய இந்தமிருகண்டன் என்னபாவத்தைச்செய்தானோ அற்பாயிசாகப் பிள்ளையிறந்தானென்று சொல்லுதற்கிடமாகவிட்டீரோ ஓ எமதுகடவுளே—எ-று. (ரு௪)

பெருமைகள்பெறவேயெளியவர்தமக்குவெகுமதிகொடுத்துமேபின்பு
தருபொருளதனைக்கொண்டுடன்போகத்தடுத்தந்தக்கைப்பொருடன்னை
வெருவிடவடித்துப்பறிக்குந்துட்டரைப்போல்மேதினியெலாம்புகழ்மக
வை,அருமையாய்த்தந்தேவாங்குதறகுமோவப்பனேயொப்பிலாதவனே

(இ-ள்.) பெருமைகளுண்டாகும்படி எளியவர்களுக்கு வெகுமானங்கொடுத்துப் பின்பு அந்த எளியவர்கள் கொடுத்தபொருளைக் கொண்டுபோகும்போது அவர்கள் பயப்படும்படி வழிமறித்து அடித்துப் பறித்துக்கொள்ளுகிற துஷ்டர்களைப்போல் உலகமெல்லாம் புகழத்தக்கபிள்ளையை அரியதவஞ்செய்த பின்பு கொடுத்து வாங்கிக்கொள்ளுதலும்முடையகிருபைக்குத் தக்கதோசுவாமி ஒப்பில்லாததெய்வமே—எ-று. ()

என்றுதற்பரனைமனத்தினிலிருத்தியிருவருவ்வருத்தமாயந்த
கன்றிசேர்மைந்தன்றன்னையும்பார்த்துநஞ்சுண்டார்போலநாவறண்டு
கன்றியேமெய்கள்புண்ணதாயிருகண்ணருவிகள்களகளென்றோட
நன்றிகொன்றவர்போற்பிழையதுசெய்யுமனத்தர்போனடுநடுங்கினரே.

(இ-ள்.) என்று கடவுளை மனத்திலே யிருவருந்தியானித்து வருத்தப்பட்டு அந்தநன்மையுள்ள பிள்ளையைப்பார்த்து விஷமுண்டவர்கள்போல் நாக்குக்காய்ந்து உடம்பெல்லாங் கன்றிப்புண்ணாய் இரண்டுகண்களிலும் அருவிபோல் கண்ணீர்பெருகிக் களகளென்று சிந்தி யோடுவதாய்ச் செய்நன்றி மறந்தவர்கள்போலவும் மிகவும் அபராதம்செய்த மனத்தினர்போலவும் நடுநடுங்கினார்கள்—எ-று. (ரு௬)

வாயொன்றும்பேசார்கேட்டவர்க்குரையார்மனையுறுவாழ்க்கையும்பாரா
சேயமாய்மனுடரோடவரணுகார்நித்தமுந்துக்கசாகரத்தி [ர்
லோய்விலாதழுந்திமைந்தனுலுருகியொளிமழுங்கினமணியதுபோற்
றுயகமில்லாதிருவருமிருக்கத்தனையன்றன்வண்மையைக்கேண்மின்.

(இ-ள்.) அவ்விருவரும் வாய்திறந்தொருவருடனும் பேசுகிறதில்லை, என்னவென்றுகேட்டவருக்கு மறுமொழிசொல்லுகிறதில்லை, இல்வாழ்க்கையையு மெண்ணுகிறதில்லை, அன்புடனே ஒருவரோடுஞ் சேருகிறதில்லை இப்படி துன்பக்கடலிலேமுழுகிப் பிள்ளைவியசனத்தினாலே உருகித்தங்கள்தேககாந்திமழுங்கி மண்ணிலேமங்கிக்கிடக்கிற மாணிக்கம்போல் சந்தோஷ மெவ்வளவுமில்லாம லிவர்களிருக்கச்செய்தே அந்தப்பிள்ளைசெய்கையை இனிச் சொல்லக்கேளுங்கள்—எ-று. (௫௭)

தெருவினிற்சிறார்களுடன்விளையாடியில்லத்தில்வந்தமுதுண்ண
வருகுமந்நேரந்தந்தைதாயழுங்கிமனத்துயராகியேமுகங்கள்
கருகிடச்சோர்ந்துமிருப்பதைக்கண்டுகால்கைகணடுங்கிடப்பதறி
உருகியதந்தைதாய்பதம்பணிந்துமுரைத்திடும்விவேகமார்க்கண்டன்.

(இ-ள்.) தினந்தோறும் பிள்ளைகளுடனே தெருவிலேவிளையாடி வீட்டுக்குவந்து சோறுண்ண நேருகிற அந்தவேளையில் தாயுந்தந்தையும் வருந்தி மனோதுக்கமுள்ளவர்களாய் முகங்கள்கருகச் சோர்ந்து இருப்பதைக்கண்டு தன்கால்கைகள் நடுங்கிப் பதறி உருகுகிற தாய்தகப்பன் கால்களில்விழுந்து வணங்கிச்சொல்லுகிறார் விவேகியான மார்க்கண்டர். ()

வேறு.

எந்தனைப்பெற்றபேர்நீரிடைஞ்சலுந்துயருங்கொண்டு
நொந்துகண்ணருவியோடநுதன்முகம்வாட்டமாகிப்
புந்தியுமயங்கிச்சோர்ந்துபுலப்பமாய்ச்செழிப்புங்குன்றி
வெந்துநீரிருப்பதென்னவென்றவன்பின்னுஞ்சொல்வான்.

(இ-ள்.) என்னைப்பெற்றவர்களாகிய நீங்கள் மிகவும் இடைஞ்சலுந்துக்கமுங்கொண்டு மனநொந்து கண்ணீரருவிபோலோட நெற்றியு முகமும்வாடிப் புத்தியுமயங்கிச்சோர்ந்து பிரசித்தமாக உங்களழகுகுலைந்து மனம்வெந்து நீங்களிருக்கவேண்டிய தென்னவென்று பின்னுஞ்சொல்லுகிறார் மார்க்கண்டர்—எ-று. (கூக)

மனைதனக்கிடர்களுண்டோமாயம்வஞ்சனைசெய்தாரோ
வினையநம்பொருள்கள்காணுவிதமதோவென்னால்வந்த
துனைவுறுபிழைகளுண்டோசுற்றங்கள்வெருட்சிதானோ
எனையெவர்திட்டினாரோவேதினாற்சலிப்பதென்றான்.

(இ-ள்.) நமதுகிரகத்துக் கேதேனும்துன்பமுண்டா யாராவது மாய வஞ்சனைகள் பண்ணினார்களா பிறர்தந்திரத்தினாலே நமதுபொருட்சேதங்களுண்டா என்னாலேவந்த வேகமிக்க குற்றங்களுண்டா பந்துக்களாலே பயமுண்டா என்னகாரணம் யாராவது நிந்தித்தார்களா நீங்களேன் வியசனப்படுகிறீர்க ளென்றார்—எ-று. (௬௰)

பாலனாரீதுகேட்கப்பயந்தவர்பகரலுற்றார்
சீலனேநாங்கள்பெற்றதெள்ளியபொருளேகேண்மோ

மேலொருவினையுமில்லைவிளம்பியபகையுமில்லை
மாலெனநினைக்கொணுதவறுமைகளைவையுமில்லை.

(இ-ள.) இப்படிப் பிள்ளையானவர்கேட்கப் பெற்ற விருவருஞ்சொல்லுகிருர்கள் ஓ நல்லகுணத்தையுடையவனே நாங்கள்பெற்ற தெளிவுள்ளபிள்ளையே கேள் நமக்குமேலான ஒருகாரியங்களுமில்லை சொல்லத்தக்கபகைகளுமில்லை நாம் மயங்குவதான எண்ணக்கூடாத தரித்திரங்களொன்றுமில்லை—எ-று. (சுக)

நம்பொருட்கழிவுமில்லைசிந்தனைநமக்கொன்றில்லை
அம்பெனுங்கொடுமையில்லையறங்களுக்கழிவுமில்லை
கொம்பனேமனைக்குக்கேடுகூறுகள்வேறுமில்லை
தம்பியிவ்வுலகிலொன்றுபிழைகளுஞ்சார்ந்ததில்லை.

(இ-ள.) நமக்குப் பொருட்சேதங்களொன்றுமில்லை ஆலோசிக்கவேண்டியது நமக்கொன்றுமில்லை, அம்புபோற் கொடுமைகளில்லை, நமதுதருமங்களுக்கும் ஒருகெடுதியில்லை, எங்களுக்குப் பற்றுக்கோடான மகனே கெடுதலான காரியங்களுமொன்றுமில்லை அப்பனே இந்தவுலகத்திலே ஒருகெடுதலும் நமக்கு வந்ததில்லை—எ-று. (சுஉ)

புதல்வனேநாங்கள்முன்னுட்பொருமலோடிருந்துமந்த
முதல்வனைத்தவங்களேத்திமுயன்றுனைவாங்கும்போது
வதனமைந்துடையார்சொன்னவயதுமீரெட்டதாக
அதிகமொன்றில்லைநீயும் பிறந்தஞ்சாமாண்டுமாச்சே.

(இ-ள) ஓ மகனே நாங்கள் முன்னுளிலே பிள்ளையில்லாமல் வியசனத்தோடிருந்து கடவுளைநோக்கித தவங்களாலேதுதித்து முயற்சிசெய்து உன்னைப்பெறும்போது அந்த ஐமுகக்கடவுள் சொன்னவயதோ பதினுருக அதற்கதிகமில்லை நீபிறந்து ஐந்துவயதாச்சுது—எ-று. (சுந)

ஆண்டுபத்தாறுதன்னி லந்தகன்வந்திங்குன்னை
மாண்டிடப்பாசம்வீசி மல்லுயிர்கொண்டுபோவான்
ஈண்டிடும்வினைக்குநீங்க ளென்செய்வோமென்றிரங்கி
வேண்டினேமுன்னைவிட்டுப் பிரியவும்விதியோவையா.

(இ-ள.) பதினுறுவயதானவுடனே யமன்வந்து உன்னைச்சாவச்செய்து பாசத்தாலேகட்டி உயிரைக் கொண்டுபோய்விடுவான் இப்படியான செய்கைக்கு நாங்களென்னபண்ணுவோம் என்றழுது தெய்வத்தைவேண்டுகிறோம் உன்னைவிட்டுப்பிரிய எங்களுக்கு மனமும் வருமோ அப்பனே—எ-று. (சுச)

தந்தைதாய்மடியப்பெற்றபுதல்வர்கள்கடங்குசெய்வார்
மைந்தர்கள்மடியத்தந்தைதாய்கடன்கழிக்குமார்க்க
மிந்தவேழுலகிலுண்டோவெவர்களுங்கூறுவாரோ
எந்தவப்பாலாநாங்களின்னமுமொழியக்கேண்மோ.

(இ-ள.) உலகத்திலே தகப்பன் தாயிறந்துபோனால் அவர்பெற்றபிள்ளைகள் கருமகாரியங்களைச் செய்வார்கள் பிள்ளையிறக்கத் தாய்தந்தைகள் கடன்கழிப்பதுண்டோ இந்தச் சப்தலோகத்திலே யாராவது தாய்தந்தை பிள்ளைக்குக் கடன்கழிப்பதுண்டென்று சொல்லுவார்களா எங்கள் தவபுத்திரனே நாங்களின்னமுஞ் சொல்லுவதைக்கேள்—எ-று. (சடு).

மஞ்சனேநாங்கள்செய்ததவத்தினால்வந்தாய்நீயு
மஞ்செனும்வயதுமாச்சுதையிரண்டொன்றுமானால்
விஞ்சியமறலியுன்னைவிருப்புடன்கொண்டுபோவா [யா
னென்செய்வோமென்றுமெத்த விடைஞ்சலாய்மெலிந்தோமை

(இ-ள.) மகனே நாங்கள்பண்ணின தவத்தினாலே பிறந்தாய் நீபிறந்து அஞ்சுவயதாச்சுது இன்னம் பதினொருவயசு முடிந்தால் அடங்காத யமனானவன் உன்னைச் சந்தோஷத்துடனே கொண்டுபோவான் ஆகையால் நாங்கள் அதற்கு என்னசெய்யலாமென்று மிகவு மெலிந்திருக்கிறோம் அப்பனே—எ-று. (சசு)

ஆகையாலுனக்குமுன்னேமடிகிறோமானதாலே
மோகமாய்நாங்கள்பெற்றகடனுக்குமுனையாய்நின்று
தாகமாயெங்கட்குள்ளநீர்க்கடன்றருதியென்று
சோகமாயவர்கடாமேசொல்லியுமுருகலுற்றார்.

(இ-ள.) ஆனபடியினாலே நாங்கள் உனக்குமுன்னே இறக்கிறோம் நீ நாங்கள்பெற்ற கடனுக்கு முன்னின்று எங்களுக்கு அன்புகொண்டு செய்யத்தக்க கருமங்களைச் செய்யென்று பின்னு மவர்களேசொல்லி யுருகுகிறார்கள்—எ-று. (சஎ)

மைந்தனேயுன்னையல்லால்மற்றொருபுதல்வருண்டோ
கந்தனேரழகுள்ளோனேகருத்தினுக்கிசைந்தகண்ணே
அந்தத்திலெங்களுக்குமருங்கடன்செய்வதான
தந்திரமுடையமைந்தன்றனையினிக்காணோமென்று.

(இ-ள.) மகனே உன்னையல்லாமல் எங்களுக்கு வேறொருபிள்ளையுண்டா முருகக்கடவுள்போலும் அழகுள்ளவனே எங்கள் மனதுக்கிசைந்த ஞானக்கண்ணே முடிவிலே எங்களுக்கு அருமையான கடன்கழிப்பதான புத்திசாலியானபிள்ளை எங்களுக்கு இனி வேறேகிடைக்குமா. ()

வாட்டமாய்மைந்தன்றன்னை மார்பினிலணைத்துமிக்க
தேட்டமாயுச்சிமோந்து திருமடியதனில்வைத்து
நாட்டங்கள்குளிரப்பார்த்து நயமுடன்முத்தமிட்டுக்
காட்டியகதியுய்ப்பானே யென்றுடன்கதறுங்காலே.

(இ-ள.) என்று வாட்டத்துடனே பிள்ளையை மார்பிலேயணைத்து மிகவும் பிள்ளைத்தேட்டமா யுச்சிமோந்து திருமடியிலேவைத்து கண்கள்

குளிரப்பார்த்து சந்தோஷத்துடன் முத்தமிட்டு எங்களுக்கு நல்ல கதி காட்டி அதில் சேர்க்கத்தக்கவனேயென்று உடனே கதறி அழுகிறபோது—எ-று. (௪௯)

விற்பனவிவேகமுள்ள வேதமார்க்கண்டன்றானு
மற்புதத்தந்தைதாயு மழுங்குகின்றதனைப்பார்த்துக்
கற்பகம்போலவென்னைப் பெற்றருள்கனகக்குன்றே
நற்குணக்கடலேவாட்டந் தவிர்கென்னவிலலுற்றான்.

(இ-ள்.) மிகவும் விற்பனவிவேகமுள்ள வைதிகரான்மார்க்கண்டர் அந்த அதிசயமான தகப்பனுந் தாயும் வருத்தப்படுகிறதைப்பார்த்துக் கற்பகவிருக்ஷத்தைப்போல் என்னைப்பெற்றுவளர்த்த சுவர்ணமலைபோன்றவரோ நல்லகுணசாகரரே துன்பப்படுகிறதை விட்டுவிடுமென்று சொல்லுகிறார்—எ-று. (௫௰)

என்றனக்குருகிவாடி யிளைப்பொடுதுயரமுற்றிச்
சிந்தைதானொந்ததாலே தீருமோவினைப்பயன்றான்
முந்துநம்பரனார்சொன்ன மொழியதுபொய்யாதாக
வந்திடுமெந்தைதாயே வருந்திடவேண்டாநீங்கள்.

(இ-ள்.) என்னைக்குறித்து உருகி வாட்டமாய் இளைப்புடனே துன்பமிகுந்து மனது நொந்ததனாலே வினைப்பயன்விட்டிடுமோ முன்னே நமதுகடவுள் சொன்னசொல் தப்பாமல்முடியும் ஆனால் எனக்குத்தந்தையுந்தாயுமான நீங்கள் வருத்தப்படவேண்டாம்—எ-று. (௫௧)

கொடுத்தவன்வாங்கிக்கொண்டாற்குறையதுசொல்லலாமோ
அடுத்தவர்தம்மைப்பார்த்துப்பொறுமையாலயரொணாது
கிடைத்ததுபோதுமென்று கிருபையோடிருக்கவேணுங்
கடுத்தனையுண்டநாதன் கருணையையெண்ணியென்ன.

(இ-ள்.) கொடுத்தவரேவாங்கிக்கொண்டால் அதற்குக்குறைவுசொல்லக்கூடுமோ பக்கத்தாரைப்பார்த்து பொறுமைகொண்டு சோரவுங்கூடாது நமக்குக்கிடைத்ததே போதுமென்று தயவுடனேயிருக்கவேணும்விஷத்தையுண்டகடவுள்கிருபை யிப்படியோவென்றெண்ணிக்கொண்டு-எ-று.

அன்றயனெழுதுங்கூற்றை யாவரேயழிக்கவல்லார்
அன்றியுமதியினாலே வாழ்ந்திடநம்மாலாமோ
கன்றியேநினைக்குமந்தக் கருமங்கள்முடிவுறாது
வென்றிசேர்கருணைநாதன் மெய்ப்பொருள்விளங்குமன்றே.

(இ-ள்.) அப்போதே பிரமனெழுதின எழுத்தை யாராலே அழிக்கக்கூடும் அல்லாமலும் நம்முடைய புத்தியினாலே நாம்வாழ்ந்திருக்கக்கூடுமோ நாம் வியசனப்பட்டதனாலே நாம் நினைத்தகாரியமுடிவுபெறுமோ

எல்லாம் வெல்லவல்ல கிருபாமூர்த்தியானவர் எண்ணினபடியே முடிவாகும்—எ-று. (ருங)

இம்மொழியியம்பிப்பாலனின்னமுமவரைப்பார்த்தென்
அம்மையையிடத்தில்வைத்தவரனெனக்கிந்தப்பேறு
செம்மையாய்நூறுண்டாகச்செய்திலன்கண்ணிலான்போ
லெம்மையோநொந்துகொண்டீரீதென்னமயக்கமன்றே.

(இ-ள.) இந்தவார்த்தைகளைச் சொல்லிப் பிள்ளையானவர் மறுபடியும் தாய்தந்தையைப்பார்த்து எனது தாயான பார்வதிதேவியை இடத்திலே வைத்திருக்கிற பரமசிவனானவர் எனக்கிப்படியாக இரக்கமில்லாதவர் போல் நூறுவயதுள்ளவனாகச் செய்திலர் ஆனால் நீங்க ளெந்தவிதத்தினாலே நொந்துகொள்ளுகிறீர்க ளிதுவென்னமயக்கம் உங்களுக்கு-எ-று.

வருகின்றதெதுவானாலும்வந்தன்றேமுடியுமல்லாற்
பொருளதுகிட்டாதாயிற்புலம்பிக்கொண்டலைந்திட்டாலு
மூரிமையாய்வருவதில்லையுமையவள்கணவன்றந்த
கிருபையைமதியாற்றள்ளக்கிட்டுமோகிட்டாதன்றே.

(இ-ள.) எதுவானாலும் வருகிறது வந்தேமுடியும் நமக்கு வேண்டிய பொருள் கிடையாவிட்டால் புலம்பிக்கொண்டு அலைந்ததினாலே நமக்கு அந்தப்பொருள்கிடைக்குமா கிடைக்காது பார்வதிநாயகன் கொடுத்தகிருபையுள்ளவரத்தை நமது விவேகத்தினாலே தள்ளக்கூடுமோ கூடாது.()

ஈதுரைத்தினியபாலனிரங்கியதந்தைதாய்க்குக்
காதலாய்ச்சுருதிநூலின்வழிமுறைகாட்டிப்பின்னும்
வேதனைப்படுகின்றோர்க்குமிகத்தெளிவாகச்செப்பி
மூதறிவுடையோர்ஞானவாய்மையைமொழியலுற்றான்.

(இ-ள.) இந்தவார்த்தைகளைச்சொல்லிப் பின்பு நல்லபுத்திரனான மார்க்கண்டர் அப்படிப்பட்ட தந்தைக்குந்தாய்க்கும் அன்புடனே வேதசாஸ்திரவழிகளை யெடுத்துக்காட்டிப் பின்னும் துன்பப்படுகிற அந்தத் தந்தைதாய்க்கு மிகவுந் தெளிவுண்டாகச்சொல்லிப் பழையஞானிகளுடைய ஞானவாக்கியங்களைச் சொல்லலானார்—எ-று. (ருசு)

வேறு.

நீதியல்லதேயென்றனக்குருகியநேர்மை
பூதலந்தனிற்பிறப்பதுமிறப்பதும்பொருளே
ஆதிநாயகனருளதுவேயிலையல்லா
லோதுபொய்யுடனீரொழுங்குமிழியையொக்கும்.

(இ-ள.) நீங்க ளெனக்காக வுருகி வியசனப்படுகிறது நீதியல்லாதகாரியம் உலகத்திலே பிறக்கிறது மிறக்கிறதும் உள்ளகாரியமே ஆதியானக

டவுளருளே நிலையல்லாமல் சொல்லுகின்ற இந்தப் பொய்யானசரீரம் நீரிலே உண்டாகுகின்ற குமிழியேபோல்வதாம்—எ-று. (௫௭)

அரியமாலயன்விண்ணவரிந்திரனாதி
எரிசுடர்க்கதிர்மதிபொருமவனியோரினிய
புரிதவத்தவர்புண்ணியசாலிகள்புகழ்வோ
ரரியருத்திரர்மகேசுரரனைவருமழிவார்.

(இ-ள்.) அருமையான விஷ்ணு பிரமா தேவர்கள் இந்திரன்முதலான நெருப்பு சூரியன் குளிர்ந்தகிரணமுள்ள சந்திரனுடனே உலகத்தார்கள் நல்லதாகச்செய்கிற தவத்தினர்கள் புண்ணியசாலிகள் புகழத்தக்கவர்கள் அருமையான உருத்திரன் மகேசுவரன் முதலான எல்லாருமழிந்துபோவார்கள்—எ-று. (௫௮)

அருண்மிகுந்திடுந்திருக்கடவூரில்வாழைய
னொருவரன்றியேசராசரப்பொருளெலாமொழியும்
பெருமைதங்கியமாதவர்சிரஞ்சீவிபெற்றோர்
கருணையெந்தைதன்றிருவடியிணைகலந்திருப்பார்.

(இ-ள்.) கிருபையால் மிகுந்துள்ள திருக்கடவூரிலே வாழுகின்ற நமது கடவுள் ஒருவனையல்லாமல் மற்றச் சராசரப்பொருள்களெல்லாம் அழிந்துபோகும் இதிலே பெருமைகொண்ட மகாருஷிகள் சிலர் சிரஞ்சீவிகளாயிருக்கிறார்கள் அவர்கள் கிருபாசொரூபியான நமதுகடவுளுடைய திருவடிகளை சேர்ந்திருப்பார்கள்—எ-று. (௫௯)

அனகநாதனையன்பிலாப்பூசைசெய்பவர்க
டனதுகாரியமாகவேதவசுசெய்வோர்கள்
கனதனங்கள்சேர்காவலராகவுங்கருத்தா
யநேகரிப்படிநினைத்தழிந்துள்ளவாறறைவேன்.

(இ-ள்.) அந்தப்பரிசுத்தரான கடவுளை அன்பில்லாமல் பூசைசெய்பவர்கள் தமது காரியமாகத் தவசுசெய்கிறவர்கள் மிகுந்த திரவியமுள்ள ராஜாக்களாகவும் தவஞ்செய்வார்கள் இவ்விதமாக எண்ணி அநேகம்பேர்கள் அழிந்தவகைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்—எ-று. (௬0)

வாலிமாண்டனன்மாவலிபிறந்தனன்வல்விற்
சீலமுற்றியவிராமனும்பொன்றினன்றிக்குப்
பாலர்மாண்டனரிராவணன்மடிந்தனன்பாரின்
ஆலமுண்டவனருளிலாத்தக்கனுமழிந்தான்.

(இ-ள்.) சிவபூசைசெய்த வாலியுமாண்டான், மஹாபலியுமிறந்தான், வலிய வில்வித்தையிலேசிறந்த ராமனுமாண்டான், திக்குப்பாலர்களு மிறந்தார்கள், இராவணனுமிறந்தான் உலகத்திலே நஞ்சுண்ட கடவுள் அருளைப்பெறாத தக்ஷனுமிறந்தான்—எ-று. (௬௧)

இரணியாக்ஷதனிரணியனிருவருமிறந்தார்
தரணியாண்டிடுந்தசரதன்சூரபற்மாவும்
அரிமுகாசுரன்பகிரதன்றருகவசுரன்
மரணகாலம்வந்தழிந்தனர்மதுகயிடவரும்.

(இ-ள்.) முன்னே இரணியாக்ஷதன் இரணியனென்னு மிருவருமிறந்தார்கள், உலகத்தையாண்ட-தசரதன்-சூரபற்மா-சிங்கமுகாசுரன்-பகிரதன்-தாருகாசுரன்-மதுகயிடவர்-முதலான எல்லாரும் மரணகாலம்வந்தே இறந்தார்கள்—எ-று (கூஉ)

திரிசங்கனரிச்சந்திரனளன்சிசுபால
னுரியகஞ்சன்வஞ்சனைத்துரியோதனனுடனே
அரியகீசகன்பிரகலாதனனகங்கார
முரியபேரொலாம்பிரளயகாலத்திலொழிவார்.

(இ-ள்.) திரிசங்கு அரிச்சந்திரன் நளன் சிசுபாலன் கஞ்சன் வஞ்சனை செய்த துரியோதனன் அருமையான கீசகன் மடிந்தார்கள் பிரகலாதன் ஆகியவிவரெல்லா முதலான அகங்காரங்கொண்டபேர்கள் எல்லாரும் பிரளயகாலத்திலே மடிவார்கள்—எ-று. (கூ௩)

ஆகையாலவர்தம்மிலுநாமென்னவரிதோ
தாகமாயெந்நாளிருந்தாலுமிச்சரீர
மாய்கையாமிதுமடிவதுநிச்சயமாகுந்
தோகைபாகனுர்சொன்னதைவிலக்கிடலாமோ.

(இ-ள்.) ஆனபடியினலே அவர்களைவிட நாமென்ன அருமையோ ஆசையுடனே எத்தனைநாளிருந்தாலும் இந்தச்சரீரம் அழிவதேயாகும் இப்படிமடிகிறது நிச்சயமானபடியினலே பார்வதிசமேதரான கடவுள் சொன்னதை நாம்தள்ளக்கூடுமோ—எ-று. (கூ௪)

நீதிச்சோழனுக்கொருமகனிறந்தனனெறிசேர்
மாதவச்சிறுத்தொண்டனுக்கொருமகவதுவும்
சோதியால்மடிந்தானென்பதறிந்துநீர்துன்ப
மேதுநீங்களுமிடைவதுநலதலவென்று.

(இ-ள்.) மனுநீதிச்சோழனுக் கொரேபிள்ளை அவனுமிறந்தான்நன்மார்க்கத்தைச்சேர்ந்த மகாதவத்தையுடைய சிறுத்தொண்டருக்கொரு பிள்ளை அவனும் பரமசிவனலேயிறந்தா னென்பதெல்லாம் நீங்கள் தெரிந்திருந்து மென்னகாரணத்தினலே வியசனப்படுகிறீர்க ளிப்படி வியசனப்படுகிறது நல்லகாரியமல்லவென்று பின்னும்—எ-று. (கூ௫)

எனையீன்றருளிறைவனேயென்றனைமறலி
உன்னிவந்தெனைப்பிடிக்குமுன்னுமையொருபாகன்

றன்னைப்பூசனைபுரிந்தந்தச்சண்டனைத்தகர்த்து
முன்னமேசொன்னநாளெந்நாளிருக்கவுமுயல்வேன்.

(இ-ள்.) என்னைப் பெற்றருளின தலைவனே என்னைக்குறித்து யமன் வந்து பிடிக்குமுன்னே பார்வதிசமேதரான கடவுளைப் பூசைபண்ணி அந்தயமனைவென்று முன்னே கடவுள் சொன்னவயது பதினாறும் எந்நாளுமிருக்கும்படி முயற்சிசெய்கிறேன்—எ-று. (கூகூ)

இறைவிபாகனையேற்றுவாகனனையேயெங்கு
முறையுநாதனையைம்முகக்கடவுளையுகந்து
நிறைவுடன்பணிந்தேத்தியேபூசனைநிகழ்த்தில்
மறலியென்கண்முன்வருவனோபயமனுகாமல்.

(இ-ள்.) அந்தப் பார்வதிசமேதராய் இடபவாகனத்தை யுடையராய் எங்கும் வியாபகமான தெய்வமாகிய ஐந்துமுகக்கடவுளைச் சந்தோஷித்து நிறைந்த பத்தியுடனே வணங்கித் துதிசெய்து பூசைபண்ணினால் யமனானவன் பயப்படாமல் என்கண்ணுக்குமுன்னே வருவானோ—எ-று. ()

காமனைப்பொடியாக்கியகடவுளைப்பணிந்து
நேமமாகவேதுதித்திடமறலியுநெருங்கான்
ஏமனானவன்மிஞ்சியென்மேல்வருங்காலை
நாமமாயிரம்பூண்டவனமனையேயுதைப்பான்.

(இ-ள்.) மன்மதனைத் தகனம்பண்ணினகடவுளை வணங்கிக் கிரமமாகத்துதித்தால் யமன் என்னிடம்வாரான் அல்லது அந்த எமன்என்மேல் வரும்போது ஆயிரநாமத்தையுடைய கடவுள் அந்தயமனைத் தன்காலாலேஉதைத்தருளுவார்—எ-று. (கூஅ)

சிவபிரான்பதமேத்தியதொண்டரைச்சினந்து
மவமதாகியவேமனும்வருவனோவவனாற்
கவர்தலாகுமோவெரியினைப்புழுக்கலந்திடுமோ
தவனனைப்பனியடருமோதரணியின்முன்னாள்.

(இ-ள்.) சிவபெருமான் பாதத்தைத் தோத்திரஞ்செய்த அடியார்களைக்கோபித்துக் கெடுதியான யமன்வருவானோ அல்லது வந்து சிவனடியார்களுயிரைப்பிடிக்கக்கூடுமோ நெருப்பைப் புழுக்கள்சேருமோ சூரியனைப் பனிமொய்க்குமோ இன்னமுன்னாளிலே—எ-று. (கூகூ)

எம்பிரான்பதமேத்தியதொண்டரைமறலி
வம்புசெய்தவருயிரினைப்பிடிக்கவார்சடையோன்
வெம்பியேமனைச்சாடிடப்பிழைத்தவர்வெகுபே
ரன்பர்க்கன்பனைப்பணிந்துநான்முத்தியையடைவேன்.

(இ-ள்.) நமதுகடவுள் பாதத்தைத்துதித்த அடியாரை யமனானவன் வருத்தஞ்செய்து அவர்களுயிரைப்பிடிக்க அப்போது நீண்டசடையை

யுடைய கடவுள் கோபித்து யமனையுதைக்கத் தப்பினவர்க ளனேகருண்டு ஆனதினாலே அந்த அடியார்க்கன்பனான கடவுளைவணங்கி நான் மோக்ஷத்தையடைவேன்—எ-று. (எ௰)

என்றுதந்தைதாய்மனத்துயரகல்வுறவியம்பி
அன்றெனக்கவரளித்திடுமாயுளீரெட்டை
யின்றுநான்பணிந்தளவிலாவாயுள்பெற்றெமனை
வென்றுமீளவனென்றிறைஞ்சினான்வேதமார்க்கண்டன்.

(இ-ள்.) என்று தகப்பனையுந் தாயையும் மனத்துன்பம் போகும்படி சொல்லி அக்காலம் எனக்குக் கடவுள்கொடுத்த பதினாறுவயசையும் இப்போது கடவுளை நான்வணங்கி அளவில்லாத ஆயிசைப்பெற்று எமனை வென்று உங்களிடம் வருகிறேனென்று வணங்கினார் வைதிகரான மார்க்கண்டர்—எ-று. (எக)

அன்னைதந்தையுமகமகிழ்ந்தன்புடனெடுத்தே
என்னமாதவஞ்செய்தெமோவுனைப்பெறவென்னக்
கன்னிபாகனைத்தொழுதிடவுங்கள்கைத்திருநீ
றின்னிதாகவேயீந்துநல்விடையருளென்றான்.

(இ-ள்.) அப்போது தாய்தகப்பனிருவரு மனமகிழ்ந்து பிரீதியுடனே அந்தமகனை யெடுத்தணைத்து நாங்களென்ன மகாதவத்தைச் செய்தோமோ உன்னைப்பெறுதற்கென்று கொண்டாட அதற்கு மார்க்கண்டர் நான்பார்வதிசமேதரை வணங்கும்படி உங்கள்கையாலே திருநீறு சந்தோஷமாகக்கொடுத்து நல்ல வுத்தரவுகொடுங்களென்று கேட்டார். (எஉ)

வேறு.

என்றுநற்பாலன்கூறவினிமையாய்த்தந்தைதாயு
நன்றெனமகிழ்ச்சிகூர்ந்துநட்பொடுமகனைப்பார்த்தே
வென்றிசேர்விடையோன்றன்னைத்தவமதுபுரிந்துவேண்டி
யென்றுமேயழியாவண்ணமியல்புடனிருக்கவென்றே.

(இ-ள்.) என்று நல்ல சுகுணரானபிள்ளை சொல்லக்கேட்டு சந்தோஷத்துடனே தாயுந்தகப்பனு நல்லதென்று பின்னுஞ் சந்தோஷமாய் மிகுந்தபிரீதியுடனே மகனைப்பார்த்து வெற்றிபொருந்தின இடபவாகனக் கடவுளைக்குறித்துத் தவஞ்செய்து வேண்டி எக்காலமும் அழியாமல் நீயிருக்கக்கடவாயென்று வாழ்த்தி—எ-று. (எங)

அன்பொடுநீற்றையள்ளியஞ்செழுத்ததனையோதி
யின்பமாய்ப்புதல்வனெற்றிக்கிட்டுளமிகமகிழ்ந்து
தென்பதாயுறுதியாகவாழ்த்தியுத்தாவுஞ்செய்தார்
அன்பதாய்ப்பாலன்றானுமரனையேநாடிப்புக்கான்.

(இ-ள்.) அன்புடனே திருநீற்றையள்ளிப் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துச் சந்தோஷமாக மகனுடைய நெற்றியிலேயணிந்து பின்னுமனமகிழ்வுடனே தெம்பும் திடமுமாக ஆசீர்வதித்து விடைகொடுத்தார்கள் மகனும் அன்புடனே சிவநேசங்கொண்டு சிவனையே தியானஞ்செய்து கொண்டுபோயினர்—எ-று. (எச)

மார்க்கண்டேயர்உற்பவுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உ௰உ.

## மார்க்கண்டேயர் தவம்புரிசருக்கம்.

சரிதையுங்கிரியையோகஞானமுந்தவமுமீறிப்
பரிவுடன்பழுத்தவேதபண்டிதன்மார்க்கண்டேயன்
அருமையாய்த்தந்தைதாய்தம்மடியிணைபணிந்துபோற்றித்
திரிபுரமதனைச்செற்றசிவனருள்பெறவேவேண்டி.

(இ-ள்.) சரிதை கிரியையோகம் ஞானங்களான தவத்தாலுயர்ந்து அன்புடனே தவத்திலே முதிர்ந்த வேதபண்டிதரான மார்க்கண்டேயர் அருமையுள்ள தகப்பனையுந் தாயையும் பாதங்களில்விழுந்து வணங்கிக் கொண்டு திரிபுரதகனரான சிவபெருமான் கருணைபெறவேண்டி-எ-று.()

மனையைவிட்டகன்றுபொன்னிமாநதிமூழ்கிமுன்னாள்
வினைகளின்றொடர்புதீர்க்கும்விபூதிநெற்றியிலணிந்தே
நினைவுடனனுட்டானங்கணேசமாய்ச்செய்துகொன்றை
புனையும்வேணியினர்மேவுந்திருக்கடவூரிற்புக்கான்.

(இ-ள்.) அப்படித் தமது கிரகத்தைவிட்டுப்போய் காவேரிமகாநதியிலே ஸ்நானஞ்செய்து பாபசம்பந்தங்களையெல்லாந் தீர்ப்பதான விபூதியை நெற்றியிலேயணிந்துகொண்டு சிவதியானத்துடனே அனுஷ்டானங்களைக் கிரமமாயன்புடன்முடித்துக்கொண்டு கொன்றைமாலையணியுஞ் சடையையுடைய கடவுளிருக்கிற திருக்கடவூருக்குள்ளே போயினர் மார்க்கண்டேயர்—எ-று. (உ)

புகுந்தவர்பிறவிதீர்க்கும்புனிதவாலயத்தைக்கண்டு
மிகுந்திடுமன்பதாகவிமலன்கோபுரத்துவாயில்
புகுந்தவணமஸ்கரித்திட்டெழுந்துமெய்ப்பொருள்கொடுக்கத்
தகுந்தவரிருக்கும்பீடந்தன்னையேசார்ந்தானன்றே.

(இ-ள்.) அப்படிக் கோயிலுக்குப்போன மார்க்கண்டேயர் பிறவி தீர்ப்பதான பரிசுத்தமான ஆலயத்தைக்கண்டு மிகுந்த அன்புடனே சுவாமி கோபுரவாசலிலே நுழைந்து அவ்விடத்திலே நமஸ்காரஞ்செய்து எழுந்து மெய்யான பொருளெல்லாம் கொடுக்கத்தக்க கடவுளிருக்கும்பீடத்தை யடுத்தார்—எ-று. (ந)

நெடியமாலயனுங்காணநித்தனைவலமாய்வந்து
துடியிடையுமைபாளோடுசோதியேதியானமாகக்
கடியவாணவகோபங்கள்கலந்திடாநற்குணத்தால்
வடிவுளமார்க்கண்டேயர்மனோபூசைக்கன்பதாகி.

(இ-ள்.) நெடியமாலும் பிரமனுங் காணப்படாத கடவுளைப் பிரதக்ஷிணம்பண்ணி துடிபோலு மிடையையுடைய பார்வதிசமேதராயே தியானித்துக்கொண்டு கடுமையான ஆணவகோபங்களையெல்லாம் வராமல் தடுத்து நல்லகுணத்துடனே நல்லஅழகுகொண்ட மார்க்கண்டேயர் மனோபூசைசெய்யவே அன்புகொண்டு—எ-று. (ச)

வடமுகமாகப்பத்மாசனமதிலிருந்துள்ளத்தைத்
தடைசெயும்பொறிபுலாதிதன்னையுநீக்கியன்பாய்
மடமயில்பாகனுக்குமஞ்சனநீராலாட்டிப்
பொடிகள்சந்தனங்கணேயப்பூமலர்மாலைசாத்தி.

(இ-ள்.) வடக்குமுகமாகப் பதுமாசனத்திலிருந்து மனத்தைத்தடைசெய்கிற பொறிபுலாதிகளையெல்லாம்போக்கிப் பார்வதிசமேதரான கடவுளுக்குத் திருமஞ்சனஞ்செய்து கந்தபொடிகள் சந்தனங்கள் அன்பைத்தருகிற வில்வார்ச்சனைமுதலான புஷ்பமாலைகளுஞ்சாத்தி—எ-று. ()

வேண்டியமலர்கடுபதீபங்கஸ்தூரிவில்வ
மீண்டியவமுதுநெய்பாலறிவினாலீந்துமெங்க
ளாண்டவன்றன்னைமந்திரமஞ்செழுத்ததனாலேத்திப்
பூண்டுமார்க்கண்டன்றானுங்கடவுளைப்பூசைசெய்தான்.

(இ-ள்.) இன்னம் வேண்டியபுஷ்பம் தூபம் தீபம் கஸ்தூரிவில்வம்திருவமுது நெய் பால் முதலானவெல்லாம் மனோபூசையாகச்செய்து அந்தக்கடவுளைப் பஞ்சாக்ஷரமந்திரத்தினாலே துதிசெய்து மார்க்கண்டேயரிப்படிச் சிவபூசைசெய்தார்—எ-று. (சு)

தாயொடுதந்தைசுற்றஞ்சகோதரராசையற்று
நேயமாம்பூமியாசைகனவிலுநினையா வண்ண
மாயமோகங்கள்டம்பமனைமக்கடனங்களின்பந்
தோயும்வாழ்க்கைகளுமற்றுந்துணித்தவணின்றுபின்னும்.

(இ-ள்.) தாயுடனே தகப்பன்பந்துக்கள் சகோதரர் ஆசைகளெல்லாந்தீர்ந்து அன்புசெய்வதான மண்ணாசையைச் சொப்பனத்திலு மெண்ணாமல் மயக்கத்தைச்செய்கிற மோகங்கள் டம்பம் வீடு பிள்ளைகள் திரவியங்கள் சுகமுறுவதான வாழ்வுமுதலான எல்லாஆசைகளும்போக்கி அங்கேயிருந்து பின்னும்—எ-று. (எ)

ஊனொடுசுவையுமற்றுநித்திரையொறுத்துக்கோப
மானவ்மாயையற்றுமாசாபாசங்களற்றுப்

பூணொடும்பிறவியானகடலையும்போக்கிமிக்க
நாணுடனேயமற்றுநாதனை மனத்துட்கொண்டு.

(இ-ள்.) உணவுடனே ருசிகளாசையுமில்லாமல் தூக்கமும்விட்டுக் கோபம் ஆணவமாயையுமில்லாமல் எல்லா ஆசாபாசங்களுந்தீர்ந்து ஆபரணம்போலான பிறவிசாகரமான சமஸ்தமும்விட்டு மிகுந்தவெட்கத்துடன் தேகவாஞ்சையுந்தீர்ந்து சுவாமியை மனத்துள்ளேகொண்டு-எ-று.

இருவிழியிலுநீரோடவிருகரமேந்தியன்பாய்த்
திருமறைநான்கிற்கெட்டாச்சிவசிவாசிவனேயென்று
மொருவனையுளத்தில்வைத்தேயுகந்துமாயிரநாமங்கள்
கருதியேயுரைத்துமெங்கள்கர்த்தனைப்பணிதல்செய்தான்.

(இ-ள்.) இரண்டுகண்களிலு நீரொழுக இரண்டுகைகளையுந்தாங்கியேந்தி அன்புடனே சிறந்த நான்குவேதங்களுக்குமெட்டாத சிவசிவா சிவனேயென்று துதிசெய்து அந்தலைப்பில்லாத கடவுளை உள்ளத்திலேகொண்டு சந்தோஷத்துடனே சகஸ்திரநாமங்களையுஞ் சொல்லித் தியானித்து நம்முடையகர்த்தாவை வணங்கினர்—எ-று. (கூ)

மண்ணினின்மாறியாடிமாயவன்மறையோன்றேடும்
புண்ணியமுதலேபோற்றிபுராதனப்பொருளேபோற்றி
எண்ணுதற்கடங்கானாமத்தியல்பனேபோற்றிமூன்று
கண்ணுடையவனேசூலகபாலியேபோற்றிபோற்றி.

(இ-ள்.) உலகத்துள்ள மதுரைவெள்ளியம்பலத்திலே கால்மாறியாடினவரோ விஷ்ணு பிரமாக்கள்தேடுவதான பரிசுத்தமான காரணப்பொருளேபோற்றி புராதனமென்கிற பழையபொருளேபோற்றி எண்ணுதற்கு அடங்காத பெயரையுடைய சுத்தஸ்வபாவனேபோற்றி முக்கண்ணுடைய கடவுளேபோற்றி சூலமும் கபாலமுமுள்ளவனே போற்றிபோற்றி—எ-று. (ய)

இரவிசந்திரனைக்கண்ணுயிலங்கியவிறையேபோற்றி
சரமசரங்களுக்குட்டயுங்கியதாயேபோற்றி
அரவினைப்பணியாய்க்கொண்டவப்பனேபோற்றிதேவர்
குரவனேயென்னையாண்டகுகைநமச்சிவாயபோற்றி.

(இ-ள்.) சூரியனையுஞ் சந்திரனையுங் கண்ணாகவிளங்கக்கொண்ட கடவுளேபோற்றி சராசரங்களுக்குள்ளே விளங்குகின்ற தாயானவரேபோற்றி பாம்பை ஆபரணமாகக்கொண்ட சுவாமிபோற்றி தேவர்களுக்கெல்லாம் தேவனானவரோ என்னை அடிமைகொள்ளுகின்ற குகைநமச்சிவாயரேபோற்றி—எ-று. (யக)

யாவர்க்குமரியாய்போற்றியாவர்க்குமெளியாய்போற்றி
யாவர்க்குமுயிராய்போற்றியாவர்க்குநிறைந்தாய்போற்றி

யாவர்க்குஞ்சரியாய்போற்றியாவர்க்குமுயர்வேபோற்றி
யாவர்க்கும்பொருளாய்நின்றவாதிநாயகனேபோற்றி.

(இ-ள்.) எல்லாருக்கும் அருமையானவரோபோற்றிஎல்லாருக்குமெளிமையானவரோபோற்றி எல்லாருக்கு முயிரானவரோபோற்றிஎல்லாருக்குள்ளு நிறைந்திருக்கிறவரோபோற்றி எல்லாருக்கும் சமமாயிருக்கிறவரோபோற்றி எல்லாருக்கு முயர்வாயிருக்கிறவரோபோற்றி எல்லாருக்குந்திரவியரூபமானவரோபோற்றி எல்லாருக்கு முதற்கடவுளானவரோ போற்றி()

வேறு.

உலகெலாம்படைத்தேபலபலவுயிர்க்குமொருமுதலெனவொருசுடரே
யிலகியேநிறைந்தவேகநாயகனேபிறப்பொடுபிறப்புமில்லாதாய்
நிலவொடுகொன்றையறுகொடுபுனலு நிறைந்தசெஞ்சடையனேகடவூர்த்
தலமதையுகந்தசருவநாயகனேசச்சிதானந்தசின்மயனே.

(இ-ள்.) உலகத்தையெல்லாம் சிருஷ்டித்துப் பலபலவுயிர்களுக்குமொருமுதலாகவும் ஒரேசோதியாகவும் விளங்கி நிறைந்த ஒன்றானகடவுளே இறப்புப்பிறப்பில்லாதவரே சந்திரனுடனே கொன்றைமாலையையும் அறுகம்புல்லுடனே கங்கையுநிறைந்துள்ள சிவந்த சடையையுடையவரே திருக்கடவூரான திவ்வியதலத்தை விரும்பியிருக்கிற சருவலோகசரணியரோ சத்துச்சித்து ஆனந்தமாகிய சூட்சுமரூபரோ—எ-று. (௰௩)

என்மனக்கொழுந்தேயொருவருமில்லாவிறைவனேதந்தைதாயற்ற
நன்னுதற்சுடரேஞானமாமணியேநான்மறைதேடுநாயகனே
இன்னலைக்காய்ந்ததேவனேயனையரூபியாயெழுந்தசெம்முகிலே
புன்மையைநீக்கும்புண்ணியப்பொருளேபுரவலனனபூரணனே.

(இ-ள்.) எனக்கு மனக்கொழுந்தானவரோ ஒருவருநிகரில்லாத கடவுளே தந்தையுந்தாயு மில்லாது நல்லநெற்றியில் நெருப்புள்ளவரோ ஞானமான பெரியரத்நமே நான்குவேதங்களுந் தேடுவதானநாயகரோ துன்பத்தைப்போக்குவதான தெய்வமே அந்தத்தெய்வரூபமாகவே யெழுந்தருளின சிவந்த மேகம்போன்றவரோ எனது புல்லறிவையெல்லாம் போக்குவதான புண்ணியவஸ்துவே எல்லாரையும் ரக்ஷிக்கவல்லரான பரிபூரணரோ—எ-று. (௰௪)

துதிப்பவர்க்கினியபதமொருநான்குமுதவியசுடரொளிவிளக்கே
உதித்திடுங்கொடியவிடமமுதாக்குமொருவருமிணையில்லாதவனே
மதிப்பவர்க்கொருவர்மதிப்பிலாதவனே வள்ளலேயென்னையாள்பவனே
கதித்தெழுமிரவிபிரபையைக்காய்ந்தகனலெழுமழுவுடையோனே.

(இ-ள்.) உன்னைத் தோத்திரம்பண்ணுமவர்களுக்கு நல்லபதவிகள்நான்குங் கொடுக்கத்தக்க சுடரொளியானசோதியே கடலிலேயுண்டான கொடிதானவிடத்தை யமுதமாகக்கொண்ட ஒருவருமொப்பில்லாதவரோ எண்ணுகிறவர்களுக்குள்ளே ஒருவராலு மெண்ணப்படாதவரோமவற

ப்பிரபுவே என்னையாளத்தக்கவரோ உக்கிரமாகவுதயமாகிற சூரியப்பிரகாசத்தையுமழுக்கத்தக்க அக்கினிஜாச்சுலியமான மழுவாயுதத்தையுடையவரோ—எ-று. (௬௫)

எழுதவுமரியவிணைமுலைக்குமரியெவ்வுலகத்தையுமீன்று
மொழுகியகருணையுடையநாயகியையொருபுறம்வைத்தவானவனே
செழுமைசேர்திகிரிமால்தனக்குதவுதியாகனேசிறுத்தொண்டனீன்ற
குழவியினூனைக்கறியதாயுண்டகொற்றவாசித்தர்நாயகனே.

(இ-ள்.) எழுதுதற்கரிதான இரண்டுதனங்களையுடைய கௌமாரபருவத்தையுடையளா யெல்லாவுலகத்தையும்பெற்றும் ஒழுகாநின்றகருணையுடைய பார்வதியை ஒருபுறத்திலே கொண்டிருக்கிறதெய்வமே செழுமைபொருந்தின சக்கராயுதத்தை விஷ்ணுவுக்குக்கொடுத்த உதாரகுணத்தையுடையவரோ சிறுத்தொண்டநாயனர்பெற்ற பிள்ளையைக் கறியாகவுண்டருளின வெற்றிக்கடவுளே எல்லாம் வல்லசித்தரானவரோ-எ-று()

ஒன்றுடனிரண்டாய்மூன்றதாய்நாலாயுகந்திடுமஞ்சதாயிலங்கி
நன்றெழுத்தாறுயேழதாயெட்டாய்நாடியவொன் பதாய்ப்பத்தாய்
நின்றெழுத்திலங்கிநெடுந்தொகையாகிநிரந்தரமாய்நிறைந்தோனே
அன்றுகூடலிலேதிருவிளையாடலறுபத்துநாலுஞ்செய்தவனே.

(இ-ள்.) ஓரெழுத்தாகவு மிரண்டெழுத்தாகவு மூன்றெழுத்தாகவு நாலெழுத்தாகவு மைந்தெழுத்தாகவும் ஆறெழுத்தாகவும் ஏழெழுத்தாகவும் எட்டெழுத்தாகவும் ஒன்பதெழுத்தாகவும் பத்தெழுத்தாகவும் நிலைபெற்ற எழுத்துகளாய்விளங்கி நெடுங்கணக்குமாகி நிரந்தரமா யெங்குநிறைந்தவரோ அக்காலத்திலே மதுரையிலே அறுபத்துநாலு திருவிளையாடலுமாடினவரோ—எ-று. (௰எ)

புழுப்பொதியுடலமலம்பொதிபாண்டம்பொசிந்திடுங்குருதியினூற்ற
மெழுப்பியவசடப்பிறப்பினிலுதித்துமிறப்பொடுதுயரமுமெய்தி
யழுக்கெனுங்கடலிலழுந்திநானூசலாடினேனூற்றுதற்கினியா
ரிழுக்கதைத்தீர்த்துன்மலரடிக்காளாயியைகடவூருளீச்சுரனே.

(இ-ள்.) புழுக்கணிரம்பினதேகம் மலம்பொதிந்த பாண்டம் ஒழுகுகின்ற ரக்தத்தினலே நாற்றமுண்டான அசடமானபிறவியிலே பிறந்துஇறக்கிறதுடனே துன்பமுங்கொண்டு அவித்தையாகியகடலிலேஅமிழ்ந்திநான்ஊசல்போற்பிறக்கிறது மிறக்கிறதுமானேன் ஆனல்அதைப்போக்குகிறவர்கள் உம்மையல்லாமல் யாரிருக்கிறார்கள்இனிஇப்படிப்பட்ட தோஷத்தைப்போக்கி உம்முடைய பாதாரவிந்தங்களுக்கு அடிமையாகச்செய்யும் திருக்கடவூரிலே வாசஞ்செய்கிற சுவாமி—எ-று. (௰அ)

அன்னைமாருதரக்கருக்குழிக்கடலிலமிழ்ந்தியேமுழ்கியுமப்பாற்
பின்னையுமுழ்கியழிந்துமிவ்வண்ணம்பிறப்பினுலிறப்பினுலிளைத்தேன்

இன்னமுமடியேன்பிறந்துநானிறக்கவினிப்பயந்தலறியேயுனது
.பொன்னடிசேர்ந்தேனிவ்வுடலிறந்துவீழ்ந்திடாதருள்புரிவாயே.

(இ-ள்.) தாய்மாருடைய கர்ப்பக்குழியாகிய கடலிலே அழுந்தி முழு கியும் அப்பால் பின்னும் அப்படியே அழுந்தி முழுகி இப்படிப் பிறப்பி னாலு மிறப்பினாலும் இளைத்தேனாகிய நான்இன்னமும் அடியேன்பிறந்து இறக்க இனிப்பயந்து அலறிக்கொண்டுவந்து உன்னுடைய பொன்ம யமான பாதத்தை யடைந்தேன் ஆகையாலிந்த வுடம்புஇறந்து வீழ்ந்து போகாமல் அருள்செய்யவேணும்—எ-று. (௰௯)

பறவையாய்ப்பிறந்துமிருகமாய்ப்பிறந்தும்பாரிலூர்வனவுமாய்ப்பிறந்து
நறவுணுமீயாய்ப்பிறந்துநீர்ச்சாதிநடக்கைபிற்பிறந்துமானிடமாம்
பிறவியிற்பிறந்துமுனையறியாதபித்தனானாகிலுமினிமே
லிறைவனேயுனதுமலரடிக்காளாயிசைத்தருள்புரிந்திடீச்சுரனே.

(இ-ள்.) பக்ஷிகளாகப்பிறந்து மிருகங்களாகப்பிறந்தும் உலகத்திலே ஊர்வனவாகப்பிறந்தும் தேனையுண்கிற ஈயாய்ப்பிறந்து நீர்வாழுஞ் சாதி களாக மனிதப்பிறவியாகப் பிறந்தும் உம்மை அறிந்துகொள்ளாத பித் தன் நானானாலும் உம்முடைய தாமரைமலர்போன்ற பாதங்களுக்கு அடிமையாகும்படி செய்தருளவேணும் கடவுளே—எ-று. (௨௰)

மரங்களாய்க்கல்லாய்த்தூறதாய்ப்புனலாய் மண்ணதாய்மலரதாய்ப்பிறந்
தரங்கம்போலலைந்துமானிடப்பிறவிதரித்துநானித்துயர்தன்னு [துன்
லிரங்கியென்னுடலமிளைத்துவாட்டமதாயினமலப்பொதிசுமந் துழன்றே
புரங்களைச்செற்றகடவுளேயெனதுபிறவியையறுத்தருள்புரிவாய். [ன்

(இ-ள்.) மரங்களாகவுங் கல்லாகவுஞ் செடிகளாகவும் நீராகவும் மண் ணாகவும் பூவாகவும் பிறந்தும் கடலினலைகள்போ லலைந்து மனிதப்பிறவி கொண்டு நான் இந்தத்துன்பத்தினாலே அழுது என்தேகமெலிந்து வாட் டத்துடனே இன்னமு மலச்சுமையைச்சுமந்து வருந்தினேன் ஆகையா லே திரிபுரதகனம்பண்ணின தெய்வமே என்னுடைய பிறவியைத்தீர்த் துக் கிருபைசெய்வீராக—எ-று. (௨௧)

நாயினுங்கடையேனன்மொழியறியேனவின்றவர்வாசகங்கேளேன்
வாயினாலுன்னைவாழ்த்தவுமறியேன்வாழ்த்துவோர்தம்மையுமறியேன்
தோயுமுன்னடியார்தம்மையுமறியேன்றொடுத்திடுநூல்களுமறியேன்
பேயெனைப்பொருளாய்வந்தெனையாண்டுகொண்டருளெம்பெருமானே.

(இ-ள்.) நாயிலுங்கடையான நான் நல்லவார்த்தைகளுந் தெரிந்திலே ன் நல்லவார்த்தைகள் சொல்பவர் வார்த்தைகளுங்கேட்டிலேன் வாயா லுன்னைத் துதிக்கவுந்தெரியேன் துதிப்பவர்களையுந் தெரிந்திலேன் உம் மைஅடைந்த அடியார்களையும் அறிந்திலேன் அந்த அடியார்கள்சொன் னசாஸ்திரங்களையுந் தெரிந்திலேன் ஆன-பேயனான என்னைப்பொருளா கவந்து என்னை ஆண்டுகொண்டருளும் கடவுளே—எ-று. (௨௨)

ஒருகதியறியேனுண்மையையறியாவுலுத்தனுக்கொருவர்வேறுளரோ
பெருமைசேர்தந்தைதாய்தமர்நட்பாம்பின்றுணையனைவருநீயே
மருளனுமடியேன்றந்தையுந்தாயும்வாட்டமுற்றிடமிகமயங்கிக்
கருகினேனினிமேலாகிலும்வந்துகாப்பதுக்கெதுகொலோகாணேன்.

(இ-ளை.) ஒருநல்லவழியுமறியாத நான் உமது மெய்தெரியாத உலுத்தன் எனக்கு உம்மையல்லாமல் வேறேஒரு ஆதரவுஇருக்கின்றதோஇன்னமும் பெருமைகொண்ட தகப்பன் தாய்உறவு சிநேகமாகியபின்னுதவிகளான எல்லாரும் நீரோ இன்னம்மயங்கினவனான அடியேனுக்குத் தகப்பனுந் தாயுமான இருவரும் சோர்வைக்கொண்டதினாலே நான் மிகவு மயங்கி வருத்தங்கொண்டேன் ஆகையா லினிமேலாகிலும் வந்து என்னைரட்சிப்பதற்குத் தடையெதுவோ தெரிகிலேன்—எ-று. (௨௩)

முன்னைநாளடியேன்தந்தைதாய்மலடாயிருந்துன்பான்முற்றவமியற்ற
அன்னநாளெழுந்துமடியெனைத்தரும்போதாண்டுமீரெட்டதாயமைத்தீ
ரென்னதவ்வாண்டுமுடிந்திடுங்காலையேமன்வந்தென்னுயிர்பிடிப்பா
னன்னவன்கவராதுன்னடியிணைதந்தருள்செய்வாய்கைலைநாயகனே.

(இ-ளை.) முன்னாளிலே அடியேனுடைய தகப்பனுந் தாயு மலடாயிருந்துஉமதுசந்நிதிமுன்னேதவத்தைச்செய்ய அக்காலத்திலே எழுந்தருளினீராகி அடியேனைக் கொடுக்கும்போது வயது பதினாறாகப்பிறக்கச்செய்தீர் ஆகையால் என்வயசான பதினாறுமுடிந்தபோது யமன்வந்து என்னுயிரைப்பற்றுவான் அப்படி அவன் என்னுயிரைப் பிடித்துக்கொண்டு போகாமல் உம்முடையஇரண்டுபாதங்களையுந்தந் தருளவேணும் கைலாசபதி—எ-று. (௨௪)

அந்தகனெனைத்தானணுகிடாவண்ணமருள்புரிந்தெமனையுமகற்றிச்
சிந்தனைத்துயரமகற்றியீரெட்டுவயதெந்நாளினுமுறச்செய்தே
யிந்தமாநிலத்திலிறந்திடாதுன்றனிணைமலர்த்திருவடிமருவத்
தந்திடவேண்டுங்கந்தனையீன்றதயாபராகருணைவாரிதியே.

(இ-ளை.) யமனானவன் என்னைக் கிட்டாதபடிசெய்து அந்த யமனையுந் துரத்தி என்மனோவியாகுலத்தையும்போக்கிப் பதினாறுவயதுஎப்போதுமிருக்கும்படிசெய்து இந்தப் பெரிதான வுலகத்திலே உமதிரண்டுபாதங்களையும் நான் புஷ்பங்களால் அருச்சனைசெய்யும்படி கொடுத்தருளவேணும் முருகக்கடவுளைப்பெற்ற தயாபரனான கருணைக்கடலே-எ-று.

கரும்பகடுடையோன்முன்னைநாள்முடிந்தகாலையில்வந்தெனதுயிரை
விரும்பியேகவரும்பொழுதிலென்றனக்குவேறொருபுகலிடமிலையா
லரும்புநின்மலர்த்தாடொழுதுநான்புலம்பியலறுவேன்மறலியைவிலக்கி
தரும்பதமீய்ந்துமழிவிலாவண்ணந்தந்தருள்சமயமெய்ப்பொருளே. [த்

(இ-ளை.) கறுத்த எருமைக்கடாவாகனத்தையுடைய யமனானவன் முன்அளவுசெய்த காலமுடிவிலேவந்து என்னுடையவுயிரை விரும்பி வந்

து பற்றும்போது எனக்கு வேறொரு சார்பிடமுமில்லை ஆகையால் எல்லாந்தருவதான உம்முடைய திருவடித்தாமரையைவணங்கி நான்புலப்பி பலறுவதாயினேன் யமனை ஓடும்படிசெய்து நீர்கொடுக்கப்பட்ட பதத்தைக்கொடுத்தும் அழியாதபடிபண்ணி கிருபைசெய்தருளவேணும் சமயந்தோறும் மெய்யாயிருக்கிற தெய்வமே—எ-று. (உகூ)

இறைவனேயெனக்குத்தந்திடும்வயதையென்றைக்குமீரெட்டுவயதாய்க்
குறைவிலாவண்ணமருள்புரிந்தடியேனுடலெனுங்கூடுலையாமற்
கறைமிடறுடையகண்ணுதல்வடிவே காத்தெனையாண்டுகொண்டருள்வா
மறைகள்மாலயனுந்தேடுமாமுதலேமங்கைபங்காளனேபோற்றி. [ய்

(இ-ள்.) கடவுளே நீரெனக்குக் கொடுத்தவயதை யென்றைக்கும்பதினாருக குறையாதபடி கிருபைசெய்து அடியேனுடைய தேகமாகிய கூடு அழியாதபடி நீலகண்டத்தையுடைய நெற்றிக்கண்ணுள்ள மூர்த்தி காப்பாற்றி என்னை அடிமைகொண்டருளவேணும் வேதங்களும் விஷ்ணு பிரமாக்களும் தேடத்தக்க பெரியமுதற்கடவுளே பார்வதி சமேதரே போற்றி—எ-று. (உஎ)

வேறு.

என்றுசிறுவேதனுமிறைஞ்சியிறையோனை
நன்றுதிருவாசகநவின்றுசிவபூசை
வென்றிதவறுதருள்விளைந்திடவமுக்தத்
துன்றுசடையோனெதிர் துளங்கவெளியானார்.

(இ-ள்.) என்பதாகச் சிறிய பிராமணப்பிள்ளையாகிய மார்க்கண்டேயர் வணங்கி அந்தக்கடவுளை நன்றாகத் திருவாசகங்களாலே துதித்துச் சிவபூசைக்குக் குறைவுவராதபடி சிவனருள்பெருகும்படி தோத்திரஞ்செய்ய அப்போதுநெருங்கின ஜடையையுடைய கடவுள் மார்க்கண்டர்முன்னே பிரசன்னமாக வெளியானார்—எ-று. (உஅ)

மழுக்கரமிடற்கறைமதிச்சடைவிளங்க
இழுக்கிலவுமைக்கொடியிடத்தினிலிலங்க
முழுக்கரவமாலிகையுமுக்கணுமிலங்கத்
துழுப்பையிடபத்தினிடைதோன்றியெதிர்வந்து.

(இ-ள்.) மழுவேந்தினகையும் நஞ்சுதங்கினகண்டமும் சந்திரனையணிந்த சடையும் எங்கும்விளங்குதற்கு யாதொருதோஷமுமில்லாத பார்வதிதேவி இடப்புறத்திலேவிளங்கவும் முழுதும் பாம்பாபரணமும் திரிநேத்திரமும் விளங்க உடம்பைக்குலுக்குகிற இடபவாகனத்தினிலேறி யெதிரேவந்து தோன்றி—எ-று. (உகூ)

மறைக்குலமுதித்தசிறுமாதவனைநோக்கிக்
குறைப்படுவதேதெயொழியெனக்கழறிக்கூற்றன்

மறப்படர்மறத்தியினியஞ்சலெனவந்தி
நிறப்படுமுதற்கடவுணேருறவுரைப்பார்.

(இ-ள.) வேதக்குலத்திலே பிறந்த சிறுபிள்ளையான மகாதவத்தையுடைய மார்க்கண்டேயரைப்பார்த்து நீகுறைப்படுகிறதை விடுவென்று சொல்லி யமனுடைய கோபத்தால் வருந்துன்பத்தையுமறந்து விடுஇனி அஞ்சாதேயென்று அந்திநிறமுள்ள முதற்கடவுளானவர் நேராகச்சொல்லுகிறார்—எ-று. (௩௰)

ஏதுநீயுரைக்குமொழியென்றரனுரைக்க
வோதுகுலமாதவனுகந்துதொழுதேத்தி
நாதமுனநாளெனைநீநல்குமதுகாலை
யோதுபதினறுவயதாகியொழிவானல்.

(இ-ள.) நீசொல்லிக்கொள்வதை யெனக்கு முன்னேசொல்லென்று சிவன்சொல்லும்போது ஓதுகுலமான மார்க்கண்டேயர் சந்தோஷித்து வணங்கித் துதித்து நாதனே முன்னளிலே யென்னை நீர்கொடுக்கும்போது நீர்சொன்ன பதினறுவயது முடிவாகிப்போனல் பின்பு—எ-று.(௩௧)

அவ்வயதுநான்முடியவந்தகனெனைத்தான்
வவ்வியவுன்வாதையடராமலழியாம
லொவ்வியதுநானுமுனையேதொழுதிருக்கச்
செவ்வியனேபின்னமொழிசெப்பியருளென்றான்.

(இ-ள.)அந்தவயதானகாலமுடிவானவுடனே யமனனவன்வந்துஎன்னைப்பிடித்து அவனுபத்திரவஞ்செய்யாமலும் நான்சாவாமலு நீர் சம்மதித்தருள்செய்யும்படி நான்வேண்டுகிறது ஆனல் நானும்மையே எப்போதும் வணங்கியிருக்கவும் சிவந்த நிறத்தையுடையகடவுளே இன்னமும் இந்தவரங்களைக் கொடுத்தருள்செய்யவேணுமென்றார் —எ-று. ()

இப்பெருமையந்தணனியம்பவுமைபாக
வப்பருமகிழ்ந்தவனையஞ்சலெனவேதா
ணப்பியபயங்களறநாதனவனேரோ
தப்புதலிலாதமொழிதானருள்வதானர்.

(இ-ள.) இப்படிப் பெருமையையுடைய மார்க்கண்டேயர்சொல்ல அதற்குப் பார்வதிசமேதரான கடவுள் சந்தோஷித்து அந்தமார்க்கண்டேயரைப் பயப்படாதியென்று அவரைச்சூழ்ந்த பயங்களெல்லாம்போம்படி கடவுளானவர் அவருக்குமுன்னே தப்பில்லாதவார்த்தைகள்சொல்லி யருளுகிறார்—எ-று. (௩௩)

அந்தணனேநீபயமகற்றுபதினறு
முந்தன்வயதென்றுமுசியாவயதுதந்தோஞ்
சிந்தனைவிடுத்துணர்சிறந்தெமதுபூசை
யுந்தியவருச்சனையுகந்துபுரியென்றார்.

(இ-ள்.) ஓபிராமணப்பிள்ளையே நீ பயத்தைவிட்டுவிடு உனக்குக்கொடுத்த வயதுபதினாறும் எப்போதும் அழியாதிருக்கும்படி கொடுத்தோம் நீ உன் மனைவியாகுலத்தைவிட்டு ஞானத்தினாலேசிறந்து எமது பூசையாகச்சொல்லுகிற அருச்சனையைமகிழ்ந்து செய்துகொண்டிரு என்றருளினார்—எ-று. (ரு.௪)

பூசுரனேயுன்னுயிர்பிடிக்கவேபொருந்தா
னேசமுடனுன்னெதிரேவந்தவனெருங்கான்
வாசமொடுமிஞ்சியமன்வந்தவனடைந்தா
னாசமுறவேயவனைநான்முடிதகர்ப்பேன்.

(இ-ள்.) ஓபிராமணனே உன்னுயிரைப்பிடிக்க யமன்வாரான் அன்புடனே உனக்கெதிரேயும்வந்து அந்தயமன்கிட்டான் அல்லது அந்தயமன் தன்னெல்லைவிட்டு மிஞ்சிவந்து நெருங்கினால் அவன் அழியும்படி நான் அவன்றலையையுடைக்கிறேன்—எ-று. (ரு௫)

பாலகனேயிக்கவலைபற்றிடநீவேண்டாங்
காலனவனுன்னுயிர்கவர்ந்திடுமவ்வேளை
சூலமதினால்யமனைவென்றுயிர்தொலைப்போம்
வேல்முருகனாணையெனமெய்ப்பொருளுரைத்தார்.

(இ-ள்.) ஓ சிறுபிள்ளாய் இந்தக்கவலையை நீ எண்ணவேண்டாம் யமனானவன் உன்னுயிரைப்பிடிக்கவரும்போது சூலத்தினாலே அந்தயமனை வென்று அவனுயிரைப்போக்குகிறேன் இதற்கு என்புத்திரனான வேலையுடைய முருகனதாணையாகவென்று மெய்யான கடவுள் சொன்னார்.()

என்றுகயிலைக்கடவுளின்மொழியுரைத்துத்
துன்றுசிறுபாலனதுதுன்பமதகற்றி
மன்றல்புரிவேணியன்மறைந்திடவும்வேத
னின்றுமயராதுசிவபூசனைநிறைத்தான்.

(இ-ள்) என்று கயிலாசபதியானவர் இனிதான வார்த்தைகளைச்சொல்லித் தம்மையடுத்த அந்தச்சிறுபிள்ளைக்குள்ள துன்பத்தைப்போக்கி-பின்பு-கொன்றைப்பூ மணம்பொருந்தின சடையையுடையவர்மறைந்துபோனவளவில் வேதப்பிராமணரான மார்க்கண்டேயர் மனதுநிலைகொண்டு மயங்காமல் சிவபூசையை நிரப்புதலானார்—எ-று. (ரு௭)

வேறு.

எம்பிரானீதுசொல்ல விருபிறப்பாளனெங்கள்
தம்பிரான்கடவூரானைத் தன்பயமகற்றுவோனை
அம்புவிவிண்ணோர்மெய்க்க வருந்தவப்பூசைசெய்து
தும்பைவேணியனார்தம்மை மறவாமற்றுதித்துநின்றார்.

(இ-ள்.) அப்படிக்கடவுளானவர் இப்படிப்பிரசன்னராகி அருளிச்செய்ய-அதுகேட்ட வேதியரான மார்க்கண்டேயர் எமதுகடவுளான திருக்

கடவூரிலே அமர்ந்தவராய்த் தமது பயத்தைப்போக்கின தெய்வத்தை உலகத்தாரும் தேவரும் மெய்ச்சும்படி அருமையான தவமாகிய சிவபூசைபண்ணிப் பின்பு தும்பைமாலைதரித்த சடையையுடையவரான கடவுளை மறவாமல் தோத்திரம்பண்ணிக்கொண்டிருந்தார்—எ-று. (ருஅ)

மார்க்கண்டேயர்-தவம்புரிசருக்க-முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உகூம.

## யமன் தூதரைவிடுத்தசருக்கம்.

படிவரோகேளிரறங்குன்றுக்கடவூர்மிருகண்டன்பெற்றிடும்பாலன்
வடிவமார்க்கண்டன்சிவபிரான்பூசைவழுவறச்செய்திடுங்காலை
கடுகியேவயதுமெண்ணிரண்டாண்டுகழிந்திடுநாளதைக்கண்டு
முடிவுநாளாச்சென்றந்தகனவனைமுடுகியவாறுரைசெய்வாம்.

(இ-ரை.) ஓ தபோதனர்களே கேளுங்கள் தருமநீதி குறைவுபடாத திருக்கடவூர் மிருகண்டமுனிவர் பெற்றருளின தவவடிவரான மார்க்கண்டேயர் சிவபெருமான்பூசையை குற்றந்தீரச் செய்துவருகிற காலத்திலே-விரைவிலே பதினறுவயதுஞ்சென்றதுதெரிந்து யமனுனவன் ஆயுள்முடிவாச்சுதேயென்று அந்தமார்க்கண்டேயரை விரைந்துபிடிக்கவந்தபடியைச் சொல்லுகிறேம்—எ-று. (க)

ஏற்றியதீபமாறெண்ணுத்தூபமெய்தியபுகையதுமாறு
சாற்றியமலர்கள்குன்றெனக்குவியத்தன்னிருகைத்தலமாறு
போற்றியர்ச்சனைகள்புரிந்திடநேசம்பொங்கியேதுதித்திடுங்கீத
மாற்றிடாவண்ணமெம்பிரான்பூசைசெய்தவன்வணங்கியகாலை.

(இ-ரை.) ஏற்றின கர்ப்பூரதீபமும் மாருத சாம்புராணித்தூபமும் இவ்விரண்டிலுமுண்டான புகையானது மாறுமலும்மந்திரஞ்சொல்லிஅருச்சித்த புஷ்பங்கள் மலைபோற்குவியவுந் தன்னிரண்டுகைகளூ மாறுமலும் பின்னும்துதித்து அர்ச்சனைகள்பண்ண அன்புமிகுந்து தோத்திரம்பண்ணுகிறபாடல்கள் மாறுதபடி சிவபெருமான்பூசையைச்செய்துகொண்டு அவர்வணங்கிக்கொண்டிருக்கும்போது—எ-று. (உ)

அமைத்ததோராண்டுமீரெட்டுமாகியதிலொருபொழுதினிதிருக்கச்
சமைப்பொடுபாலனுமைக்குநாயகனைத்தஞ்சமென்றுகந்தவனிருக்க
நிமைப்பொழுதெண்ணுமெம்பிரான்கணக்கனேசமாமானிடர்கணக்கை
அமைத்தவன்பார்க்கத்திருக்கடவூரிலந்தணன்கணக்குவந்துளதால்.

(இ-ரை.) அமைக்கப்பட்டதான வயது ஒரு பதினறுமானதிலே ஒரு நாள் குறைவாயிருக்க அந்த ஒருநாளும் முன்பூசைசெய்தபடியே மார்க்கண்டேயர் பார்வதிநாயகனை கடவுளையே கதியான ஆதாரவாகக்கொ

ண்டு மகிழ்வுடனிருக்கும்போதில் க்ஷணகாலத்தையும் தெரிந்துவிட்டு விடாது கடவுளாக்ஞையைக்கொண்டிருக்கிற கணக்கனான சித்திரபுத்திரனானவர் ஆசாபாசத்தையுடைய மனிதர்கள் ஆயிசுக்கணக்கையெடுத்துப் பார்க்க அப்போது திருக்கடவூர்ப் பிராமணரான மார்க்கண்டேயர் கணக்கு கையிலேவரலாயிற்று—எ-று. (௩)

ஆயிரங்கண்ணனிடத்தினிலுதித்தசித்திரபுத்திரருயிரைக்
காய்வலமுடையமறலியைப்பார்த்துக்கழறுவார்பூமியிற்கடவூர்த்
தோயுநூற்குலத்தின்மார்க்கண்டன்வயதுசென்றதுசுருக்கெனவோடிப்
போயவன்றன்னைத்துடித்திடப்பிடித்துக்கொணர்கெனப்புகலவுமறலி.

(இ-ள்.) ஆயிரங்கண்களுள்ள இந்திரனிடத்திலேபிறந்த சித்திரபுத்திரரானவர் உயிரைக்கொன்று பற்றவல்லனான யமனைப்பார்த்துச் சொல்லுகிறார் பூலோகத்திலே மார்பிலே முப்புரிநூலணிந்த குலத்தையுடையவனான மார்க்கண்டனுக்கு வயதுமுடிவாயிற்று விரைவிலேபோய் அவனை அவசரத்துடனே பிடித்துக்கொண்டு வருகென்று சொல்லுமளவில்-யமனானவன்—எ-று. (௪)

நன்றெனக்கடியசினத்தொடுகொடிதாய்நகைத்தவ்னெழுந்துவந்திருந்து
நின்றதூதுவரையனலெழுங்கண்ணனேருறப்பார்த்தவன்கூவி
யின்றுநற்கடவூர்மார்க்கண்டன்வயதுமீரெட்டுமுடிந்ததனாலே
சென்றுநீரவனைத்தாமதமிலாமற்சீக்கிரங்கொடுவருகென்றான்.

(இ-ள்.) அங்கேநிற்கிறதூதரை நெருப்புத்தோன்றுகிற கண்களாலே நேராகப்பார்த்தவனாகி அந்தத்தூதரைக் கூப்பிட்டு இன்றே திருக்கடவூர்மார்க்கண்டனுக்கு வயதுபதினாறு முடிந்துபோனதினாலே நீங்கள்போய் அந்தமார்க்கண்டனைத் தாமதப்படுத்தாமல் சீக்கிரத்திலேகொண்டுவாருங்களென்று சொன்னான்—எ-று. (௫)

ஏமனார்மொழிந்தவார்த்தையைத்தூதர்இருசெவிக்கமுதெனக்கேட்டு
நேமமாய்முனிவனிருக்கிறநாடுநகரமுநேர்மையுநிறமும்
வாமனேநாங்களறிந்திடும்படியாய்வகுத்துரையென்றவர்கேட்க
வேமனானவனுமதிககோபமதாயியம்புவான்றூதரைப்பார்த்து.

(இ-ள்.) யமனானவர் சொன்னவார்த்தையைத் தூதர்களிரண்டுகாதுகளுக்கும் அமுதம்போற்கேட்டு சுவாமி கிரமமாக அந்தமார்க்கண்டமுனிவனிருக்கிற நாடும் ஊரும் அவன்குணமும் நிறமும் நாங்கள் தெரியும்படி பிரித்துச்சொல்லுமென்று அவர்கேட்க யமனானவன் அதிககோபங்கொண்டு தூதரைப்பார்த்துச் சொல்லுகிறான்—எ-று. (௬)

நாட்டுகேட்கிற்காவிரிசூழ்ந்தசோழமண்டலமெனுநாடு
தேடிமாலயனுங்கண்டுவிடுயர்ந்ததிருக்கடவூரெனுநகரம்

MUDALIAR MEMORIAL

காடதிலாடுவோன்றிருக்கோயிற்கனகமாமதிலிருந்தெளிய
மாடதிலேறுவோன்றனைப்பூசைசெய்கின்றான்மார்க்கண்டவேதன்.

(இ-ள்.) நாடு எது என்றால் காவேரியாறுசூழ்ந்த சோழமண்டலமே நாடு, ஊர் எது என்றால் மாலும் அயனுந்தேடிக் காணப்படாதகடவுளைக்கண்டு பூசித்து உயர்ந்தவீடுபெற்றிருக்கிறதாகச்செய்த திருக்கடவூரென்பதே ஊர், சுடுகாட்டிலே ஆடப்பட்டவர் திருக்கோயிலிலே சுவர்ணமயமான பெரியமதிலின் பிராகாரத்திலே பூசை செய்துகொண்டிருக்கிறான் மார்க்கண்டேயன்—எ-று. (௭)

அங்கர்புகுந்து மந்தவூர்க்காவலாகிய தேவதையிடத்தில், இன்னதுவர
லாறியம்பிடவவர்க ளியம்புவாரவனதுவண்மை, சொன்னதின்பிறகுவ
ளைத்தவனுயிரைத் துடித்திடப்பிடித்துமென்முன்பா, லின்னிதாய்க்கொ
ணர்கென்றேமனுருரைக்கத்தூதருமிறைஞ்சியேயெழுந்தார்.

(இ-ள்.) நீங்களந்தவூருக்குள்ளேபோய் அந்த ஊர்க்காவலாகியதெய்வங்களிடத்தில் இந்த ஆயுள்முடிவானவகையைச்சொன்னால் அவர்கள் சொல்லுவார்கள் அவனுடைய நேர்மைநிறங்களை அப்படிஅவர்கள்சொன்னபின்பு வளைத்து அவனுயிரைத் துடிதுடிக்கப்பிடித்து எனக்குமுன்னே இந்தக்ஷணத்திலே கொண்டுவரக்கடவீர்களென்று யமதருமராஜன் சொல்ல உடனே எழுந்திருந்தார்கள்—எ-று. (௮)

தூதர்நால்வர்களுங்கையினில்வலைகள்கயிறுசுரிகையுமெடுத்துப்
பூதலநடுங்கவந்தனர்கடவூர்புகழ்ந்திடுந்தேவதைமுன்பா
னீதமாய்மறலியுரைத்ததைமொழியநீங்களும்போமெனவிகழ்த்த
வேதினமொழியும்பூசையர்ச்சனையு முகந்ததைத்தூதர்கண்டுரைப்பார்.

(இ-ள்.) அந்தத்தூதர்நால்வரும் கையிலேவலைகள் கயிறுசுரிகைகளைக்கொண்டு திருக்கடவூருக்குவந்து எல்லாருங்கொண்டாடப்பட்ட தேவதைமுன்பாக நீதியுடனே யமனசொன்னதைச்சொல்ல அத்தெய்வம் நீங்களங்கேபோங்களென்று சொன்னவுடனே அப்போது அத்தூதர் சொல்லுகிறமந்திரமும் சிவபூசையும் சிவார்ச்சனையும் விரும்பி யிருப்பதை வந்துபார்த்துச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்—எ-று. (௯)

இவனவன்றானோவில்லையோமறலியிசையடையாளத்தின்படியே
யிவனவனாகுமெப்படியவன்றனிடத்தினிற்போவமென்றிசைந்தா
லிவனரன்பூசைக்கினியனாகையினலிடர்செய்தானமக்கிடராகு
மிவனதுவளமையறிந்திடாதேகின்மறலியுநமையிகழ்வானே.

(இ-ள்.) இவன் அந்தயமன்சொன்னவனோ அல்லனோ யமன்சொன்ன அடையாளப்படி பார்த்தால் இவன் அவனேயாகிறான் அவனேயானால் நாமெப்படி அவனிடத்திலேபோகிறது போகச்சம்மதித்தால் இவன் சிவபூசைக்கு யோக்கியனாயிருக்கையாலே இவனுக்குத் துன்பஞ்செய்

தால் நமக்குத்துன்பமுண்டாகும் இவனுடைய காரியத்தை இப்படியெ ன்றுதெரியாமற்போனால் யமன் நம்மையிகழ்வானல்லவோ—எ-று. (ய)

ஆகையாலிவனை நம்மளவேன்ற வாண்மையால்வளைத்துமென்றவனை
மாயையாலடர்வோம் வசப்படுமானு லுயிரையும்வாங்கியேபோவோங்
தோகைபாகன்றன் பலத்தினாலடித்துத் துரத்தினாலதற்கப்பானுமே
போகியேமறலி யிடத்தினிற்சேர்வோம் பொருபொரொன்றெனத்துணி
ந்தெழுந்து.

(இ-ள்.) ஆனபடியினாலே இந்தச்சிவபூசை பண்ணுகிறவனை நம்மால் கூடியவளவான ஆண்மைகொண்டு அவனைச்சூழ்வோமென்றும் அவனை நமது மாயையினாலே நெருக்குவோமென்றும் - அவன் நமதுகைக்குள் ளாவானாறு லுயிரைப் பற்றிக்கொண்டுபோவோமென்றுந் துணிவுகொ ண்டு பின்னும் கடவுள்பலத்தினாலே நம்மை அடித்துத்துரத்தினால் அத ற்குமேல் நாமே யமனிடம்போய்ச்சேருவோமென்று அடி அடியென்று சொல்லித்துணிந்தெழுந்தார்கள்—எ-று. (யக)

நுழைந்தனரிருள்போ லிடியெனக்குமுறி மார்க்கண்டன்கண்டுநொந்திட
வே, வளைந்துமார்ப்பரித்து மாயைகள்செய்தும்வந்துயிர்பிடிக்குமந்நேர,
மிளந்தலைப்பாலன் பரமனைப்பூசை யியற்றியமகிமையாலடர்ந்து
சுளுந்தனற்போலத் தூதரைத்துரத்திச் சுட்டதாலகன்றவரோடி.

(இ-ள்.) இருள்போற் கிட்டிநெருங்கி இடிபோற்குமுறி மார்க்கண்டர் பார்த்துப் பயப்படும்படிசூழ்ந்தும் ஆரவாரித்து மாயைகள்பண்ணியும் வந்து உயிரைப்பற்றுகிற அந்தச்சமயத்திலே இளஞ் சிறுபாலனான மார் க்கண்டன் சிவனைப்பூசைபண்ணின மகிமையினாலே நெருங்கிச்சுவாலிக் கிற நெருப்பைப்போற் றூதரைத்துரத்திச் சுட்டதினாலே அவர்கள் பய ந்தோடி—எ-று. (யஉ)

எம்பிரான்கோயிற் றிருமதிற்புறகின் றேகமாயார்ப்பரித்திரைந்து
மும்பர்நாயகற்கு முரியமார்க்கண்ட னுறும்விழிமுன்னதாய்த்தோன்றி
வெம்பியேசினந்து பதறிடவதட்டி வெருண்டிடப்பிளந்துவாய்மடித்துக்
கும்பலாய்க்கூடி யனலெழக்கூவிக் கூற்றுவன்றூதருமுரைப்பார்.

(இ-ள்.) நமதுகடவுள் சந்நிதித் திருமதிற்பிரகாரத்திலேநின்று ஓரே முழக்கமாக அதிர்ந்தும் தேவர் நாயகனான கடவுள்பூசைக்குரிய மார்க்க ண்டர் முன்னேவந்து வெப்பங்கொண்டு கோபித்துப் பதறும்படி அத ட்டிப் பயப்படும்படி வாயைத்திறந்து வாயைமடித்துக் கும்பலாகக்கூடி நெருப்புத்தோன்றக் கூப்பிட்டு யமதூதர்களுஞ் சொல்லுகிறார்கள். ()

ஏன்டாவேதச் சிறுபையலேகே ளின்றுனக்காண்டதுமுடிந்து
போன்றாலேம தூதர்கணுங்க ளுன்னுயிர்பிடிக்கவேவந்தோம்
ஆனதாற்கடுகி யெழுந்திருவாடா வல்லதானிவனுச்செய்தாற்
றானவனறிப் கொன்றுனைச்சினந்துத் தான்கொடுபோவதுமெய்யே.

(இ-ள.) அடா-வேதமோதுகிற சிறுபையலேகேள் இன்றே உனக்கு வயது முடிந்துபோயிற்று முடிந்துபோனதினாலே நாங்கள்யமதூதர்கள் உன்னுயிரைப்பிடிக்கிறதற்காகவேவந்தோம் ஆனபடியினாலே ஏன்வாரா திருக்கிறாய்-சீக்கிரம் எழுந்திருந்துவாடா வலிமையுள்ள சிவபூசையினாலே பலஞ்செய்ததனாலே நாங்கள்விடுவோமோ-நீ பூசைபண்ணுகிறசிவன்பார்க்க உன்னைக்கொன்று அழித்து நாங்கள் கொண்டுபோகிறது மெய்யானகாரியமே—எ-று. (யச)

எழுந்திருவாடா விளஞ்சிறுபயலே யித்தனைதாமதமேண்டா
பிளந்துனைத்துணித்துப் போடுவோநாங்கள் பெலமுளோராகையானீயு
மழிந்துநீவாதைப் படுமுனேமார்க்க மாகவேவருகெனவாவென்
றெழுந்திருவெனவே யேமதூதர்களு மியம்பிடமார்க்கண்டன்வெருவி.

(இ-ள.) ஓ இளஞ்சிறுபையலே எழுந்திருந்துவாடா இத்தனை தாமத மேண்டாசெய்கிறாய் உன்னைப்பிளந்து துண்டமாக்கிப்போடுவோம்- நாங்கள் மகாபலமுள்ளவர்களானதினாலே நீஅழிந்து துன்பப்படுமுன்னே மார்க்கமாகவே வந்துவிடு-வா எழுந்திரு என்று யமதூதர்கள்சொல்ல மார்க்கண்டர்பயந்து—எ-று. (யரு)

பதறியேமெய்கள் படபடென்றுடீப் பயத்தொடுமனமெலாங்கலங்கி
மதியணிசடையா ரடியிணைப்பலத்தால் மறுகியமனமதுதெளிந்து
விதிகுலத்துதித்தமார்க்கண்டவேதன்வெகுளியைப்பார்த்தவர்வெருவப்
பதியெமதூதர் தம்மையேநோக்கிப் பாலனுஞ்சிலமொழிபகர்வான்.

(இ-ள.) சரீரம்பதறி அவயவங்கள் படபடென்றுதுடிக்கப் பயத்துடனே மனதுமுழுதுங்கலங்கிச் சந்திரனை யணிந்த சடையையுடைய கடவுள் பாதங்களினது பலத்தினாலே மயங்கின மனமானது தெளிவாகிப் பிராமணகுலத்திலேபிறந்த மார்க்கண்டேயர் கோபத்தைப்பார்த்து அந்தயமதூதர்கள்பயப்பட அவர்களைப்பார்த்துச் சிறுபிள்ளையானவர் சொல்லுகிறார்—எ-று. (யசு)

வேறு.

ஆரடாவென்முன்னீங்க ளாண்மையாய்ப்பயமிலாமற்
றீரமாய்வந்துமேம சேவகமொன்றுமார
வீரமாய்த்துணிந்துமென்னை வரச்சொன்னீர்மதிகெட்டாற்போற்
பாரடாவென்றனாண்மை யென்றுபின்பகரலுற்றார்,

(இ-ள.) யாரடா என்முன்னே நீங்கள் ஆண்மையுடனே பயமில்லாமல் தைரியமாய்த் துணிவுகொண்டுவந்து நின்று என்னைவரச்சொல்லுகிறீர்கள் உங்கள்புத்தி கெட்டாற்போலிருக்கிறது பாருங்கள் என்னுடைய ஆண்மையை யென்று பின்னுஞ்சொல்லுகிறார்—எ-று. (யஎ)

எத்திசையுலகுக்கெல்லா மேமனென்றொருவனுண்டே
லுற்றவன்சாதியென்ன வொழுங்கென்னவூர்பேரென்ன

மற்றவன்றனக்குமேவற் றூதராம்வஞ்சருண்டோ
குற்றமாயென்மேல்வந்த குருடரோகேண்மினின்னம்.

(இ-ள்.) எந்தெந்தத்திசைகளிலுள்ள வுலகங்களுக்கெல்லா மேமனென்றொருவனுண்டானால் அப்படிப்பட்டவனுடைய சாதியென்ன அவன் நடக்கையென்ன ஊரென்ன பேரென்ன அவனுக்கும் ஏவல்செய்கிறதூதரான வஞ்சகருமுண்டோ-வீணான தோஷமுண்டாகும்படி என்மேல் வந்தகுருடரோ கேளுங்க ளின்னஞ்சொல்லுகிறேன்—எ-று. (௧௮)

பரமனாரடியாரென்னும் பயமனுகாமற்சண்ட
னாமுடனுங்கடம்மை யேவினனென்மேலுற்ற
தரமதைநொய்யவெட்டி நெஞ்சையுந்தறித்துநாவை
விரைவுடன்பிடுங்காவிட்டால் விமலனாரடியேனல்லேன்.

(இ-ள்.) பரமசிவனுடைய அடியாரென்கிற பயமில்லாமல் யமனானவன் உங்களை யென்மேலேவினன்-அப்படி அவன்அனுப்பின அவனது நெஞ்சுரத்தைச் சதைசதையாக வெட்டிப்பிளந்து அவன் நாக்கையும் விரைவிலே பிடுங்குகிறேன் அப்படி நான்செய்யேனானால் சிவனடியானல்லேனாவேன்—எ-று. (௧௯)

வம்பரோநீங்களிந்த மறலிசொற்கேட்டென்மேலே
வெம்பியேவந்தீரானால் வெந்தழனீறதாகத்
தம்பிடச்செய்வேன்றூத ராகையாற்சகித்துவிட்டேன்
கெம்பியென்முன்னில்லாமற் கெதியுடனேகுமென்றார்.

(இ-ள்.) ஓ வம்பர்களே நீங்கள் அந்த எமன்சொன்ன சொல்லைக்கேட்டு என்மேற்கோபங்கொண்டு வருவீர்களானால் வெவ்விய கோபாக்கினியினாலே சாம்பலாக வுதிரும்படிபண்ணுவேன் நீங்கள் தூதரானபடியினாலே பொறுத்து உங்களைவிட்டேன் - ஆனபடியால் தலையெடுப்பாய் என்முன்னே நில்லாம லோடிப்போங்கள் நல்லகதி பெறுவீர்களென்று சொன்னார்—எ-று. (௨௰)

அந்தணச்சிறுவனிவ்வா றறைந்திடத்தூதர்கேட்டு
வெந்தழல்போலச்சித்தம் வெகுண்டுமார்ப்பரித்துநேரே
வந்துபற்கடித்துப்பாச வலைதனைச்சூழப்போட்டு
நந்தலில்லாதபாலன் றனைப்பார்த்துநவிலலுற்றார்.

(இ-ள்.) அந்தப்பிராமணப்பிள்ளை இப்படிச்சொல்ல தூதர்கள்கேட்டு-வெவ்விதான நெருப்பைப்போல் மனம்கொதித்து ஆரவாரஞ்செய்து முன்னேவந்து பல்லைக்கடித்துப் பாசத்தையும் வலையையுஞ்சுற்றிவீசி-யாதொரு தோஷமுமில்லாத பிள்ளையைப்பார்த்துச்சொல்லுகிறார்கள்()

மதிப்பிலா.தெங்கடம்மை வைதுபின்மறலிதன்னை
யெதிர்ப்பதாய்ப்பேசவந்தா யென்னடாபலவானாகக்

குதித்துநீசொன்னசொல்லுங் கோபமுங்கணநேரத்தில்
மிதித்தியாங்கொல்லாவிட்டால் வீரமென்வெற்றியென்ன.

(இ-ள்.) எவ்வளவும் சட்டைபண்ணும லெங்களை வைததுமல்லாமல் யமனையும் கூட எதிர்த்துப்பேசினுய்-என்னேடா நீ பலமுள்ளவன்போல்-குதித்துக்குதித்து நீ சொன்னவார்த்தையும் உன் கோபமும் ஒரு க்ஷணப்பொழுதிலே உன்னை உதைத்து நாங்கள் கொல்லாவிட்டால் எங்கள் வீரந்தானென்ன வெற்றிதானென்ன—எ-று. (உஉ)

வாய்மதம்பேசிச்சற்று மனத்தினிற்பயமில்லாமற்
றுயதிவலியன்போலச்சண்டனைநிந்தைகூர்ந்தாய்
வாயமாயுன்னையின்னே மழுவினல்வெட்டிநாங்கள்
மாயவேசெய்யாவிட்டால் மறலியின்மகிமையென்ன.

(இ-ள்.) உன்வாயினலே வாய்மதம்பேசிக் கொஞ்சமாயினும் உன்மனத்திலே பயமில்லாமல் தாண்டிக்குதித்து அதிக பலவான்போல யமனைநிந்தைசொல்லினுய் ஆகையாலுன்னை உபாயமாக இப்பொழுதே இக்தக்குடாரியினலேவெட்டி நாங்களுன்னைக் கொல்லாவிட்டால் எங்கள் யமதருமராஜனுடையமகிமை எப்படிமுடிவதாகும்—எ-று. (உங)

இழிகுலச்சிறுவாவெங்களெமனையுமிகழ்ந்துபேசி
நழுவினல்விடுவதில்லை நாங்களேயுனைப்பிடித்தின்
றழியவேயுயிரைவாங்கி யம்மியிலரைத்துப்பொல்லா
வெழுநரகதனிற்றள்ளி விடுவமென்றிரைந்துசொன்னர்.

(இ-ள்.)அடாதாழ்ந்தகுலத்துப்பையலே எங்களையும்எமனையும் இகழ்ச்சியாய்ப்பேசி நழுவினதினலே நாங்கள்விடமாட்டோம் நாங்களேஉன் உயிரைப்பிடித்துக்கொன்று அம்மியில்வைத்து அரைத்து ஏழுநரகத்திலே தள்ளிவிடுகிறேமென்று இரைந்துசொன்னர்கள்—எ-று. (உச)

வஞ்சகருரைத்துப்பொல்லா மாயையாலிருளாயெங்கு
மிஞ்சிடவகோரமான மேனியைக்காட்டிவேதன்
அஞ்சிடப்பற்கடித்தே யதட்டிடமெய்கள்சோர்ந்து
துஞ்சினவன்போல்வீழ்ந்து சொல்லுவான்சோதிதாளில்.

(இ-ள்.) அப்படி அந்த யமவஞ்சகர்கள்சொல்லிப் பொல்லாத மாயையினலே எங்குமிருட்டா யதிகமாகப்பயத்தைத்தருவதான தங்கள் சொருபத்தைக்காட்டி மார்க்கண்டர் பயப்படப் பல்லைக்கடித்து அதட்டவே மார்க்கண்டர் உடம்பெல்லாஞ்சோர்ந்து இறந்தவர்போலாகிசுவாமிகாலிலேபோய் வீழ்ந்துசொல்லுகிறர்—எ-று. (உரு)

வாரணத்தாடைபூண்ட மலைமகள்பாகாபோற்றி
காரணப்பொருளேஞானக் கனல்விழியவனேபோற்றி
தாரணிப்பொருளாயன்பர் சமயசஞ்சீவிபோற்றி
பேரணிகொடியாய்போற்றி யென்னையாளுடையாய்போற்றி.

(இ-ள்.) ஆனைத்தோலை வஸ்திரமாகக்கொண்ட கடவுளே பார்வதிசமேதரோபோற்றி முதற்காரணப்பொருளே ஞானமாகியநெற்றிக்கண்ணுள்ளவரோபோற்றி-உலகத்துள்ள பொருள்களெல்லாமாகி அடியார்களுக்குச் சமய சஞ்சீவியானவரோபோற்றி-அழகைக்கொண்ட இடபவாகனக்கடவுளேபோற்றி-என்னை அடிமையாக வுடையவரோபோற்றி— எ-று.

கங்கையைத்தரித்தாய்போற்றி கறைமிடறுடையாய்போற்றி
அங்கியைத்தரித்தாய்போற்றி யரவமாலிகையாய்போற்றி
செங்கண்மாலயனுந்தேடுந் தேவனேசிவனேபோற்றி
யெங்கணாயகனேபோற்றி யெழிற்கடவூராபோற்றி.

(இ-ள்.) கங்கையைத்தரித்தவரோபோற்றி நீலகண்டத்தை யுடையவரோபோற்றி - மழுவையேந்தினவரோபோற்றி - பாம்பாபரணரோபோற்றி - சிவந்தகண்களுள்ள விஷ்ணுவும் பிரமாவுந் தேடத்தக்க தெய்வமே சிவனேபோற்றி- எங்கள்கடவுளேபோற்றி-திருக்கடவூராபோற்றி—எ-று.()

அடிமலர்பணிந்துபூசை யருச்சனைபுரிந்துநாயேன்
வடிவுடனுனதுநாமம் வழுத்தியேநிற்கும்போது
கடுகியேயமதூத ரென்னையுங்கலங்கச்செய்து
துடியுடனுயிரைவாங்கச் சூழ்ந்தனரென்றகாலை.

(இ-ள்.) சுவாமி உமது பாதாரவிந்தங்களைவணங்கி அருச்சனைசெய்து அடியேன் உம்முடைய சுயரூபத்தைத் தியானித்து உமது பெயரைச் சொல்லிக்கொண்டுநிற்கிறபோது விரைவுடன் யமதூதர்கள் என்னை அந்தப்பூசையினின்றுங் கலங்கும்படிபண்ணி ஆத்திரத்துடனேஎன்னுயிரைப் பிடிக்கவந்து சூழ்ந்தார்களென்றவுடனே—எ-று.　(உஅ)

விடையவனெதிரேவந்து விளம்புவார்பாலாநின்னைத்
தடைசெயுமெமதூதர் தமக்குநீபயப்படாமல்
மடையருக்கெதிரியாக வுரையெனவள்ளல்தேற்றி
விடையொடுமறைந்தகாலை வேதியனதிர்ந்துசொல்வான்.

(இ-ள்.) இடபவாகனக்கடவுள் முன்னேவந்துசொல்லுகிறார்-அடா குழந்தாய் உன்னைத்தடைபண்ணுகிற யமதூதர்களுக்கு நீபயப்படாமல் அந்தப் புத்தியீனர்களுக்கு முன்னே நின்று அவர்கள் சொல்லுக்குச் சொல் சொல்லென்று மனந்தேறச் சொல்லிவிட்டு இடபவாகனத்துடனே மறைந்தபோது பிராமணப்பிள்ளையான மார்க்கண்டர் அதிர்ந்து சொல்லுகிறார்—எ-று.　(உக)

பாவிகாளேமதூதப் பயல்களேயென்மேல்வந்து
தாவவும்வசமோபாரீர் க்ஷணத்துளேயெரித்துவுங்க
ளாவியைக்கவர்வேனென்ன வந்தணன்பரமனுரை
மேவியபூசைசெய்து விளங்கியவிபூதிதன்னை.

(இ-ள்.) அடேபாவிகளே யமதூதப்பையல்களே என்மேல்வந்துதாண்டிக்குதிக்கவும் கூடுமோ பாருங்கள் ஒருக்ஷணத்துக்குள்ளே உங்களுயிரை வாங்குகிறேனென்று மார்க்கண்டர் பரமசிவனைத்தியானித்துப் பூசைபண்ணிவிளங்குகின்ற விபூதியை—எ-று. (ரு-ய)

அஞ்செழுத்தோதியள்ளி யந்தகன்றூதர்தம்மேல்
விஞ்சிடவெறிந்தகாலை வெந்தழலாகித்தூண்டு
பஞ்சுபோலேமதூதர் பறந்திடக்குளவிபாம்பாய்
விஞ்சிவந்திடாமற்கொட்டி வேதனைப்படுத்தவோடி.

(இ-ள்.) அள்ளி பஞ்சாக்ஷரத்தைச்சொல்லி யமதூதர்கள்மேலே அதிகமாக எறிந்தபோது அந்தவிபூதி வெவ்வியநெருப்பாகத்தூண்டிபஞ்சுபோலெமதூதர்கள் பறந்துபோகப்பண்ணி மிஞ்சி மேல்வராமல் குளவியாகக்கொட்டி பாம்பாகக்கடித்து அவர்களைத்துன்பப்படுத்த அவர்கள் பயங்கொண்டோடி—எ-று. (ரு-க)

துடிதுடித்தகன்றுநின்று தூதரும்வெருவிமின்ன
லிடியெனவார்ப்பரித்து மெயின்மிசைநின்றுகொண்டு
படிமிசைமறையோன்பூசை மகிமையைப்பாராயென்றுங்
கடுகியபின்னும்வந்து கலந்தனருலர்ந்தநாவார்.

(இ-ள்.) துடிதுடித்துத் தூரத்தேபோய்நின்று யமதூதர்கள் பயந்து மின்னலிடிபோலாரவாரித்து மதில்மேலேறிநின்று உலகத்திலே பிராமணன் சிவபூசைமகிமையைப் பாருங்களென்று விரைவிலேவந்து பின்னுநாவுலர்ந்தவர்களாய்க் கூடினார்கள்—எ-று. (ரு-உ)

சூழ்ந்தவர்மூடிக்கொண்டுசுருதியாய்பயனைப்பார்த்து
வாழ்ந்திடலாமென்றெண்ணம் வைத்திடும்பாலாநீயுந்
தாழ்ந்திடுஞ்சடையோன்பூசைப்பலத்தினாற்றள்ளிச்சொன்னாய்
போழ்ந்துனைக்கொடுபோதுன்றன் பூசையெங்களையென்செய்யும்.

(இ-ள்.) அப்படி அந்தயமதூதர்கள்வந்துசுற்றிக் கவிந்துநின்று வேதமந்திரஞ்சொல்லிக்கொண்டிருக்கிற மார்க்கண்டரைப்பார்த்து நீ இன்னும் உயிரோடிருக்கலாமென் றெண்ணங்கொண்டிருக்கிற அடா சிறுபிள்ளாய் நீ நீண்டசடையையுடையவன் பூசைப்பலத்தினாலே எங்களைத் தடுத்துப்பேசுகிறாய் உன்னைப் பிளந்துகொன்று உன்னுயிரைக்கொண்டு போகிறபோது உன்சிவபூசை எங்களை யென்னசெய்யும்—எ-று. (ரு-ரு)

பூசையுந்தவமுமுன்றன் புண்ணியப்பொருளுமெல்லாம்
நாசமாய்ப்போகச்செய்வோ மதற்காகநாதன்வந்தால்
ஈசனுக்கேற்றவார்த்தை யியம்பியேயடர்ந்துபாசம்
வீசியேபிடித்துக்கொண்டு யமபுரம்புகுவோம்பாராய்.

(இ-ள்.) உன்னுடைய சிவபூசையும் சிவபுண்ணியமுதலான தவப்பலனெல்லாம் அழியும்படிசெய்வோம் அதற்காகச் சிவன்வந்தால் அந்த

ச்சிவனுக்கேற்ற வார்த்தைகள்சொல்லி நெருங்கிப் பாசக்கயிற்றைவீசி உன்னுயிரைப் பிடித்துக்கொண்டு யமலோகம் போகிறோம்பார்—எ-று.

என்றவரடர்ந்தடர்ந்தே யேகமாயிருள்போற்சூழ
நின்றுமார்க்கண்டன்முக்க ணிமலனைப்பூசைசெய்து
துன்றுநீறள்ளிவீசச் சூழிருள்வலையைச்சுட்டே
யன்றெமதூதர்தம்மை யனல்கொளுத்திட்டதன்றே.

(இ-ள்.) என்றுசொல்லி அந்த யமதூதர்கள் நெருங்கிநெருங்கி ஒன்றாயிருள்போற்சூழ- அப்போது அவர்கள்முன்னேநின்று மார்க்கண்டர் திரிநேத்திரதாரியைப்பூசைபண்ணி உதிர்கிற விபூதியை அள்ளிச் சுற்றிலும்வீச அவ்விபூதி மார்க்கண்டரைமூடின இருள்வலையைச்சுட்டு அப்போதே யமதூதர்களையும் சுவாலித்துச்சுட்டது—எ-று. (௯௫)

அலறியேயகலவோடி யந்தகன்றூதர்சொல்வா
ரிலகியபாலாநாங்க ளியமனோடுரைத்துன்றன்னை
மலையவேயுயிரைநீக்கிக் கொண்டுபோய்வருத்தஞ்செய்வோம்
பலமதாயிருடாவென்று பாதகரகன்றுபோனார்.

(இ-ள்.) அப்போது அந்தயமதூதர்கள் அலறிப்பயந்து தூரவோடிப்போய்நின்று சொல்லுகிறார்கள், இன்னம் சாவாதிருக்கிற சிறுபையலே நாங்களிப்போதேபோய் இயமனுடனேசொல்லி உன்னை அடித்துக்கொன்று உயிரை உன்னுடலினின்றுநீக்கிக்கொண்டுபோய் உன்னைமிகவுந்துன்பப்படுத்துவோம் நீஇங்கே கெட்டியாயிருடாவென்று சொல்லி அந்தப்பாதகத்துக்கு வருத்தஞ்செய்வோர்கள் தூரப்போனார்கள்-எ-று.

இவன்றனைப்பிடிப்பதற்கோ வெளிதல்லகொடூரஞ்செய்ய
அவன்மிசைநெருங்கினோமேலரன்பலனதிகமுண்டு
சிவகணம்வந்துநம்மைச் சிரச்சேதஞ்செய்வர்சென்று
தவனனார்பாலன்பக்கஞ் சார்துமென்றெழுந்துபோனார்.

(இ-ள்.) தூரப்போய் இவனைப்பிடிக்கவேணுமானால் நம்மா லெளிதிலேமுடியாது அவன்மேலே நாம்போவோமேயானால் அவனுக்குச் சிவபலன் அதிகமாயிருக்கிறது சிவகணங்கள் நம்முடைய தலைகளைவந்து அறுத்துவிடுவார்கள் ஆகையால் சூரியகுமாரனான யமனிடத்துக்குப் போய்ச்சொல்லுவோமென்று விலகிப்போனார்கள்—எ-று. (௯௭)

கரங்களைத்தலைமேற்கூப்பிக் கதறியேயபயமென்று
இரந்தவர்மறலிமுன்வீழ்ந் திணையடிசரணஞ்செய்து
வரன்றருமுயிரையெல்லாம்வாங்கியுன்பக்கஞ்சேர்க்குந்
துரந்தராவெங்கடம்மைப் புரந்திடுஞ்சூராகேண்மின்.

(இ-ள்.) அப்படிப்போய்-கைகளைத்தலைமேற் குவித்துக்கொண்டே அபயம் அபயமென்று கெஞ்சினவர்களாய் யமன்முன்னேவிழுந்து, இரண்

பொதங்களையும் பிடித்துக்கொண்டு கிடந்து ஐயா பிரமா சிருஷ்டிக்கும் ஜீவர்களையெல்லாம் அபகரித்து உம்முடையவசமாகக்கொண்டருளி எங்களை எப்போதும் ரக்ஷிப்பதான வீரசூரதுரந்தராகேளும்—எ-று. ()

உத்தரப்படியேநாங்க டிருக்கடவூர்புகுந்து
முத்தியுளாளன்றன்னை முடுகியேயணுகுங்காலை
பத்தியுள்ளவன்சிவத்தைப் பரவியமகிமைதீயாய்ச்
சுத்தியேயணுகொட்டாமற் சுட்டதாலகலநின்று.

(இ-ள.) சுவாமி உம்முடையஉத்தரவின்படியே நாங்கள் திருக்கடவூருக்குள்ளேபோய் மூன்று நெருப்பும்வளர்த்து அதனுள்ளே நிற்கிறவனை நெருங்கிப்போம்போது மிகுந்தபத்தியுடனே அவன் சிவனைத்துதித்துக்கொண்டிருக்கிற மகிமையானது நெருப்பாய்வந்து நாங்கள் சூழ்ந்துசெல்லவொட்டாமல் சுட்டபடியினாலே நாங்கள் தூரவந்துநின்று. ()

நூலனைச்சினந்துநோக்கி வாவென்நுவலுங்காலை
ஆலகாலத்தைநேராயவன்வெகுண்டெங்களைப்பார்த்
தோலமிட்டோடச்செய்து வுன்னையும்வைதானையா
ஏலவார்குழலிபாகன் பூசனையியல்பினாலே.

(இ-ள) அந்தத்தியானஞ்செய்துகொண்டிருக்கிறவனைக் கோபங்கொண்டுபார்த்து வாடாவென்று கூப்பிடும்போது அவன் விஷத்துக்கொப்பாக எங்களைக் கோபங்கொண்டு பார்த்து விபூதியாலே நாங்கள் கதறிக்கொண்டோடி வரும்படிபண்ணி உம்மையுந் திட்டினான் சுவாமி அந்தப் பார்வதிசமேதன் பூசைப்பலத்தினாலே—எ-று. (சுயி)

பின்னையுமவனைச்சூழ்ந்தே பிடிக்கலாமென்றுபோனோம்
கன்னிபாகன்றனீற்றைக் கடுமையாயெறிந்தானையா
அன்னதுமழலதாகி யலங்கோலமாகச்சுட்டு
வின்னமாய்விரட்டவங்கே வேதனையடரொட்டாமல்.

(இ-ள.) நாங்கள் மறுபடியும் அவனைச்சூழ்ந்து பிடிக்கலாமென்று போனோம் அவன் சிவனது திருநீற்றை எங்கள்மேலெறிந்தான்-அந்தத் திருநீறும் நெருப்பாய்வந்து எங்களை அலைச்சல்படும்படி சுட்டதுமல்லாமல் பலபல வாகத்துரத்த அதனாலங்கே நெருப்புவேதனை எங்களைக் கிட்டவொட்டாமல் செய்தாலும்—எ-று. (சுக)

எங்களாலானமட்டும் அந்தணனுயிரையீர்ப்ப
சங்கைபில்லாவுபாய சாதகஞ்செய்தோமையா
கங்கையைத்தரித்தோன்பூசைக்கடுமையாலெமைத்துரத்தப்
பங்கமேபட்டுவந்தோம் பார்த்திடீரொந்தங்கோவே.

(இ-ள.) எங்களாலே கூடியஅளவும் அந்தப் பிராமணப்பையனுயிரையிழுக்கும்படி அளவில்லாத உபாயசாதனங்களெல்லாம் பண்ணினோ

ம் ஐயா சிவபூசைமகிமையினாலே எங்களைத்துரத்த அபசயப்பட்டு ஓடி வந்தோம் எங்களுடம்மைப்பாரும் தருமராஜனே—எ-று. (சுஉ)

உலகினிலுயிரையெல்லா மூன்னுடையேவலாலே
மலைவிலாநாங்கள்கொண்டு வந்தனமிவன்கிட்டப்போய்
நலமொழிச்சிறுவன்செய்யு நடத்தையுமொழுக்கமும்பார்த்
தலகிலாத்துயரமுற்றே மவனைப்போலெங்குமில்லை.

(இ-ள்.) உம்முடைய உத்தரவினாலே உலகத்திலேயுள்ள வுயிர்களை யெல்லாம் யாதொருதடையுமில்லாமல் நாங்கள்கொண்டுவந்தோம் இவ னிடத்திலேபோய் நல்லவசனங்களையுடைய அந்தச் சிறுபிள்ளையினது நடத்தையும் ஒழுக்கத்தையும்பார்த்து அளவில்லாத துன்பத்தையடை ந்தோம் அந்தப்பிள்ளையைப்போல் நாங்களெங்குமொருவரைக்கண்டறி யோம்—எ-று. (சுங)

மாயவன்பிரமனிந்திரன் மதிகதிரிரவிருத்திரன்
தூயமாயேசன்றுற்கை சதாசிவன்சுரர்களாலு
மாயராக்ஷதர்களாலும் வடிவுளமுருகனாலு
மாயுநூலாளன்றன்னை யடர்ந்திடக்கூடாதன்றே.

(இ-ள்.) விஷ்ணு பிரமா இந்திரன் சந்திரன் ஒளியையுடைய சூரியன் உருத்திரன் நல்லமகேச்சுரன் துர்க்கை சதாசிவன்முதலான தேவர்களா லும், மாயைசெய்கிற ராக்ஷதர்களாலும், அழகுள்ளமுருகவேளாலும், ஆய்ந்தநூல்வல்லவனை அந்தப்பையனை நெருங்கக்கூடாது-எ-று. (சுச)

மூடர்கள்மூகையாலுமுருடர்கள்நீலியாலுஞ்
சூடகத்தலகையாலுஞ்சுழற்றுநெட்டூரியாலும்
வேடர்கிங்கிலியராலுமிக்கபூதங்களாலு
மாட்டாவுன்றனாலுஞ்சிறுவனையணுகலாமோ.

(இ-ள்.) மூடர்களாலும் ஊமைகளாலு முருடர் நீலிகளாலும் கங்கண ங்களணிந்த பசாசுகளாலும் சுழற்றுகிற நெட்டூரிகளாலும் வேடர் கிங்கி லியர்களாலு மிகுந்தபூதங்களாலும் சுவாமி உம்மாலும் அந்தச் சிறுபை யனை நெருங்கக்கூடாது—எ-று. (சுரு)

மழுவொடுசூலநேமிவச்சிரமிருப்புலக்கை
கழுமுளைதண்டுகுந்தங்கப்பணங்காலபாசங்
கொழுவுடனீட்டியெஃகங்கோடாலியத்திரங்கள்
எதுகளினாலுமந்தஇளஞ்சிறுபையல்வீயான்.

(இ-ள்.) மழு - சூலம்-சக்கரம்-வச்சிராயுதம்-இருப்புலக்கை-கழு-மு ளை-தண்டு - கைவேல் - நெடுவேல்-கப்பணம்-காலபாசம்-கொழு-ஈட்டி- சிறுசவளம்-கோடாலி-அம்புகள்-முதலான எதனாலும் அந்த இளம்பை யல் சாவான்—எ-று. (சுசா)

உம்மைப்போனூறுகோடி யந்தகனுற்றிட்டாலு
மெம்மைப்போலனந்தங்கோடி தூதர்களெதிரிட்டாலும்
வெம்மையாயுமதுபக்க மிருக்கிறவெவர்விட்டாலும்
கம்மிடவெவர்சென்றாலும் வேதனைக்கவொண்ணுதே.

(இ-ள்.) உம்மைப்போல் நூறுகோடி யமதருமராஜர்கள் போனாலும் எங்களைப்போல் அனந்தங்கோடி தூதர்கள் அவன்முன்னே போனாலும் இன்னம்வெம்மையுடன் உம்மிடத்திலிருக்கிற எவர்களைவிட்டாலும் முழுதுநெருக்கமாக யார்போனாலும் அந்தமார்க்கண்டனைப் பிடிக்கப்படாது—எ-று. (சுஎ)

ஈதுரைத்திறைஞ்சித்தூத ரேமனைப்புகழ்ந்துமங்கே
தூதருமுகங்கள்நாணி யந்தகன்சொல்லுக்கஞ்சிப்
பாதகரிருந்தாரப்பா னடந்ததைப்படிவர்கேட்கச்
சூதமாமுனிமகிழ்ந்து சொன்னதைச்சொல்லலுற்றும்.

(இ-ள்.) இதைச்சொல்லிவணங்கித் தூதர்கள் யமனைப்புகழ்ந்து அவ்விடத்தே முகங்கள்கவிழ்ந்து அந்தயமன் சொல்லுக்குப்பயப்பட்டுப்பேசாமனின்றார்கள் அப்பால் நடந்ததை அந்த முனிவர்கள் கேட்கும்படி சூதபுராணிகர் சந்தோஷித்துச் சொன்னதை யாம் இனிச் சொல்லுகிறோம்—எ-று. (சுஅ)

யமன்தூதரைவிடுத்தசருக்கம்-முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௩௩௮.

# நீலிகள் வருகிற சருக்கம்.

அந்தணன்றன்மேற்றூத ரடர்ந்தனரிழைத்தவாற்றைச்
சிந்தைசெய்துரைத்தோமிப்பான் மறலியோன்சிவந்துபாவ
நிந்தைசேர்கொடுமைபூண்ட நீலிகடம்மையேவ
வந்தவர்நடத்துமாறு மறையவன்செயலுஞ்சொல்வாம்.

(இ-ள்.) அந்தமார்க்கண்டர்மேலே தூதர்கள்நெருங்கி அவர்கள்செய்தவகைகளை எண்ணிச்சொன்னோம் இனி-அந்த எமனானவன் கோபங்கொண்டு பாவமும் பழிபுஞ்செய்கிற கொடுமைகொண்ட நீலிகளை அனுப்ப அவர்கள்வந்து நடத்தினதையும் மார்க்கண்டர்செய்கையும் சொல்லுகிறோம்—எ-று. (க)

வேறு.

கொடியதூதர்கள்மொழிந்ததைச்செவியினிற்கொண்டு
வடவைத்தீயெனக்கொதித்துடன்மறலியுமெழுந்து
முடிவுநாளிருளிடியெனக்குமுறிவாய்முழங்கிக்
கடியதூதரைமுனிந்தனன்கண்ணழலுதிர.

(இ-ள்.) அப்படி அந்தக்கொடுமையான தூதர்கள்சொன்னதைக் காதுகளிலேகொண்டு வடவாக்கினிபோற்கொதித்து உடனே யமனெழுந்திருந்து முடிவுகாலத்திருளிலே யிடிக்கிற இடிபோற்குமுறி வாயால்முழக்கங்கொண்டு அந்தக்கடுமையான தூதர்களைப்பார்த்துக் கண்களிலே நெருப்புப்பொறிசிந்தக் கோபித்தான்—எ-று. (உ)

மெய்யெலாமயிர்சிலிர்த்திடவேர்வைகள்பொடிக்க
வெய்யமீசைகள்துடித்திடவீரர்கணடுங்கச்
செய்யவாயிதழ்படபடென்றுடிடச்சினந்து
கைகள்கொட்டியேபற்கடித்தவனகைத்திடுங்கால்.

(இ-ள்.) உடம்பெல்லாம் உரோமங்கள்சிலிர்க்க வேர்வைகள் பொடிப்பொடியாயுண்டாக வெவ்விதான மீசைகள்துடிக்க-அருகிலுள்ள வீரர்களெல்லாம் நடுங்க-சிவந்தவாயினிதழ் படபடென்றுடக் கோபங்கொண்டு கைகளைக்கொட்டிப் பல்லைக்கடித்து அவன் சிரிக்கும்போது-எ-று.

காளிராட்சதர்கணங்களுநடுங்கினர்கடிய
கூளிமாதருமலகையும்பதறினர்கொடிய
வாளின்வீரருந்துர்க்கையுமற்றுளகுழுவும்
மூளிபூதமுங்கவந்தமுமொடுங்கினமுற்றும்.

(இ-ள்.) காளியும்-ராக்ஷதகூட்டங்களும்பயந்தார்கள் கடியகூளிகளும் இடாகினிகளும்-பசாசுகளும்-ஆத்திரப்பட்டார்கள், கொடுமையான வாளாயுதங்களையுடைய வீரர்களும்-துர்க்கையும்-மற்றுமுண்டான கூட்டங்களும் மூளுதலையுடைய பூதங்களும் - கவந்தங்களும் - எல்லாமொடுங்கலாயின—எ-று. (ச)

அன்னவேளையிற்சண்டனுமார்ப்பரித்தெழுந்து
என்னைவைததோர்வேதியச்சிறுபையலென்றே
டன்னவனெதிராவனேவவனைநானேகிச்
சொன்னவாயையுமுயிரையுந்தொலைந்திடத்துணிப்பேன்.

(இ-ள்.) அப்போது யமனுனவன் ஆரவாரித்தெழுந்து என்னை வைதவனுன பிராமணச்சிறுபைய லென்னுடனே அவன் எதிராகத்தக்கவனே-அவனிடத்திலே நானேபோய் என்னை வைத வாயையுங்கிழித்து உயிரையும் போக்குகிறேன்—எ-று. (ரு)

பூசைசெய்துறும்பையலையிக்கணம்புகுந்து
பாசம்வீசியேகொணர்குவேனவனைக்கைபற்றில்
ஈசனாரதற்கிடர்சொல்லுவாரொன்னிலென்னை
மோசஞ்செய்கிறதுமக்கருளோவெனமொழிவேன்.

(இ-ள்.) அங்கே பூசை செய்துகொண்டிருக்கிற பையலை இந்தக்ஷணமே நான்போய் பாசத்தைவீசிக் கட்டிக்கொண்டுவருகிறேன் அதற்குச்

சிவன் தடைசொல்லுவாரானால் என்னை நீரிப்படி மோசம்பண்ணுகிறது உமக்கு என்மேலுள்ள தயவோவென்று கேட்கிறேன்—எ-று. (௬)

என்றுசண்டனார்முனிந்தெழுவேளையிலெதிரா
யன்றுநீலிகள்மூவருமடியிணையிறைஞ்சி
வென்றியேமனேயவனிடமெங்களைவிடுத்தாற்
கொன்றவன்றனைச்சடுதியிற்கொண்டுவந்திடுவோம்.

(இ-ள்.) என்றுசொல்லி யமதருமராஜன் கோபித்து எழுகிறபோது அங்கே முன்னேநின்ற நீலிகள் மூவரும் யமனுடைய பாதங்களை வணங்கி-ஓ-ஜயங்கொண்ட யமதருமராஜனே அவனிடத்திலே எங்களை அனுப்பினால் அவனைக்கொன்று அவனுயிரை விரைவிலே கொண்டுவருகிறோம்—எ-று. (௭)

நிமைப்பொழுதினினாலனைக்கொன்றுமும்மிடம்வந்
துமைப்பணிந்திடாநீலிகள்வீரமுமுளதோ
அமைப்புடன்விடையருளெனவவர்களும்பணியக்
கமைப்பிலாயமனவர்களைப்பார்த்தெதிர்கழறும்.

(இ-ள்.) ஒருக்ஷணப்பொழுதிலே அந்தச் சிவத்தியானமுள்ள பையனைக்கொன்று உம்மிடம் கொண்டுவந்து வணங்காதநீலிகளுக்கு இனிவீரமென்பதுமுண்டா உமது சம்மதத்துடன் எங்களுக்கு உத்தரவுகொடுமென்று அந்த மூவரும்வணங்க அதற்குப் பொறுமையில்லாத யமன் அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறான்—எ-று. (௮)

தூதர்போகியுந்தோற்பிலாவேதனைநீங்க
ளேதுசெய்விர்களவனிடநெருங்கவுமெளிதோ
தூதர்தம்மிலுமிகவலியுடையிரோநீவி
ரோதுகென்னலும்பாவநீலியர்களுமுரைப்பார்.

(இ-ள்.) எனதுதூதர்கள்போயும் அவர்களுக்கடங்காத இந்தப்பிராமணப்பையனை நீங்க ளென்னபண்ணுவீர்கள் அவனிடத்திலே நீங்கள்நெருங்க எளிதா தூதர்களைப்பார்க்கிலு மிகப்பலமுள்ளவர்களோ நீங்கள் சொல்லுங்களென்று கேட்க அந்தப்பாவநீலிகள் சொல்லுகிறார்கள். ()

எத்தலங்களுள்ளோரையுமிமையவர்தமையு
மத்தனையுநெடியமாலயனையுமயங்கச்
சுத்தவஞ்சனைச்சூழ்ச்சியால்மாயையாற்றொடக்கிச்
சத்துவங்கெடவதைத்துயிர்கணத்தினிற்றருவோம்.

(இ-ள்.) எந்தவூரிலுள்ளவர்களையும் தேவர்களையும் சிவனையும் நெடியமாலையும் பிரமாவையும் மயங்கும்படியான மெய்யாய்த்தோற்றுகிறவஞ்சகவுபாயத்தினாலும் மாயையினாலும் அகப்படப்பண்ணி அவன்பலமடங்கக் கொன்று அவனுயிரைக் கணப்பொழுதுள்ளே கொண்டு வருவோம்—எ-று. (௰)

எங்கணுயனேமறலியேயமபுரத்தரசே
எங்கள்மாயவஞ்சனைகளுங்கொலைபொய்யுமிடரு
மெங்குள்ளோர்களுமறிந்திடாரேமனேயும்மா
லெங்கள்சூழ்ச்சியுங்கருமமுமறிந்திடவியல்போ.

(இ-ள்.) எங்களாண்டவனே யமதருமராஜனே யமலோகத்துக்கு ராஜாவே எங்களுடைய மாயவஞ்சனையும் கொலைசெய்தலும்பொய்சொல்லுதலும் துன்பஞ்செய்தலும் எங்கள் தந்திரமும் மற்றுமுள்ள எல்லாக் காரியங்களும் உம்மாலறியத்தக்கதல்ல இன்னம் எந்த வுலகத்துள்ளவர்களும் கண்டுகொள்ளமாட்டார்கள்—எ-று. (ரு௧)

ஆகையாற்கடவூரிருபிறப்புளானவன்மேற்
போகவெங்களைவிடையருளாயெனப்புகல
வாகைபெற்றிடுசண்டனும்வம்புநீலிகளைத்
தாகமோடவன்சாற்றுவான்மற்றவர்தமக்கு.

(இ-ள்.) ஆனபடியினாலே திருக்கடவூரிலிருக்கிற அந்தப் பிராமணன் மேலேபோக எங்களுக்கு உத்தரவுகொடுத்தருளுமென்று கேட்க அந்த நீலிகளைப்பார்த்து எங்கும் வெற்றிகொள்ளுகிற யமனானவன் அதிபிரியத்துடனே அந்தவம்பான நீலிகளுக்குச் சொல்லுகிறான்—எ-று. (ரு௨)

நன்றுநன்றெனவுங்களினடத்தையுஞ்சமர்த்து
மின்றுமென்முனேயியம்பியமொழிதவறுமற்
சென்றுபூமியிற்றிருக்கடவூரினின்மேவி
அன்றுநற்றொழிலாளனை அணுகியேயடர்ந்து.

(இ-ள்.) உங்களுடைய நடக்கையும் சமர்த்தும் மிக்வு நல்லதே முன்போலின்றும் என்முன்னே நீங்கள் சொன்னசொல் தப்பாதபடி பூலோகத்துக்குப்போய் திருக்கடவூரிலே நீங்கள்போன அன்றுதானே அந்தநல்லகிரியைகள் செய்துகொண்டிருக்கிற பையனை அடுத்து நெருங்கி-எ-று.

பூத்தநாயகன்பூசைபண்ணுமனிர்குலைத்து
மாத்திரைப்பொழுதவனையும்வதைத்துயிர்வாங்கி
நாற்றமாகியுவுடலையுநரிக்கதைவிருந்தா
யேற்றிடச்செய்துவாருமென்றுரைத்தனனெமனே.

(இ-ள்.) எல்லாஞ்செய்த கடவுள் பூசைபண்ணவொட்டாமல் அழித்து ஒருக்ஷணப்பொழுதிலே அவனைக்கொன்று உயிரைப்பிடித்து அவனுடலை நரிகள் விருந்துகொள்ளக்கொடுத்து விரைவில் வாருங்களென்று சொன்னான் யமன்—எ-று. நாற்றவுடல். (ரு௩)

கவனமாகவேநீலிகளெழுந்துகைத்தண்டும்
பவமிகுத்திடும்பாவிகள்பாசமுங்கொண்டு
குவலையந்தனில்வந்துமார்க்கண்டனைக்கொல்லப்
பவனவேகமாய்த்திருக்கடவூரிலிற்பரிவாய்.

(இ-ள.) அப்போ தந்த நீலிகள் எல்லாமனத்திலே கொண்டு கைப்பி லேதண்டாயுதமும் பின்னும் அந்தப்பாவங்களை அனுபவிக்கச்செய்கிற பாவிகள் பாசக்கயிறுங்கொண்டு உலகத்திலேவந்து மார்க்கண்டனைக் கொல்லுதற்கு வாயுவேகத்துடனே திருக்கடவூரிலே அன்புடனே-எ-று.

தொழுகுலத்தவனிருப்பிடங்குறித்தவர்தோன்றி
வழுவிலாதவன்கோவிலைப்பாசத்தால்வளைத்து
முழுதுமந்தகாரங்கள்போர்விருண்டிடமுயன்று
கழுதைமூக்கிகள்கண்டனர்நாலனைக்கண்ணால்.

(இ-ள.) வணங்குங் குலத்தினரான மார்க்கண்டனிருக்குமிடந் தேடி வந்து யாதொருதோஷமுமில்லாத கடவுள் கோயிலைமுழுதும் பாசத்தா ல்வளைந்து எங்கும் அந்தகாரம்போலிருளச்செய்து கழுதைபோலு மூக் கையுடைய அந்தநீலிகள் சிவத்தியானியைத் தங்கள்கண்ணாலே கண்டா ர்கள்—எ-று. (மசு)

பார்க்கும்போதினிற்பாமனேநாலனேபரனே
லார்க்குமச்சிவன்பூசைகளாராயேயியற்றும்
காக்கும்பாலகனுகையாற்கடவுளைப்பூசை
திர்க்கமானதாலிவனவனுகுவன்றிண்ணம்.

(இ-ள.) அவர்கள் கண்டபோது இவன் சிவனோ சிவனைத்தியானிக்கி றவனோ அல்லது சிவனேயானால் அந்தகாலத்திலே கெர்ச்சிக்கிற அந் தச்சிவன் யாரைக்குறித்து யாதுவேண்டித் தவஞ்செய்வார், இவன் தன் னுயிரைக் காக்கவேண்டினவனுகையாலே சிவனை யெப்போதும் பூசை செய்கிறான், இந்தப்பாலனே அந்தயமன்சொன்னவனிது மெய்யென்று கொண்டு—எ-று. (மஎ)

என்றுநீலிகளிருபிறப்பாளனைநெருங்கி
நின்றகாலைபின்மார்க்கண்டனிமலனைப்பூசை
யன்றியற்றியமகிமையாலடர்ந்தவர்தமையே
வென்றிடும்படிநெருப்பெழவெருண்டவரோடி.

(இ-ள.) அந்தநீலிகள் அவரைநெருங்கி நின்றபோது மார்க்கண்டர் க டவுளை அப்போதுசெய்த பூசைமகிமையானது நெருங்கின அவர்களை ஜெயிக்கும்படி நெருப்பாய்ச் சுவாலித்துச்சுட அவர்கள்பயந்தோடி. ()

அகலநின்றவரந்தணச்சிறுவனையடர்ந்தே
தகனவேகமோடழைத்திடச்சற்குணத்தவனுங்
குகனைப்பெற்றவக்குருபரன்றனைமனத்திருத்தி
யகமகிழ்வுடனீலிகடம்மைப்பார்த்தறைவான்.

(இ-ள.) தூரப்போய்நின்று அந்தப்பிராமணப்பிள்ளையைப்பார்த்துத் தகித்துப்போடுகிற வேகத்துடனே கூப்பிட அதற்கு சற்குணரான மார்

க்கண்டேயர் முருகக்கடவுளைப்பெற்ற அந்தப்பரமசிவனை மனத்திலே தியானித்து மனமகிழ்ச்சியுடன் நீலிகளைப்பார்த்துச்சொல்லுகிறார் (யகூ)

இங்குச்சற்றேனும்பயமிலாதென்னிடம்வந்தே
தங்கியாரவாரத்துடனழைத்ததாரென்னச்
சங்கைகெட்டநீலிகளதைக்கேட்டுமெய்தளர்ந்து
பொங்கிவாய்திறந்ததட்டிநெட்டூரமாய்ப்புகல்வார்.

(இ-ள்) இங்கே கொஞ்சமாயினும் பயமில்லாமல் என்னிடத்திலேவந்து நின்றுகொண்டு ஆரவாரத்துடனே என்னைக்கூப்பிட்ட நீங்கள் யாரென்றுகேட்க அதைக்கேட்ட அந்தப்பவுசுகெட்ட நீலிகள் உடம்புமெலிந்து கோபங்கொண்டு வாயைத்திறந்து அதட்டி நெட்டூரமாகப்பேசுகிறார்கள்—எ-று. (உய)

கேளுநூலனேயமபுரநீலிகள்கெடுவி
னாளுமாயிசுமுடிந்ததானுங்களுன்னுயிரைக்
கோளிலாமலேகொண்டுபோயமன்முனங்குறுகு
மாளதானதாலனுப்பினனிவ்விடம்வந்தோம்.

(இ-ள்.) ஓ-சிவத்தியானியேகேள்-நாங்கள் யமபுரநீலிகள் கெடுப்படி உனக்குண்டானநாளான பதினாறுவயது முடிவானதினாலே-நாங்கள்உன்னுயிரை யாதொரு தடைகளுமில்லாமல் பிடித்துக்கொண்டுபோய் எமன்முன்னே விடுகிற ஆள்களானபடியினாலே அந்த யமன் அனுப்பவந்தோம்—எ-று. (உக)

நேயவேதனேயெழுந்திருநீயெழாதிருந்தால்
மாயவஞ்சனைச்சூதினாலுன்னுயிர்வாங்கி
நாயகன்னிடங்கொண்டுபோவேமெனநவிலத்
தூயவந்தணச்சிறுவனுமுனிவுடன்சொல்வான்.

(இ-ள்.) ஓ சிவநேயமுள்ளபிராமண எழுந்திரு நீஎழாதிருந்தால் மாயையாலும் வஞ்சனையாலும் சூதாலும் உன்னுயிரைப்பிடித்து எங்கள் எஜமானனிடம் கொண்டுபோவோமென்றுசொல்ல அதற்குப் பரிசுத்தரான மார்க்கண்டேயர்சொல்லுகிறார்—எ-று. (உஉ)

வேறு.

கரிமுகக்கள்ளநெஞ்சத் துட்டியேமட்டிநாயே
விரிதலைப்பேயேகேண்மின் மறலியோன்விட்டதூதர்
கருதியென்மேலேவந்து கருத்தழிந்தவதிப்பட்டு
வருவதுதெரிந்துநீலி மார்களேவந்ததேது.

(இ-ள்.) கருங்கினமுகமும் திருட்டுநெஞ்சுமுள்ள துட்டிகளே மட்டிகளே நாய்களே விரிந்ததலையையுடையபேய்களே கேளுங்கள் முன்னே யமன்அனுப்பினதூதர்கள் என்னைக்குறித்துவந்து தங்களெண்ணங்

குலேந்து துன்பப்பட்டு அங்கேவந்தது தெரிந்தும் நீலிகளே நீங்கள்வந் ததென்னகாரணம்—எ-று. (உக)

வீணதாய்மறலிசொல்லே மெய்யெனக்கேட்டுநீங்கள்
ஆணவத்துடனேயென்முன் வந்தெனையழைத்தவாயைத்
தோணிபோல்ஞானவாளாற் பிளந்துசோரிகளுஞ்சோர
நாணவுஞ்செய்யாவிட்டா லுதனுக்கடிமையல்லேன்.

(இ-ள்.) நீங்கள்வீணுக அந்த யமன்சொன்னபேச்சை மெய்யென்று கேட்டு ஆணவங்கொண்டு எனக்குமுன்னேவந்து என்னைக் கூப்பிட்ட வாயை அம்புபோலிருக்கிற எனது ஞானவாளாலே பிளந்து ரத்தங்க ளொழுக உங்கள்தலைகுனியும்படி நான்செய்யாவிட்டால் இந்தத்திருக்க டவூர்ச்சுவாமிக்கு நான் அடிமையாகாதவன்—எ-று. (உச)

பாவிகாளென்முன்சற்றும் பயமணுகாமல்வந்தே
தாவியேயழைத்தநாவைப் பிடுங்கியுந்தலைகள்கொய்வேன்
கோவசண்டாளநீலிக் குலத்திகாளுயிர்கள்தப்பிப்
போவதேகருமமின்றுற் போயிடுமுயிர்களென்னு.

(இ-ள்.) அடிபாவிகளே என்முன்னே கொஞ்சமாகிலும் பயமில்லா மல்வந்து தாண்டிக்குதித்து என்னைக்கூப்பிட்ட நாக்கைப்பிடுங்கி உங்க ள்தலைகளையறுத்துவிடுகிறேன் கோபமும் சண்டாளத்துவமுமுள்ளநீலி க்கூட்டங்களே உங்களுயிர்பிழைத்து நீங்களோடிப்போகிறதே நல்லகா ரியம் இன்னமுநினறீர்களானல் உங்களுயிர் இழப்பீர்கள்—எ-று. (உரு)

ஈதுரைத்திட்டுவேத னெம்பிரான்பூசையேத்தி
யோதியகாலையந்த நீலிகளுடன்றுசீறிப்
போதநூலாளன்றன்னைப் புகையெனச்சூழ்ந்துகொண்டு
வாதுடனிரக்கமில்லா வறடிகள்மயக்கஞ்செய்வார்.

(இ-ள்.) இப்படிச்சொல்லி மார்க்கண்டேயர் சிவபெருமான் பூசை யைச்செய்து துதித்துக்கொண்டிருக்கும்போது அந்த நீலிகள் கோபித் துச்சீறி அந்த ஞானசாஸ்திரங்களுணர்ந்த மார்க்கண்டேயனைப் புகை போல்போய் மேலெல்லாம் கவிந்துகொண்டு தருக்கவாதத்துடனே- அந்தக்கொடிய வறடிகள் மயக்கத்தை யுண்டுபண்ணுவார்கள்—எ-று.()

அருமைமாதவன்முன்பாக வகோரமாய்வாய்திறந்து
இருளதுகவிந்தாற்போல வேகமாய்ச்சொருபங்காட்டிப்
பருகுவபோலப்பல்லைக் காட்டியும்பயத்தைமூட்டச்
சுருதிநூன்மறந்துபூசைத் தொழிலையுமறந்துகூறும்.

(இ-ள்.) அந்த அருமையான மகாதவசிமுன்னே அகோரவடிவாய் வாயைத்திறந்து இருள்வந்து மூடினாற்போல் எங்கு மொரேவிதமான சுருபத்தைக்காட்டி மார்க்கண்டேயனைத் தின்பவர்கள்போற் பல்லைக்கா

ட்டியும் பயத்தையுண்டுபண்ண அப்போது வேதசாஸ்திரங்களை மறந்து சிவபூசைமுறையையு மறந்து மார்க்கண்டேயர்சொல்லுகிறார்—எ-று.()

ஐயனேயரனேபோற்றி யாலமதுண்டாய்போற்றி
கையினில்மழுவாய்போற்றி கங்காளரூபாபோற்றி
தையலைப்பாகம்வைத்த சருவநாயகனேபோற்றி
மெய்யனேபோற்றியென்றன் வினையெலாந்தீர்ப்பாய்போற்றி.

(இ-ள்.) ஐயனே-அரனே-விஷமுண்டவனே-கையிலேமழுவையுடையவனே-எலும்பாபரணம் பூண்டவனே-பார்வதிசமேதா - சருவலோக ரக்ஷகனே - மெய்யானதெய்வமே-எனது பாவங்களையெல்லாம் தீர்க்க வல்லவனே போற்றி போற்றி போற்றி—எ-று. (௨௮)

முன்னமேதூதர்வந்து முடுகியேயென்னைக்கூட
உன்னருளாலேவென்றிங் குன்னடிக்காளாய்நின்றேன்
பின்னையுமேதோநீலிப் பேதைகளென்னையடர்ந்து
மன்னுயிர்வாங்கவந்து மருட்டுறார்சரணமையா.

(இ-ள்.) முன்னே எமதூதர்கள்விரைந்து என்னைப்பிடிக்கவர அப்போது உம்முடைய கிருபையினாலே அவர்களை ஜெயித்து இங்கேஉமது பாதத்துக்கடிமையாகவே யிருந்தேன்-பின்னும் - எப்படியோ நீலிப்பெண்கள் என்னைவந்து நெருங்கி என்சரீரத்துள்ள வுயிரைப்பிடிக்கவந்து மயக்குகிறார்கள் ஆகையால் ரக்ஷிக்கவேணும் சுவாமி—எ-று. (௨௯)

இன்மொழிகூறிப்பால னிறைவனைத்துதித்தகாலை
நன்மொழிப்பொருளான்வந்து சிறுவனைநயந்துதேற்றிப்
புன்மைசேர்நீலிமாதர் தமக்குநீபுலம்பிடாதே
வன்மையாலெதிர்த்துவார்த்தை விளம்பெனமறைந்தானையன்.

(இ-ள்.) இப்படி இனியவார்த்தைகளைச்சொல்லி மார்க்கண்டேயர் கடவுளைத்துதிக்கும்போது அந்த நல்ல ஸ்தோத்திரப்பொருளான கடவுள் பிரசன்னராய்வந்து குழந்தையான மார்க்கண்டேயனைப் பிரீதியுடனே தேறும்படிசெய்து அல்பகுணத்தையுடைய அந்த நீலிகளுக்கு நீ-பயப்படவேண்டாம் திடமாக எதிரேநின்று மறுமொழிசொல்லென்று மறைந்தருளினார்—எ-று. (௩௰)

பாலனுந்தெளிந்துகொண்டு பரனடிப்பலத்தினாலே
நீலிகள்மாயந்தன்னை நீற்றினானீறதாக்கிக்
காலனேவலினால்வந்த கடியநீலிகளைச்சாட
ஆலமதுண்டான்றன்னை யணிந்தபத்திரத்தால்வீச.

(இ-ள்.) உடனே மார்க்கண்டேயர் தெளிவுகொண்டு சிவனது பாதபலத்தினாலே நீலிகள் செய்தமாயங்கள் முழுதும் திருநீற்றினாலே அழியப்பண்ணி அந்த எமன் உத்தரவினாலேவந்த கடுமையான நீலிகளை அடி

த்துத் துரத்தும்படி விஷமுண்டகடவுளை அருச்சனைபண்ணின வில்வங் களைஎறிய—எ-று. (ருக)

எழுந்ததுவடவைத்தீப்போ லிருண்டநீலிகளையெங்கும்
ஒழுங்குறச்சுட்டபோது வம்பிகளலறியோடி
அழுங்குரலபயமென்று வதிரிடமண்மேல்வீழ்ந்து
மழுங்கியமுகமுஞ்சோர்வு மனத்துறவாட்டமாக.

(இ-ள.) அந்த வில்வங்கள் வடவாக்கினிபோலெழுந்து இருண்டநீலிகளை எங்கும் ஒரே சூடாகச்சுட்டபோது அந்த வம்பிகள் அலறிக்கொண்டு ஓடிப்போய் முகமழுங்கியும் மனஞ்சோர்ந்தும் வாட்டங்கொண்டு.

எம்பிரானந்தகர்க்கியா மென்சொல்வோமென்றுநீலி
வம்புசெய்புருவமாறி மானிடவடிவுகொண்டு
தம்பிரானடியனான மார்க்கண்டன்றந்தைதாய்போற்
றெம்பதாய்முன்புதோன்றிச் சிறுவனைப்புகழ்ந்துசொல்வார்.

(இ-ள.) இனி நமதெஜமானனாகிய எமனுக்கு நாம்போய் என்னசொல்லக்கடவோமென்று அந்தநீலிகள் தங்கள் வீணான வுருவுமாறி மனிதவடிவுகொண்டு சிவனடியானான மார்க்கண்டருடையதகப்பன் தாய்போல்தெம்பாக முன்னேவந்து அந்தப்பிள்ளையைப்பார்த்துக்கொண்டாடிச் சொல்லுகிறார்கள்—எ-று. (ருரு)

இத்தனைநாளாய்ப்பூசை யியன்றதுபோதுமப்பா
மெத்தவுமகிழ்ந்தோமையா நம்மனைமேவவாராய்
சுத்தனேயென்றுசொல்லி யாவலாய்த்தொடும்போதப்போ
சித்தம்விட்டகலாவீச னீற்றினைச்சிதறினானே.

(இ-ள.) அப்பா இவ்வளவுகாலமாக நீ பண்ணின சிவபூசைபோதும் நாங்கள் மிகவும் சந்தோஷமாயினோம் ஐயனே இனி நம்முடைய வீட்டிற்குப்போகவா ஓ பரிசுத்தனேயென்று துதித்து ஆவலுடனேபோய்த் தொடுகிறபோது மார்க்கண்டேயர் தமது மனத்தைவிட்டு நீங்காத சிவனது விபூதியை அவர்கள்மேலெறிந்தார்—எ-று. (ருச)

அந்தநீறவர்கள்மேலே யடர்ந்தபோதுருவுமாறிப்
பந்துகள்சிநேகர்போன்றும் பண்டைநாட்பழக்கமாகி
வந்தவர்போலுமந்த வம்பிகள்மேலேநீற்றை
யுந்தினபோதுமெய்க ளுடன்குலைந்துருக்கள்மாற.

(இ-ள.) அந்த விபூதி அவர்கள்மேலேபட்டவுடனே அவர்களுருவு மாறி வேறே உறவினர் சிநேகர்கள்போலாகியும முன்னாளிலே பழக்கமுள்ளவர்கள்போலவும் வருகிற அந்த நீலிகள்மேலே விபூதியை எறிந்தபோது சரீரம்வெந்து கரைந்து பின்னும் உருவமாறி—எ-று. (ருரு)

சிற்றிளம்பருவக்கன்னிமார்களாய்ச்சிறந்துவந்து
மெத்தெனக்காமபோகம்விளைத்ததைவேதன்கண்டு

சுத்தமாய்ச்சடமென்றெண்ணிநீற்றினைத்தூவிவிட்டான்
மற்றந்தநீலிமார்கள்மறுத்துமேமாயஞ்செய்தார்.

(இ-ள்.) சிறிய இளம்பருவமுள்ள கன்னிமார்களாய் சிறப்புடனேவந்து மெதுவாகக் காமஇன்பத்தைஉண்டாக்க அதை மார்க்கண்டர்தெரிந்து தாம் பரிசுத்தராய் அவர்களைப் பொய்யென்றுநினைத்து விபூதியைத்தூவினார் பின்னும் அந்தநீலிகள் வெவ்வேறான மாயங்கள் பண்ணினார்கள். ()

கொடுமைகள்புரிந்தநீலிக்கோதையர்குமரன்றன்மேற்
கடுகியேவலையைப்போட்டாரறுத்தனன்கடவுளன்னான்
முடுகியேபாசம்போட்டாரெரித்தனன்முன்னோனாலே
அடுகொலைப்பொடியைப்போட்டாரத்தையுமகற்றிநின்றான்.

(இ-ள்.) இப்படிக் கொடுமைகள்பண்ணின நீலிகள் மார்க்கண்டர்மேலே விரைந்து வலையைவீசினார்கள் அதைத் தெய்வம்போன்ற மார்க்கண்டர் விபூதியாலறுத்துவிட்டார் அந்த நீலிகள்விரைவிலே பின்னொருபாசத்தை வீசினார்கள் அதையும் சிவானுக்கிரகத்தாலே எரித்தார் பின்னும் நீலிகள் கொல்லுவதான நஞ்சுப்பொடியை வீசினார்கள் அதையும் விலக்கி விளங்கினார்—எ-று. (௫௭)

மழுவொடுசூலம்வைவேல்வச்சிரகோடாலிகுந்தம்
பழுதிலாத்திகிரியீட்டிநேரிசம்பாணம்விட்டார்
மழுவணிகரத்தெந்நாதன்மகிமையாலவைகள்வந்து
தொழுகுலனடியில்வீழ்ந்துவலமெனத்தொழுதகாலை.

(இ-ள்.) மழுவாயுதம் - சூலம் - கூர்வேல்- வச்சிரகோடாலி-கைவேல் தோஷப்படாதசக்கராயுதம் - ஈட்டி - நேரிசம் - பாணங்களைவிட்டார்கள் அவைகளெல்லாம் மழுவேந்தினகையையுடைய எமதுகடவுள் பூசைமகிமையால் மார்க்கண்டர்காலிலே வந்துவிழுந்து வலஞ்செய்து கும்பிட்டபோது—எ-று. (௫௮)

ஈதென்னபுதுமையென்றுநீலிகளேங்கிச்சிந்தை
போதவேகலங்கிநின்றுபுகன்றனரினிமேனம்மாற்
சாதியிலுயர்ந்தான்றன்னைச்சயித்திடலரிதென்றெண்ணி
மூதணங்கவர்கள்வந்துமுனிவனைச்சினந்துசொல்வார்.

(இ-ள்.) நீலிகள் இதென்னபுதுமையென்று அழுது மனது மிகவுநொந்து கலங்கிநின்று சொல்லுகிறார்கள் இந்த உயர்குலப்பிராமணனைச் சயிக்கிறது அருமையென்று நினைத்து அந்தமூதேவிகள் பின்னும்வந்துமார்க்கண்டமுனிவனைக் கோபங்கொண்டு சொல்லுகிறார்கள்—எ-று. (௫௯)

இருஇருசிறுவாவுன்னையேமனோடுனைத்துக்கொன்று
பருகிடச்செய்யோமாகிற்பராக்கிரமமென்னபாராய்
எருமையூர்தியின்றன்னுண்மையெவர்களுமறிவர்கண்டாய்
பொருபொருவென்றநீலிமார்களைப்பூசையாலே.

(இ-ள.) இரு - இரு சிறுபையயலே உன்னை யமனுடனே சொல்லிக் கொன்று தின்னச்செய்யோமேயானல் எங்கள் பராக்கிரமமென்ன நாங்களென்ன எருமைக்கடாவாகனனுன யமனுடைய ஆண்மையை எல்லாருமறிவார்கள் சற்றேஅடங்கியிரு அடங்கியிருடாவென்றுசொன்ன நீலிகளைத் தமது சிவபூசைமகிமையினுலே—எ-று. (சும)

அஞ்செழுத்ததனைக்கூர்ந்துமண்ணலார்நீறுதன்னுற்
றுஞ்சவேயெறிந்தபோதன்றவர்களைவெருவச்சுட்டுக்
கெஞ்சிடவேமலோகங்கிட்டிடவிரட்டும்போது
தஞ்சமென்றபயமாகநீலிகடளர்ந்துபோனர்.

(இ-ள.) பஞ்சாக்ஷரத்தைத் தியானித்துக் கடவுள் விபூதியைத்தூவினபோது உடனே அந்தநீலிகளைப் பயப்படும்படிசுட்டுக் கெஞ்சிக்கொண்டு யமலோகம்போய்ச் சேரத் துரத்தும்போது யமதருமனே நீரேகதியென்று தங்கள் பயந்தீர்வதாக அந்தநீலிகள் சோர்ந்தோடிப் போனர்கள்—எ-று. (சுக)

சண்டனுர்பக்கஞ்சென்றுசரணஞ்செய்திரங்கிச்சொல்வா
ரண்டனேபுன்றனேவலானதானுலன்பக்க
மண்டியேநாங்கள்போனவகையையுமவன்வென்றுண்மை [ன்.
கொண்டதுஞ்சொல்லவொண்ணுக்குறையையுமியம்பக்கேண்மி

(இ-ள.) அந்தநீலிகள் யமனிடத்திலேபோய் வணங்கி அழுதுசொல்லுகிறுர்கள் ஓதெய்வமே உம்முடைய உத்தரவுபெற்றதனுலே அந்தச்சிவத்தியானியிடத்திலே நெருங்கி நாங்கள்போனவகையும் அவன் எங்களைவென்று சவுரியம்பேசினதையும் இன்னஞ் சொல்லக்கூடாத குறையையும் நாங்கள்சொல்ல நீர்கேட்பீராக—எ-று. (சுஉ)

திருக்கடவூரினுங்கள்சென்றிருபிறப்பான்றன்னை
வெருக்கொளவளைந்துமாயவஞ்சனைமிகவுஞ்செய்து
முருக்கிநம்வலியபாசக்கயிற்றையுமுடன்மேற்போட்டு
நெருக்கியேயுயிலாவாங்கநேரிடுங்காலந்தன்னில்

(இ-ள.) திருக்கடவூருக்கு நாங்கள்போய் அந்தப்பிராமணனைப் பயப்படும்படி வளைந்து மாயமான வஞ்சனைகள் மிகவும்பண்ணி மயங்கச்செய்து நமதுவலியதான பாசக்கயிற்றையும் அவன்மேலேபோட்டு நெருக்கி அவனுயிரை வாங்கப்போகிற சமயத்திலே—எ-று. (சுரு)

அண்ணலார்தமைப்பூசித்தமுயற்சிகளடர்ந்ததப்போ
தண்ணலாலயத்தைச்சூழ்ந்துநின்றிட்டோமங்கும்வந்து
கண்ணியேயெரித்ததையாவவனிடநாமொட்டாம
லெண்ணியெங்களினுலேன்றசாதகமிழைத்தும்பின்னை.

(இ-ள.) அந்தச்சிவனைப் பூசைபண்ணின முயற்சிகளெல்லாம்கூடி எங்களைநெருக்க அதற்கு நாங்கள் சிவன்கோயிலைச்சூழ்ந்து நின்றேம் அங

தப்பூசைமகிமை அங்கேயும்வந்து நாங்க ளவனிடம்போகாதபடி சுவாமி யெங்களைக்கிட்டி யெரித்தது அதை ஆலோசித்தறிந்து எங்களாலேகூடி னவளவு மாயைகள் செய்தும் பின்பு—எ-று. (௬௪)

எங்கணுய்கனேமாயச்சூழ்ச்சிகள்யாவுஞ்செய்து
மங்கவன்றன்மேற்சென்ருேமரனருட்டீமிகுந்து
பொங்கியேவளைந்துகொண்டுபுகலிடமிலாமற்சுற்றி
யெங்கணுமெரித்ததையாவினியவனிடத்துப்போகோம்.

(இ-ள்.) எங்கள்நாயகனே நாங்கள் மாயமான தந்திரங்களெல்லாம்ப ண்ணியும் பின்னும் அவன்மேலேபோய் நெருக்கினேம் அப்போது அந் தச்சிவனநுக்கிரகமான நெருப்புமிகுந்து பொங்கி எங்களைச்சூழ்ந்து கொண்டு நாங்கள்தப்பி வருதற்கிடமில்லாமற்சுற்றி எரித்தது சுவாமி இ னி நாங்க ளவனிடத்திலே போகவேமாட்டோம்—எ-று. (௬௫)

தவனனைச்செயித்திட்டாலுந்தபோதனர்த்தளைந்திட்டாலும்
அவனியிலுயிர்கள்சேரவரியயன்விண்ணோர்மற்றைச்
சிவனையுஞ்செயித்திட்டாலுந்திருக்கடவூரில்வாழுந்
தவகுணம்மறையோன்றன்னைப்பிடித்திடத்தகாதுகண்டீர்.

(இ-ள்.) சூரியனைச் செயம்பண்ணினாலும் தபோதனரைச் சூழ்ந்துபி டித்தாலும் உலகத்துள்ள வுயிர்களெல்லாஞ்சூழ விஷ்ணு பிரமா தேவர் கள் அந்தச்சிவன்முதலான யாரைச்செயித்தாலும் திருக்கடவூரிலே வா ழுகிற தவகுணங்களையுடைய அந்தப்பிராமணப்பிள்ளையைப்பற்றக்கூடா து இது நீரோ இனித்தெரிவீர்—எ-று. (௬௬)

ஆகையாலொருவராலுஞ்சிறுவனையணுகொணுது
பாகுசேர்மொழியாள்பாகன்மலரடிப்பத்தியுள்ளான்
வாகைமாலையனேயெங்கள்மன்னவாவேமதர்மா
போகவும்படாதெம்மையாபோந்திட்டாற்பிழைவந்தெய்தும்.

(இ-ள்.) ஆனபடியினலே ஒருவராலும் அந்தவாலிபனிடத்திலேபோ க்கூடாது தேன்பாகுபோலும் வசனமுடைய பார்வதி சமேதருடைய பாதாரவிந்தங்களிலே பத்தியுள்ளவன் அவன் ஓகோ வெற்றிமாலையணி ந்தவரோ எங்களுக்கு அரசனான எமதருமனே எங்கள்சுவாமி நீர் போக வேகூடாது போனல் பிழையுண்டாகும்—எ-று. (௬௭)

வேறு.

என்றுநீலிகளுமிப்படியுரைக்கவேமனுமதிசயமுற்றுக்
கன்றியமனதாய்நீலியர்தம்மைக்கையிலாகாதவரென்னக்
குன்றியநாணத்துடனிருந்தார்கள்கொடியநீலியரிதுநிற்கப்
பொன்றிடமறலிசிவதவத்தவன்மேல்வருகிறவகையையும்புகல்வாம்.

(இ-ள்.) என்று நீலிக ளிப்படிச்சொல்ல யமதருமன் ஆச்சரியப்பட்டு கோபங்கொண்ட மனத்துடனே அந்த நீலிகளைப்பார்த்து நீங்கள் பிடிக்

கமாட்டாதவர்களென்று சொல்ல-குறைந்தவெட்கங் கெட்டவர்களாய் நீலிகள் வாய்பேசாதிருந்தார்கள் அதிப்படியிருக்க இனியமனுனவன் தான்சாவுதற்கு அந்தச் சிவபூசைபண்ணுகிற பிள்ளைமேலே வந்தவகையெல்லாம் சொல்லுகிறோம்---எ-று. (சஅ)

நீலிகள்வருகிறசருக்கம் - முற்றிற்று.

ஆக - திருவிருத்தம்-கூஅசு.

---

## யமன்வருகிறசருக்கம்.

பழுத்திடுஞானத் தவத்தரோவேதப் பாலனைநீலிகளடர்ந்து
மழுத்தியவரலா றியம்பினேமினிமே லந்தகன்சினந்துமந்தணனை
முழுப்பகையாக விடர்செயக்கடவூர்முதல்வனுமார்க்கண்டர்க்காக[மின்
வழுப்படமறலி தனையுதைத்ததுவும் வகுத்தினிதுரைக்கின்றோங்கேண்

(இ-ள்.) ஞானங்கனிந்த தபோதனரோகேளுங்கள் அந்த மார்க்கண்டேயரை நீலிகள் நெருங்கிப்பிடிக்கவந்த வரலாற்றையெல்லாம் தெரியச்சொன்னோம் இனிமேல் அந்த யமனுனவன் கோபங்கொண்டு மார்க்கண்டேயரை முழுதும் விரோதமாய் மிகுந்ததுன்பங்களைப்பண்ண அதற்காக திருக்கடவூர்ச்சிவனுனவர் யமனையுதைத்ததை வகையாகச் சந்தோஷந்தோன்றச் சொல்லுகிறோம் கேளுங்கள்---எ-று. (க)

கொடியநீலிகளம்முனிவன்மேற்சென்றுகொடுவராச்செய்கையைக்கேட்டே, இடியெனமறலிதோளினைக் கொட்டியெரியெழக்கண்ணிணைசிவந்து
படியெலாநடுங்கவார்ப்பரித்துதட் டைப்பல்லினுற்கடித்துமெய்வேர்த்து
முடிகளுங்குலுங்கவீசைகள் துடிக்கமுகங்கறுத்தொளிகெடமுனிந்து.

(இ-ள்.) முன்னே அந்தக் கொடிதானநீலிகள் மார்க்கண்டேயர்மேலேபோய்க் கொண்டுவராமல் வந்தகாரியந்தெரிந்து யமனுனவன் இடிபோல் தோள்களைக்கொட்டி நெருப்புத்தோன்றக் கண்கள்சிவந்து உலகமெல்லாநடுங்கக் கர்ச்சித்து உதட்டைப் பல்லாலெகடித்து உடம்பெல்லாம்வேர்த்து தலையும் கிரீடமும் குலுங்கவும் வீசைகள் துடிக்கவும் முகங்கறுத்து ஒளிமழுங்கும்படி கோபங்கொண்டு---எ-று. (உ)

நிரைநிரையாக வருகுநின்றவரை நெருப்பெழும்படியதாய்ப்பார்த்து
முரைதடுமாறிக் குழறிடக்கோப மூழித்தீயெனமறலியுந்தான்
புரையிடுங்குண்டர் தூதர்நீலியர்கள் போகியுமச்சிறுபயலைத்
தரையிலில்லாமற் சரிப்பிடித்துயிரைக் கொணர்ந்திடத்தக்கவரிலையே.

(இ-ள்.) வரிசை வரிசையாகப் பக்கத்தே நிற்கிறவர்களை நெருப்புத்தோன்றப்பார்த்து வாய்ப்பேச்சுகள்தடுமாறிக் குழறவும் கோபமானது ஊழிநெருப்புப்போல் யமனுனவன் தோஷ கிருத்தியங்களையுடைய தூதர்களும் நீலிகளும் போயும் அந்தச்சின்னப்பையனை உலகத்திலே இனி

நிலைகொள்ளாதபடி கொன்று அவனுயிரைக் கொண்டுவரத்தக்கவர்களி ல்லை யல்லவோ—எ-று. (௩)

என்றுபற்கடித்தே யதட்டிட வெந்த வுலகுமண்டங்களுமேங்கக்
குன்றுபோலருகி னின்றகாலர்களுங் கொடியநீலிகளுமுள்குலையத்
தென்றிசையமனு மின்றுமிக்கணமே சிறுவனையிழுத்துயிர்பிடித்து
வன்றிறலாக வருகுவனிதனை மாற்றிடமகேசன்வந்திடினும்.

(இ-ரை.) என்று பல்லைக்கடித்து அதட்ட எந்தலோகங்களும் அண்ட ங்களும் துக்கிக்க மலைபோ லருகேநின்ற அந்தக்காலதூதர்களும் நீலிக ளும் மனநடுங்க தென்றிசைக்கதிபனான யமனானவன் இன்றைத்தினத்தி லிப்பொழுதிலே அந்தப்பிள்ளையினுடைய வுயிரைப்பிடித்து மிகுந்தசம ர்த்துடனே வருகிறேன் இதைத்தடுக்க அந்தச்சிவனே வந்தபோதிலும்.

பாரெனச்சிவந்து வாயிலேநெருப்புப் பறந்திடமொழிந்துமார்ப்பரித்து
நீரணிச்சடையோன் தேவர்மாலயன்றானிகர்வரோ வெனக்கினியென்று
கார்முகிலொலிக்கும்படியெனக்குமுறியெழுந்துகண்ணுயிரன்பால, னே
ரதாய்ச்சென்றுகரும்பகடுடையோன் கண்களுநெருப்பெழவுரைப்பான்.

(இ-ரை.) நான் செய்வதைப்பாருங்களென்று கண்கள்சிவந்து வாயி லேநெருப்புண்டாய்ப்பறக்க கங்கையையணிந்த சடையையுடையசிவன் தேவர்கள்-விஷ்ணு-பிரமன்-இவர்கள் எனக்கு எதிராவார்களா வென்று கறுத்தமேகம்போல் முழங்கியெழுந்து இந்திரன்குமாரனை சித்திரபுத் திரனிடத்திலேபோய் கறுத்த எருமைக்கடாவாகனனான யமன்கண்களி லே நெருப்புத்தோன்றச் சொல்லுகிறான்—எ-று. (ரு)

எவ்வுயிர்களுக்குஞ்சரியதாய்ப்பகுத்திட் டெழுதிடுங்கணக்கரோகடவூர்த்
திவ்வியபரனைப்பூசனைபுரியுமந்தணச்சிறுவன்றன்னுயிரை
வவ்விவந்திடுமென்றேவற்றூதரையும் வறட்டுநீலிகளையும்விடுத்தே
னெவ்விலாதவரையடித்துடன்றுரத்தி யென்னையுமுருத்துவைதனனும்.

(இ-ரை.) எல்லாவுயிர்களுக்குஞ் சரியாய்ப்பகுந்து கணக்கெழுதுஞ் சி த்திரபுத்திரரே திருக்கடவூரிலேயிருக்கிறசிவனை நன்றாகப்பூசைபண்ணு கிறஅந்தப்பிராமணப்பையனுயிரைப் பிடித்துவாருமென்று எனதேவல் தூதரையும் வறட்டுநீலிகளையும் அனுப்பினேன் அதற்கு அவனுடன்ப டாமல் அவ்விருவகையாரையும் அடித்து அங்கே நிற்கவொட்டாமல்து ரத்தி என்னையும் கோபித்து வைதானுமல்லவோ—எ-று. (சு)

நீரணியமலன்கொன்றைமாலிகையா னிருமலனைம்முகக்கடவு
ளாரணிபெருமான்பூசைகளியற்றி யதினுடைப்பலமதாலிவரைத்
தாருமாறாகப்பேசியும்வாராதிருந்துகொண்டவரையுந்தள்ளிச்
சீருடனிருந்தானமக்கென்னபெருமைசெப்புதிதேவர்கோன்மகனே.

(இ-ரை.) கங்காசலத்தையணிந்த பரிசுத்தராய்க் கொன்றைப் பூமாலை யணிந்து தோஷரகிதராய் ஐந்துமுகத்தையுடையதெய்வமாய் ஆத்திமா

லையுமணிந்தகடவுள் பூசைகளைச்செய்து அதினுடையபலத்தினாலே இந்
தத்தூதர் நீலிகளைத் தாறுமாறாகப்பேசி வராமலிருந்துகொண்டு அவர்க
ளையுந்தள்ளிவிட்டு அவன் பூசைச்சிறப்புடனேயிருந்தால் இனிநமக்கே
ன்னபெருமையுண்டு சொல்லும் தேவேந்திரன்குமாரரோ—எ-று. (எ)

இன்னமுநமக்காமேவலாட்களையுமேவினாலும்மவர்க்கசையான்
அன்னவன்றனக்குநாமுமேபோதோமானதாலவன்றனைக்கண்டு
இன்னமுமுளதோஇற்றைநாள்சரியோயானறிந்திடும்படிநீரு [ன்
நன்னெறிக்கணக்கைப் பாருமென்றவனு நவின்றிடக்கணக்கனுநவில்வா

(இ-ள்.) இன்னமுநமக்குண்டானஏவலாள்களையெல்லா மேவினபோ
திலும் அவர்களுக்கு அவன்அசையமாட்டான் அவனுக்குநாமெல்லாம்
தகாதவர்களாயினோம் ஆனபடியினாலே அவனுக்கு வயதுபதினாறும் மு
டிந்ததோ இன்றையளவி லின்னமுமுண்டோ நான்தெரியும்படி நீர் உம்
முடையகணக்கை நன்றாகப்பார்த்துச் சொல்லுமென்றுசொல்ல அந்த
ச்சித்திரபுத்திரர் சொல்லுகிறார்—எ-று. (அ)

சண்டனே நூலன்றனக்குமீரொட்டுவயதுமின்றோடதுசரியே
கண்டரந்நாளிலவன்றனைக்கொடுக்குங்காலையிலெண்ணிரண்டாண்டே
உண்டுவேறில்லையென்றவருமக்குமுரைத்ததைமறந்திரோவுற்றுத்
திண்டிமிண்டாகப்பேசுநூல்வலனைச்சீக்கிரங்கொணர்கெனச்செப்பி.

(இ-ள்.) கேளும் யமதருமராஜனே அந்தச்சாஸ்திரவல்லவனான மார்
க்கண்டனுக்கு வயதுபதினாறும் இன்றோடுசரி அந்த நீலகண்டக்கடவுள்
அக்காலத்தே அவனைக்கொடுக்கிறபோது பதினாறுவயதேயுண்டு அதற்
குமேலேயில்லையென்று அவர் உங்களுக்குச்சொன்னதை மறந்து போ
னீர்களோ உடனேபோய் தாறுமாறாகப் பேசுகிறமார்க்கண்டனைச் சீக்கி
ரம்பிடித்துவாருங்களென்றுசொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறான்-எ-று.

தென்றிசைக்கதிபாமழுவலக்கரத்தோன்சிவபிரானம்மையாளுடையான்
கொன்றையுமறுகுந்திங்களுமணிந்தகுளிர்சடைக்கடவுளார்தம்மை
நன்றியோடெவரும்பூசையர்ச்சனைகணடத்தியதொண்டரையுன்னால்
வென்றிடப்படுமோவவருடைமகிமைகேளெனவிளம்பலுற்றனனால்.

(இ-ள்.) ஓ தென்றிசைக்கடவுளே மழுவை வலதுகரத்திலேகொண்
டசிவபெருமான் நம்மையடிமையாகவுடையவர் கொன்றை அறுகு சந்
திரன் இவற்றையணிந்த குளிர்ந்தசடையையுடையகடவுளை நன்மையுட
னே யாரானாலும் பூசையருச்சனைகளைநடத்தின அடியார்களைஉம்மாலே
வெல்லக்கூடுமோ அவருடைய மகிமையைக் கேளுமென்று சொல்லத்
தொடங்கினார்—எ-று. (௯)

மாலயன்றேடும்வள்ளலார்மலர்த்தாள்வணங்கியதொண்டர்கணமக்குக்
காலதூதர்களின்வருத்தமுமேமகண்டனேசெய்வதுமறியோநு

சூலபாசங்கள்பிண்டிபாசத்தாற்றொலைந்திடார்துயரமுமணுகார்
மேலவர்மேலாய்விளங்குவார்தம்மைவென்றுயிர்பிடிப்பதற்கெளிதோ.

(இ-ள்.) விஷ்ணுவும் பிரமாவுந்தேடுவதான சிவபெருமானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்கின அடியார்களுக்குக் காலதூதர்கள்வருத்தமும் யமதண்டனையுமுண்டானதை இன்றளவு நாமறிந்திலோம் சூலங்கள் பாசங்கள் பிண்டிபாலங்களாகிய ஆயுதங்களாலேஅவர்கள்சாவார் யாதொரு துன்பமுமடையார்கள் மேலவர்களுக்கெல்லா மேலாகவேயிருப்பார்கள் அவர்களைவென்று உயிர்பிடிப்பதென்ன எளிதா எளிதல்ல—எ-று. (௰௧)

அந்தகாமிஞ்சிநீயவர்மேலேயடர்ந்திடநினைத்தியேயானால்
வந்திடுமோசஞ்சிவனடியார்கள்வழியணுகாதிருமறலி
முந்துமந்நாளிற்றொண்டராற்சண்டர்மோசமாயவதியாலிறந்த
தெந்தனாலறிந்தவாய்மையைக்கேளென்றியம்புவான்கணக்கெழுதியுமே.

(இ-ள்.) ஓ யமனே நீமிஞ்சி அவர்கள்மேலே சண்டைசெய்யப்போக எண்ணினையேயானால் உடனே மோசம்வரும்-சிவனடியார்களருகிலும் போகாதிரு- முன்னாளிலே சிவனடியார்களாலே யமதருமர்கள் மோசமாகி அவதிப்பட்டிறந்ததை என்னாலறிந்தமாத்திரஞ் சொல்லுகிறசொல்லைக் கேளுமென்று கணக்கெழுதுகிறவன் சொல்லுகிறான்-எ-று.(௰௨)

பெருந்திருவுலகிற் கோசலநாட்டிற் பெரும்புகழ்க்கவுசலையூரிற்
றிருந்தியமறையோன் சிவனடிக்கன்பாய்ச் சிறந்தவன்கடவுளார்பூசை
வருந்தியேசெய்து வருகுமந்நாளி லவனுடைவயதுகள்சென்றே
யிருந்ததாலேம தூதர்போயழைக்க விசைந்துவாராதிருந்ததனால்.

(இ-ள்.) பெரிய அழகான இந்தவுலகத்திலே கோசலநாட்டிலே பெரிதானபுகழைக்கொண்ட கௌசலையென்னுமூரிலே திருத்தமான ஒரு பிராமணன் சிவனடிக்கு அன்பிலேசிறந்தவன் அவன் அந்தச்சிவபூசையை வருத்தப்பட்டாயினும் தப்பாமல் செய்துகொண்டுவருகிற அந்த நாளிலே அவனுடையவயது முடிந்திருந்ததனாலே எமதூதர்கள் போயழைக்க அவன் வராதிருந்தபின்பு—எ-று. (௰௩)

முனிந்தெழுந்தேம னடர்ந்துயிர்பிடிக்க முதல்வனுக்கபயமென்றலறக்
கனிந்தெழுந்தையன் சிவகணாதிகளைக் கடிகவேவிடுத்தனனவருஞ்
சினந்துபோயெமனைச் செயித்தருமறையோன் றன்னையுஞ்சிவபிரானிடத்திற், கொணர்ந்தனரவர்கள் பின்பதாய்வந்து கொன்றைவேணியனை யுங்கண்டான்.

(இ-ள்.) கோபங்கொண்டெழுந்துபோய்-இயமனானவன் நெருங்கிஅவனுயிரைப்பிடிக்க அவன் சிவபெருமானுக்கே அபயமென்று கதற அதற்கு மனமிரங்கிச் சிவபெருமான் சிவகணங்களைவிரைந்து செல்ல ஏவி

ளூர் அந்தச்சிவகணங்கள் கோபங்கொண்டுபோய் எமனைச்செயித்து அருமையான அந்தப்பிராமணனையுஞ் சிவபெருமானிடத்திற்குக் கொண்டுவந்தார்கள் அவர்கள் பின்றொடர்ந்துபோய் எமனானவன் சிவபெருமானைக்கண்டான்—எ-று. (௰௪)

நின்றுவாய்புதைத்தெம்மையனேமறையோனுயிரினைக்கவர்ந்திடநெருங்க
வென்றிகொள்கணங்களெனைத்தள்ளிவிட்டுவிரைவுடன்கூட்டியேவந்தார்
நன்றருள்செய்தோய்நான்செயலாவதென்னெனவவனமதடிமை
கன்றிநீயவன்மேற்போகொணாதென்றுகடவுளாருரைத்திடமிஞ்சி.

(இ-ரை.) எதிரேநின்று வாயைமூடிக்கொண்டு எமதுகடவுளே நான் அந்தப் பிராமணனுயிரைப்பிடிக்க நெருங்கினபோது ஜெயங்கொண்ட சிவகணங்க ளென்னைத்தள்ளிவிட்டு அவனைக்கூட்டிக்கொண்டு வந்தார்கள் நீர் நன்றாக அவனுக்கு இப்படிக் கிருபைபண்ணினால் நான்செய்வது என்னஇருக்கின்றது என்றுகேட்க அதற்கு அவன் நமக்கடிமை நீ அவன்மேற் போகத்தகாதென்று சிவனானவர்சொல்ல அந்தச்சொல்லுக்கு யமன் அடங்காமல்—எ-று. (௰௫)

வென்றிடப்பாசம்விடுத்தவன்பிடிக்கநம்மையாள்விமலனும்வெகுண்டு
நன்றிசெய்வோர்க்கும் பூசைசெய்வோர்க்கு நானிலந்தனிலெனைத்துதிப்
போர்க், கென்றுநாந்துணையாயிருப்பமென்றுரைக்க வெனதுரைதள்ளிநீ
நடந்தா, யுன்றனைக்கொல்வே னென்றுருத்தெழுந்தா ருலகங்கணடுங்கிடத்தானே.

(இ-ரை.) அந்தப்பிராமணனை வெல்லுவதாகப் பாசத்தைவிட்டு வீசி அவனுயிரைப் பிடிக்கும்போது நம்மையெல்லாம் அடிமைகொள்ளுகின்ற கடவுள் கோபங்கொண்டு நன்மையான காரியங்கள்செய்கிறவர்களுக்கும் நம்மைப் பூசைபண்ணுகிறவர்களுக்கும் நாலுவகையான வுலகத்திலே என்னைத் துதிசெய்பவர்களுக்கும் நாமே துணையிருப்போமென்று சொல்ல நீயென் சொல்லைக்கடந்து நடந்தாய் ஆதலால் இதோ உன்னைக்கொல்லுகிறேனென்று உலகங்களெல்லா நடுங்கக் கோபங்கொண்டெழுந்தார்—எ-று. (௰௬)

வேறு.

மழுவினாலெமனுயிரைபு மடித்துமற்றுள்ளோர்
தொழுகுலத்தவனுயிரினைக் காத்துமுன்றோன்றி
யழிவிலாததன்னடியிணைப் பதமவற்கருளி
யெழுநரகமாண்டிடவொரு வெமனையுமிசைத்தார்.

(இ-ரை.) அப்படியெழுந்து மழுவினாலே அந்த யமனுயிரைக்கொன்று எல்லாரும்வணங்குங் குலத்தினனான அந்தப் பிராமணனுயிரை ரக்ஷித்துத் தாமே அவன்முன்னே பிரசன்னராய் அழியாத தம்முடையபாதங்

களைச் சேர்வதானபதவியை அந்தப்பிராமணனுக்குக் கொடுத்துப்பின்பு அந்தஎழுவகை நரகத்தையும் ஆளுதற்கு ஒருயமனையும் ஏற்படுத்தினார்()

இன்னங்கேள்குருநாட்டினி லிளசைமாநகரின்
மன்னுமாமறைக்குலத்தவன் மாதுமைகேள்வற்
கின்னிதாகியபூசைக ளியற்றியேவருநா
ளன்னவன்வயதடங்குநா ளறிந்துடன்சண்டன்.

(இ-ள்.) இன்னமுங் கேளும் குருநாட்டிலே இளசைமாநகரத்திலே வாழ்கிற பெரிய பிராமணகுலத்தையுடைய ஒருவன் பார்வதிநாயகனுக்கு இனிதான பூசைகளைப்பண்ணி வருகிறகாலத்திலே அவனுக்கு வயது முடிவான நாள்தெரிந்து உடனே யமனானவன்—எ-று. (௰௮)

காலதூதரையேவியுங் கவரொணாதாக
ஆலகாலம்போன் மறலியுங்கோபமாயவன்மேற்
சூலந்தண்டுடன்வேகமா யெழுந்துடன்றோன்ற
நூலனானவன்முதல்வனுக் கபயமாய்நுவன்றான்.

(இ-ள்.) காலதூதர்களை அனுப்பியும் அவனைப் பிடிக்கப்படாமையினாலே விஷத்தைப்போல் யமனானவன் சூலம்-தண்டாயுதத்துடனே அந்தப்பிராமணன்மேலே கோபங்கொண்டு அதிகவிரைவுடனே வந்து தோன்றினபோது அந்தச் சாஸ்திரவல்லவனான பிராமணன் கடவுளுக்கேஅபயமென்றுசொல்லிக் கூப்பிட்டான்—எ-று. (௰௯)

அபயங்கேட்டரனந்தியைப் பார்த்தினிதறைவார்
செபஞ்செய்நம்முடைத்தொண்டனைச் சண்டனுஞ்சென்று
அவமதாகவேயுயிரினைக் கவர்தலாலவனைக்
கபம்விழுந்திடத்தகர்த்துநீ வாவெனக்கரைந்தார்.

(இ-ள்) அந்த அபயமென்றவார்த்தையைச் சிவன்கேட்டு நந்தியைப் பார்த்து இரக்கத்துடனே சொல்லுகிறார், ஜெபஞ்செய்துகொண்டிருந்த நமதடியானை யமனானவன்போய் வீணாக அவனுயிரைப்பிடிக்கிறதினாலே அந்தயமனுக்குக் கோழை வாய்வழியொழுக அடித்து அந்தப்பிராமணனை இங்கேகூட்டிக்கொண்டு வாவென்றுசொன்னார்—எ-று. (௨௰)

நந்தியவ்விடைபெற்றுட னெழுந்துபோயநமனை
யுந்துதண்டினாற்றகர்த்தவன் சிரத்தையுமுடைத்துச்
சந்துசந்ததாய்ப்பிளந்துயிர் பொன்றிடச்சாடி
அந்தணாளனைக்கூட்டியே யரனிடஞ்சார்ந்தார்.

(இ-ள்.) நந்தியானவர் அந்த வுத்தரவுபெற்றவுடனே எழுந்துபோய் எமனைத் தமது பெரியதண்டாயுதத்தினாலே அடித்து அவன் தலையையுடைத்துச் சந்துசந்தாகப்பிளந்து அவனுயிர்போகவதைத்து அந்தப்பிராமணனைக் கூட்டிக்கொண்டு சிவனிடத்திலேவந்து கூடினார்-எ-று. (௨௧)

முக்கணுயகன்மகிழ்ந்துடன் மறையவன்முகம்பார்த்
தொக்குநற்பாகதிதனை யுகந்திடக்கொடுத்துப்
புக்கவங்கொருவெமனையு நாட்டினுன்புனிதன்
சிக்கொணுதுகாண்சிவனடி வணங்கினசிறுவன்.

(இ-ள.) உடனே திரியம்பகக்கடவுள் சந்தோஷித்து அந்தப்பிராமண னுடைய முகத்தைப்பார்த்து அவனுக்குத் தகுதியான நல்லபரகதியை அவன் சந்தோஷிக்கும்படிகொடுத்துப் பின்பு இறந்துபோன எமனுக்கு ப்பதிலாக வேறேயொரு எமனை யேற்படுத்தினர் கடவுள் ஆகலால் அந் தச்சிவபூசைபண்ணுகிறபிள்ளை நமக்குக் கிடைப்பதரிது—எ-று. (உஉ)

ஆகையால்வெகுபேர்களச் சிவனடியவராற்
போகபோக்கியங்கிடைத்திடா திறந்தனர்புனல்சேர்
சேகரன்பதத்தினியனை யுன்றனுற்செயிக்கப்
போகவேபடாதென்றுடன் பின்னையும்புகல்வார்.

(இ-ள.) ஆனபடியினலே வெகுபேர் யமனுனவர்களிலே அந்தச்சிவ னடியாராலே - போகபோக்கியங்கள்கிடையாமல் இறந்தார்கள் கங்காநீ ரைத் தலையிலேயுடைய கடவுள் பாதத்திலே அன்புகொண்டிருப்பவனை உம்மாலே ஜெயிப்பதற்கு நீர்போகக்கூடாதென்று உடனே பின்னுஞ் சொல்லுகிருர்—எ-று. (உங)

அன்னவாகனன்கருடவா கனனுமேயறியா
முன்னவன்றனையன்பதாய்ப் பூசைகண்முயன்று
தன்னைத்தானறிந்தவனையே தஞ்சமென்றெண்ணு
நன்னெறிக்குண நூலனை நாடொணுதென்றும்.

(இ-ள.) அன்னவாகனனுன பிரமனும் கருடவாகனனுன விஷ்ணுவுங் காணப்படாத முதற்கடவுளை அன்புடனே பூசைகள்செய்து தனதுஜீவ ஸ்வரூபத்தையுணர்ந்து சிவனையே கதியாகக்கொண்டுள்ள நன்மார்க்ககு ணனுன சிவத்தியானியை நீர்கிட்டப்போகாது—எ-று. (உச)

கயிலைநாயகன்கட்டளை யிட்டதுமறிவீ
ரியலுஞ்செய்கையு மீசுரபத்தியுமெவர்க்குந்
தயவுந்தன்மையுமாகிய சற்குணத்தவனை
யயர்வுசெய்திட லாகுமோவந்தகாநீயும்.

(இ-ள.) கயிலாசபதியானவர் முன்னே கட்டளையிட்டருளினபடியுந் தெரிவீர், இப்போது அவன் நடக்குநடக்கையும் சிவபக்தியும் யார்க்கும் தயவு தாக்ஷண்ணியமுமுள்ள அந்த உத்தமகுணத்தையுடைய மார்க்க ண்டனைச் சோரும்படிபண்ண எமனே உம்மாலாகுமோ நீரும் இதெல் லாம் அறிந்ததுதானே—எ-று. (உரு)

வேறு.

என்றிதுகூறிடமறலிமுகத்திலெரிப்பொறிசிந்திவிழக்
கன்றுமனத்தினன்மூதறிவானகணக்கனிடஞ்சொலுவான்
நன்றிதுபாரவன்பூசையுநேசமுநானழித்தேயவனைக்
கொன்றுயிர்கொண்டிவண்வருவனெனச்சிலகொற்றமுரைத்தெழுவான்.

(இ-ள்.) என்றுசித்திரபுத்திர ரிவ்வார்த்தைகள்சொல்ல யமனுடைய முகத்திலே நெருப்புப்பொறிசிந்தி உதிரக்கன்றினமனத்துடனே பெரிய புத்திமானான கணக்கெழுதுகிறவரைப் பார்த்துச்சொல்லுகிறான் யமன் என்னென்னில் நல்லது இனி என்சமர்த்தைப்பாரும் அவனுடைய சிவபூசையும் சிவபத்தியும் நான்போய்க் குலைத்து அவனைக்கொன்று அவனுயிரைப்பிடித்துக்கொண்டு இங்கேவருகிறேனென்று சில தனது சாமர்த்தியங்களைச் சொல்லிக்கொண்டெழுகிறான்—எ-று. (உசு)

அன்றுவிடைக்கொடியாளனெனக்குமளித்ததிகாரமதை
யின்றுவிலக்குவதியாவரென்னோடுமெதிர்ப்பவருண்டுசொலாய்
வென்றிடுவேனதுதிண்ணம்வையென்றுவெருக்கொளவேதனையுங்
கொன்றுவராமலிருந்திடிலெனதுகொடுந்தொழில்வீரமெனும்.

(இ-ள்.) அக்காலத்திலே கடவுளானவர் எனக்குக்கொடுத்த அதிகாரத்தை இப்போது தடுக்கிறவர்களார்- என்னுடனெதிர்க்கிறவர்களாருண்டு சொல்லும் நானெப்படியும்வெல்லுவேனிதுசத்தியமென்று நீரெண்ணும் இப்போது பயப்படும்படி அந்தச் சிறுபையனைக்கொன்று வராதிருந்தால் எனது கொடியசெய்கையான வீரம் என்னபெருமை யடையும்—எ-று. (உஎ)

வேறு.

இக்கணங்கடவூரேகி யிருபிறப்பாளன்றன்னைச்
சிக்கெனவுயிரைவாங்கித் திரும்புவேனில்லாவிட்டாற்
கைக்கணிபாசமென்ன கையினிற்சூலமென்ன
திக்கெலாமெமனென்றோதுஞ் செயமென்னவீரமென்ன.

(இ-ள்.) இந்தக்ஷணத்திலே திருக்கடவூருக்குப்போய் அந்தப் பார்ப்பாரப்பையனை விரைவிலே உயிரைப்பிடித்துக்கொண்டு திரும்புகிறேன் இல்லையானால் எனதுகையிலேகொண்ட பாசமென்னத்துக்கு மற்றொருகையிலே சூலமென்னத்துக்கு எட்டுத்திக்கும் எமனென்று சொல்வதான ஜெயந்தானென்னத்துக்கு வீரமென்னத்துக்குச்சொல்லும்-எ-று.

முன்னவனெனக்களித்த முனையதிகாரந்தன்னை
இன்னநாள்வேண்டாமென்ன வீசனாருரைத்திட்டாலும்
பின்னையுமெவர்களென்மே லெதிர்க்கினும்பிரமன்சேயை
மின்னியவுயிரைவாங்கி விரைவுடன்வருவனென்று.

(இ-ள்.) முன்னே அந்தச்சிவனானவர் எனக்குக்கொடுத்த முதன்மையான அதிகாரத்தை இக்காலத்திலே வேண்டாமென்று அந்தச்சிவனே சொன்னாலும் மறுபடியும் எவர்களென்மேலெதிர்த்தாலும் அந்தப்பிராமணப்பையனை அவனுடலில் விளங்குகிற வுயிரைப்பிடித்துக்கொண்டு விரைவிலேவருகிறேனென்றுசொல்லி—எ-று. (௨௯)

மேருவின்சாயைசூழ்ந்த மேதினிபண்டகோளஞ்
சீரியவிண்ணில்வாழு முயிர்களைச்செயிக்கவேதான்
சூரியவெனையல்லாது குறுக்கொருவியமனுண்டோ
பாரினிலெனக்குவேறு பகைவருமுண்டோசொல்லாய்.

(இ-ள்.) மகாமேருவினது நிழல்படுகிற உலகம் அண்டகோளம் சிறப்பான விண்ணுலகமுதலான இடங்களில்வாழுகின்ற வுயிர்களை ஜெயம் பண்ணுதற்கு மேலான என்னையல்லாமல் குறுக்கே ஒரு யமனுண்டோ உலகத்திலே எனக்கு வேறேயொரு பகைவருமுண்டோ சொல்லுவீர் சித்திரபுத்திரரோ—எ-று. (௩௰)

உமையொருபாகனாகி யொளிமுதலானசோதி
சமயநூலாயும்வேதப் பயலுக்குச்சார்பாய்வந்தா
லிமவரைமருகன்றன்னை யென்கைப்பாசத்தாற்கட்டி
அமைவுடன்வருவனென்றே யார்ப்பரித்தெழுந்தானேமன்.

(இ-ள்.) பார்வதியை ஒருபுறத்திலே கொண்டதுமன்றி ஒளிக்குக் காரணமாய் விளங்குகிற சுயஞ்சோதியான கடவுள் சமய சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டு அவ்வழியேசெல்லுகிற ஒரு பிராமணப்பையனுக்காக- உதவியாய் வருவாரானால் அப்படிவருகிற பருபதராஜன் மருமகனையும் என்கைப்பாசத்தாலே கட்டிக்கொண்டு என் அதிகாரப்படி வருகிறேனென்று ஆரவாரஞ்செய்துகொண்டு எமனெழுந்திருந்தான்—எ-று.()

ஆவினிலுதித்தபால னரனதுகணக்கன்றன்னை
மேவியவிடைகொண்டேகி விரைவுடனேவலாளைக்
கூவியேபகடுதன்னைக் கொணர்கெனச்சொல்லிப்பொல்லாப்
பாவிகளானசேனா பதிதனைப்பார்த்துச்சொல்வான்.

(இ-ள்.) காமதேனுவயிற்றிலேபிறந்த பிள்ளையாய் சிவனாலே நியமிக்கப்பட்டிருக்கிற சித்திரபுத்திரனை கணக்கனிடத்திலே தகுதியான உத்தரவுபெற்றுக்கொண்டு சீக்கிரத்திலே ஊழியகாரனைப்பார்த்துக் கூப்பிட்டு நமது வாகனத்தைக் கொண்டுவாவென்று பொல்லாதபாவிகளான தன்சேனாதிபர்களைப் பார்த்துச்சொல்லுகிறான் யமன்—எ-று. (௩௰௨)

பூமியிற்கடவூரேகிப் பூசுரனுயிரைவாங்கிக்
காமுகமாகவிங்கே கடுகியேவருவதற்குத்
தாமதமிலாமனீங்கள் தளங்களைத்திரளாய்க்கூட்டி
நேமியாயுதங்களோடே பெழுகெனநிகழ்த்துங்காலை.

(இ-ளா.) உலகத்திலே திருக்கடவூரென்கிற வூருக்குப்போய் அந்தப் பார்ப்பானுயிரைப் பிடித்துக்கொண்டு சந்தோஷமாக இங்கே சீக்கிரம் நாம் வரவேண்டியதற்காக நீங்கள் யாதொருதாமதமும் பண்ணுமல் உங்கள் சேனைகளை ஒரு சேரக்கூட்டிக்கொண்டு சக்கராயுதமுதலான ஆயுத வரிசைகளுடனே பிரயாணப்படுங்களென்று உத்தரவு செய்யுமளவில்()

தண்டுளகையர்கோடி சக்கரக்கையர்கோடி
மண்டுடைக்கையர்கோடி மழுவுடைக்கையர்கோடி
பிண்டிபாலங்கடம்மைப் பிடித்திடுங்கையர்கோடி
கண்டர்கோடாலிகுந்தங் கையறுவாளர்கோடி.

(இ-ளா.) கோடிதண்டாயுதக்கையர்களும், கோடிசக்கராயுதக்கையர்களும். கோடி மண்வெட்டிக்கையர்களும், கோடி மழுப்பற்றினகையர்களும், கோடி பிண்டிபாலங்கொண்டகையர்களும், கோடி கண்டர்கோடாலிக்காரர்களும், கோடிகைவேற்காரர்களும், கோடி கையறுவாட்காரர்களும்—எ-று. (௫௪)

சூலமும்வேலுங்கொண்டு வந்திடுந்தூதர்கோடி
கோலொடுகயிறுங்கொண்டு வந்திடுங்கொடியோர்கோடி
வாலநேரிசங்களீட்டி கொண்டிடுவார்கள்கோடி
யோலமென்றோலமென்று வருபவரொருநாற்கோடி.

(இ-ளா.) சூலாயுதங்களும்-வேலாயுதங்களும்-கொண்டுவருகிற தூதர்களொருகோடியும் தண்டாயுதத்துடனே பாசமுங்கொண்டுவருகிறபொல்லாதவர்களொருகோடியும் பிண்டிபாலநேரிசம் ஈட்டிகொண்டுவருகிறவர்களொருகோடியும் ஓ ஓ வென்று கர்ச்சித்துக்கொண்டுவருகிறவர்களொருநாலுகோடியுமாய்க் கூடினார்கள்—எ-று. (௫௫)

கடித்திடும்வேட்டைநாயைக் கைக்கொண்டுவருவார்கோடி
துடித்திடவுயிரைவாங்குந் துட்டநீலிகளுங்கோடி
அடித்திடுந்தடிக்கையாள ராம்பதுகோடிபேர்கள்
வெடித்தசொல்லுடையதூதர் விரைவுடன்வந்தார்கோடி.

(இ-ளா.) கடிக்கிற வேட்டைநாயைக் கையிலேபிடித்துக்கொண்டுவருகிறவர்கள் ஒருகோடியும் துடிதுடிக்க வுயிரைப்பற்றுகிற துஷ்டநீலிகளொருகோடியும் அடிக்கிறதடிகளைக் கையிலே யுடையவர்களொம்பது கோடியும் வெடித்தகுரலையுடைய தூதர்களொருகோடியும் அதிசீக்கிரத்திலேவந்து கூடினார்கள்—எ-று. (௫௬)

காளிகூளிகளுங்கோடி கடியகாட்டேரிமாவீரி
பாழிராக்கதிகள்வீர பத்திரர்துர்க்கைசூலி
மூளிகள்பூதப்பேய்கள் மூங்கையர்முரடர்கோடி
ஞாளிவாகனமேலேறி நளிர்வயிரவருங்கோடி.

(இ-ள்.) கோடிகாளிகளும் கோடிசூலிகளும் கொடுமையான கோடி காட்டேரிகளும்-கோடிமகாவீரிகளும்-பாழாய்ப்போகிற -கோடிராக்ஷதிகளும்-கோடிவீரபத்திரர்களும்-கோடிதுர்க்கைகளும் - கோடிசூலிகளும்-கோடிமூளிகளும்-கோடிபூதங்களும்-கோடிபசாசுகளும்-கோடிஊமையர்களும் - கோடிமுரடர்களும் - நாய்வாகனத்திலேறுகிற கோடிவயிரவர்களும் கூடினார்கள்—எ-று. (௬௭)

எரிகொள்ளிப்பேய்கள்கோடி யிருளனுமருளன்கோடி
பரியின்மேலேறும்வீரப் பசாசர்கள்கோடாகோடி
கரியின்மேலேறுமையன் கவந்தபூதங்கள்கோடி
துரிதமாய்வந்துசூழ்ந்தார் சூரியன்மகனார்பக்கல்.

(இ-ள்.) எரிகின்ற கொள்ளிவாய்ப்பசாசுகள் கோடியும் இருளனொரு கோடியும் மருளனொருகோடியும் குதிரைமேலேறிவருகிற வீரப்பைசாசர்களொரு கோடாகோடியும் யானைமேலேறுகிற ஐயன் அவனைச்சார்ந்த கவந்தரூபமான பூதங்கள்கோடியும் மிகவிரைவுடன் கூடினார்கள்யமனிடத்திலே—எ-று. (௬௮)

நிரைந்திடுஞ்சேனைதன்னை மறலியுநேரோபார்த்தவ்
வருந்தவச்சிறுவன்றன்மே லடங்கொணுக்கோபமாகி
வெருந்தழற்கட்டிவிழ வெவ்வியபாசம்பூண்டு
திருந்தியவுலகமெல்லாந் திடுக்கிடவெழுந்துபின்னை.

(இ-ள்.) அப்படி வரிசைவரிசையாய்வருகிற சேனைகளை யமன்பார்த்து அந்த அரிதான சிவபூசைபண்ணுகிற மார்க்கண்டர்மே லதிககோபங்கொண்டு அஞ்சத்தக்க நெருப்புப்பொறிகள்சிந்த வெப்பமான பாசக்கயிறுங் கையிலேகொண்டு தன்னாலே திருந்தியிருக்கிற வுலகங்களெல்லாம் திடுக்கிடும்படி கர்ச்சிதங்கொண்டெழுந்து பின்னும்—எ-று. (௬௯)

வேறு.

கருநிறங்கொண்டவெருமைமாட்டுயரங்கதித்தெழுமுழங்களோர்கோடி
பருமமைம்பதுநூறுயிரமுழமாம்பகிர்கொம்பீராயிரமுழமாம்
இருணிறப்பகட்டின்மிசையினிலேறி யெழுந்தனனெழுமுகிற்குலம்போ
லருக்கனார்பெற்றகொரேமாமறலியந்தரத்திடியெனவார்த்து.

(இ-ள்.) கரியநிறத்தையுடைய அவனேறுகிற எருமைமாட்டி னுயரமானது நீட்டியளக்கிறதான ஒருகோடிமுழமும் அதன்பருமனெவ்வளவென்றால் ஐம்பதுநூறுயிர முழமுமாம் இன்னமும் இருபுறத்திலுமுள்ள அம்மாட்டின்கொம்பினீளம் இரண்டாயிரமுழமுமான இருணிறமான எருமைக்கடாவாகனத்திலேறி யெழுந்தான் சூரியகுமாரனான மகாகொரனான யமதருமராஜன் ஆகாசத்திடிபோற் கர்ச்சித்து—எ-று. (௭௰)

கையினிற்சூலபாசமாங்கயிறுங்கண்டர்கோடாலியுமெடுத்து
மெய்களும்பொங்குமனமதுபதற விழிகளுங்கனலெனவிளங்கச், செய்ய

குஞ்சிகளுஞ்சிவேலெனவேர்வை தாரையாய்த்தேகத்திலொழுக, வெய்
யசேனைகளுமுன்பினுநெருங்கவிரைந்தனன்மார்க்கண்டனுயிர்க்காய்.

(இ-ள்.) கைகளிலே சூலமும் பாசக்கயிறும் கண்டர்கோடாலியும் கொண்டு உடம்பெல்லாம் பருக்க மனமானதுபதற கண்கள் நெருப்புப் போற்கொதிக்க சிவந்தமயிர்கள் சிவேலென்றுதோற்ற உடம்பிலே வேர்வை தாரைதாரையாயொழுக கொடிதான சேனைமுன்னும் பின்னும்வர மார்க்கண்டேயருயிரைப்பிடிக்க விரைவுகொண்டான் யமன்—எ-று. ()

முடிவுநாளொலியோபூமிகள்பிளந்தமுழக்கமோவிண்ணிடிந்ததுவோ
கடியதோரண்டம்விழுந்ததோவேழுகடல்களார்த்தெழுதலோவென்ன
முடுகியவிய்மன்சேனைகடாமுமுழங்கியேமுன்பினுமணுகப்
படியினிற்கடவூர்த்திசையதுநோக்கிநடந்தனன்பாலகனுயிர்க்காய்.

(இ-ள்.) முடிவுகாலத்து முழக்கமோ பூமிகள் எங்கெங்கும்பிளந்த சத்தமோ ஆகாசந்தானிடிந்துபோயிற்றோ கெட்டியான அண்டந்தானிடிந்து விழுகிறமுழக்கமோ ஏழுகடல்களு முழங்கிவருகிற சத்தந்தானோ வென்றஞ்சும்படி மிக்க விரைவுகொண்டுவருகிற யமனுடையசேனைகள் முழங்கிக்கொண்டு முன்னும்பின்னு நெருங்கிவர உலகத்திலுள்ள திருக்கடவூர்த்திசையைக் குறித்து வருகிறான் ஒருசிறுபிள்ளை உயிருக்காக.()

வடதிசையிருந்துபெரும்புறக்கடலினலையதுவருவதுபோலுங்
குடகடலிரைந்துவருவதுபோலுங்கொண்டல்களிரைவதுபோலு
மடைவுடன்யமன்றன்சேனைகள்சூழவவனியுள்ளேரொல்லாமயங்கத்
திடமுடனுரவாரித்துவந்தான்றிருக்கடவூரினிலேமன்.

(இ-ள்.) வடதிசையிலேயிருந்து பெரும்புறக்கடலின் அலைகள் பொங்கிவருகிறதுபோலவும் மேலைக்கடலிரைந்து வருகிறதுபோலவும் மேகங்கள் குமுறுகிறதுபோலவும் வரிசைவரிசையாகச் சேனைகள்சூழ்ந்துவர உலகத்தாரொல்லாமயங்கத் தயிரியத்துடனே அஷ்டகாசம்பண்ணிக்கொண்டு திருக்கடவூருக்கு எமன்வந்தான்—எ-று. (சரு)

எழுமுகில்சூற்கொண்டெழுந்ததுபோலுமிருட்கடல்வளைத்ததுபோலு
மழுவலரொழுந்ததிருக்கடவூரைவளைந்தனமாபெருஞ்சேனை
பழுதறுஞ்சண்டன்கருநிறவெருமைப்பகட்டினிலேறிமெய்பதைத்து
வழுவுறப்பூமிநடுங்கிடத்தேவர்மயங்கிடமுயற்சியாய்வந்தான்.

(இ-ள்.) ஏழுமேகங்களுங் கர்ப்பங்கொண்டெழுந்தாற்போலவும் இருட்கடல்வந்து சூழ்ந்தாற்போலவும் மழுவேந்தினகடவுளெழுந்தருளியிருக்கிற திருக்கடவூரை மிகப்பெரிதான சேனைகள்சூழ்தலாயின யாதொருதோஷமுமில்லாத யமதருமராஜன் நீலநிறமான கடாவாகனத்திலேறிக்கொண்டு உடம்பெல்லாம் படபடப்பாக உலகநிலைகுலைந்து நடுங்கும்

படி தேவர்களுமயங்கத் தான்செய்யவேண்டிய முயற்சிக்காகவந்து சேர்ந்தான்—எ-று. (௪௪)

கருநிறநீலக்கடாவின்மேன்மேகங்கலந்தொருவரைவரல்போல
வொருகையிற்சூலமொருகையிற்பாசமோங்கிடவிடியெனக்குமுறிப்
பருகியவடவைக்கனலெனச்சினந்துநூலனைப்பிடிபிடியெனவே
வருகிறவேமன்மிருகண்டன்பெற்ற மார்க்கண்டன்றனையுங்கண்டனனே.

(இ-ளை.) கரியநிறமுள்ள நீலக்கடாவாகனத்தின்மேலே மேகங்கள்கூடின ஒருநீலமலை வருகிறதுபோல் ஒருகையிலேசூலமும் ஒருகையிலே பாசமும்விளங்க இடிபோல்முழங்கிச் சுவாலிக்கிற வடவாக்கினிபோற் கொதித்து சிவத்தியானியைப் பிடிபிடியென்று வருகிற எமனானவன் மிருகண்டமாமுனிபெற்ற மார்க்கண்டேயனைத் தானும்கண்டான்-எ-று.()

உடலெலாம்பதறியுயிரொலாமயங்கியுள்ளமுநடுங்கிநாவறண்டு
படபடவெனவேசோர்ந்துகண்ணிருண்டு பயத்தொடுமெய்ம்மயிர்சிலிர்த்
கடவுளார்பூசைதன்னையுமறந்துகலங்கியைம்பொறிகளும்விமுந்து [துக்
விடமதையுண்டமனதுபோற்குழறிவிமலனைவணங்கியேபுகல்வான்.

(இ-ளை.) உடம்பெல்லாம் பதறுதலாய் உயிர்முழுதுமயங்கி மனமுநடுங்கி நாவும்வறண்டு படபடவெனச்சோர்வாகி கண்களுமிருண்டு பயத்துடனே உடம்புரோமங்கள் சிலிர்த்துசிவபெருமான்பூசையையு மறந்து ஐம்பொறிகளுங் கலங்கி நஞ்சுண்டவர்கள்போல் மனந்தடுமாறிக் கடவுளைவணங்கிச் சொல்லுகிறார் மார்க்கண்டேயர்—எ-று. (௪௫)

ஒருபுறம்பெண்ணுமொருபுறமாணுமுகந்தருள்முதல்வனேபோற்றி
திருநெடுமாலுமயனுடுதேடுஞ்சிவசிவாபராபரர்போற்றி
அருவுருவடிவேயாதிநாயகனேயைம்முகக்கடவுளேபோற்றி
பெருகியவமுதேவிடமதையுண்டபித்தனேமுத்திசாதனனே.

(இ-ளை.) ஒருபுறம் பெணவடிவாகவும் ஒருபுறம்ஆண்வடிவாகவும்உகந்தருளியிருக்கிற முதற்கடவுளேபோற்றி திருமாலும் பிரமாவும் தேடத்தக்க சிவசிவா பராபராபோற்றி, அருவடிவாகவும் உருவடிவாகவும்விளங்குகின்ற ஆதியானதெய்வமே ஐமுகக்கடவுளேபோற்றி, பெரிதான அமிர்தசொரூபி நஞ்சுண்ட பித்தா மோக்ஷத்துக்குக் காரணப்பொருளே போற்றி—எ-று. (௪௭)

சித்தனேதேவாபத்தர்தேசிகனேதெய்வமேகருணைவாரிதியே
மத்தகவுரியையணிந்துசெங்கரத்தின்மான்மழுத்தரித்தவாபோற்றி
வித்தகப்பொருளேவேதநாயகனேவிளக்கொளியானசிற்பரனே
யெத்திசையுலகுமுயிர்க்குயிராகியிருந்திடுமிறைவனேபோற்றி.

(இ-ளை.) சித்தரூபியே தெய்வமே பத்தர்களுக்குக்குருவானவனேதிவ்வியசுரூபியே கருணைக்கடலே யானைத்தோலையணிந்து சிவந்தகைகளில்மா

ளையும் மழுவையுந் தரித்தவனே ஞானப்பொருளே வேதநாயகனேவிள க்கொளியான சித்துவடிவே எந்தத்திக்கிலுமுள்ள உயிர்களுக்கெல்லாம் உயிராயிருக்கின்ற கடவுளே போற்றிபோற்றி—எ-று. (சஅ)

வேறு.

உனதுபதமறவாமனுயடியேனுடோறுமுகந்துநின்றேன்
மனமுழுதுங்கசடானமலப்பொதியன்மூழுப்பாவிவஞ்சகனுன [வா
எனதுபிழையறியாமற் செய்தாலும்பொறுத்தருளி யென்னையாள்
யுனதுதிருப்பதத்தடியிலென்னையிருத்துதிருக்கடவூருடையகோவே.

(இ-ள்.) உம்முடையபாதத்தை நாயடியேனுன நான் தினமுமறவா மல் விரும்பிக்கொண்டு நின்றேன் நானே முழுதும் அழுக்காக மல ச்சுமை சுமக்கின்றவன்முழுதும் பாவிவஞ்சகனுன என்னுடைய தோஷ த்தை நான் தெரியாமற்செய்திருந்தாலும் முழுதும் பொறுத்துக்கொண் டருளி என்னை அடிமைகொள்ளவேண்டும் உம்முடைய திருவடியிலே தானே என்னையிருத்திக்கொள்ளவேணும் திருக்கடவூராயுடைய சுவா மி—எ-று. (சகூ)

விண்ணுமண்ணுநிறைந்தகருமேகமெனக்கரும்பகட்டின்மீதிலேமன்
கண்ணெதிரேயென்னைப்பிடிக்கவருவதனுன்மெய்சோர்ந்துகளைத்துநின்றே
எண்ணுமலினிப்பிடிப்பானவனுமெதிரணுகியிட்டானினிவேறில்லை [ன்
அண்ணலேயப்பனேயென்னைக்காத்துக்கொண்டருள்வாயபயமையா.

(இ-ள்.) ஆகாயமும் பூமியுநிரம்பின கரியமேகம்போல் கறுத்த எரு மைக்கடாவாகனத்திலே ஏறிக்கொண்டு எமனுனவன் உம்முடைய கண் ணுக்குமுன்னே தானே என்னைப் பிடித்துக்கொண்டுபோக வருகிறதினு லே நான் உடம்பெல்லாஞ்சோர்ந்து களைத்துநிற்கிறேன் இனி அவன்ச ட்டைபண்ணுமல் என்னைப்பிடித்துக்கொண்டுபோகச் சமீபத்திலே வந் துவிட்டான் அவன் என்னைப்பிடிப்பதற்கு யாதொருதடையுமில்லை அ ண்ணலே அப்பனே இனிஎன்னை ரக்ஷித்துக்கொண்டருளவேணும் உம க்கேஅபயம் ஐயனே—எ-று. (ருo)

ஆதாரமொன்றுமிலையடியெனுக்குநீயல்லாலயல்வேறுண்டோ
தாதாவுமெனையீன்றதாயுந்தந்தையுநீயேதமருநீயே
காதகனுகியவியமன்கையினிற்சிக்காமலென்றன்கருத்தில்வைத்துன்
சீதமலர்ப்பதம்வணங்கவருள்புரிவாய்கடவூர்வாழ்தேவேபோற்றி.

(இ-ள்.) அடியேனுக்கு ஆதாரமொன்றுங் கிடையாது உம்மையல் லாமல் ஆதாரம் எனக்குவேறேயுண்டோ ஐயனே எனக்குத் தாதாவும் என்னைப்பெற்ற தாயுந்தகப்பனும் நீயே உறவினருநீயே காதகனுகியஎம ன்கையில் நான் அகப்படாமல் என்மனத்துள்ளே உமது குளிர்ந்தமலர் போன்ற திருவடிகளைவைத்து வணங்கும்படி தயவுசெய்யவேணும் திரு க்கடவூரிலே வாழுகின்ற தெய்வமே போற்றி போற்றி—எ-று. (ருக)

விஞ்சியிங்கேநெருங்கிவிட்டான்கைப்பாசமெறிவதற்குவினையம்பூண்டா
ன், தஞ்சமெனக்கொருவரில்லையுன்னையல்லால்வேறுகதிதான்வேறுண்
டோ, கஞ்சனார்சிரமரிந்துதஞ்சமென்றோரைக்காக்குங் கடவூர்த்தேவே
தஞ்சமென்றங்கலறிடக்கேட்டரன்விடைமேலுமையுடனே தானுந்தோ
ன்றி.

(இ-ள்.) தடையில்லாமலிங்கேவந்து நெருங்கிவிட்டான் அவன்இனித்தனதுகையிற் பாசத்தைவீசுவதற்கு உபாயமாய்வருகிறான் இனி உம்மையல்லாமல் எனக்கு வேறொருகதியுமில்லை பிரமாவினுடையதலையையரிந்து எல்லாரையுங்காக்கவல்ல திருக்கடவூரிலுள்ளதெய்வமே நீரேகதியென்று கூசலிடக்கேட்டுப் பரமசிவனானவர் இடபவாகனத்தின்மேல் ஏறிக்கொண்டு பார்வதிதேவியுந் தாமுமாக முன்னேவந்து—எ-று. (௫௨)

அலறிடுமார்க்கண்டன்முன்னேயஞ்சலெனக் கையமைத்தங்கவனைத்தே
ற்றிச், சிலைமதனையெரித்தபிரான்பாலகற்கு நெற்றியினிற்றிருநீறிட்டுக்
கொலைகாதகன்றனக்குப்பயப்படாதெதிர்வார்த்தைகொடுத்துநீயு
மலையாமலென்பதத்தையுன்கருத்திலேதினமுமமைத்திடென்றார்.

(இ-ள்.) அப்படி அலறுகின்ற மார்க்கண்டனுக்குமுன்னே பயப்படாதியென்று கையாலமைச்செய்து அவ்விடத்தே அந்தமார்க்கண்டனைத்தேறும்படிபண்ணி கரும்புவில்லையுடைய மன்மதனைத் தகனம்பண்ணின கடவுளானவர் அந்தச்சிறுபிள்ளையான மார்க்கண்டருக்கு நெற்றியிலே விபூதியணிந்து கொலைகாதகனான எமனுக்கு நீ சிறிதும் அஞ்சாமல் அவன்வார்த்தைக்கு மறுமொழிசொல்லி நீ அலையாமல் என்பாதத்தையே உன்மனத்திலே நாடோறுந் தியானித்துக்கொண்டிருவென்றார்—எ-று. (௫௩)

எம்மைநினைந்தேயிருக்குமெமதடியாரிடமணுகவெளிதோவந்த
வெம்மையன்வந்துனையதட்டவெருண்டிடாதவனெதிரேவீரமாக
நம்மிடத்தில்வரவேண்டாம்போடாவென்றுரையதற்குநடுங்கிடாமற்
கம்மிவருவானாகிலிடதுகாலாலுதைப்போங்காலன்றன்னை.

(இ-ள்.) என்னையே தியானித்துக்கொண்டிருக்கிற என் அடியாரிடத்திலே அவன் வரக்கூடுமோ அவ்வளவுஎளிதோ எளிதல்ல அல்லது அந்தக்கொடூரனான யமன்வந்து உன்னைமருட்டினால் நீபயப்படாமல்அவனுக்கெதிரே நீ திடமாகநின்று நீ என்னிடத்திலே வரவேண்டாம்போடாவென்று சொல்லு அதற்கவன் பயப்படாமல் நெருங்கி வருவானானால் நான் அந்தயமனை இடதுகாலாலுதைக்கிறேன்—எ-று. (௫௪)

வேதியனேமறலியவனுன்னிடத்தில்வரும்போதுவெருண்டிடாம
னீதியுடனெமைப்பூசைபுரிந்திடுநீமறவாதநேசமாகக்
காதகனைச்சட்டைபண்ணாதெதிர்த்துரைப்பாயவன்மீறிக்கனன்றுவந்தா
லேதமுடனவன்றோற்பானீஜெயிப்பாயிதுநிசமென்றெண்ணுவாயே.

(இ-ள்.) ஓப்பிராமணா அந்தயமனானவன் உன்னிடத்தில்வரும்போது பயப்படாமல் முன்கிரமப்படியே பூசைபண்ணிக்கொண்டிரு மறவாதஅன்புடனே அந்தக்கொலைகாரனை மதியாமல் எதிர்த்துப்பேசு அவன்மிஞ்சி உன்மேற் கோபங்கொண்டுவந்தால் அவனே அதிகதுன்பத்துடனே உனக்குத் தோல்வியாவான் நீயே ஜெயங்கொள்ளுவாய் இதுமெய்யென்றெண்ணிக்கொள்—எ-று. (டுடு)

சிவனடியானென்றெண்ணிப்பாராமலுன்முன்வந்துதிடுக்கஞ்செய்தால்
அவன்றனையென்சூலத்தாலலறிடவேகுத்தியுதைத்தழிப்பேன்கண்டாய்
கவனமதாய்ப்பூசைபுரியென்றுகடவூரிறைவர்கரந்துபோகத்
தவமகிமையுடையசிறுபாலனெனுமார்க்கண்டன்றளர்ச்சிநீங்கி

(இ-ள்.) உன்னைச்சிவனடியானென்று நினையாமல் உன்முன்னேவந்து திகிலுண்டாக்குவானானால் அவனை என்சூலத்தினாலே அலறும்படிகுத்தி உதைத்துக்கொல்லுகிறேன் நீ நினைவுதப்பாமல்பூசைபண்ணிக்கொண்டேயிருவென்று திருக்கடவூர்க்கடவுளானவர் மறைந்துபோக சிவபூசை மகத்துவத்தையுடைய சிறுபிள்ளையான மார்க்கண்டேயர்சோர்வுதீர்ந்து—எ-று. (டுசு)

எம்பிரான்மலரடித்தாளிருபிறப்பான்மன்மகிழ்வோடேத்திப்பூசை
அன்புடனேவழுவாமலஞ்செழுத்தைநெஞ்சினில்வைத்தமருங்காலை
வெம்பிமிகப்பற்கடித்துக்கரும்பகடூர்ப்பரித்துவெருட்சியாக
வம்பிகைபாகனைவணங்குமந்தணனைவந்தவனுமடர்ந்தானன்றே.

(இ-ள்.) எமது கடவுளுடைய தாமரைமலர்போன்ற பாதங்களை அந்தப் பிராமணப்பிள்ளையானவர் மனமகிழ்ச்சியுடனே துதித்துச்சிவபூசையைப் பத்திகொண்டு தப்பாமல் அந்தப் பஞ்சாக்ஷரத்தை மனத்திலே தியானித்துக்கொண்டிருக்கும்போது மிகவும் வெப்பங்கொண்டு பல்லைக்கடித்துக் கறுத்த எருமைக்கடாவாகனனான யமன் அஷ்டகாசம்பண்ணி மார்க்கண்டர் பயப்படும்படி பார்வதிசமேதரை வணங்குகிற பிராமணப்பிள்ளையை நெருங்கிவந்து வருத்தத்தொடங்கினான்—எ-று. (டுஎ)

சிறுவேதன்சிவபூசைமகிமைத்தீயவனிடதேசென்றுபோந்து
மறலிதனைச்சுட்டதினான்மறுகியவன்வெருண்டோடிமதிலுக்கப்பாற்
கறுவியேயின்னுமெலித்துக்கடுகடுத்துக்கோரமுடன்கனல்போற்சீறி
முறுவலுடனேபார்த்துச்சிரமசைத்துப்பற்கடித்துமொழியலுற்றான்.

(இ-ள்.) அந்தச்சிறுபிள்ளையானவருடைய சிவபூசை மகிமையாகிய நெருப்பு-அந்த யமனிடத்தேபோய் நெருங்கி அந்தயமனைச் சுட்டதினாலே அந்த யமன்மயங்கிப் பயந்தோடி அந்தமதிலுக்கப்பாற்போய்நின்று பின்னும் அதிககோபங்கொண்டு கர்ச்சித்துக் கடுகடுப்பாகப் பார்க்கப் பயப்படும்படியான ரூபத்துடனே நெருப்பைப்போற்சீறி-புன்சிரிப்புட

னே மார்க்கண்டரைப்பார்த்துத் தன்தலையை அசைத்துப் பல்லைக்கடித்துச்சொல்லுகிறான்—எ-று. (௫அ)

அந்தணனேயுன்றனக்குப்பதினாறாண்டின்றளவேயாச்சுதென்றே
எந்தனுடைக்கடுந்தூதர்நீலியர்கள்வந்திடத்தேயெதிரியாகச்
சுந்தரனைப்பூசைசெய்துசுகமாகநீயிருந்தாற்சும்மாபோமோ
வந்தெனடாநானுனதுவலுக்கணடவாதினிநீவாடாவென்று.

(இ-ள்.) ஓ பிராமணா உனக்குப் பதினாறுவயதாச்சுது இன்றளவிலேயென்று என்னுடைய கடியதூதர்கள் நீலிகள்வந்தபோது-நீ-அவர்களுக்கெதிரியாகச் சிவபூசைபண்ணிக்கொண்டு சுகமாகஇருப்பையானால்-யமவாதை உன்னிடத்திலேவராமல் விட்டுவிடுமோ இதோநானேவந்தேன் அடா இனி உன்னுடைய சாமர்த்தியங்களொன்றுநடவாது - நீ வாடாவென்று பின்னும்—எ-று. (௫௯)

சுடுகெனவேயெழுந்திருடாமார்க்கண்டாநீசிவனைக்கடியபூசை
முடுகிவலுவாகநின்றால்முடிந்தவயதேறிடுமோமுன்னேன்சொல்லால்
விடுவதில்லையுன்னாணையரனாணைவேலவர்தன்னாணையாகப்
படுவதினியல்லாமலிருக்கிறதேதடாவேதப்பயலேயென்றான்.

(இ-ள்.) சீக்கிரமாயெழுந்திருடா அடாமார்க்கண்டா நீ சிவனைக்குறித்துக் கடுமையானபூசையை விரைந்து செய்துகொண்டு அந்தப்பலத்தினாலே நின்றால் முடிவானவயது இன்னமுண்டாகுமோ அந்தச்சிவன்வாக்கின்படி உனக்குவயது முடிந்துபோனதினாலே நான்உன்னைவிடமாட்டேன் உன்னாணைசிவனாணை முருகக்கடவுளாணையாக இனிச்சாவாயேயல்லாமல் இருக்கிறதுண்டா அடேபிராமணப்பயலே யென்றான்-எ-று.

கரும்பகடன்றென்றிசையோனிவ்வாறுகழறிடவேகடவுளாரை
விரும்புமருந்தவன்பார்த்து மறலிதனைச்சினந்தொருசொல் விளம்பலுற்றான், அரும்பாவிபெரும்புலையாவாரடாவதட்டுகிறவசடாதுஷ்டா [ம்.
துரும்பேயுன்னாண்மையெல்லாஞ்சிவனடியார்தவாக்கினியாற்சுடுநீறாகு

(இ-ள்.) கறுத்த எருமைக்கடாவாகனனான தென்றிசைக்கடவுளாகிய எமன் இப்படிச்சொல்லவே சிவனையே நம்பிப் பூசைபண்ணுகிறமார்க்கண்டரானவர் அந்தயமனைப்பார்த்து ஒருசொற் சொல்லுகிறார் என்னவென்றால் தீர்தற்கரிதான பாவியாகிய பெரியநீசா நீயாரடா என்னை அதட்டுகிற அசடனே துஷ்டா அடாதுரும்பே உனது ஆண்மைகளெல்லாம் சிவனடியார்கள் தபாக்கினியினாலே சுட்டசாம்பல்போலாகும் ()

அறக்கொடுமைக்காராகேளந்தகனேயென்றன்முன்னேபஞ்சாமற்றான்
சிறக்கநின்றுபேசினையேயுன்றனக்குச்சிவனடியார்தியங்குவாரோ

பறக்கடிப்பேனென்றுநீபறையாமற்போமுரடாபவுசுகெட்டோா
யிறக்கவினிச்செய்திடுவேனிங்குநில்லாதுன்னிடத்துக்கேகுவாயே.

(இ-ள்.) மிகவும் கொடுமைக்காரனை எமனேகேள் எனக்குமுன்னே நீபயப்படாமல் மிகவுங்கருவத்துடனே நின்றுபேசினையே அதனுல் உனக்குச் சிவனடியார் பயப்படுவார்களோ இதோ உன்னைப் பஞ்சுப்போற் பறந்தோடும்படிபண்ணுவேன் அப்படி நான்பண்ணுமுன்னே நீ ஒன்றும் பிதற்ருமல் ஓடிப்போடாமுரடா பவுசுகெட்டவனே இனிஉன்னைச் சாவும்படியேபண்ணுவேன் ஆகையால் இவிடத்தினில்லாமல்உன்னிடத்துக் கோடிப்போ—எ-று. (௬உ)

என்றுமறைக்குலனியம்பவேமன்முனிந்தார்ப்பரித்துமிடிகள்போலக்
குன்றிநிறமனையவிழிதனினெருப்புப்பொறிகள்சிந்தக்கூவிச்சீறி
நன்றுநன்றென்றுநகைத்துப்பற்கடித்துமதட்டிவெகுநடுக்கமாக
அன்றுபுரமெரித்தவனைப்பூசைபுரிநூலனைப்பார்த்தறையலுற்ருன்.

(இ-ள்.) என்று பிராமணகுலத்துமார்க்கண்டர்சொல்ல எமனுனவன் கோபங்கொண்டு இடிபோல்முழங்கி குன்றிமணிபோலுங் கண்களிலே நெருப்புப்பொறிகள்சிந்தும்படி கூப்பிட்டுச் சீறி நல்லது நல்லதென்று சிரித்து பல்லைக்கடித்து அதட்டி மார்க்கண்டர்மிகவும்பயப்பட பார்த்துச்சொல்லுகிருன்—எ-று. (௬௩)

உன்னுயிரையிக்கணமேசூலத்தாற்குத்தியமபாசத்தாலே
சின்னபின்னமாகவுன்னைக்கட்டியெமலோகம்போய்ச்சேர்வேன்யானு
முன்னதமாய்ப்பேசாதேயுனக்காகத்திருக்கடவூருடையநாத
னென்னசெய்யலாமவராலெப்படியுங்கொடுபோவதெண்ணந்தானே.

(இ-ள்.) அடாமார்க்கண்டா வுன்னை இந்தச்சூலத்தாலேகுத்திக்கொன்று இந்தக்ஷணத்திலே உன்னைச்சின்னபின்னம்பண்ணி என் பாசத்திலைலேகட்டிக்கொண்டு யமலோகம்போய்ச்சேருவேன் இந்தத் திருக்கடவூரிலேயிருக்கிறகடவுள் என்னையென்னபண்ணக்கூடும் நீ அதிகமாகப்பேசாதே எப்படியும்உன்னைக்கொண்டுபோகிறதேஎன்மனநினைவு-எ-று

அல்லவடாசிறுபயலேதிருக்கடவூருனக்குவலுவாயிற்ருேவச்
சொல்லரியபொருணுதன்றுணையுண்டோவினியுனக்குச்சும்மாவாடா
நல்லதடாவெவர்சலிகையானுலுமெனக்குமுன்னேநாடொண்ணுது
கல்லைபண்ணுதேயெழுந்துவாடாமார்க்கண்டாநீகடுகத்தானே.

(இ-ள்.) நீ சொல்லுகிறது சரியானதல்ல அடாசின்னப்பயலே திருக்கடவூர் உனக்குநிலையோ இதிலுள்ள சொல்லுக்கடங்காதபொருளான கடவுள் உனக்குத்துணையாவாரோ நீபேசாமல்வாடா நல்லது யாவர் உதவியாய்வந்தாலும் எனக்குமுன்னே வரக்கூடுமோ நீ வீணுனசச்சரவு செய்யாதை மார்க்கண்டா சீக்கிரமாயெழுந்துவாடா—எ-று. (௬௫)

எழுந்திருடாசிறுபயலேயெறிபாசந்தனைச்சுழற்றியெறிவேன்பாரென்
றழுந்திவலுவாய்ப்பேசியார்ப்பரித்துக்கிட்டவந்தேயதட்டிச்சீறிச்
சுழுந்தனல்போற்பாலகனைச்சுற்றியவன்சூழ்ந்துகொண்டு சொல்லவேத
க், கொழுந்தனமார்க்கண்டேயரரனடியைமனத்திருத்திக்கூறலுற்றார்.

(இ-ள்.) அடாசிறுபயலே எழுந்திரு நான் வீசத்தக்கபாசத்தை உன்மேலேசுழற்றிவீசுவேன்பாரென்று அழுத்தமாகக் கெட்டியாகப்பேசிஅஷ்டகாசம்பண்ணிக் கிட்டவந்து பின்னும் அதட்டிக்கோபித்துச் சுழுந்து நெருப்பைப்போல அந்தப்பாலனைச்சூழ்ந்துநின்றுகொண்டுசொல்ல அதற்குவேதக்கொழுந்துபோன்ற மார்க்கண்டர் சிவனதுபாதத்தைமனத்திலேதியானித்துக்கொண்டு சொல்லுகிறார்—எ-று. (கூகா)

வேறு.

வருகிறேனென்றுயென்முன்வந்திட்டாலுனக்குமோசம்
வருமிதுகெடுதிக்காலமானதாற்சிவனைநிந்தை
பெருமையாய்ச்சொன்னாய்போடாபிழைப்புனக்கில்லைபேதா
யருமைமாதவர்கள்பக்கமணுகிடாதகனீமூடா.

(இ-ள்.) நான்வருகிறேனென்று யென்முன்னே நீவந்தாலுனக்கு மோசம் உடனேவரும் இப்படிப்பட்டகெடுதிக்காலம் உனக்குவந்ததனாலே சிவதூஷணைபண்ணுகிறாய் உன்பெருமையை நீ பேசிக்கொள்ளாமல்விலகிப்போடா, போகாயானா லினியுனக்குப் பிழைக்கவகையில்லை அடா அறிவில்லாதமூடா அருமையான சிவனடியார்களிடத்திலே நீ வாராதே—எ-று. (கூஎ)

என்றனைப்பிடிப்பேனென்றுமென்முன்னேயணுகிவந்து
மென்றனைத்தொட்டாயானாலிறந்துநீபடுவாய்பாவி
குன்றவில்லியனார்கண்டாற்கொலைமழுவாலேயுன்னைக்
கொன்றிடவருமுன்னோடிப்பிழைத்துப்போ கொடுஞ்சண்டாளா.

(இ-ள்.) என்னைப் பிடிக்கிறேனென்று என்முன்னே நெருங்கிவந்து என்னைத்தொட்டாயேயானால் இறந்துபோவாய்நீ அடா பாவி மலையைவில்லாகக்கொண்டகடவுள் உன்னைக்கண்டால்கொல்லுகிறமழுவினாலே கொல்லுமுன்னேநீதப்பிப்பிழைத்துஓடிப்போடாகொடியசண்டாளா ()

அரியினுக்கெதிரோவீன வரக்கர்தானவர்கள்வானோர்
சரியெனவாவரோநற் றவமிலார்துறவிலாதோர்
பெரியதோர்வேந்தன்றன்னைச் சரியெனப்பேசுவாரோ.
பரசிவனடியாருன்னைச் சரியெனப்பகருவாரோ.

(இ-ள்.) ஈனரானராக்ஷதர்களும் அசுரர்களும் விஷ்ணுவுக்குச்சரியாவார்களோ, அல்லது தேவர்கள்தான் சரியாவார்களோ, நல்லதவஞ்செய்யாதவர்களும் துறவையடையாதவர்களும் பெருமைகொண்ட அரச

னுக்கு நேராவார்களோ அப்படிப்போல் பரமசிவனடியார்கள் உன்னை த்தங்களுக்குநேராகவெண்ணுவார்களோ—எ-று. (௬௯)

ஆகையாலெனக்குமூடவந்தகாவற்பனுவாய்
வேகமாயென்மேனீயும் விஞ்சிவந்திட்டாயானுற்
றோகைபாகன்றன்பாதந்தொழுதிடுமடியானென்றே
யேகிடுபயமில்லாமலெய்தினுலிறப்பாய்திண்ணம்.

(இ-ள்.) ஆனபடியினுலே மூடனானஎமனே எனக்குநீ இளைத்தவனுவாய் அல்லதுன்வேகத்துடனே என்மேல் நீமிஞ்சி ஆலோசியாமல்வந்தாலென்ன இவன் சிவனைவணங்குகின்ற அடியானென்றெண்ணிக்கொண்டு திரும்பிப்போ பயமில்லாமல் என்னிடம்வந்தால் நீமெய்யேசாவாய்—எ-று. (௭௰)

சண்டனேயென்முன்வந்துதர்க்கமிட்டதட்டிவாராய்
திண்டிமிண்டாகப்பேசுந் திறமையுங்கலங்கச்செய்தே
அண்டகோளத்தின்மட்டுமெடித்துனைத்துரத்துகிற்பேன்
மிண்டிடாதேநீபோடாவென்றருமறையோன்சொல்ல.

(இ-ள்.) அடா எமனே நீயென்முன்னேவந்து தர்க்கஞ்செய்து அதட்டிக்கொண்டுவருகிறுய் நீகிரமத்தப்பிதமாகப் பேசுகிற சாமர்த்தியமெல்லாங்கலங்கப்பண்ணி இந்தஅண்டகோளத்துக்கப்பாலுமோடும்படி உன்னை அடித்துத்துரத்துவேன் யாதொன்றும் பேசாமல் ஓடிப்போடாவென்று மார்க்கண்டேயர்சொல்ல—எ-று. (௭௧)

ஈதுரைபுகுதவேமனிருசெவிக்கனலாய்ப்பற்றி
மோதுகாரிடிகள்போலமூவுலகதிரச்சீறி
யோதியபாலன்றன்னையுறுக்கியேநெருக்கிவந்து
சூதினுலிருள்போன்மூடிவலைதனைச்சூழப்போட்டு.

(இ-ள்.) இந்தவார்த்தை எமன்காதுகளிலே தீப்போனுழையக்கேட்டு ஆகாசத்திலேயுலாவுகிற மேககர்ச்சிதம்போல மூன்றுலோகங்களும் நடுங்கக்கோபங்கொண்டு அப்படிச்சொன்ன மார்க்கண்டேயனைப்பார்த்துக் கிட்டிநெருங்கிவந்து தனதுமாயச்செய்கையினுலே இருள்போற்கவிந்து வலையைச்சுற்றிவீசி—எ-று. (௭௨)

கரும்பகடதனைவிட்டுமிறங்கியேகயிற்பாசம்
விரும்பியேயெடுத்துவீசிவிமலனைநிகாரிப்பாக
அரும்பொருளானசோதியாலயத்திருள்போன்மூடிப், பெரும்பதமுடையோன்முன்பாய்த் தோன்றினன்பிறங்கல்போல்வான்.

(இ-ள்.) கறுத்த எருமைக்கடாவாகனத்தைவிட்டிறங்கிக் கையிலேகயிறுகொண்டுவீசிக்கடவுளைச்சட்டைபண்ணுமல்இந்தஅரும்பொருளாகியகடவுள் கோயில்முழுதும் இருள்போற்கவிந்து சூழ்ந்து அந்தப் பெரி

தான சாமீப்பியகதியைப்பெற்றிருக்கிற மார்க்கண்டேயர்முன்னே மலை போல்வந்தான் யமன்—எ-று. (௭௩)

கருமலைபோலநின்று வாயினைத்திறந்துகண்க
ளெரியெழப்பற்கடித்துமிடியெனவார்ப்பரித்தும்
பருகிடவருவான்போலவானமும்படியுமொக்கப்
பெருகியவுருவுகொண்டுபாலனைப்பிடிக்கவந்தான்.

(இ-ள்.) ஒருநீலமலைபோல் முன்னேநின்று வாயைத்திறந்து கண்களிலே நெருப்புப்பொறிபறக்கப் பல்லைக்கடித்து இடிபோல்முழங்கி எடுத்துவிழுங்கவருகிறவன்போல் ஆகாயமும் பூமியும் எங்குமொன்ருகப்பெரிதான உருவைக்கொண்டு அந்த மார்க்கண்டேயரைப்பிடிக்க நெருங்கினுன்—எ-று. (௭௪)

வந்திடமார்க்கண்டேயர் மனமதுகலங்கிவாடி
நைந்துகோளரவைக்கண்டதேரைபோனடுங்கிச்சோர்ந்து
தந்தையுந்தாயுமில்லாத் தனையன்போற்றனியனுகி
யெந்தனைக்காப்பாரில்லையென்றுடன்மறுகுங்காலை.

(இ-ள்.) அப்படிவரவே மார்க்கண்டேயர் மிகவுமனங்கலங்கி வாட்டமாயுருகிப் பெரியபாம்பைக்கண்ட தவளையைப்போல் நடுங்கிச் சோர்வுண்டாகித் தகப்பனுந் தாயுமில்லாத பிள்ளையைப்போல் தானெருவரோயாய் ஐயோ என்னைக்காப்பவர்க ளொருவருமில்லையேயென்று அங்ஙனே மயங்குகிறபோது—எ-று. (௭௫)

தும்பையோடறுகுகொன்றை சூடியசடிலரான
சம்புசங்கரனுர்வந்து மறையவன்றளர்வைநீக்க
வெம்பிரானீசன்கோயிற் பூசைகளியற்றுகின்ற
நம்பியாருருவுகொண்டு நடுவன்முன்றேன்றிக்கூறும்.

(இ-ள்.) தும்பைப்பூவுடனே அறுகும் கொன்றைமாலையுஞ் சூடின ஜடையையுடையவரான சம்புவாகிய கடவுளானவர்வந்து மார்க்கண்டர் துன்பத்தைப்போக்குதற்காக நமதுகடவுளான அவருடைய கோயிற்பூசைசெய்கிற குருக்க ளுருவுகொண்டு யமனுக்குமுன்னேவந்து சொல்லுகிருர்—எ-று. (௭௬)

எப்பதியெந்தவூர்நீ ரெங்கிருந்தெங்குவந்தீ
ரிப்பதிபுகுந்ததென்ன விவனிடஞ்சார்வதென்ன
அப்பனேயென்றுநீற்றை யவன்கையிற்கொடுக்குங்காலைக்
கப்பிக்கொண்டிருந்தவந்தக் காரிருளுருவமாறி.

(இ-ள்.) நீர் எந்தநாடு-எந்தவூர்-நீரெங்கேயிருந்து எங்கேவந்தீர் இந்த வூருக்குள் வந்தகாரியமென்ன வந்தாலு மிவனிடத்திலே போகவேண்டியதென்ன ஐயனேயென்றுசொல்லி விபூதியை அந்தயமன்கையிலேகொடுக்கும்போது அதற்கு அவன்மூடிக்கொண்டிருந்த அந்தக்கறுத்த இருள்வடிவுமாறி—எ-று. (௭௭)

மானிடவடிவமாகி மறைக்குலன்மாமன்போலக்
கானகமாடுமெங்கள் கண்ணுதன்முன்பதாக
நானிவன்றாய்க்குமுன்னோ னிவனுநம்மருகனாகு
மானதால்வரலாறெல்லா மடைவுடன்மொழியக்கேண்மின்.

(இ-ள்.) மனிதவடிவுகொண்டு அந்தமார்க்கண்டருடைய தாய்மாமன் போல் சுடுகாட்டிலே நிருத்தஞ்செய்கிற எங்கள்சிவபெருமான்முன்னே நானே இவனுடைய தாய்க்குமூத்தவன் இவன் எனக்குமருமகன் ஆகையால் நடந்தகாரியங்களைக் கிரமமாய்ச் சொல்லுகிறேன் கேளும் குருக்களே—எ-று. (எஅ)

உத்தரதிக்கிற்பேரூ ருத்தரநகரமாகு
மத்தலம்விட்டுவந்தே னிவனுடையன்னைதந்தை
மெத்தவுமன்பதாக விருந்துகள்செய்தபோது
தத்தைநேர்மொழியாளீன்ற தனயனைக்காணாதாலே.

(இ-ள்.) வடதிக்கிலே பேரூரென்கிற வூருக்குவடபுறத்திலே எங்களூர்வடவூர் அதைவிட்டு இங்கேவந்தேன் இவனுடையதாய்தந்தைகள் மிகவும் பிரியத்துடனே எனக்கு விருந்துசெய்தார்கள் நான் சாப்பிடப்போகிறபோது கிளிபோலுஞ் சொல்லையுடைய எனது தங்கைபிள்ளையான இவனை நான் அங்குக்காணாமையாலே—எ-று. (எகூ)

என்னுடைமருகனெங்கே யென்றுநானவனைக்கேட்கத்
தன்னுடனடுங்கிச்சிந்தை தளர்ச்சியாய்க்கண்ணீரோட
என்னுடன்பிறந்தமாது மைத்துனனிவர்கடுன்ப
மன்னியென்றனக்குமெத்த வருத்தமாய்மொழியலுற்றார்.

(இ-ள்.) என்னுடைய மருமகனெங்கேயென்று நான் அவர்களைக்கேட்கும்போது அவ்விருவரும் உடல்நடுங்கி மனந்தளர்வாய்க் கண்ணீரொழுக என் உடன்பிறந்தாளும் மைத்துனனுந் துன்பங்கொண்டு என்னுடன்மிகவும் வருத்தங்கொண்டு சொன்னதென்னவென்றால்—எ-று. (அ௦)

அண்ணரோயென்வயிற்றி லருமையாய்ப்பிறந்தசெல்வன்
எண்ணிலஞ்சாண்டுதன்னி லெங்கள்சொல்லிகழ்ந்துமந்த
விண்ணவர்க்கரியோனான விமலனைப்பூசைசெய்ய
நண்ணியேகடவூருக்கு நடந்தனனென்றுபின்னை.

(இ-ள்.) அண்ணா என்வயிற்றி லிருந்து மிகவும் அருமையாய்ப்பிறந்தபிள்ளையானவன் யோசிக்குமிடத்தி லஞ்சுவயதிலே எங்கள்பேச்சுக் கேளாமல் அந்தத்தேவர்களுக்குங் கிட்டாத சிவனைப் பூசைபண்ணுதற்கு திருக்கடவூருக்குப்போனான் பின்னும்—எ-று. (அக)

இல்லிடம்வாரதில்லை யெங்கள்சொற்கேட்பதில்லை
அல்லினும்பகலினும்வந் த்ரும்பசிதீர்வதில்லை

நல்லதோர்சுற்றத்தோடு நட்புடனிருக்கையில்லை
செல்வத்தைப்பார்ப்பதில்லை திருக்கடவூரோசென்றான்.

(இ-ள.) நம்முடைய கிரகத்துக்கு வருகிறதேயில்லை எங்கள்சொல்லு ங்கேட்கிறதேயில்லை இராத்திரியாவது பகலாவதுவந்து அரிதான பசித்தி ரச் சாப்பிடுகிறதுமில்லை நமக்கு நன்மைசெய்கிற ஒரு பந்துக்களோடா வது உறவாகிறதுமில்லை ஐசுவரியங்களையும் பராமரிக்கிறதில்லை திருக்க டவூர்க்கோயிலே கதியானான்—எ-று. (அஉ)

ஆகையாலெங்கள்சொல்லை யன்புடன்கேளான்பக்க
மேகியுன்மருகன்றானுஞ் சிவாலயத்திருப்பான்கண்டு
வாகுடன்றயவாய்ச்சொல்லி வரவழைத்துன்னூர்க்கேகித்
தாகமாய்நீதானீன்ற தையலைக்கொடுப்பையாகில்.

(இ-ள.) தாய் தகப்பனுன எங்கள்பேச்சைக் கேளாதவனாயிருக்கிறான் உன்மருமகன் அவன் அந்தச்சிவன் கோயிலிலேதானிருக்கிறான் ஆகை யாலே நீபோ யவனைக்கண்டு நல்லதனமாகப் பிரியமாக வரச்சொல்லிக் கூப்பிட்டு உங்களூருக்குக் கூட்டிக்கொண்டுபோய் நீ பெற்றபெண்ணைக் கலியாணம்பண்ணிக்கொடுத்தாயானால்—எ-று. (அ௩)

அவ்வழிப்படுவானென்ற னண்ணரோயேகியுன்றன்
செவ்வியமருகன்றன்னைத் திடமுடன்கூட்டிப்போவென்
றெவ்வியென்பின்னாளோடு மைத்துனனுகந்துசொன்னான்
வெவ்வியகோபமாக விரைந்துநான்றேடிவந்தேன்.

(இ-ள.) அந்தக்கிரகஸ்தா சிரமத்திலேநிற்பான்-என் அண்ணனே நீ போய் உன்மருமகனைப் பலாத்காரஞ்செய்தாவது கூட்டிப்போவென்று சம்மதியாய் என்தங்கையும் என்மைத்துனனும் மிகவும் பிரியத்துடன் சொன்னார்கள் ஆகையால் இவன்மேல அதிககோபங்கொண்டு அதிசீக் கிரமாக நான் தேடிக்கொண்டுவந்தேன்—எ-று. (அச)

வந்தெனைப்பார்த்தானில்லை வந்ததென்னென்றானில்லை
வந்தடிபணிந்தானில்லை மாமனென் றுகந்தானில்லை
சிந்தையிலன்புகொஞ்ச மாகிலுஞ்செய்தானில்லை
பந்தமில்லாதான்செய்த வியல்பதைப்பார்த்திடீரோ.

(இ-ள.) அப்படிவந்த என்னைப்பார்க்கவுமில்லை நீர் வந்தகாரியமென் னவென்று விசாரிக்கவுமில்லை, வந்து என்னை வணங்கவுமில்லை மாமனெ ன்று கண்டு சந்தோஷப்படவுமில்லை, மனத்திலேகொஞ்சமாயிலும்அன் புகொண்டதுமில்லை இப்படியாதொருஉறவுமில்லாத இவனுடையகுண த்தை நீரோபாரும்—எ-று. (அ௫)

இப்பிழைபொறுத்துநானு மென்றங்கையீன்றதாலே
நட்புடனழைத்தேனென்மே னயமிலாதெனையிகழ்ந்த

தப்பிதப்பயலோனாஞ் மினியென்னதகவுசெய்வே
னப்பனைப்பூசைசெய்யு மையரோகேட்கிலீரோ.

(இ-ள.) இப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் என் தங்கைபிள்ளையா கையாலே நான் உறவுகொண்டு கூப்பிட்டேன் என்மேல் யாதொருவிரு ப்பமுங்கொள்ளாமல் என்னை யிகழ்ந்துபேசித் தப்புச்செய்த இந்தப்பை யனுக்கு இனி யென்ன நன்மையைச்செய்வேன் சிவனைப்பூசைசெய்கிற ஐயரோ நீர்தா னென்னவென்று இவனை விசாரிக்கலாகாதா—எ-று.(அசு)

இன்னமுமென்கூடத்தா னியல்புடன்வந்தாலர்ச்சு
நன்னயம்பேசிக்கொண்டு நான்வாரதில்லையென்று
லின்னல்செய்திழுத்துக்கட்டி யடித்துநானிவனைத்தள்ளி
யென்னகர்போவேனென்று வெமனிவைபுகன்றகாலை.

(இ-ள.) இனிமேலாவது என்கூட நல்லதனமாகவே வந்தாலர்ச்சுது வராமல் இப்படி வினோதங்களைச் சொல்லிக்கொண்டிருப்பானேயானல் நான் இவனைத்துன்பப்படுத்திக் கட்டியடித்து இழுத்துத் தள்ளிக்கொண் டு என்னுடைய ஊருக்குப்போவேனென்று எமன் இப்படிச்சொல்ல.()

நான்மறைதேடும்வள்ள னம்பியாருருவுகொண்ட
ஆனதிலேறுமையர் மறலிபொய்யறிந்துகொண்டே
ஈனனுகியசண்டாள னிவனமக்கொப்போவென்று
பான்மொழிபங்கனேமன் முகந்தனைப்பார்த்துக்கூறும்.

(இ-ள.) அப்போது நான்குவேதங்களுந் தேடத்தக்கடவுள் கோயி ல்குருக்கள் வடிவாய்வந்து நிற்கிற இடபவாகனத்திலேறுகிற பரமசிவ னவர் அந்த யமனுடைய பொய்வார்த்தைகளெல்லாந்தெரிந்து இந்த ஈனனான சண்டாளகுணத்தையுடையவன் நம்முடைய கருத்துக்குச்சரி வருவானோவென்று பின்பு அந்தப்பார்வதிசமேதரானகடவுள் அந்த யமன் முகத்தைப்பார்த்துச்சொல்லுகிறார்—எ-று. (அஅ)

அஞ்செழுத்துடையவள்ளலாலமதுண்டகண்டன்
செஞ்சடைப்பெருமான்பாதஞ் சேர்ந்தவரவனிமீதிற்
புன்சொலினர்களின்ப போகத்தைவேண்டுவாரோ
வஞ்சகமதனைவேண்டார் வையகத்தாசைவேண்டார்.

(இ-ள.) பஞ்சாக்ஷரஸ்வரூபியாய் நஞ்சுதங்கின கண்டத்தையும் சிவ ந்தசடைமுடியையுமுடைய கடவுள்பாதத்தைச் சேர்ந்தஅடியார்கள் உ லகத்திலே அல்பமான சொற்களைப்பேசுகிறபெண்கள் போகத்தைவே ண்டுவார்களோ அவர்கள் வஞ்சகமான வாழ்வைவேண்டார்கள் உலகத் தாசையை எவ்வளவும்வேண்டார்கள்—எ-று. (அகூ)

மற்றவர்சுற்றம்வேண்டார்மங்கையராசைவேண்டார்
கொற்றவர்பெருமைவேண்டார் பொருளினுக்காசைகொள்ளார்

மற்றொருபிறவிவேண்டார் வளர்செல்வவாழ்க்கைவேண்டார்
பெற்றிடுந்தந்தைதாயோடமர்கிளைபேணமாட்டார்.

(இ-ள்.) அந்தச்சிவனடியார்கள் உறவுவேண்டார்கள் பெண்களாசையையும்வேண்டார்கள், இராஜாக்களுடைய பெருமையையும்வேண்டார்கள், பொருளுக்கும்ஆசைகொள்ளார்கள், இனியொருபிறவியையும்வேண்டார்கள், வளர்கின்றசெல்வவாழ்வும் வேண்டார்கள், பெற்ற தந்தைதாயோடுகூடின உறவும் வேண்டார்கள்—எ-று. (௬௰)

தவத்தவர்பெரியோர்மிக்க தவசியில்லறங்கடந்தோர்
சிவத்தைநெஞ்சினில்வைத்தோர்கள் சிவபூசைநெறியுள்ளோர்கள்
பவத்தடுஞ்சன்னியாசர் பழவினைகடிந்தஞான
ரவத்திடுமாசாபாசத் தகப்படுவாரோசொல்லாய்.

(இ-ள்.) தவஞ்செய்கிறவர்களானபெரியோர்களும், அவர்களிலுமேலானதீக்ஷிதர்களும், இல்லறத்தைவேண்டாராய்ச் சிவபெருமானை மனத்திலேவைத்திருக்கிறவர்களும் சிவபூசைமார்க்கத்திலுள்ளவர்களும் பிறவியைப்போக்கின சந்நியாசிகளும், பழவினையைப்போக்கின ஞானிகளும் ஆசாபாசத்துக்குள் அகப்படுவார்களோசொல்லு—எ-று. (௬௧)

அவ்வகைக்குணத்தோனுன்றனழைப்பினில்வாரானப்பால்
வெவ்வியகுணத்துக்குஞ்சூழ்வெருட்சிக்குமயங்கமாட்டா
னெவ்விதத்தாலுநீதானெருங்குதற்கெளியனல்லன்
கவ்விநீபிடிப்பையாகிற் கடுந்துயர்வந்துசேரும்.

(இ-ள்.) அப்படிப்பட்டகுணத்தையுடையமார்க்கண்டன் நீகூப்பிடுகிறதற்கு வரமாட்டான் மேலும் உன்னுடையகொடூரச்செய்கைக்கும் நீபயங்காட்டுதற்கும் இவன் மயங்கமாட்டான் இன்னம் நீ எவ்விதச் செய்கைகளைச்செய்தாவது நீகிட்டுதற்குச் சுலபனானவனுமல்லன் அல்லது நீநெருங்கிப்பிடிப்பாயானால் உனக்குக் கடூரமானதுன்பங்கள்வந்துநேரிடும்—எ-று. (௬௨)

ஆசாபாசத்தைவிட்டே யண்ணலுக்கடிமையாகிப்
பேசொணுத்தவங்கள்செய்து பிரானடிப்பெலத்தினாலே
ஈசனுக்கொப்பதாக விருப்பவன்றன்னைநீயு
மோசமாயழைக்கலாமோ மூன்னவனறிந்தாலுன்னை.

(இ-ள்.) ஆசாபாசங்களையெல்லாம்விட்டு சிவனுக்கே யடிமையாகிப் பேசி முடியாததவங்களைச்செய்து சிவபெருமானுடைய பாதபலத்தினாலே சிவனுக்கு நேராக இருக்கிற இவனை நீ வந்து மோசவகையாகநீகூப்பிடக்கூடுமோ நீ கூப்பிடுகிறதை இந்தக்கோயிலிலே யிருக்கிற கடவுள் கண்டுகொண்டால் உன்னை—எ-று. (௬௩)

என்னதான்செய்வனொன்று மிப்பொழுதுன்னைவாளாற்
சின்னபின்னப்படுத்துச் செகுத்துயிர்மாய்ப்பர்கண்டா

யன்னவனிடநீபோகா தகன்றிடுபவச்சொரூப
மன்னியபேதாயொன்றும் வளர்க்காமலோடிப்போடா.

(இ-ள்.) அந்தக்கடவு ளென்னசெய்வாரென்று லிப்போதேஉன்னைச் சின்னபின்னமாக வெட்டிக்கொன்று உன்னுயிரை அழிப்பார் நீ அந்த மார்க்கண்டனிடத்திலே இனிமேற்போகாமல் விலகிப்போ பாவரூபங் கொண்ட மூடனே இனி என்சொல்லுக்கு எதிர்வார்த்தைசொல்லி வீண்காலங்கழியாம லோடிப்போடா—எ-று. (௬௪)

போவென்றுகடவூர்க்கோயி னம்பியார்புகன்றகாலை
நாவதுகுழறநெஞ்ச நடுங்கிடவெகுண்டுபார்த்து
மாவிகிள்படபடென்ன வனற்பொறிபறக்கக்கண்கள்
சேவினிலேறுமையர்க் கெதிர்மொழிசெப்பலுற்றான்.

(இ-ள்.) இப்படி திருக்கடவூர்க் கோயினம்பியார் சொன்னபோது மார்க்கண்டருக்கு நாக்குக்குழற மனதுநடுங்கக் கோபித்துப்பார்த்துத் தன்சரீரமெல்லாம் படபடென்றுதுடிக்க கண்களிலே நெருப்புப்பொறி பறக்க இடபவாகனத்திலேறுகின்ற கடவுள்வார்த்தைக்கு மறுமொழி சொல்லுகிறான் எமன்—எ-று. (௬௫)

ஏனடாதங்கைமைந்த னெனக்குநன்மருகன்றன்னை
நானழைத்திட்டானீயே னவனுக்குநட்பாய்ச்சொன்ன
யானுனையிதற்கேனென்று கேட்டேனேவறிவுகெட்ட
போனகப்பயலேபோடா புத்தியுள்ளவனோநீதான்.

(இ-ள்.) என்னடா என்தங்கைமைந்தனாகி எனக்கு மருமகனான அவனை நான் கூப்பிட்டால் நீ என்னகாரணத்தினாலே அன்னியனாயிருந்தும் அவனுக் குறவானவன்போற் பேசுகிறாய் நான் உன்னைப்பார்த்து இதற் கென்னவகையென்று கேட்டேனா அறிவுகெட்டான சோற்றுளேபோடா நீதானோ புத்தியுள்ளவன்—எ-று. (௬௬)

இனத்துடன்சேராவண்ண மென்னொடுகூடாவண்ணந்
தனக்குளேயடக்கிநீயோர் சார்பிலாவண்ணஞ்செய்தாய்
மனத்தினிற்கபடாவுன்னை வதைத்துமுன்கிளைகளெல்லாஞ்
சினத்தினானாசமாக்கி யிவனையுஞ்சிதைப்பன்யானே.

(இ-ள்.) நீ இவனை இனத்தாரோடுங்கூட்டாதபடி என்னுடனும் வாராத படியாக உனக்குள்ளே வசமாக்கிக்கொண்டு நீஒருவர்சார்புமில்லாதபடி பண்ணினாய் அடா மனத்திலே கபடமுள்ளவனே இதோ வுன்னையுங் கொன்று உன் உறவினரையுநாசமாக்கி என்கோபத்தினாலே இவனையு மிப்பொழுதே நானே கொல்லுகிறேன்—எ-று. (௬௭)

என்றெமனம்பியான பரமனையிகழ்ந்தகாலை
யன்றவர்நகைத்துச்சீற்ற வனலினையடக்கிச்சொல்வார்

கன்றியகசடாவென்னைக் கடுத்துநீகொல்வெனென்று
துன்றியகிளைகள்பொன்றச் சூழ்வதுமுண்மைதானே.

(இ-ள்.) என்று அந்தயமன் குருக்களுருவாயிருக்கிற கடவுளை அப்படியிகழ்ந்து சொல்லும்போது உடனே அக்கடவுள் தமதுகோபாக்கினியை யடக்கிக்கொண்டு சொல்லுகிறார், அடா மிகவுங் கோபங்கொண்ட மூடா என்னை மிகவிரைவிலே கொல்லுகிறேனென்றும் நெருங்கினஎன் உறவினரெல்லாமடிய நீசெயகிறதும் மெய்தானோ—எ-று. (௬௮)

உன்றிருமருகன்றன்னை யுன்றனுறகவரலாகா
தென்றனிக்கிளையோடென்னை யிகழ்ந்துநீகொல்லமாட்டா
யன்றியுன்வலியாற்சொன்ன தாகுமேயடாமூடா
வின்றவன்றனையழைத்தா லினமுனக்கழிவுண்டாகும்.

(இ-ள்.) இன்னம் உனதுமருமகனை உன்னுற்கொண்டுபோகவுங்கூடாது எனதுபந்துக்களோ டென்னை அசட்டைபண்ணிக் கொல்லவுமாட்டாய் இதெல்லாம் உன்னுடையகருவத்தினலே சொன்னதாயிருக்கின்றது அடாமூடனே இப்போது இந்தமார்க்கண்டனை நீஅழைப்பாயேயானு லின்னம் உனக்கு மிகவுங் கெடுதியுண்டாகும்—எ-று. (௬௯)

முக்கணர்தமக்குப்பூசை முடிப்பதற்கேகவேண்டு
மிக்கணமகன்றுபோடா சிவாலயத்திருக்கவேண்டா
மிக்கரனடியான்றன்னை யழைத்திடவேண்டாம்பாவி
சிக்கொணுனுனக்குமற்ற வேதியச்சிறுவன்றானே.

(இ-ள்.) இதோ திரிநேத்திரரான கடவுளுக்குப் பூசைபண்ணப்போகவேணும் இப்பொழுதே நீ தூரவிலகிப்போடா இந்தச்சிவன்கோயிலிலே நீ இருக்கக்கூடாது மிகவுஞ் சிவனுக்கே அடியானன இவனைக்கூப்பிடவேண்டாம் கூப்பிட்டதினலே உன்கைவசமாக இந்தப்பிராமணப்பிள்ளை அகப்படமாட்டான்—எ-று. (௭௰)

இன்மொழிசாற்றநம்பி யேமனும்வெகுளிமிஞ்சி
வன்மையாய்நடந்துமற்றப் பாலனைவளையலுற்றான்
தின்மையாங்கசடர்புல்லர் சிறியதுஷ்டர்கணல்லோர்கள்
நன்மைகளுரைக்கக்கேளார் நரகிலேவிழுந்துமாய்வார்.

(இ-ள்.) இப்படி இதமானவார்த்தைகளைக் குருக்கள்சொல்லஅதற்கு எமனனவன் அதிககோபங்கொண்டு தனதுசவுரியத்தினலே சென்றுஅந்தப்பிள்ளையைப் பிடிக்கத்தொடங்கினன் அதெப்படியென்றால் தீமைசெய்கிறகசடர்களும் புல்லர்களுஞ் சிறியரானதுஷ்டர்களும் நல்லோர்கள் நன்மையைச்சொன்னல் அதைக்கேளாமல் நரகப்பிராப்திக்[illegible]டுவார்கள் கொடியபாவிகள் அப்படியானன் அந்தஎமனென்றவாறு. ([illegible]க)

இவ்வுரைகடலூரைய ரேமனுக்குரைக்கவப்போ
தவ்வுரையிகழ்ந்துசிறி நூலனையடருங்காலை

சைவமெய்ஞ்ஞானமூர்த்தி சண்டனைவதைப்பதற்கே
வெவ்வியசீற்றமாகிப் பின்னையும்விலகிநின்று.

(இ-ள.) இப்படி திருக்கடவூர்சுவாமியான குருக்கள் இந்தவார்த்தைகளை எமனுக்குச்சொல்ல அப்போது அந்தஎமனனவன் அந்தவார்த்தைகளையெல்லாம் நிந்தித்து மிகவுங்கோபங்கொண்டு மார்க்கண்டேயனைநெருங்கும்போது மெய்ஞ்ஞானசுரூபியான பரமசிவனனவர் அந்தஎமனைக்கொல்லுதற்கே மிகவுங் கோபங்கொண்டு பின்னும்தூரநின்று-எ-று. ()

இவனுடைவளமையெல்லா மின்றுநாமறிவோமென்று
சிவதவாக்கினியேயான சிறுவன்முன்னுகத்தோன்றி
அவன்றனக்குறுதிசொல்வா ரந்தகனுன்மேல்வந்தா
லெவளவும்பயப்படாம லிருந்தவனேடேநீயும்.

(இ-ள.) இந்தஎமனுடைய செய்கைகளையெல்லாம் இப்போதே கண்டறிவோமென்று சிவபூசைசெய்கிறதினாலே அக்கினிரூபமான அந்தமார்க்கண்டருக்கு முன்னேவந்து அந்தமார்க்கண்டருக்குத் திடமானவார்த்தைகள் சொல்லுகிறார் அந்தஎமன் உன்மேல்வந்தால் நீ எவளவும்பயப்படாமலிருந்துகொண்டு நீயும்—எ-று. (௱௩)

உத்தரம்பிறிதுசொல்லிச் சண்டனுக்கொல்காவண்ண
மெத்தவுந்திறமாய்நின்று மொழிந்திடுமிஞ்சியுன்மேல்
உற்றவன்வந்தகாலை யவனைநீயுமையாளாணை
செற்றிடவதைப்போமென்று சிவபிரானவின்றுபோனர்.

(இ-ள.) அவன்சொல்லுகிறதற்குப் பதிலுத்தரவுசொல்லி அந்தயமனுக்கு நீ சலியாமல் மிகவுந் திடமாய்நின்றுபேசு மிஞ்சி அவன் உன்மேல்நெருங்கிவந்து கூப்பிட்டால் நமதுபார்வதியறிய அவன்சாவும்படிகொல்லுகிறோமென்று சிவபெருமான்சொல்லி மறைந்தருளினர்—எ-று. ()

போயினகாலைதன்னி லழலெனப்புழுங்கிச்சீறி
வாயிலும்விழிகளூடு மனற்பொறிவந்துவீழ
வாயுமண்டலமிடிந்த வாறுபோற்குமுறித்தாவிப்
பாய்வதற்கெண்ணிநேர்ந்தான் பாலகனடுங்கிச்சாற்றும்.

(இ-ள.) அப்படி அவர்மறைந்தவுடனே தனக்குள்ளே நெருப்புப்போலுக்கிரமாய்ப்புழுங்கிக் கோபங்கொண்டு வாயிலும் கண்களிலு நெருப்புப்பொறி சிதறித்தெறிக்க வாயுமண்டலமீடிந்து விழுந்தாற்போல் கர்ச்சித்துத் தாண்டிப்பாய்கிறதற்கு முயற்சிகொண்டு நெருங்கினன் அதற்கு மார்க்கண்டர் நடுங்கிச்சொல்லுகிறார்—எ-று. (௱௫)

வீக்கிடும்பாசத்தோனே விமலனாரடிமையென்மேற்
றூக்கிடிற்பாராயுன்றன் சமர்த்தினிச்செலமாட்டாது
போக்கிரிநாயேபொல்லாப் புலையனேவந்தாலுன்னை
யாக்கினைசெய்யாவிட்டா லரனடியானல்லேன்.

(இ-ள்.) என்னைக்கட்டவருகிற பாசத்தையுடையவனே நான்சிவனடியான் என்மேல் நீவந்துவிழுந்தால் உன்சமர்த்து இனிச்செல்லமாட்டாது அடாமானங்கெட்டவனே நாய்போன்றவனே பொல்லாதசண்டாளா என்மேல் நீவந்தால் பலவிதமான துன்பங்களும்உனக்குண்டாகும்படிநான்செய்யாவிட்டால் நான் சிவனடியானுகாமற் போவேன்-எ-று. (௱௬)

உன்னுடைப்பெண்டிர்மக்க ளுறன்முறையார்கள்வாழத்
தன்னுடன்பிறந்தோன்றேடுந் தனத்தினுக்காசைகொள்வாய்
இன்னிசைமறையோனீன வீசனுக்கடிமையான
தன்னியனெனக்குச்சண்டா சககளப்பகையோநீதான்.

(இ-ள்.) உன்னுடைய பெண்டாட்டிபிள்ளைகள் உறவின்முறையாரெல்லாரும் வாழ்வதாக உன்கூடப்பிறந்தவன் சம்பாதிக்கிறதிரவியத்துக்கு ஆசைப்படுகிறதுபோ லாசைப்படுகிறுய் நான் இனிதான கானத்தோடு கூடின ஒரு வேதப்பிராமணன்பெறச் சிவனுக்கடிமையென்கிற யோக்கியதையுள்ள எனக்கு நீயமனே ஒருகுடியிலே பெண்கொண்டதால் வந்த பகைவனே—எ-று. (௱௭)

தோடையப்புலையாபாவத் தோசிசண்டாளாதீண்டாப்
பாடையிற்கொடுபோகின்ற பிணஞ்சுடும்பறையாவேட்டை
நாடியநாய்போலென்னைக் காத்திடுநமனேயுன்னைச்
சாடிடவருவார்போடா திருக்கடவூரர்தாமே.

(இ-ள்.) கையிலே இருப்புவளைபோட்டுக்கொண்டு திரிகிறபுலையனே அடாபாவி சண்டாளா ஒருவருந்தொடக்கூடாமல் பாடையிலே கொண்டுபோகிற பிணத்தைச்சுடுகிற பெரும்பறையா வேட்டையாடத்திரிகிற நாய்போ லென்கூடவே திரிகிறநாயே நமனே உன்னைக்கொல்லும்படி திருக்கடவூர் அமுதலிங்கேஸ்வரர் இப்போதுவருவார் நீதூரஓடிப்போடா.

மதியுனக்கிதமாய்ச்சொன்னேன் மறந்துவிட்டென்முன்னுக
எதிரியாய்வருவையாகி லென்னைத்தடுத்தடிமைகொண்ட
மதியணிசடையோன்சூலத் தாலுனைமடியச்செய்துன்
பதியதைநெருப்பினுலே கொளுத்துவார்நீயேபாராய்.

(இ-ள்.) உனக்குநல்லபுத்தி இதமாகவேசொன்னேன் அதைமறந்துபோய் எனக்குமுன்னே எதிரியாக நீ வருவாயேயானுல் என்னைத்தடுத்தாட்கொண்ட சந்திரசேகரக்கடவுள் சூலத்தினுலேகுத்தி உன்னைச்சாவும்படி பண்ணுவார் பின்னும் உன்ஊரிலே நெருப்பையிட்டுங்கொளுத்துவார் நீயேபார்ப்பாய்—எ-று. (௱௮)

அந்தகாதுடுக்காவென்மேல் வந்துநீயதட்டிப்பாரு
சந்திகடோறுநின்னைச் சந்துசந்தாகப்போர்த்துச்
சிந்திடச்செய்யாவிட்டாற் றிருக்கடவூரில்வாழு
மிந்துவையணிந்தவேணி யீசனுக்கடிமையல்லேன்.

(இ-ள்.) அடேயமனே துடுக்கா யென்மேல்வந்து நீஅதட்டிப்பாரு தெருவீதிகளெல்லாம் உன்னைவெட்டிச் சந்துசந்தாகநறுக்கிச் சிந்தும்ப஡ி நான்செய்யாவிட்டால் இந்தத்திருக்கடவூரிலே வாழுகின்ற சந்திரசேகரக்கடவுளுக்கு அடிமையானவனல்லேன்—எ-று. (௩௰)

பரனடிப்பாலனின்ன பகர்ந்திடக்கூற்றுங்கேட்டு
மிரவினிலிடிவீழ்ந்தாற்போ லெழுகடலிரைந்தாற்போல
அரனெனமாயனென்ன வயனென்னகுலிசனென்ன
தரையின்மற்றோர்களென்ன தானவர்வந்தாலென்ன.

(இ-ள்.) இப்படிச் சிவனடியானான மார்க்கண்டர்சொல்ல யமன்கேட்டு-இராத்திரிகாலத்திலே யிடிவிழுந்தாற்போலவும் ஏழுகடலும்இரைந்துவந்தாற்போலவும் முழங்கி சிவன்தானென்ன விஷ்ணுதானென்ன பிரமன்தானென்ன இந்திரனானாலென்ன உலகத்திலே இன்னம் யாரானாலென்ன அசுரர்கள்தாம்வந்தாலென்ன—எ-று. (௩௰௧)

வானவர்வந்தாலென்ன மாதவர்வந்தாலென்ன
மானமாமுனிவர்சித்தர் மகாபலவசுரர்யோகர்
கானகவேடர்பூத கணங்கள்வந்திட்டாலென்முன்
ஊனதுதின்னும்வேங்கைக் கோடிடுமறிபோலாவார்.

(இ-ள்.) தேவர்கள் வந்தால்தானென்ன மகாருஷிகள்வந்தால்தானென்ன இன்னம் மகாமகத்துவமுள்ள மௌனிகள் சித்தர்கள் மிகுந்த பலமுள்ள அசுரர்கள் யோகிகள் காட்டிலுள்ள வேடர்கள் பூதங்கள் இவைகளில் யார்வந்தாலும் என்முன்னே மாமிசந்தின்கிற புலியைக்கண்டோடுகிற மான்கள்போலாவார்கள்—எ-று. (௩௰௨)

மனத்தினிற்றினைப்போதென்னை மதிப்பில்லாமறைநூற்பையன்
எனக்கின்றுபயமில்லாம லிசைத்திடுவானேவென்று
சினத்தொடுகொதித்துக்கண்ணிற் செந்தழற்பொறிகள்சிந்த
அனர்த்தகாலமதாயேம னகங்கரிப்புடனுரைத்தான்.

(இ-ள்.) இந்த வேதசாஸ்திரங்கள் படிக்கிறபைய னிப்படி தன்மனத்திலே எவ்வளவும் பயமில்லாமல் என்னை அசட்டைபண்ணிப் பேசத்தகுமாவென்று கோபத்துடனே மனங்கொதித்துக் கண்களிலே நெருப்புப்பொறிகள்சிந்த ஏதோ கெடுதிக்காலம்வந்தாற்போல அகங்காரத்துடனே சொல்லுகிறான்—எ-று. (௩௰௩)

சங்கரன்பலமோநூலர் தமக்குள்ளமதமோசொன்னா
யெங்கிருந்தாலுமென்ன வீசனார்தடுத்தாலென்ன
மங்கவுன்னுயிரைவாங்கி வலையினிற்பொதிந்துகட்டிப்
பொங்கியநரகிற்றள்ளிப் போடுவேன்சமர்த்தைப்பாராய்.

(இ-ள்.) அடேபையா உனக்கு இந்தச்சிவனுடையபலமா பார்ப்பாருக்குள்ள வாய்மதமா இப்படி நீபேசினுய் நீ எங்கேயிருந்தாலுமென்ன இந்தச்சிவன்வந்து தடுத்தால்தானென்ன நீ மங்கும்படி உன்னுயிரைப்பிடித்து வலைக்குள்ளே அகப்படக்கட்டிக்கொண்டுபோய் கொதிக்கிற நரகத்திலே தள்ளிப்போடுகிறேன் என்சமர்த்தை நீ பார்ப்பாயாக—எ-று.()

என்றந்தஇயமன்சீறி யிருபுறநெருங்கிமுந்தித்
துன்றியகாலதூதர் துட்டர்கிங்கிலியர்தம்மைக்
கன்றியவாயாற்கூவிக் கனலெழவிழியாற்பார்த்துக்
கொன்றிடுவிடம்போல்வந்த கொலைஞரைவெருட்டிச்சொல்வா [ன்

(இ-ள்.) என்று அந்த இயமனனவன்கோபித்துத் தன திருபுறத்திலு நெருங்கித் தனக்கு முந்தினவராகக் கூடினகாலதூதர்கள் துஷ்டர்கள் கிங்கிலியர்கள் ஆகிய இவர்களைத் தனதுவாயினலே அதட்டிக்கூப்பிட்டு நெருப்புத்தோன்றக் கண்களாலே பார்த்துக் கொல்லுகிற விடத்தைப் போல்வந்து நிற்கிற கொலையாளிகளுக்குப் பயமுண்டாகும்படிசொல்லுகிறுன்—எ-று. (௱௰௫)

இச்சிறுபையலான விருபிறப்பாளன்றன்னைப்
பிச்செறிதொங்கல்பற்றிப் பிடித்திழுத்தவனையிங்கே
இச்சணங்கொண்டுவாங்க ளென்றிடக்கொடியோர்பாய்ந்து
கச்சணிதனத்தாள்பாகற் கடியனைக்கவிந்துகொண்டு.

(இ-ள்.) இந்தச்சிறுபையனுன பிராமணனைப் பிச்சுஎறிந்துபோடுகிற குடுமியை எட்டிப்பிடித்து இழுத்துக்கொண்டு இந்தக்ஷணத்துக்குள்ளே இங்கேவாருங்களென்றுசொல்ல அந்தப்பொல்லாத கொலையாளிகள்தாவிக்குதித்து கச்சணிந்த தனங்களையுடைய பார்வதிசமேதனுக் கடியானுனமார்க்கண்டேயரைச் சூழ்ந்துகொண்டு—எ-று. (௱௰௬)

பின்முடித்தொங்கறன்னைப் பிடித்திழுத்தெரிந்துவீழ்ந்தார்
நன்மறைப்பாலன்றன்னை மறுபடிநாடிச்சென்று
புன்மையாரிழுக்கமேனி பொசுங்கியேமயங்கிவீழக்
கன்மனதாகவீச னடியிணைகலந்துநின்றுன்.

(இ-ள்.) பின்னே தொங்குகிற குடுமியைப்பிடித்திழுத்து தவநெருப்பினலே எரிந்துவிழுந்தார்கள் பின்னுஞ் சிலதுஷ்டர்கள் அந்த நல்லவேதகுலத்தினரான பிள்ளையைத் தேடிக்கொண்டுபோய் இழுக்க அவர்களும் தங்க ளுடம்புபொசிங்கி மயங்கிவிழுந்தார்கள், அந்த வருத்தத்துக்கு ஒன்றுங்கலங்காமல் கல்லுப்போல் மனமுள்ளவராய் மார்க்கண்டேசிவனடித்தியானத்திலே கலந்துநின்றுர்—எ-று. (௱௰[illegible])

உருத்துமீரஞ்சுகோடி பேர்கள்வந்திழுக்கவுண்மை
யுருத்திரர்மழுவால்வெட்ட வுயிர்களுநீங்கிவீழ்ந்தார்

வெருக்கொளநூறுகோடி பேர்கள்மேன்மேலும்வந்தே
தரித்திடாதிருக்கவையன் சிரித்திடத்தழனீருனர்.

(இ-ள.) உடனே அதுகண்டு கோபமாய் பத்துக்கோடிபேர்கள்வந்து சூழ்ந்து இழுக்கும்போது அதற்கு மெய்யான ருத்திரர்கள்வந்து அவர்களை மழுவாலேவெட்ட அவர்களுமிறந்துபோனர்கள், மறுபடியும்நூறுகோடிபேர்கள் உலகமெல்லாம் பயப்பட மேன்மேலாகிவந்து நிலைகொள்ளவொட்டாமலிழுக்க அதுகண்டு கடவுளானவர்சிரிக்க நெருப்பாய்ச் சாம்பலானர்கள்—எ-று. (௱௰அ)

பாவகிங்கிலியர்நீலர் பத்தொருகோடிபேர்கள்
ஆவலாவிழுக்கவைய னனலினற்சுட்டுவிட்டார்
காவலனனவேமன் கடுகியைஞ்ஞூறுகோடி
யேவினன்வந்திழுத்தா ரெரிந்துபோனர்களன்றே.

(இ-ள.) பின்புமகாபாவிகளான கிங்கிலியர்களும் நீலர்களும் பதினொருகோடிபேர்கள் தின்ன ஆசைகொண்டவர்கள்போலேவந்திழுக்கஅவர்களையும் கடவுளானவர் தமது கோபாக்கினியினலே எரித்துவிட்டார், பின்பு அவர்களுக்கெல்லாம் ராஜாவான ஏமன் விரைவுகொண்டு ஐஞ்ஞூறுகோடிபேர்களை அனுப்பினன் அவர்களும்வந்திழுத்து எரிந்துபோனர்கள்—எ-று. (௱௰௯)

பின்னருமறலிமிக்க பெலமுள்ளசேனையெல்லாந்
துன்னிடத்தள்ளிவிட்டா னவரும்போய்ச்சூழ்ந்துகொண்டு
முன்னரோகினவர்கள்மாண்ட முயற்சியைக்கண்டுநாடா
தின்னலுற்றழிந்துநில்லா தீடழிந்தோடிப்போனர்.

(இ-ள.) மறுபடியும் எமனனவன் மிகுந்தபலங்கொண்ட சேனைகளையெல்லாம்போய்ச் சூழும்படி அனுப்பினன் அவர்களும்போய்ச் சுற்றிநின்று முன்னேபோய் மாண்டுகிடக்கிறவர்களைப்பார்த்துக் கிட்டப்போகமாட்டாமல் துன்பமுண்டாகி அழிந்து எதிரேநில்லாமலீடுகெட்டோடிப்போனர்கள்—எ-று. (௱௨௰)

காலனும்வெகுண்டுசூலங் கண்டர்கோடாலியீட்டி
வேலொடுகுந்தம்வாட்சி மிக்கசக்கரமழுக்க
ளேலவேபிண்டிபால மெறிந்திடப்பாலனப்போ
சூலபாணியன்வெண்ணீற்றூற் றெறிலைத்தனனதுவுங்கண்டு.

(இ-ள.) யமனனவன் அதனைக்கண்டு மிகவுங்கோபங்கொண்டு சூலா[illegible]-கண்டர்கோடாலி-ஈட்டி-வேலாயுதம்-எறியீட்டி-வாட்சி -சக்கரம்-[illegible]ழுமுதலானவைகளையும் பிண்டிபாலமும் மார்க்கண்டர்மேலேபட எறி[illegible]ந்தான் அதையெல்லாம் உடனுக்குடனே சூலபாணியான கடவுள் [illegible] பூதியினலே போக்கினர் அதையுங்கண்டு—எ-று. (௱௨௰௧)

ஈதென்னகொடுமையென்று கூற்றனுமினைந்துசீறி
வாதெதிராயிற்றென்று வாய்மடித்துருக்கிக்கையிற்
சூதுசெய்பாசந்தன்னைச் சுருக்கெனவெடுத்துக்கொண்டு
காதகனானவேமன் கடூரமாய்ச்சொல்லலுற்றான்.

(இ-ள்.) இதுவென்ன கொடுமையாயிருக்கின்றதென்று யமனானவனி னைந்துபேசிக் கோபித்து இனிச்சண்டைபண்ணுகிறது நமக்கே நேராயி ற்றென்று வாயைமடித்து அதட்டிக் கையிலே சூதுசெய்வதான பாசக்க யிற்றை அதிகவிரைவிலே எடுத்துக்கொண்டு கொலைசெய்கிறவனான அந் தயமனானவன் கடூரமாகப் பேசத்தொடங்கினான்—எ-று. (௱௨௨)

இச்சிறுபயலைநாமு மித்தனைநாள்மட்டுந்தான்
வைச்சிருந்ததனாலிந்த வாய்மதம்பேசுகின்றான்
நச்சரவணிந்தோனம்மை யிவன்றனக்காகவந்தே
அச்சமிட்டழிப்பனோநா மறியலாமென்றுதானே.

(இ-ள்.) நாம் இந்தச்சின்னப்பையனை இவ்வளவுநேரமும் சும்மாவிட் டிருந்தபடியினாலல்லவோ இப்படி வாய்க்கொழுப்பாகப்பேசுகிறான் இவ னுக்காக விஷப்பாம்புகளை ஆபரணமாகவுடைய கடவுள்வந்து நமக்குப் பயங்காட்டி நம்மைக்கெடுப்பாரோ இதைநாமே அறியக்கடவோமென் றுதானே—எ-று. (௱௨௩)

எழுந்தனனேழுமேகத் திடியெனவார்ப்பரித்துக்
கொழுந்துவிட்டெரிகின்றாற்போற்கண்பொறிகுலாவச்சென்றும்
அழுந்தியபாசத்தாலே யவனியெல்லாமயங்கி
விழுந்திடவீசியேமன் வேதன்மேற்பாய்ந்தானன்றே.

(இ-ள்.) எழுந்திருந்து ஏழுமேகங்களுங்கூடிக் குமுறினாற்போற் குமு றி-வடவாக்கினி கொழுந்துவிட்டெரிகிறதுபோற் கண்களிலே நெருப்பு ப்பொறிகள் சுவாலித்து உதிரநடந்துபோய் அழுந்தக்கட்டுகிற பாசக்க யிற்றை வீசுகிறதினாலே உலகமெல்லாம் மயங்கிவிழும்படிவீசி யமனான வன் மார்க்கண்டேயர் மேலேபாய்ந்தான்—எ-று. (௱௨௪)

சண்டனும்பாய்ந்தபோது சங்கரன்பத்தன்கண்ணுற்
கண்டுமெய்மறந்துசிந்தை கலங்கியேயலறிவீழ்ந்தும்
எண்டிசையோர்கள்போற்றற் கினியமார்க்கண்டர்தாமு
மண்டர்நாயகனார்பாதத் தடிநின்றுதுதிக்கலுற்றார்.

(இ-ள்.) அப்படி எமன்பாய்ந்தவுடனே சிவபத்தரான மார்க்கண்டே யர் தமது கண்ணாலேகண்டு உடம்புமறந்து மனங்கலங்கி அலறிக் கீழே விழுந்து எட்டுத்திக்கிலு முள்ளவர்கள் போற்றுதற்குத்தகுதியான அந்த மார்க்கண்டர் தேவர் நாயகனான கடவுள்பாதத்தடியிலே நிற்பதாய் நினை வுகொண்டு தோத்திரம்பண்ணலானார்—எ-று. (௱௨௫)

திங்கள்வேணியனேபோற்றி சிவசிவசிவனேபோற்றி
அங்கியைத்தரித்தாய்போற்றி யரவமாலிகையாய்போற்றி
எங்குமேநிறைந்தாய்போற்றி யென்மனக்கொழுந்தேபோற்றி
சங்கரிதலைவாபோற்றி சருவநாயகனேபோற்றி.

(இ-ள்.) சந்திரசடாதரனேபோற்றி சிவசிவசிவனேபோற்றி நெருப்பைக் கையிலேகொண்டவனேபோற்றி, பாம்பாபரணனேபோற்றி, எனதுமனக்கொழுந்தானவனேபோற்றி, பார்பதிநாயகனேபோற்றி, சருவலோக சரணியனேபோற்றி—எ-று. (௱௨௬)

முச்சுடரொளியேபோற்றி முக்கணுயகனேபோற்றி
சச்சிதானந்தாபோற்றி தாண்டவநாதாபோற்றி
அச்சுதனயனும்போற்று மருமைவான்பொருளேபோற்றி
யிச்சையானந்தாபோற்றி யேகநாயகனேபோற்றி,

(இ-ள்.) சோமசூரியாக் கினியானசோதியேபோற்றி அவற்றைத் திரிநேத்திரங்களாக வுடையகடவுளேபோற்றி சத்துச்சித்து ஆனந்தமானவரேபோற்றி தாண்டவமாடுகிற கடவுளேபோற்றி விஷ்ணுவும் பிரமாவும் தேடுவதான அருமையுள்ள உயர்ந்தபொருளேபோற்றி உமதிச்சைப்படியே ஆனந்தரூபியேபோற்றி எங்குமொன்றான தெய்வமேபோற்றி. ()

முறைமுறைசரணமையா முழுதுமுன்னடிமையானே
னிறைவனேயபயமையா வேழைபங்காளாநாயேன்
முறையிடுஞ்சத்தமுன்றன் செவியிற்கேளாதிருந்தாற்
கறைமிடற்றவனேயென்னைக் காப்பவரொருவர்காணேன்.

(இ-ள்.) இதோ அடிக்கடி வந்தனஞ்செய்கிறேன் முழுதும் உமக்கே அடிமையாயினேன் கடவுளேஅபயம் சுவாமி பார்வதிசமேதனே நாயேன் அபயமிடுகிறசத்தம் உமதுகாதிலே கேளாதிருந்தால் நீலகண்டக் கடவுளே என்னைக்காத்துரக்ஷிக்க உம்மையல்லாமல் வேறேயொருவரையுங் காண்கிலேன்—எ-று. (௱௨௮)

நாயினுங்கடையேனையா வுன்றனைநாடிநின்ற
சேயனையேமன்கையிற் சிக்கிடச்செய்யலாமோ
தீயவன்பாசந்தன்னைத் திருத்தியென்மேலேபோட்டுப்
பாயவேநெருங்கிவந்தான் பரமனேசரணமையா.

(இ-ள்.) சுவாமி நாயினுங்கடையேனுன நான் உம்மையேபற்றி நிற்கிறபிள்ளையாகிய என்னை ஏமன்கையிலே அகப்படும்படிவிடலாமா அந்தப் பொல்லாத எமனுனவன் பாசத்தைச்சுழற்றி வீசி யென்மேல் நெருங்கி வந்துவிட்டான் பரமனேசரணம் ரக்ஷிக்கவேணும் சுவாமி—எ-று. ()

எத்தனைவிதத்தினாலும் பாவியோடெதிராய்ப்பேச
மெத்தவுஞ்சினந்துமென்னை விரைவுடன்பிடிப்பதற்கே

சுற்றியமதிலுந்தாண்டிச் சூழ்ந்தகோபுரங்கடந்து
மத்தமண்டபத்துக்கிப்பால் வருகின்றான்மிகநெருங்கி.

(இ-ள்.) அந்தப்பாவியான எமனுடனே எவ்வளவோவிதங்களாக நா ன் எதிர்த்துப்பேச அதற்கு அவன் மிகவுங்கோபங்கொண்டு என்னை அதிசீக்கிரத்திலே பிடித்துக்கொண்டுபோக சூழ்ந்தமதிலெல்லாங் கடந்து கோபுரங்களையும் தாண்டி மத்தியமண்டபத்துக் கிப்பால் மிகவுநெருங்கி வருகிறான்—எ-று. (௱௯௰)

ஒருவருமெனக்கிங்கில்லை யுனையல்லாலொருவர்காணேன்
வருவதுமறியேனாயேன் மயக்கினைத்தீர்ப்பாரில்லை
இருவகையறியாப்பாவி யென்னையுங்கடவூர்நாதா
திருவடிநிழற்கீழாகச் சேர்த்தென்னையாண்டுகொள்வாய்.

(இ-ள்.) உம்மையல்லாமல் எனக்கு வேறொருஆதரவுமில்லை அவன் வருகிறது மென்கண்ணுக்குத் தோற்றவில்லை நாயேனுடைய மயக்கத்தைத்தீர்த்து ரக்ஷிக்கிறவர்கள் உம்மையல்லாமல் யாரிருக்கிறார்கள் இம்மைமறுமையான இரண்டுந்தெரியாத பாவியான என்னை இனி திருக்கடவூர்நாதா உமது திருவடிநிழலின்கிழாகச் சேர்த்து என்னை அடிமைகொண்டருளவேணும்—எ-று. (௱௯௧)

சாலவுமார்க்கண்டேயர் தளர்ச்சியோடுரைக்குங்காலை
வேலவன்றந்தையான விமலனுந்தோன்றிபந்தப்
பாலகன்றன்னைத்தேற்றிப் பயப்படாதெம்மைநீயுஞ்
சீலமாய்ப்பூசைசெய்கென் றெழிற்கடவூரர்செப்பி.

(இ-ள்.) மிகவு மார்ககண்டேயரிப்படித் தளர்ச்சியுடனே சொல்லும் போது முருகக்கடவுளுக்குத் தந்தையான கடவுள்முன்னேபிரசன்னராய்வந்து அந்தப்பிள்ளையைத் தேறச்செய்து நீபயப்படாமல் என்னைப்பூசைபண்ணிக்கொண்டிருவென்று திருக்கடவூர்க்கடவுளானவர் சொல்லி.

வேதனேமறலியுன்மேல் விஞ்சியேவரட்டுஞ்சும்மா
பேதைபோல்மனங்கள்வேறாய்க் கலங்கியேபிசகிடாதே
வாதுசெய்திடுஞ்சண்டாள மறலியையுதைப்போமென்று
நாதனுங்கூறிப்போனார் பாலனுநடுக்கந்தீர்ந்தான்.

(இ-ள்.) ஓமார்க்கண்டா எமன்உன்மேல் மிஞ்சிவந்தால்வரட்டும் சிறுபிள்ளைபோல் உன்மனம்கலங்கிப் பிசகிப்போகாதே உன்னுடனே சண்டைசெய்யவருகிற சண்டாளனான யமனைஉதைக்கிறேன் என்று கடவுள் சொல்லிவிட்டுப்போனார் மார்க்கண்டரும் பயந்தீர்ந்திருந்தார்—எ-று. ()

மலைமகள்பாகத்தோனை வாரணமுரித்தோன்றன்னை
நிலைமையாய்த்தொழுதுபோற்றி நின்றிடும்போதிலோங்கிப்
பலபலநிறத்தோடேமன் பற்கடித்ததிரப்பேசி
வலையெடுத்தேமபாசம் வாங்கியேயோங்கிச்சொல்வான்.

(இ-ள்.) பார்வதிசமேதனை யானைபுரித்தகடவுளை உறுதியாக வணங்கிக்கொண்டு நிற்கும்போது உயர்ந்து அநேகவிதங்களான நிறங்களுடனே எமனானவன் பல்லைக்கடித்து அதிர்ந்துபேசி வலையைக்கொண்டும்எமபாசத்தைக்கொண்டும் உயர்ந்துவந்து நின்றுசொல்லுகிறான்—எ-று. ()

இத்தனைவலுவாய்நின்ற யீசனாலென்னசெய்வாய்
மற்றொருவேமனிந்த வுலகினில்வருவதுண்டோ
குத்தியேயுன்னைநானுன் கூட்டைவிட்டுயிரைவாங்கி
அத்தனார்பார்த்திருக்க வந்தனாபோவெனென்று.

(இ ள்.) இந்தக்கடவுள் பலத்தினாலே நீஇவ்வளவுபலங்கொண்டு பேசினாய் என்னையல்லாம லிந்தவுலகத்திலே வேறொருயமனுண்டோ உன்னை இந்தச்சூலத்தினாலேகுத்தி உன்னுடலினின்றும் உன்உயிரை இந்தக்கடவுள் பார்த்துக்கொண்டிருக்கவே பிடித்துக்கொண்டுபோகிறேன் உன்னாலே என்னசெய்யலாகும் என்று—எ-று. (௱௩௫)

சுழற்றியேபாசந்தன்னைக் கோயிலைச்சூழவீசி
அழுத்தியேநம்மையாள்வோ னாலயத்துள்ளேவந்து
மழுத்தரித்திடுவோன்முன்டாய் வல்லபம்பேசிக்கண்ணை
விழித்தவன்றனைமிரட்டி யேமனுமுடுகும்வேளை.

(இ-ள்.) தன்கையிற் பாசத்தை அந்தக்கோயில்முழுதும் சூழ்வதாக வீசி அழுந்தக்கட்டி நம்மை யடிமைகொள்ளத்தக்க கடவுள் கோயிலுக்குள்ளேவந்து மழுவாயுதத்தைக்கொண்டிருக்கிற சுவாமிமுன்பாக அநேகஞ்சவுரியங்கள்சொல்லிக் கண்களைஉருட்டி விழித்துப் பயங்காட்டி அந்தஎமன் விரைந்துவரும்போது—எ-று. (௱௩௬)

முறைமுறையென்றுசொல்லி யலறிமுக்கண்ணர்முன்போய்
இறைவனேகடவூர்நாதா வென்றழுதடியில்வீழ்ந்து
பிறைபணிபெருமான்றன்னைப் பெலமதாய்த்தழுவிக்கட்டி
மறையவனிருந்தானப்போ மறலியுமுனிந்துசென்று.

(இ-ள்.) மார்க்கண்டேயர் அபயம்அபயமென்று சொல்லிக்கொண்டு அலறி திரிநேத்திரதாரியான கடவுளுக்குமுன்னே போய் சுவாமி திருக்கடவூரீசாவென்று அழுதுஅவர்காலிலேவிழுந்து சந்திரனையணிந்தசடாதாரன சுவாமியைப் பலமாகக்கட்டித் தழுவிக்கொண்டிருந்தார் அப்போது யமனுங் கோபித்துப்போய்—எ-று. (௱௩௭)

கையினாற்பாசந்தன்னைச் சுழற்றியேயெறிந்தகாலைத்
தையலையிடத்தில்வைத்த சதாசிவலிங்கந்தன்மேற்
பொய்யிலாதவன்கழுத்திற் புயத்திலும்வீழ்ந்துசுற்ற
வெய்யவன்சுருக்கித்தன்னுட் பெலத்தினால்விரைவதற்கு.

(இ-ள்.) தன்கையாலே பாசக்கயிற்றைச் சுழற்றிவீசினபோது பார்வதியை இடப்பாகத்திலேகொண்ட சதாசிவலிங்கத்தின்மேலும் மார்க்கண்டர்கழுத்திலும் தோளிலும் விழுந்து சுற்றுதலாக அந்தப்பொல்லாதயமனானவன் சுருக்கித் தனக்குள்ள பலமெல்லாங்கொண்டு மிகுந்தவேகங்கொண்டு—எ-று. (௱௩௮)

இழுத்தனனிழுக்கும்போதி லேழுலகுருவிநின்ற
மழுக்கரவிலிங்கத்தோடு மறையுணர்பாலன்கூட
இழுக்கறுபாசமான திற்றிடவிழுக்குங்காலை
செழித்திடுங்கடவூரையர் சிவலிங்கத்துள்ளெழுந்து.

(இ-ள்.) இழுத்தான் அப்படியிழுக்கும்போதில் இந்த ஏழுலகமுமூடுருவிநிற்கிற மழுவைக்கையிலேகொண்ட கடவுளான சிவலிங்கத்துடனே வேதந்தெரிந்த பிள்ளையுஞ்சேர குற்றமற்றதாத பாசமானதறும்படி இழுக்கும்போதில் மிகவும் சுந்தரரான திருக்கடவூரையரான சுவாமி அந்தச் சிவலிங்கத்தி லிருந்தெழுந்து—எ-று. (௱௩௯)

தரணியோருயிர்கள்வாழத் தாபதர்தவசிடேற
மரைமழுக்கரத்தோன்றொண்டர் வைகலும்வாழ்ந்திருக்க
விரைவுடன்பாசம்வீசு மறலியைவெகுண்டுநோக்கி.
யுரமுடனிடதுபாதத் துதைத்தனருமையோர்பாகன்.

(இ-ள்.) உலகத்திலேயுள்ள வுயிர்களெல்லாம்வாழவும் தபோதனர்கள் தவசெல்லாம் ஈடேறவும் மான்மழுவைக் கையிலேயுடைய கடவுளடியார்கள் எப்போதும் வாழ்ந்திருக்கவும் சீக்கிரத்திலே பாசத்தைவீசின எமனைக் கோபங்கொண்டு பார்த்துப் பலத்துடனேதமதிடதுகாலினாலே யுதைத்தருளினர் பார்வதிசமேதராகத்தோன்றி—எ-று. (௱௪௰)

உதைத்தலுமுகாந்தகாலத் துடுக்களுமண்ணும்விண்ணுங்
கதித்திடுங்கயிலைமேரு நடுங்கிடக்கலங்கியேமன்
பதைத்திடமடிந்தானிந்தப் பாலகனதைக்கண்டஞ்சிச்
சிதைத்திடுமரம்போல்விழ்ந்தான் சிவபிரான்வெளியிற்றோன்றி.

(இ-ள்.) அப்படி உதைத்தவுடனே உகாந்தகாலம்போல் நக்ஷத்திரங்களும் இந்த மண்ணுலகமும் விண்ணுலகமும் உயர்ந்துள்ள கயிலாசகிரி மகாமேருமுதலான வைகளெல்லாம் நடுங்கும்படி கலங்கி எமன்பதைத்து உயிர்போயினன் அப்போது இந்தமார்க்கண்டேயர் அதைப்பார்த்து முறிந்தமரம்போற் கிழேவிழுந்தார், அப்போது சிவபெருமான் வெளியிலேவந்து—எ-று. (௱௪௧)

ஆரணக்குலத்தோன்றன்னை யழைத்தவன்பயமுந்தீர்த்து
நீரணிசடையோன்கையா னெஞ்சமுந்தடவியன்பா
யேர்விடையேறுமைய னிருபிறப்பாளனைப்பார்த்
தோருரைசெய்வானென்னை யாண்டருளுடையகோவே.

(இ-ள்.) வேதகுலத்தினரான மார்க்கண்டேயரைத் தூக்கி யெடுத்து அவருடைய பயத்தைத்தீர்த்து கங்காநதியைத் தலையிலேயுடையவர் தம துகையினாலே அவர் நெஞ்சைத்தடவிக்கொடுத்து அன்புடனே அழகா னவிடைமேலேறிவந்து என்னை அடிமைகொண்டருளின கடவுள் அந்த மார்க்கண்டேயரைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறார்—எ-று. ()

பத்தனேயுன்றன்மீதிற் பகையெனுமறலிதன்னைச்
செத்திடவுதைத்தோம்பிள்ளா யினிப்பயந்தெளிந்துநம்மை
நித்தமும்பூசைசெய்வா யென்றுமீரெட்டாண்டாய்நீ
பத்தருவண்ணந்தந்தோங் கைலையாம்பதவிதந்தோம்.

(இ-ள்.) ஓ-பத்தா-சிறுபிள்ளாய்-உன்மேற்பகையான யமனைச் சாவும் படி உதைத்தோம் இனிமேற் பயந்தீர்ந்து நம்மையே எப்போதும்பூசை செய்துகொண் டிருக்கக்கடவாய் என்றும் பதினாறுவயதாக நீ சாவாதிரு க்க வரந்தந்தோம் கயிலாசமாகிய பதவியையுங்கொடுத்தோம்—எ-று.()

என்றுநல்வரங்களீய்ந்து மெம்பிரான்மறைந்தபோது
நின்றமார்க்கண்டன்றானு நிமலனையருச்சித்தேத்தி
அன்றவன்வணங்கிநித்த மானந்தமேலிட்டாங்கே
நன்றுளமறைகளோதிக் கைத்தலநடித்துக்கூறும்.

(இ-ள்.) என்று நல்லவரங்களுநுங்கொடுத்துக் கடவுள்மறைந்த பின்பு அங்கேநின்ற மார்க்கண்டேயர் கடவுளை அருச்சனைபண்ணித் துதித்து அன்றுதொடங்கி அவிடத்திலே கடவுளைவணங்கிக்கொண்டு தினம்சிவா னந்தம் மேன்மேலாகி அதனாலே வேதங்களைச்சொல்லிக் கைகளாலே தாளம்போட்டுக் கூத்தாடிக்கொண்டு சொல்லுகிறார்—எ-று. (௱௪௪)

வானவர்முனிவர்மண்ணோர் மாதவர்மதியோன்வெய்யோன்
தானவரவுணர்சித்தர் சதுர்முகன்மாலுங்காணா
மோனமாம்பொருளேஞான மூர்த்தியேயென்னையாளு
மானமாமணியேதியாக வள்ளலேபோற்றிபோற்றி.

(இ-ள்.) தேவர்கள் முனிவர்கள் மண்ணுலகத்தார்கள் மகாதவஞ்செ ய்கிறவர்கள் சந்திரன்-சூரியன்-அசுரர்-இராக்கதர்-சித்தர்கள்-நான்முகன், விஷ்ணு-முதலானவர்களுங் காணப்படாத மௌனசொரூபமாகிய பொ ருளே ஞானஸ்வரூபியே என்னை அடிமைகொள்ளுகின்ற மிகப்பெரிதா ன மாணிக்கமே கேட்டதெல்லாம் தருவதான மகோதாரனே போற்றி போற்றி—எ-று. (௱௪௫)

என்னையுமடிமைகொண்டா யெனைப்பொருளாகவெண்ணி
என்னையேகொலலவந்த யேமனையுதைத்துவீழ்த்தாய்
என்னனைதந்தையானா யென்குருதெய்வமானாய்
என்வயதென்றுநீங்கா திருந்திடக்கருணைசெய்தாய்.

(இ-ரை.) என்னையு மொருபொருளாகவெண்ணி என்னை அடிமைகொண்டீர் என்னைக்கொல்லவந்த எமனையும்உதைத்துக் கீழேவிழுத்தினீர் எனக்குத் தாயும்தகப்பனுமாகி எனக்குக்குருவும் தெய்வமுமாயினீர் எனக்குவயது என்றும்பதினாறு நீங்காதிருக்கும்படிதயவுபண்ணினீர். (௱௪௯)

இம்மொழியுரைத்துப்பால னேத்திவாசகத்தையோதி
நன்மையாய்க்கடவூர்நாத னடியிணைபிரியாநண்பின்
றன்மையாய்ப்பூசித்தந்தத் தாணுவுக்கடிமையானான்
இம்மைமார்க்கண்டன்பெற்ற பேறினியெவர்கள்பெற்றார்.

(இ-ரை.) இந்தவார்த்தைகளைச்சொல்லி மார்க்கண்டேயர் துதித்துத் தோத்திரங்களைச்சொல்லி நன்மையாகவே திருக்கடவூரிலுள்ள கடவுள் திருவடிகளைப் பிரியாதநட்புடனே கூடினவராய்ப் பூசைபண்ணி அந்தக் கடவுளுக்கே அடிமையாகியிருந்தார் இந்தவுலகத்திலே மார்க்கண்டேயர் பெற்றபேறு யார்தான்பெற்றார்கள்—எ-று. (௱௫௦)

யமன்வருகிறசருக்கம் - முற்றிற்று.

ஆக - திருவிருத்தம் - ருகக.

## எமனையெழுப்பினசருக்கம்.

துன்பம்விட்டினிப்பேரின்பமேயடைந்ததுறவரோ நூலனுக்காக
வெம்பிரானெமனையுதைத்துவீழ்த்தியதுமியம்பினோமினியவன்றனையே
பின்பெழுப்பியதுமவன்றனக்குறுதிபேசிவிண்ணுலகின்மண்ணுலகி
லின்புறுநரரைப்பொன்றுவித்ததுவுமறைகிறோமொருமுறைகேண்மின்.

(இ-ரை.) துன்பங்களையெல்லாம் விட்டு இனிமேல் பேரின்பத்தையடைய வேண்டின துறவாசிரமிகளே அந்தமார்க்கண்டேயருக்காக நமது கடவுள் யமனையுதைத்துத் தள்ளினதைச்சொன்னோம் இனி அந்தயமனைப் பின்பு எழுப்பினதும் அந்தயமனுக்குத் திடஞ்சொல்லி மண்ணுலகத்திலும் விண்ணுலகத்தினும் ஆசைகொண்டிருக்கிற மனிதர்களைச் சாவச்செய்ததும் சொல்லுகிறோம் ஒருவகைகேளுங்கள்—எ-று. (க)

விமலனார்வேதநூலனாலெமனையுதைத்திடவீழ்ந்துபாதாளக்
கமரிலேயழுந்திமடிந்துதேவாண்டோராயிரங்காலமதாக
வெமனழிந்திருக்கவிந்தவிரோழாமுலகெலாமிடங்கொளாவகையா
னிமிரவேநெருங்கிமனிதர்கண்மிகுத்துமடிவிலாநிறைந்தபோதன்றே.

(இ-ரை.) அந்தப்பரமசிவனானவர் வேதப்பிராமணரான மார்க்கண்டேயருக்காக எமனையுதைக்க அவன்பாதாளவெடிப்பிலே விழுந்தழுந்தி இறந்து ஓராயிரந் தேவவருஷகாலமாகஉலகத்துக் கியமனில்லாமல் அழிந்திருக்கிறதினாலே இந்தப்பதினாலுலகமும் இடம்போதாமல் நிமிர்ச்சியாக நெருங்கி மனிதர்கள் அதிகமாய்ச்சாவாமல் நிறைந்திருக்கும்போது. (உ)

புவனங்கள்முழுதுமனுடர்கள்பாரம்பொறுமலேயாதிசேட னுமே
சிவனிடஞ்சென்றென்னுயிரஞ்சிரசுந்தெறித்திடக்கண்களும்பிதுங்கு
தெனவவனுரைக்கவவருமேதினியாளிடந்தனிற்சொல்லெனக்கேட்டங்
கவனவளிடத்திலபயமிட்டலறவவனிமாதறிந்துடனுரைந்தாள்.

(இ-ள்.) உலகங்களெல்லாம் மனிதர்கள்பாரமே அதிகமாக அதுதாங்கமாட்டாமல் ஆதிசேடனானவன் சிவனிடத்திலேபோய்ச் சுவாமி என்னுடைய ஆயிரந்தலைகளும்வெடித்துப்போகக் கண்களும்பிதுங்குகிறதென்று சொல்ல அவர் பூமிதேவியிடத்திலேபோய் நீ சொல்லென்றுசொல்ல அதைக்கேட்டு அங்கிருந்துவந்து அவன்பூமிதேவியிடத்திலே அபயமிட்டுக்கதற அதைப்பூமிதேவிதெரிந்து உடனேசொல்லுகிறாள்-எ-று.

சேடனேயுனக்குமெனக்குமேயதிகபாரமாய்ச்சேர்ந்துடல்பொறுமல்
வாடினேமெலிந்தோமாகையாலெனதுமன்னவரிடத்தினிற்சென்று
நீடியவளமையுரைத்திடுமளவுநில்லெனப்பூமிநாயகிதான்
தேடியாய்ப்பாடிமனையினில்வளர்ந்ததேவன்மால்பதியதுசேர்ந்தாள்.

(இ-ள்.) ஆதிசேடனே உனக்கும் எனக்குமே அதிககனமாகி உடல்தாங்கக்கூடாமல் மிகவும் வாடியிளைத்தோம் ஆனபடியினாலே எனதுநாயகனிடத்திலேபோய் இப்படிக் கனமாயிருக்கிறதைச் சொல்லி வருமளவும் பொறுத்துக்கொண்டிருவென்று அந்தப் பூமிதேவியானவள் தான்வளர்தற்கு இடந்தேடிப்போய்த் திருவாய்ப்பாடியிலே யசோதைவீட்டிலே வளர்ந்தருளின ஸ்ரீவிஷ்ணுலோகத்திற்குப் போனாள்—எ-று. (௪)

நேமியான்மேகநிறத்தவன்மிகவுநெடியமாலயன்றனைப்பயந்த
வாமனீடனந்தசயனன்மாதவனீள்வைகுந்தநாதன்றன்பக்கம் [துக்
பூமிதேவியுஞ்சென்றிருகரஞ்சிரத்திற்பொதிந்தவள்பணிந்துவாய்புதைத்
காமனார்தாதாயென்றுவாய்திறந்துகண்ணனைப்பார்த்தனள்மொழிவாள்.

(இ-ள்.) சக்கராயுதத்துடனே மேகவண்ணமாக மிகவு நீண்ட வுருவனாகி பிரமனைப்பெற்ற வாமனரூபனாகவும் நீண்ட சேடசயனத்தையுடைய-ஸ்ரீயப்பதியாகிய ஸ்ரீவைகுண்டநாதன் வாழ்கிற விஷ்ணுலோகத்திற்குப்பூமிதேவிபோய்த் தனதிரண்டுகைகளையுந் தலைமேலேகுவித்துப் பாதங்களைவணங்கி வாயைப்பொத்திக்கொண்டுநின்று ஓ மன்மதனுக்குப்பிதாவானவரோயென்று தன்திருவாயைத்திறந்து அந்தக் கமலலோசனனைப்பார்த்துச் சொல்லுகிறாள்—எ-று. (௫)

மாதவா்வாசுதேவனேவராகவடிவனேயென்னையாள்பவனே
சீதராபுவனமுழுவதும்படைத்ததெய்வமேகமலைமார்பினனே
பூதலமுழுதுமோரடியாகவளந்திடும்புண்ணியப்பொருளே
நீதனேபோற்றிபோற்றியென்றிறைஞ்சுநெடியமாலஞ்சலென்றுரைத்து.

(இ-ள்.) மாதவா-வாசுதேவா-வராகவடிவா யென்னை அடிமைகொண்டவரோ சிதரா உலகமுழுதும் சிருஷ்டித்ததெய்வமே லட்சுமிவிளங்குகின்ற திருமார்பையுடையவரோ உலகமெல்லா மோரடியா லளந்துகொண்டருளின பரிசுத்தவஸ்துவே நீதியுள்ளதெய்வமே போற்றிபோற்றி யென்றுவணங்க அதுகேட்டு மகாவிஷ்ணுவானவர் அஞ்சாதேயென்றுசொல்லி—எ-று. (௯)

ஏதடிபெண்ணேயெக்குறையவனியிடிந்ததோவிண்ணழிவுளதோ
சூதுசெய்யசுரர்வாதையோயுகாந்தமுடிவதோகடலதுபொங்கிப்
பூதலமழிவுகாலமோவுனக்குப்புரையெவர்செய்ததுமுளவோ
வோதுநீயென்னப்புவிமடமாதுமுரைத்தனள்குமுதவாய்மலர்ந்து.

(இ-ள்.) ஏன் அடிபெண்ணே உனக்கென்னகுறைவு பூமியிடிந்துபோயிற்றோ ஆகாயத்துக்கு அழிவுண்டாயிற்றோ சூதுசெய்கிற அசுரர்களாலே துன்பமுண்டாயிற்றோ உகாந்தகாலம்வந்ததோ கடலானதுபொங்கி உலகத்துக்கழிவுவந்ததோ அல்லது உனக்குத் தோஷங்களை யாராவது செய்ததுண்டோ சொல்லென்றுகேட்க பூமிதேவியானவள் தனது செவ்வல்லிமலர்போன்ற வாயைத்திறந்து சொல்லத்தொடங்கினாள்—எ-று

அலகைபாலமுதாய்க்கொண்டவென்னாதாயாவருங்குறைசெய்வாரில்லை
இலகியபரமன்மார்க்கண்டர்க்காகவேமனையுதைத்துயிரிறந்தான்
உலகினிற்சீவஜெந்துகள்மிகுந்துமுயிர்விடாதிருப்பதினாலே [ன்.
அலகிலாச்சுமையைப்பொறுக்கமாட்டாதுன் னடியிணைகாணவேவந்தே

(இ-ள்.) ஓ பேய்முலையினுள்ள விஷத்தைப் பாலாகக்குடித்த எனது பிராணநாதா ஒருவரும் எனக்குக்குறைவுசெய்தவர்களில்லை ஆனால் கயிலாசபதியாய் விளங்குகிற பரமசிவனானவர் மார்க்கண்டேயனுக்காக எமனை உதைக்க அவனிறந்துபோயினான் அதனாலே உலகத்திலே ஜீவகோடிகள் அதிகமாய்சசாவாதிருக்கிறதினாலே அளவில்லாத சுமையை நான் தாங்கமாட்டாமல் உம்முடையபாதங்களைக்கண்டு தெரிசிக்கவந்தேன். ()

இருத்தியபாரச்சுமையினா லடியேனிருவிழிபிதுங்கிடக்கழுத்தும்
வருத்தமோடுழன்றுமெலும்புகளொடிந்துமனமெலாமழன்றுளைவாகிப்
பொருத்திடுங்கனத்தையினியென்னாற்பொறுக்கப்போகு மோமாத்திரைப்பொழுதுங், கருத்தனேயுனதுகருத்தினுக்கேற்றகட்டளைப்படியினிக்காண்பேன்.

(இ-ள்.) என்மேல்வைத்த மிகுந்தகனமான சுமையினாலே அடியேனுடைய இரண்டுகண்களும் பிதுங்கிக் கழுத்தும் வருத்தங்கொண்டுசுழுக்கி-எலும்புகளும் ஒடிந்து மனமெல்லாங்கொதித்து வருந்தப் பொருந்தினகனத்தினை இனி என்னாலே தாங்கக்கூடுமோ ஒரு க்ஷணப்பொழுதேனுந் தாங்கக்கூடாது - ஆகையால்-ஓ எனதுநாயகனே இனி உம்மு

டைய மனத்துக்குச் சம்மதியானபடி நியமிக்கிறதைச் செய்யமாட்டு
வேன்—எ-று. (௯)

என்றுபார்மடந்தை யபயமிட்டலறி யிருவிழிப்புன லுகச்சொரிந்து
குன்றெனுங்கொங்கை மேல்வழிந்தோட வழுதிடக்குருகுலர்நாதன்
நன்றெனத்திகிரிக் கரங்களாலமைத்துப் புவியினையகிதனக்கறைவா
னின்றுநீசுமக்குமதிகபாரத்தையிறக்குவோம்பொறுபொறென்றிசைத்து

(இ-ள்.) என்று பூமிதேவியானவள் அபயஞ்சொல்லிக் கூசலிட்டுத்
தனதிரண்டுகண்களிலு நீரொழுகவிட்டு மலைகளென்பதான முலைகள்மே
லே வழிந்தொழுகுவதாக அழும்போது பாண்டவர் சகாயனான சுவாமி
யானவர் நல்லதென்று கைகளாலமைவுசெய்து பூமிதேவிக்குச்சொல்லு
கிறார், இப்போது நீதாங்குகிற அதிகசுமையை இறக்கிவிடுகிறோம் பொ
றுபொறுவென்றுசொல்லி—எ-று. (௰)

துளவமாலிகையோன் புவனமாமடந்தை துயரினையகற்றியன்பாகப்
பழமறைதேடு மாயவன்றானும் பண்புடனயன்றனைநினைக்கத்
துளவமாமலரோன் குலிசனும்வானோர் சகலருமெழுந்துவைகுந்த
மழகுடனேகிக் கார்முகில்வண்ண னடியிணைதொழுதெழுந்தறைவார்.

(இ-ள்.) துளசிமாலையணிந்த திருமாலானவர் பூமிதேவியினுடைய
துன்பத்தைப்போக்கி அன்புகொண்டு பழையவேதங்கள் தேடத்தக்க
ஆச்சரியகுணங்களையுடையவர்-தயவுடனே பிரமாவை வரும்படிநினைக்க
உடனே அந்த இதழ்களையுடைய பெரிய தாமரைமலரிலிருக்கிற பிரமா
வானவர் இந்திரனுடனே தேவர்களெல்லாரும் கூடவர வைகுந்தத்து
க்கு அலங்காரமாகப்போய் நீலமேகவண்ணரான ஸ்ரீயப்பதியினுடைய
பாதங்களை வணங்கி யெழுந்து சொல்லுகிறார்கள்—எ-று. (௰க)

முத்திவாரிதியே முகுந்தனேபோற்றி மூவுலகளந்தருள்வோனே
பத்தர்கள்மனத்திற் சித்திகள்விளைக்கும் பழமறைக்குழகனேபோற்றி
வித்தகப்பொருளே கமலநாயகிதான் விரும்பியநாதனேபோற்றி
நற்றவக்கொழுந்தே யெங்களையாண்ட நாரணகாரணபோற்றி.

(இ-ள்.) ஓ-மோக்ஷக்கடலே-முகுந்தா போற்றி மூன்றுலகங்களையுக
அளந்தருளினவனேபோற்றி-அடியார்கள் உள்ளத்திலேயிருந்து அவர்க
ளுக்கு இஷ்டசித்திகளெல்லாம் அருளிக்கொண்டிருக்கிற பழைய வேத
சொரூபனேபோற்றி-ஞானப்பொருளேபோற்றி- பதுமாசனியான லட்சு
மிதேவி வேண்டத்தக்கசுவாமிபோற்றி-எங்களுடைய நல்ல தவக்கொழு
ந்தேபோற்றி-எங்களை அடிமைகொள்ளத்தக்க நாராயணனான காரணவ
ஸ்துவேபோற்றி—எ-று. (௰உ)

அசுரர்வேரறுத்த கடவுளேபோற்றி யரவணைச்சயனனேபோற்றி
பசுநிரைகாக்க மாரியாற்குன்றை யெடுத்திடும்பரமனேபோற்றி

புசபலக்கஞ்சன் றனைபுதைத்துயிரைப் போக்கிடும்பூரணப்பொருளே
யசைவிலாவிசயற் கருள்செய்சாரதியா யமர்ந்திடுமச்சுதாபோற்றி.

(இ-ள.) அசுரர்கள் வேரையறுத்த தெய்வமேபோற்றி-சர்ப்பசயனத்திலே தூங்குகிறவனேபோற்றி-கல்வருஷத்தினலே வருந்துகிற பசுக்கூட்டங்களை ரக்ஷிக்கவேண்டி மலையைக்குடையாகக் கொண்டவரேபோற்றி-மகாபுஜபலத்தையுடைய கஞ்சன் மடியவுதைத்து அவனுயிரைப்போக்கின நிறைந்தவஸ்துவேபோற்றி-யாதொரு துன்பமு நேரிடாமல் அருச்சுனனுக்குச் சாரதியாய் அவனுக்கு முழுதும் கடாக்ஷித்தருளின நாசரஹிதனேபோற்றி—எ-று. (௰௩)

எண்ணுதற்கெட்டா நாமனேயினிதுன் னேவல்செய்யடியரைப்பொருளாய், நண்ணியிங்கழைத்த பணிவிடையேதோ நவிலெனப்பணிந்திடவிமையோர், விண்ணுடுமண்ணு மெங்குமாய்நிறைந்து விளங்கியகருணைசேர்வடிவாங், கண்ணனுங்கடவுள் பாற்கடற்றுயின்ற கரியவன்வாய்மலர்ந்தருளும்.

(இ-ள.) ஒருவராலும் எண்ணுதற்கடங்காத திருநாமங்களை யுடையவனே உமக்குச் சந்தோஷமாக உமது ஏவல்வழியேசெல்லுகிற அடியேங்களை ஒருபொருளாகவெண்ணி இங்கேவரும்படி அழைத்தகாரியம் யாதோ சொல்லுமென்று தேவர்கள் வணங்கிக்கேட்க அதற்கு ஆகாயத்துடனே மண்ணுலகமும் மற்ற எந்தவுலகங்களு நிறைந்து விளங்குகின்ற கிருபாமூர்த்தியான செந்தாமரைக்கண்களையுடைய தெய்வமாகிய திருப்பாற்கடலிலே சயன திருக்கோலமாக விளங்குகிற நீலமேகவண்ணரானவர் தமது திருவாய்மலர்ந்தருளுகிறார்—எ-று. (௰௪)

மலரவன்குலத்தில் வந்தவந்தணனல் மறலியைச்சினந்துமீசரனர்
அலறிடவுதைத்தா ராதலாலவனு மவனியின்கீழ்விழுந்திறக்க
வுலகில்வாழ்மனிதர் மற்றுளஜீவ ஜெந்துகளுயிர்களேமிகுத்துத்
தொலைவதற்கேது விலாதிருப்பதனற் சுமக்கொணுவருத்தமதாகி.

(இ-ள.) பிரமாவின் குலத்திலேபிறந்த அந்த மிருகண்டு புத்திரனை மார்க்கண்டனுக்காகச் சிவனானவர் கோபங்கொண்டு யமன் அலறும்படி உதைத்தார் அதனாலே அந்தயமன் பாதாளத்திலேவிழுந்து இறந்துபோகப் பின்பு உலகத்திலே வாழுகிற மனிதர்களும் மற்றுமுள்ள ஜீவஜெந்துக்களுமான உயிர்கள் அதிகமாய் அவைகள்சாவுதற்குக் காரணமில்லாமல் பூமிதேவி தாங்கமாட்டாத பாரத்தினாலே மிகவும் வருத்தங்கொண்டு—எ-று. (௰௫)

வந்தனள்பூமா மடந்தைதானிந்த வன்சுமைப்பாரமோடழன்று
மிந்தமெய்ப்பார மிறக்குதற்கென்னு லுங்களாலியலொணுவகைக்குச்
சிந்துரமுரித்துப்போர்த்திடுங்கடவுடிருப்பதமணுகியேபோற்றி
யந்தகன்றன்னையெழுப்பிடநாமுமுங்களையழைத்தனனென்ருர்.

(இ-ள்.) பூமிதேவியானவள் இப்படிப்பட்ட வலிதான சுமையாகிய பாரத்துடனே மனம்வருந்தி வந்தாள் ஆகலால் இந்த அவளுடையசரீரத்துக்குப் பாரமானதை இறக்குதற்கு என்னாலும் உங்களாலும் ஆகாத காரியமா யிருக்கிறதினாலே யானைத்தோலைஉரித்துப் போர்த்துக்கொண்டருளுகிற கடவுள் திருவடியையடைந்து துதித்து எமனை யெழுப்பவேண்டி நான் உங்களை அழைத்தேனென்றார்—எ-று. (௰௬)

சீதைநாயகனேயெங்களையாளுந்தேவனேதேவர்நாயகனே
மாதவர்போற்றுமெட்டெழுத்துடையவள்ளலேநாங்களோர்பொருளோ
வீதுகெட்டருளவேணுமோகிருபைக்கிசைந்ததேயாகுமென்றிறைஞ்சி
யோதிடமாயனஞ்சலென்றருளிச்சயனம்விட்டொருமையாயெழுந்து.

(இ-ள்.) சீதாபிராட்டிக்கு நாயகனானவனே எங்களை யாட்கொண்டருளுகிற தெய்வமே தேவர்களுக்கெல்லாந் தேவனே மகருஷிகள் துதிப்பதான அஷ்டாக்ஷரத்தையுடைய பிரபுவே நாங்கள் உமக்கு ஒருபொருளோஇதுகேட்கவேண்டியோ எங்களைவரவழைத்தகாரியம் உம்மாலாகாதோ இனி உமதுதயவுக்குச் சம்மதமென்று அவர்கள்வணங்கிச்சொல்ல அதற்கு விஷ்ணுவானவர் நீங்கள் பயப்படாதிருங்களென்று யோகநித்திரை ஸ்தானத்தைவிட்டு ஒருமனதாக எழுந்து—எ-று. (௰௭)

வானவர்வானோர்க்கரசன்மற்றயன்சீர்மாதவர்கின்னரர்கெருடர்
ஞானகந்திருவர்நாரதர்முனிவர்நான்மறைக்குலங்களுஞ்சூழ
வேனருபமதாயிரணியாட்சதனையீடழித்திடுமருட்டிருமால்
ஞானமாங்கருடன்மீதினிலெழுந்துநடந்தனன்கயிலையைநோக்கி.

(இ-ள்.) தேவர்கள் - தேவேந்திரன்-பிரமன்-சிறப்புள்ளமகருஷிகள்-கின்னரர்-கெருடர்-ஞானமுள்ளகந்திருவர்-நாரதர் - முனிவர்கள் - நான்கு வேத கூட்டங்களெல்லாஞ் சூழ்ந்துவர வராகாவதாரங்கொண்டு இரணியாட்சதனைக்கொன்று பூமியைஉத்தரித்த கிருபாவடிவான ஸ்ரீயப்பதியானவர் வேதவடிவான கருடன்மேலேறிக்கொண்டு கயிலாசமலையைக் குறித்துப்போனார்—எ-று. (௰௮)

வெள்ளியம்பொருப்பிற்சென்றுபூங்கொன்றைவேணியனெம்மையாள்வி
னெள்ளியபொருளைமலைமகள்பாகத்தொருவனைமுக்கணுயகனைத் [மல
துள்ளியமறலிதனையுதைத்தோனைத்தூயவர்பயந்தவிர்த்தோனைத்
தெள்ளியவேதக்கடவுளையந்தத்திருமகள்கொழுநன்கண்டிறைஞ்சி.

(இ-ள்.) அப்படி அந்தவெள்ளிமலைக்குப்போய் பூங்கொன்றையையணிந்த சடையையுடையவரான எங்களையெல்லாம் அடிமைகொண்டருள வல்லபரிசுத்தராய் சோதிவஸ்துவாய்ப் பார்வதிசமேதராய் ஒப்பில்லாத திரிநேத்திரதாரியாய் அகங்கரித்துவந்த யமனைஉதைத்து நல்லோர் பயந்தீர்த்தருளின தெளிந்த வேதாந்தப்பொருளை அந்தத் திருமாலானவர்கண்டு வணங்கி—எ-று. (௰௯)

அம்பலத்தரசேயெங்களையாளுமரகராசிவசிவாபோற்றி
வம்புசெய்யசுரர்புரமதையெரித்தவள்ளலேமாசிலாமணியே
நம்புமெய்யடியார்துன்பவேரறுக்குநாயகாகருணைவாரிதியே
சம்புசங்கரனேதிருக்கடவூர்வாழ்சதாசிவரூபனேபோற்றி.

(இ-ள்.) பொன்னம்பலத்திலே நிர்த்தஞ்செய்கிறவனே யெங்களையெல்லாம் ஆளுகின்ற அரகரா சிவசிவா போற்றிபோற்றி வீணானவைகளைச்செய்கிற அசுரர்களுடைய திரிபுரத்தைத் தகனம்பண்ணின பிரபுவே மாசில்லாதமாணிக்கமே உம்மைநம்பின மெய்யான அடியார்துன்பங்களின் வேரையறுக்குநாதா கருணைக்கடலே சம்புவே சங்கரா திருக்கடவூரிலே வாழுகின்ற சதாசிவரூபா போற்றி—எ-று. (௨௰)

வள்ளலேமலரோவையகத்தொளியேவளர்மதிச்சடையனேபோற்றி, யெ
ள்ளிலெண்ணெய்போலெங்குமாய்நிறைந்த விறைவனேசுருதிவான்பொ
ருளே, தெள்ளுசெந்தமிழாற்பாடுமூவர்க்குந் திருவருள்கொடுத்தசிற்பர
னே, புள்ளிவேங்கையின்றோலுரித்துடுத்தோனே புனிதநின்பொன்னடி
போற்றி.

(இ-ள்.) ஓமகப்பிரபு திருவுந்திக்கமலத்திலே தோன்றின வுலகத்துக்கொளிவடிவானவனே வளருகின்ற சந்திரனைச் சடையிலேஅணிந்தவனேபோற்றி எள்ளிலே எண்ணெயைப்போ லெங்குமுள்ளவனாய் நிறைந்திருக்கிறதெய்வமே வேதத்திலே விளங்குகிற வுயர்ந்தவஸ்துவேதெளிவான செந்தமிழ்க்கவிகளைப் பாடுகிற சம்பந்தர் அப்பர் சுந்தரர்களுக்குத் திருவருள்பிரசாதிக்கின்ற சிற்பரனே வரிகளையுடைய வேங்கைத்தோலையுரித்து உடுத்திக்கொண்டவனே பரிசுத்தனே உம்முடைய பொன்னடிகள்போற்றி—எ-று. (௨௧)

அன்பருக்கன்பாயவர்மனக்கருத்திலாடியவண்ணலேபோற்றி
என்பெருமானேயேழைபங்காளாவேமனையுதைத்தகங்காளா
முன்பொருநாளிலெரியண்ணாமலையாய்நின்றிடுமூர்த்தியேகடவூர்க்
கன்பதாய்வாழுமமிர்தகடேசாவத்தனேயருமறைப்பொருளே.

(இ-ள்.) அன்புள்ளவர்களுக் கன்புள்ளவனாய் அவ்வன்பர் மனநினைவிலே நிருத்தஞ்செய்கிற சுவாமிபோற்றி எனக்கும் பெருமைகொண்ட தெய்வமே பார்வதிசமேதா எமனைஉதைத்த எலும்பாபரணங்கொண்டவனே முன்பொருகாலத்திலே அக்கினிமயமான திருவண்ணாமலையாக நின்றருளினசுரூபி திருக்கடவூர்க்கு மிகவும் பிரீதியுள்ளவனாக வாழுகின்ற அமிர்தகடேசனே அப்பனே அரிதான வேதப்பொருளே—எ-று. ()

இன்னிசைமறையாலமலனைத்தொழுதேயிரந்திடுமாலயனிமையோர்
பன்னுதல்கேட்டுப்பாமனார்தாமும்பரிவுடன்றிருவுளமகிழ்ந்து
மன்னெடுமாலுக்கஞ்சலென்றேதிமாதொர்பாகன்வெளித்தோன்றி [னே.
நன்னெறியுடையோர்க்கெக்குறையெனவே நாயகன்வினவமானவில்வா

(இ-ள்.) இப்படி இனிதானராகமுள்ள வேதவாக்கியங்களாலே அந்தப்பரிசுத்தரான கடவுளைவணங்கி வேண்டிக்கொள்ளுகிற விஷ்ணு பிரமாதேவர்கள் சொல்லுகிறதைக்கேட்டுக் கயிலாசபதியானவர் தாமும்அன்புடனே திருவுள்ளமகிழ்ந்து அங்குநிற்கிற விஷ்ணுவுக்கு அபயஞ்சொல்லி பார்வதிசமேதராய் வெளிவந்து அந்த நன்மார்க்கமுள்ளவர்களுக்கெல்லாம் என்னகுறையுண்டாயிற்றென்று கடவுள்கேட்க மகாவிஷ்ணு சொல்லுகிறார்—எ-று. (உ௩)

வேறு.

தன்னைத்தானேதானுணர்ந்துந்தானாய்முளைத்ததற்பரனே
உன்னையன்பாய்த்தொழுமவர்க்குமொருதுன்பங்கள்வருவதுண்டோ
இன்னலில்லையிடரில்லையெங்கள்மனங்கள்கலங்கவில்லை
கன்னிபாகாவடியேனொன்கழறலொன்றுகேட்டருள்வாய்.

(இ-ள்.) தானென்பதைத்தானே தானாகத்தெரிந்து எங்குந் தானாகமுளைத்திருக்கிற மேலானகடவுளே உம்மைப்பத்திகொண்டு வணங்குகிறவர்களுக்கு ஒருதுன்பம் வருவதுண்டா இல்லை ஆகையா லெங்களுக்கு ஒருதுன்பமுமுண்டாகவில்லை எவ்வகை இடர்களுமில்லை எங்கள்மனங்களுக்கு மொருகலக்கமில்லை ஓபார்வதிசமேதா அடியேனாகிய நான்சொல்லுவதொன்றுண்டு அதை நீர்கேட்டருளவேணும்—எ-று. (உ௪)

மானுமழுவுங்கரத்தணிந்தவண்மைப்பொருளேமிருகண்டன்
றானும்பயந்தமார்க்கண்டன்றன்னான்மறலிதனைச்சினந்து
கோனேயவனையுதைத்ததனாற்கொடியவேமனுயிரிழந்தா
னைதாலேயுலகிலுயிரழியாதிருக்கலானதுவே.

(இ-ள்.) மானையுமழுவையுங் கையிலேகொண்ட வுயர்ந்தபொருளானவரே உலகத்திலே மிருகண்டமுனிபெற்ற மார்க்கண்டேயனுக்காக நீர்எமன்மேலே கோபங்கொண்டு அவனைஉதைத்ததினாலே எமனிறந்துபோனான் ஆகையால் உலகத்திலே உயிர்கள்சாவாமல் அதிகமாயின-எ-று. ()

பாருக்குறுதியானமங்கைபதறிக்கலங்கிக்கழுத்தொடிந்து
சீருக்குலைந்துபுவிபாரச்சுமையாற்றேம்பியலறுகிருள்
யாருக்கிசைந்ததிதுவென்றேயிருந்தாலெவர்களாற்றுவரோ
மேருத்தனைவில்லாய்வளைத்துப்புரத்தையெரித்தவிமலோனே.

(இ-ள்.) அதனாலே பூமிக்கு ஆதாரமானவள்பதறிக் கலக்கமாய்க்கழுத்தொடிந்து தன்சீர் சிந்திவருந்திப் பூமிபாரச்சுமையாலே தாங்கமாட்டாமல் தேம்பி வருத்தப்படுகிறாள் இந்தவருத்தம் யாருக்கோவந்ததென்று நீர் யோசியாமலிருந்தால் அந்தச்சுமையை யார்தாங்குவார்கள் மகமேருவை வில்லாகவளைத்துத் திரிபுரதகனம்பண்ணின விமலனே-எ-று.

எளியேன்பேரிற்றயவுசெய்தேயெம்பிரானேமனமிரங்கிக்
களிவண்டாரற்றுங்கடலூராகாலனுயிர்தந்தவனிமங்கை

விழிநீர்மாற்றிச்சுமையிறக்கிவிடுவீரடியார்பயந்தீர்த்துப்
பொழியுங்கருணைவாரிதியேபோற்றியென்றுபுகழ்கின்றார்.

(இ-ள்.) எளியேனை என்மேல் நீர்தயவுபண்ணி மனத்திலிரக்கங் கொண்டு இறந்த எமனுக்கு உயிரைக்கொடுத்துப் பூமிபாரத்தைத்தீர்க்க க்கடவீர் ஓ எங்கள்பெருமானே தேனைக்குடித்து வண்டுகளிசைபாடுதல் மாறாத திருக்கடவூரனே அடியார்கள் பயத்தைத்தீர்த்து கிருபாரஸத் தைப்பொழிகின்ற கருணைக்கடலே போற்றிபோற்றியென்று புகழலா னார்கள் எல்லாரும்—எ-று. (௨௭)

தொழுசீரயன்மாலிமையோரைச்சோதிப்பெருமானருள்விழியாற்
றழுவிமுறுவனகைபுரிந்துமன்பினாலேதலையசைத்து
மொழுதற்கரியவுமைபாகரெழின்மேனியர்தம்முகநோக்கி
யழிவிலாததிருக்கடவூரையர்திருவாக்கறையலுற்றார்.

(இ-ள்.) அப்படிப்புகழ்ந்து வணங்குகிற பிரமா விஷ்ணு தேவர்களை சோதிவடிவான கடவுளானவர் தமது கிருபாதிருஷ்டிகொண்டு பார்த்த ருளிச் சிறுநகைசெய்து பிரீதியினாலே தலையைஅசைத்து எழுதவொண் ணாத பார்வதிசமேதராகி அழகுள்ள மேனிகொண்ட அவர்களெல்லார் முகமும் பார்த்து நாசரஹிதரான திருக்கடவூ ரமுதகடேசர் தமதுதிரு வாயைத்திறந்து பேசுகிறார்—எ-று. (௨அ)

வையமதனைவயிற்றடக்குமாலேகேளீர்வெகுகொடுமை
செய்யுமறலியவனடத்தைசெப்பக்கடவதலவென்றே
யையன்சினந்தங்கரிதனையேபகலப்போமென்றவருரைக்கச்
செய்யாள்கொழுநன்முகம்வாடிப்பணிந்துதுதித்துச்செப்புகின்றார்.

(இ-ள்.) ஓய் உலகத்தையெல்லாம் வயிற்றிலேயடக்கவல்ல திருமா லே கேளும் மிகவுங்கொடுமைசெய்கிற இந்தயமனுடைய கெட்டநடக் கையை வாயாலேநாம்சொல்லத்தக்கதல்ல ஆகையாலே நீர் தூரவிலகிப் போமென்று கடவுளானவர் கோபங்கொண்டு சொல்ல அதற்குத் திரு மாலானவர் முகம்வாடிப் பின்னும்வணங்கித் தோத்திரஞ்செய்து சொ ல்லுகிறார்—எ-று. (௨௯)

வெளியேயொளியேமெய்ப்பொருளே வேதக்கொழுந்தேமெய்த்தவமே
யெளியேனுனதுபதத்தடியே னியன்றகுறைகடீர்வதற்கா
யழுதுன்னிடத்தில்வந்தக்கா லட்டிசெயாமலருள்புரிவாய்
தெளிவேகருணாலயத்தேவே சிவனேபோற்றிபோற்றியென்றும்.

(இ-ள்.) ஓ ஆகாசவடிவே சோதிவடிவே மெய்யான பொருள்வடிவே வேதக்கொழுந்து வடிவே மெய்யான தவவடிவே எளியேனாகிய நான் உமதுபாதத்துக் கடியேனாகி எனக்குண்டான குறைகளெல்லாம் தீர்வத ற்காகவந்தால் நீர் அதற்கு யாதொருதடையுஞ்செய்யாமல் அருள்செய்

யவேவேணும், எல்லாந் தெளிந்தவரே கருணாலயக்கடவுளே சிவனே போற்றிபோற்றியென்று சொல்லியும்—எ-று. (௩௰)

அடியார்பிழைகடம்மையெதி ராகச்சினந்தேயடித்தக்கா
லடியார்தமக்குவேறுகதி யுனையல்லாமலாருண்டோ
வடியேன்கேட்டமனுக்கொடுத்து மழிந்தவெமனைத்தானெழுப்பிப்
படியின்பாரமிறக்கிவைப்பாய் பரனேபோற்றிபோற்றியென.

(இ-ள்.) உமதடியார்கள் செய்தகுற்றத்தை யெதிர்செய்து அவர்களை வருத்தினால் அந்த அடியார்களுக்கு உம்மையல்லாமல் வேறேகதி யுண்டாகுமோ இல்லை ஆகையா லிப்போ தடியேன்கேட்டுக்கொண்ட மனுப்படி கட்டளையிட்டு இறந்த எமனை எழுப்பிவிட்டுப் பூமிபாரத்தைத்தீர்க்க வேணும் பரனே போற்றிபோற்றி—எ-று. (௩க)

சிறியவெமனையொருபொருட்டாய்ச் சினந்துமெமக்குமயன்றனக்கு
மரியகடவுள்பதநோவ வவனையுதைக்கத்திருவுளமோ
பொறிகள்பறக்கவவனுடலிற் பொற்றாள்படவேயெங்களினு
நெறிசேரதிகங்கூற்றானா னிமலாபோற்றிபோற்றியென.

(இ-ள்.) மிகச்சிறுவனான எமனை ஒருபொருளாகக்கொண்டு கோபித்து-எங்களுக்கும் பிரமாவுக்குங்கிடைக்க அரிதான தெய்வமே உமதுபாதம்வருந்த அந்தயமனை உதைக்கவேணுமென்று திருவுள்ள மிருந்ததோ தெரியோம்-நெருப்புப்பொறிகள்பறக்க அவனுடம்பிலே உமது பொன்மயமான பாதம்பட்டபோதே அந்தயமனானவன் எங்கிளெல்லாரினுஞ் சிறந்தவனானான் போற்றிபோற்றியென்று—எ-று. (௩உ)

தும்பையறுகுமதிநதியுஞ் சூடுஞ்சடிலப்பெருமானே
தம்பிரானேயெங்களுக்குத் தயவதாகமுனிவைவிட்டு
நம்புமடியான்மறலிதனை யெழுப்பிப்பூமிநலிசுமையை
யும்பர்கோனேநீக்குமென வுரைத்தேநெடுமால்தொழுதிடுநாள்.

(இ-ள்.) தும்பைமலர் அறுகம்புல் சந்திரன் கங்கை ஆகிய இவைகளெல்லாந் தரித்துக்கொண்டிருக்கிற ஜடையையுடையகடவுளே தானே தானானவனே தேவர்நாயகனே எங்கள்மேல் தயவுசெய்து உமதுகோபத்தைவிட்டு உம்மை நம்பின அடியானான யமனை எழுப்பிவிட்டுப் பூமிதேவி வருந்துகிற சுமையைத் தீர்த்தருளவேணுமென்று விஷ்ணுவானவர் வணங்கிச்சொல்லும்போது—எ-று. (௩௩)

சிவனார்மாயன்றனைப்பார்த்துத் திருவாய்மலர்ந்துநமக்கன்பாய்த்
தவமேசெய்யுமார்க்கண்டன் றன்னையவமாய்க்கோபித்து
மவனையடர்ந்துமுயிர்பிடிப்ப தாச்சோசற்றுங்கணியாம
லிவனையெழுப்பவெந்தவகை யிசைத்தீர்போம்போந்திருமாலே.

(இ-ள்.) அதற்குச்சிவனானவர் விஷ்ணுவைப்பார்த்துத் தமது திருவாய்மலர்ந்து நம்மிடத்திலே அன்புகொண்டு தவஞ்செய்கிற மார்க்கண்ட

னைக்கோபித்து நெருங்கி அவமதித்து அவனுயிரைப் பிடிக்கும்படியான செருவமுண்டாச்சுதல்லவோ இந்தயமனுக்கு நீரிதையெல்லாம் ஆலோசியாம லவனை யெழுப்பிவிடச்சொல்லுகிறது எந்த நியாயங்கொண்டு விஷ்ணுவே போம்போம்—எ-று. (௯௪)

கொடியபுரத்தைக்கனலாக் கொளுத்தியெரித்ததறியீரோ
கடியவசுரர்மழுமானைக் கரியையவிடுக்கவவைகளையு
மடியச்செய்தவகையறிவீர் வானோர்புவியையெரித்துவந்த
கடியவிடத்தையுண்டுவிட்ட கருத்துமறிவீர்திருமாலே.

(இ-ள்.) ஓய் விஷ்ணுவே பொல்லாத திரிபுரத்தை நெருப்பாகக்கொளுத்தி நான் எரித்ததை நீர் அறியீரோ கடுமையான அசுராவேசத்தை கொண்ட மழுவையு மானையும் யானையையு மனுப்ப அவைகளையெல்லாம் அழியும்படி நான்செய்ததை நீர்அறிவீரோ தேவருலகத்தையுமெரிக்கவந்த கடூரமான விடத்தையும் நானுண்டுவிட்ட கருத்து நீரறிவீரல்லவோ—எ-று. (௯௫)

தக்கனென்னையிகழ்ந்ததனாற் றலைபோயாட்டுத்தலையானான்
மிக்கசனியனமையிகழ முடமாய்ச்செய்தவிதமறிவீர்
புக்கசமணர்மதியாதாற் கழுவிலேற்றும்புகழறிவீ
ரிக்குமதனன்றனையெரித்த வியல்புமறிவீர்திருமாலே.

(இ-ள்.) தக்ஷப்பிரசாபதியானவன் என்னை யிகழ்ந்து தன்தலைபோய் ஆட்டுத்தலைகொண்டான் மிகுந்த சனியனானவன் என்னை யிகழ்ந்ததனாலே அவனை முடவனாகச்செய்தேன் சமணர்கள் என்னை மதியாமையினாலே அவர்களை கழுவிலேறும்படி பண்ணினேன் கரும்புவில்லையுடைய மன்மதனை யெரித்தமுறையும் எல்லாம் நீரறிவீரல்லவோ—எ-று (௯௬)

பரமசிவமென்றெண்ணமற்பலபேர்கோடிபிறந்தார்கள்
அரவசயனவவர்களிலுமறலியதிகபலவானோ
நரகனமக்குமதியவனோநன்மையறியாப்பெரும்புலையக்
கரவன்றன்னையொருபொருளாயுரைத்தீரந்தக்கசடோனை.

(இ-ள்.) என்னைப் பரமசிவமென்று நினையாமல் அநேகங்கோடிபேர் பிறந்தார்கள் ஓ சர்ப்பசயனத்தையுடையவரே அவர்களிலு மிந்தயமன் அதிகபலமுள்ளவனா நரகலோகத்திலேயிருக்கிற இந்தயமன் எனக்குப் புத்திசொல்லுகிறவனா எவ்வளவேனு மிதுநல்லதென்று தெரிந்துகொள்ளமாட்டாத பெரியநீசனான திருட்டுமூடனை ஒருபொருளாகநினைத்துப்பேசுகிறீர்—எ-று. (௯௭)

இவனோதுணிந்துபகடேறியெனக்குமுன்னேவருவானோ
இவனோபாசக்கயிற்றாலேயெறிந்தானென்னைமதியாம
லிவனோவென்றனடியாரையடர்ந்தான்பயங்களில்லாம
லிவனோடொருமைபேசுவரோவினைப்பயலையொருபொருளாய்.

(இ-ள்.) இவனோ எனக்குமுன்னே துணிந்து எருமைக்கடாவின்மே லேறிக்கொண்டு வருகிறவன் என்னையெண்ணாமல் தன்பாசக்கயிற்றாலே வீசுகிறவனிவனே என்னடியார்களை நெருங்கிப் பயப்படாமற் பிடிக்கவரு கிறவனிவனே இப்படிப்பட்ட இவனுடனே ஒத்து இந்தச் சண்டாளப்பய லைக்குறித்தும் யாராவது பேசுவார்களா—எ-று. (௩அ)

சொல்லற்கரியவணுநிகராந்துஷ்டப்பயலையிரக்கமிலாச்
சல்லிப்பயலைநீயெழுப்பத்தான்வந்துரைத்தீரவன்றனக்குச்
சொல்லலாமோதிருமாலேதூரப்போவீரினிச்சொன்னாற்
கல்லியேமன்றனக்குவந்தவாதைவருமேகாணுமக்கு.

(இ-ள்.) எவ்வளவுஞ்சொல்லுதற்கு அசங்கதமான ஒரு அணுவுக்கு க்கூட நிகராகாத துஷ்டப்பயல் இரக்கமில்லாத சல்லிப்பயல் ஆகியஇவ னைப் பிழைப்பிக்க நீர்வந்துபேசுகிறீர் இவனைக்குறித்தும் யாராவதுசமா தானமுஞ்சொல்லக்கூடுமோ ஓ விஷ்ணுவே நீர் தூரப்போம் இன்னம் அவனைக்குறித்து நீர் பேசுவீரானால் அவனுக்குண்டான துன்பமே உம க்குமுண்டாகும்—எ-று. (௩௯)

பூமிபாரஞ்சுமையானாலுநாமேபொறுத்துக்கொள்ளுகிறோம்
நேமிதரித்தமாயவனேயதுவுநமக்குநிகரோதான்
வாமபானஞ்செய்மறலி மடிந்தாற்றிரும்பவருவதுண்டோ
போமின்றினியொன்றுரையாமற்போனாலுமக்குப்புகழுண்டே.

(இ-ள்.) பூமிக்கு அதிகபாரமான சுமையானால் அதை நாமேதாங்கிக் கொள்ளுகிறோம் ஓய் சக்கராயுதங்கொண்ட விஷ்ணுவே அது நமக்கு ஒரு சரியோ கட்குடியனான அந்தயமன் மடிந்தால் திரும்பவும் பிழைப் பானே ஆகையால் இனி நீரொன்றும் பேசாமல் உம்மிடத்துக்குப்போம் அப்படியே நீர்ஒன்றும்பேசாமற் போனீரானால் உமக்குக்கீர்த்தியுண்டா கும்—எ-று. (௪0)

அழிந்துபோனவந்தகனை யெழுப்பச்சொன்னீரறியாமல்
வழிந்தபாவக்கொலைகேடன் வண்டனினிமேலாகாது
செழிந்தபூமிதழைத்திருக்கச் செய்தோமினிமேற்கேடில்லை
கழிந்துபோனசண்டாளக் கருமிப்பயலைப்பேசுவரோ.

(இ-ள்.) நீர் ஒன்றும் ஆலோசியாமல் இறந்துபோன எமனை யெழுப் பச்சொல்லுகிறீர் மேன்மேலாகப் பெருகுகிற பாவியான கொலைகாரன் இனி உலகத்திற்குவேண்டாம் உலகமெல்லாந் தழைத்துச் செழித்திருக் கும்படிபண்ணினோம் இனிமேல் உலகத்துக்கொரு கெடுதலுமில்லை செ த்துக்கழிந்து தொலைந்துபோன சண்டாளக் கருமிப்பயலைக்குறித்து யா ராவது பேசுவார்களோ—எ-று. (௪க)

மாலேயயனேவானவரே மாண்டமறலிதனையெழுப்ப
வேலொணாதுபோங்களென வெம்மானுரைக்கச்சகலோரு

மோலமெனவேநடுநடுங்கிப் பயந்துள்ளொடுங்கியூமைகள்போற்
றூலம்பதறிச்சிந்தைநொந்து நின்றார்திருமால்சொல்லுகின்றார்.

(இ-ள்.) ஓ விஷ்ணுவே பிரமாவே தேவர்களே இறந்த எமனை இனி யெழுப்பக்கூடாது போங்களென்று கடவுள்சொல்ல, அதுகேட் டெல்லோரும் நடுநடுங்கிப்பயந்து மனமொடுங்கி முறையோவென்று ஊமைகளைப்போல் உடம்பெல்லாம்பதறி மனம்வருந்திநின்றார்கள் அப்போது விஷ்ணுவானவர் சொல்லுகிறார்—எ-று. (௬௨)

மூலமுதலேமுன்னோனே மூவர்க்கரியபழம்பொருளே
காலகாலாசிறப்புடைய கடவூரெழுந்தநாயகமே
சீலமுடையவிடையோனே சிவனேசிவனேயெனையாண்ட
வாலையுமையாள்பங்கோனே மறுத்தும்யானென்றுரைக்கின்றேன்.

(இ-ள்.) ஓ மூலமு முதலுமான முதற்கடவுளே மூவர்க்கும் அருமையான பழையவஸ்துவே காலகாலனே சிறப்புள்ள திருக்கடவூரி லெழுந்தருளின கடவுளே நன்மையையுடைய இடபவாகனக்கடவுளே சிவசிவா சிவனே பாலையான பார்வதிசமேதனே உமது உத்தரவுக்குத் தடுத்துச்சொல்லுகிறேன்—எ-று. (௬௩)

இந்நாள்வரைக்குநானேநீ ரிந்தக்கூறேநீராகு
மிந்நாள்வரைக்குநீரான கூறேநானேயிருவருமே
யிந்நாள்வரைக்குமொன்றாகி யிருப்பதெவர்க்குமிரண்டாக
விந்நாளெமனாலொருகூறு யிருப்பதாச்சோவீச்சுரனே.

(இ-ள்.) ஓ-சிவனே - இந்தநாளளவு நானே நீர் ஆன இந்தப்பாகமே நீராயிருந்தீர் இந்தநாள் அளவும் நீராகியபாகமேநான் இப்படி யிருவருமே இந்த நாள்வரையிலு மொன்றாகியிருப்பதே எல்லாருக்கு மிரண்டாகத்தோன்றுகிறது இப்போதிந்த எமனாலே ஒரு கூறுதான்உண்டென்று சொல்லலாயிற்றே—எ-று. (௬௪)

நானேவந்திங்கெமன்றனக்கு மன்றாட்டொன்றுநவிலவுற்றாற்
றானேயுதித்தமுதலோனே யதுக்குமறுத்துத்தரமுரைத்தீர்
வீணதாகக்கொன்றுவிட்டீர் நியாயநடுவுவிளங்காமல்
வானேமுன்னாள்மிருகண்டன் மைந்தன்றனக்காயந்நாளில்.

(இ-ள்.) அந்தயமனுக்காக நானேவந்து மன்றாடிக்கேட்டுக்கொண்டால்-தானாகவேயுதித்து விளங்குகிற முதற்கடவுளே அதற்கு மறுத்துத்தடைசொல்லுகிறீர்-முன்னே வீணாக எமனைக்கொன்றுவிட்டீர் பொதுவானநியாயம் விசாரியாமல் முன்னே மிருகண்டமாமுனி பிள்ளைவேண்டிய அப்போது ஓ ஆகாசவடிவே—எ-று. (௬௫)

சொன்னபதினாறண்டல்லாற் றொலையாப்பதினாருண்டாக
வென்னையறியாதெந்தவகை கொடுத்தீர்கடவூரீசுரனே

அந்நாளனைவோர்முன்பாக வறைந்தமொழிகளறிந்திருப்போ
மிந்நாணூலன்றனக்காக விருசொல்லுரைத்தால்யாரெதிர்ப்பார்.

(இ-ரை.) நீர் சொன்னது பதினாறுவயதேயல்லாமல் எப்போதும்அழியாத பதினாறுவயதாக எனக்குத்தெரியாமலெந்தவகைகொண்டு கொடுத்தீர் ஓ திருக்கடவூரரே அந்த நாளில் எல்லார்முன்னாகவும் நீர் சொன்னசொல் நாங்களெல்லாரும் தெரிந்தேயிருக்கிறோம் இப்போது அந்த மார்க்கண்டனுக்காக மாறிப் பேதித்துச்சொன்னால் உம்மோடெதிர்த்துப்பேச வல்லவர்கள் யாருண்டாவார்—எ-று. (௬௬)

மறலிதனக்குமந்நாளில் வயதுபதினாறென்றறைந்தீர்
மறலிதனக்குமறிவித்த வகையுஞ்சகலருமறிவார்
மறலிமார்க்கண்டன்னுயிரை வாங்கவந்தாலவன்றனைநீர்
பொறிகள்கலங்கவுதைத்துயிரை மாய்ப்பதென்னபுகல்வீரே.

(இ-ரை.) யமனுக்கு அந்தநாளிலே பதினாறுவயதென்றே சொன்னீர் அந்த யமனுக்கு நீர் தெரிவித்தவகையும் எல்லாருமறிவார்கள் அந்தப்படியே எமன் மார்க்கண்டனுயிரைப் பிடிக்கவந்தால் அந்த யமனை நீர் அவன்பொறி புலாதிகளெல்லாம் கலங்கும்படி கொல்லுகிறது என்ன நியாயம் நீரே சொல்லக்கடவீர்—எ-று. (௬௭)

என்னவிதத்தாலவன்பேரி லிடர்கள்சொல்வீர்நீர்தாமே
சொன்னசொல்லேயிரண்டானாற்சொற்கேட்பவர்களென்செய்வார்
சின்னப்படவேமறலிதனைச் சிதைத்தீரதனாற்பலனென்ன
கன்னியுமையாடன்கணவா கருணையெவராற்பேசுவது.

(இ-ரை.) நீர் எந்தவகைபா லந்த யமன்மேலே கொடுமைகள்சொல்வீர்-நீர் தாமேசொன்னவாக்கு இருவகையானால் உம்முடைய சொற்கேட்டு நடக்கிறவர்க ளென்னபண்ணுவார்கள், அப்படிக்கிருக்க யமனைச் சின்னபின்னப்படும்படி நீரேகொன்றீர் அதனாலே உமக்குவந்த பயனென்ன அழியாத இளமைப்பருவமுள்ள பார்வதிநாயகரே உம்முடையதயவை யாராலேசொல்லிமுடியும்—எ-று. (௬௮)

இவ்வாறணிமாலெடுத்துரைக்க வெம்மான்றிருமான்முகநோக்கிச்
செவ்வான்றவஞ்செய்வேதனுக்குத் தீர்க் மாகப்பதினாறுண்
டவ்வாறுரைத்ததல்லாம லழியும்பதினாறருளவில்லை
வெவ்வேறுரைகள்சொலவேண்டா மெமக்கன்பானதிருமாலே.

(இ-ரை.) இப்படி மகாவிஷ்ணுவானவர் நியாம்விளங்கச்சொல்ல அதற்கு எமதுகடவுளானவர் மகாவிஷ்ணுவினுடைய முகத்தைப்பார்த்துச் செவ்வையாகப் பெரியதவத்தைச்செய்கிற மார்க்கண்டனுக்கு தீர்க்காயிசாகப் பதினாறுவயதென்று அப்படி நாம் சொன்னதேயல்லாமல் அழிந்துபோகிற பதினாறுவயசாக நாம்கொடுக்கவில்லை இனி நீர் வெவ்வேறான வார்த்தைகள் பேசவேண்டாம் எமக்கு மிகவும் அன்புள்ளவிஷ்ணுவே()

ஈசனுரைத்தமொழிதனைக்கேட் டெழிலிவண்ணனுச்சரிய
மோசஞ்செய்தவழகோநீர் மொழிந்தபடியேகணக்கினிலே
கோசமாகப்பதினறு வயதென்றவற்குக்குறித்திருக்க
நாசஞ்செய்தீர்நடுவனைநீ ருதைத்ததென்னநியாயமதே.

(இ-ள.) அப்படிச் சிவன்சொன்ன சொல்லைக்கேட்டு மேகவண்ணனுன திருமால் மிகவும் ஆச்சரியமான மோசஞ்செய்கிறதழகோ உமக்கு நீர்சொன்னபடியே கணக்கிலே மார்க்கண்டனுக்குப் பதினறுவயதென்று கோசம்பதிவாயிருக்க நீர் யமனைஉதைத்துக் கொன்றதென்ன நியாயம் சொல்லும்—எ-று. (ருய)

கொடுத்தீர்பதினருண்டென்று குறிக்கச்சொன்னீர்கணக்கதனி
லடுத்தமார்க்கண்டனுக்கிப்போ தழியாப்பதினருண்டென்றீர்
தடுத்துப்பேசுவாருண்டோ சமனையுதைக்கநீதியல்ல
வெடுத்துக்கணக்கைப்பாருமையா வென்னமாயமியம்புகின்றீர்.

(இ-ள.) நீர்முன்னே பதினறுவயதென்றுசொல்லி அப்படியே கணக்கிலெழுதச்சொன்னீர் ஆனல் அந்தவயசுள்ளமார்க்கண்டனுக்கு அழியாத பதினறுவயதென்கிறீர் உம்முடனே தடுத்துப்பேசவல்லவர்கள் யாரிருக்கிருர்கள் நீர்யமனைஉதைத்துக்கொன்றது நியாயமேயல்ல நீரோ அந்தக்கணக்கை யெடுத்துப்பாரும் சுவாமி யேன்வஞ்சனைபேசுகிறீர்-எ-று. ()

அரியுமலறந்தமொழிக்கரனு ரந்தப்படிக்குநல்லதென்றும்
பெரியகணக்கையெழுதுகின்ற பெருமான்சித்திரபுத்திரனைத்
துரிதமாகச்சிவகணத்தைப் போய்நீர்கொணர்வீரொன்றுசொல்லப்
பரிவாயோடியவன்றனக்குப் பரனுரழைத்தாரென்றுசொல்ல.

(இ-ள.) என்றிப்படி விஷ்ணுசொல்ல அதற்கு சிவனுனவர் அப்படியே நல்லதென்று பெரியகணக்கெழுதுகிற பெருமையுள்ள சித்திரபுத்திரனைச்சீக்கிரமாகப்போய்க்கூட்டிவாருங்களென்று சிவகணங்களுக்கு நியமிக்க அவர்களிரக்கத்துடனே ஓடிப்போய்ச் சிவபெருமான் கூப்பிடுகிருரென்று சித்திரபுத்திரருக்குச் சொல்ல—எ-று. (ருஉ)

கணங்களிசைத்தமொழிகேட்டுக் கையிற்கணக்கையுமெடுத்த
க்ஷணநில்லாமலோடிவந்து சாமிபாதந்தொழுதேத்தி
யிணங்கும்பரனேயெனைப்பொருளா யழைத்தபணிகளேதென்றுன்
பணங்கொளரவைத்தரித்தபிரான் கணக்கனேடுபகரலுற்றுர்.

(இ-ள.) அப்படிச் சிவகணங்கள் சொன்னசொல்லைக்கேட்டு கையிலே கணக்கையுமெடுத்துக்கொண்டு ஒருக்ஷணப்பொழுதுநில்லாமல்ஓடிவந்து சுவாமிபாதத்தை வணங்கித்துதித்து எல்லாருக்கும் சுவாமியானவரே என்னையு மொருபொருளாக அழைத்தகாரியமென்னவென்று கேட்க அதற்குப் படத்தையுடைய பாம்புகளை ஆபரணமாகக்கொண்ட கடவுள் அந்தக்கணக்கனுடனேசொல்லுகிருர்—எ-று. (ருந)

உரித்தாய்ச்சகலவுயிர்களுக்கும் வயதும்பலனுமுற்றெழுது
மரியகணக்குமாலிகனே யந்நாள்மார்க்கண்டன்றனக்குப்
பிரியமுடனேநாங்கொடுத்த பதினாறுண்டுன்பெருங்கணக்கிற்
றுரிதமுடனேபார்த்துநீ சொல்லுகென்றார்சிவனாரும்.

(இ-ள்.) சகலவுயிர்களுக்கும் கிரமமாக வயதும் பலனுங் கண்டெழுதுகிற அரிதான கணக்குவரிசையுள்ளவனே அப்போது மார்க்கண்டனுக்கு அன்பாக நாம்கொடுத்த பதினாறுவயதும் உன்னுடையபெரியகணக்கிலே நீபார்த்து விரைவுடனேசொல்லென்றார் சிவபெருமான்—எ-று()

புவனத்துள்ளமானிடர்கள்போதக்கணக்கின்புத்தகத்தைச்
சிவனார்பூதகணமதனைச்சிறப்பாயெடுத்துவரச்சொல்லக்
கவனமுடனேயோடிப்போய்க்கணத்திலெடுத்துக்கொடுவந்தே
பவந்தீர்ப்பவர்முன்வைத்தார்கள் பார்த்தார்கணக்கைச்சித்திரரும்.

(இ-ள்.) உலகத்திலேயுள்ளமனிதர்களுடைய பெரியகணக்குச்சுருளை சிவகணங்களையெடுத்துக்கொண்டு சிறப்புடனே வரும்படிசொல்ல அப்படியே சிவகணங்கள் வெகுவிரைவிலேசென்று ஒருக்ஷணஅளவிலே எடுத்துக்கொண்டுவந்து பிறவிநாசரான கடவுள்முன்னேவைத்தார்கள் சித்திரபுத்திரர் அந்தக்கணக்கைப்பார்த்தார்—எ-று. (௫௫)

அரியகணக்கையவிழ்த்தெடுத்துமப்போதவரும்பார்த்திடவு
மெரிசஞ்சடையோனவ்வேளையெம்மானேதுசெய்பவுற்றார்
சரியாயென்றும்பதினாறாயிருக்கவெனவேதானினைக்க
விரிவாய்க்கணக்கிலப்படியேவிவரமாகவிருந்திடவே.

(இ-ள்.) அந்தஅருமையானகணக்கையவிழ்த்து எடுத்துச் சித்திரபுத்திரர் பார்க்கும்போது அந்தச்சமயத்திலே நெருப்புப்போற்சிவந்தசடையையுடைய எமதுகடவுளானவர் என்னசெய்தாரென்றால் சரியா யென்றும்பதினாறுவயதாயிருக்கவேணுமென்று நினைக்க அப்படியே விவரமாய்நன்றாய்விளங்க எழுதியிருக்க—எ-று. (௫௬)

ஆவின்வயிற்றிலுதித்துடனே * யத்திபுரத்துக்காசாகிச்
சேவேறையர்கணக்கரந்த மறையோனேட்டைத்திருப்பியவன்
றாவில்வயதைப்பார்த்திடமுன்னெழுத்திலென்றும்பதினாறாய்
மேவியிருக்கக்கணக்கனுடல்வேர்வைபுற்றுமெய்ம்மறந்து.

(இ-ள்.) காமதேனுவயிற்றிலேபிறந்து உடனே யமலோகத்துக்குத்தலைவராய் இடபவாகனக்கடவுள் கணக்கரான சித்திரபுத்திரர் அந்தமார்க்கண்டர்பேரேட்டையெடுத்து அவருடைய கெடுதலில்லாத வயதைப்பார்க்கும்போது பழையஎழுத்திலே என்றும்பதினாறாகப் பொருந்தியிருக்க சித்திரபுத்திரர்கண்டு உடம்பெல்லாம் வேர்வைகொண்டு மெய்மறதியாய்—எ-று. (௫௭)

* அத்தி - கொலை.

நாவும்வறண்டுமனம்பதறிநடுக்கமுற்றுச்சோகமதாய்க்
கோவின்வயிற்றிலுதித்தருளுங்குமரனேமபுரக்கணக்க
னுவிசுழன்றுதடுமாறி யசைவில்லாதசித்திரம்போற்
றேவதேவன்கற்பனையென்றிருந்தானேட்டைத்திருப்பாமல்.

(இ-ள்.) நாவுமுலர்ந்து மனமுநடுங்கி உடம்பெல்லாங்கூசிச் சோகத்துடனே காமதேனுவயிற்றிலேபிறந்தருளின சித்திரபுத்திரரானயமலோகக்கணக்கர் உயிர்சுழன்று தடுமாறுதலாய் அசைவில்லாத சித்திரத்தைப்போல் இதுகடவுள்கற்பனையென்று ஏட்டைத் திருப்பாமற் பேசாதிருந்தார்—எ-று. (௫௮)

இருந்தானென்றுஞ்சொல்லாமலிருக்கச்சிவனார்பார்த்தருளி
வருந்தியேமன்கணக்கெழுதும்வல்லோனேநீமறுமொழிக
ளிருந்தாற்சொல்லாதிருப்பானே னென்னச்சித்திரபுத்திரனு
ரிருந்தாரெழுந்துநமஸ்கரித்து மிசைத்தார்சிவத்தின்முன்பாக.

(இ-ள்.) அப்படி ஒன்றுஞ்சொல்லாமலிருக்க அதைக் கடவுளானவர் பார்த்து மிகவும் வருத்தங்கொண்டு யமனுக்குக் கணக்கெழுதவல்லவனே நீ நான்கேட்டதற்கு மறுமொழி ஒன்றுஞ்சொல்லாதிருப்பானேன் என்றுகேட்க அதற்குச் சித்திரபுத்திரரானவ ரெழுந்து வணங்கிக் கடவுள்முன்பாகச் சொல்லுகிறார்—எ-று. (௫௯)

அந்நாட்பதினாறுண்டென்றே யடியேன்கணக்கிலெழுதிவைக்க
இந்நாளென்றும்பதினாறுண் டென்றேயிருந்தாலென்செய்வேன்
சொன்னபடிக்கன்றேவரைந்த வீரெட்டாண்டுந்தொலைந்ததையா
வென்னையாளுமிறையவனே யென்றன்கணக்கிற்பிசகில்லை.

(இ-ள்.) அக்காலத்திலே பதினாறுவயதுதானென்று அடியேன் கணக்கிலே யெழுதிவைத்திருக்க இப்போது என்றும் பதினாறுவயதென்றெழுதியிருந்தால் அதற்கு நானென்னபண்ணுவேன் நீர்சொன்னபடியே அப்போது நானெழுதியிருந்த பதினாறுவயது முடிந்துபோயிற்று என்னை அடிமைகொண்டருளுங்கடவுளே நானெழுதினகணக்கிலே ஒருபிசகுமில்லை—எ-று. (௬௰)

கணக்கனிந்தவகையுரைக்க வரனார்கடிந்துகழறுகின்றா
ரிணக்கமுடனேயெப்போதும்பதினாறுண் டென்றேயியம்பக்
கணக்கிலென்சொற்படியிருக்கக் கசடனென்முன்பிழைசொன்னான்
வணக்கமுள்ளமாலயனேவானோரேநீர்பார்த்திலிரோ.

(இ-ள்.) அப்படிச் சித்திரபுத்திரர்சொல்ல கடவுள் கோபங்கொண்டுசொல்லுகிறார் சரியாக என்றும் பதினாறுவயதென்று நான்சொன்னபடியே கணக்கிலெழுதியிருக்க இந்தப் பொய்யன் என்முன்னும் பொய்சொல்லுகிறான் மிகவும் வணங்குதலுள்ளவிஷ்ணுவே பிரமாவே தேவர்களே நீங்களொன்றும் கணக்கைப்பார்க்கவில்லையோ—எ-று. (௬௧)

என்றுசிவனார்கணக்கனையுஞ்சினந்துமிவனைச்சிறைச்சாலை
யின்றுகொடுபோயடையுமெனவரியுமயனுமிந்திரனு
நின்றதேவர்முனிவர்களுநெஞ்சங்கலங்கியுடல்பதறி
யொன்றும்பேசாதிருந்தார்களதிலேதிருமாலுரைக்கின்றார்

(இ-ள்.)என்றுகடவுள்சொல்லிக் கணக்கன்மேலுங்கோபங்கொண்டு இந்தக்கணக்கனை இப்போதேகொண்டுபோய்ச் சிறைச்சாலையிலேவையுங்களென்றுசொல்ல கூடவிருந்த விஷ்ணுவும் பிரமாவும் இந்திரனுந்தேவர்களும் மனங்கலங்கி உடம்புகள்பதறி ஒன்றும்பேசாதிருந்தார்கள் அப்போது விஷ்ணுசொல்லுகிறார்—எ-று. (௯௨)

இமையுண்மணியேயென்மனத்துளிருந்தபரனேயெழின்மிகுந்த
வுமையாள்கணவாகணக்கனுந்தானுரைத்தானுன்னையுணராம
லமையும்பிழையைப்பொறுத்தருளியவனையாள்விரடிமையென
விமையோர்போற்றுமாலுரைக்க விமலன்பின்னும்விளம்புமால்.

(இ-ள்.) எல்லார்கண்ணுக்குள்ளு மணியானவரோ என்மனத்துள்ளுமிருக்குங்கடவுளே பார்வதிநாயகா இந்தக்கணக்கன் உமதுபெருமையைத்தெரியாமற் சொன்னகுற்றத்தைப் பொறுத்தருள்செய்து அவனைஅடிமைகொள்ளவேணுமென்று தேவர்கள் வணங்கத்தக்க விஷ்ணுவானவர் வேண்டிச்சொல்ல அதற்குக்கடவுள் பின்னுஞ்சொல்லுகிறார்—எ-று()

மாலேநீருமென்சொன்னீர் மார்க்கண்டனுக்குமெண்ணிரண்டு
நாலின்படியேவயதென்றீர் நுண்மைக்கணக்கின்படியென்றீர்
சீலமுடனேசகலோருங் கேட்பீர்கணக்கின்செயலதனை
மாலேயதுவுநாமெழுதி வைத்தபுரட்டோசொல்வீரோ.

(இ-ள்.) ஓவிஷ்ணுவே நீருமுன்னே யென்னசொன்னீர் மார்க்கண்டனுக்குப் பதினாறுவயதுதான் கணக்கிலென்றீர் இப்போது நியாயமாக எல்லாரும் அந்தநுண்மையானகணக்கை வாசிக்கச்சொல்லிக் கேளுங்கள் ஓ விஷ்ணுவே நீர் அதுவு நாமெழுதிவைத்த புரட்டுத்தானென்று சொல்வீர்போலும்—எ-று. (௯௪)

எனதோடெதிர்த்துத்தர்க்கமதா யிசைத்தீரும்மையென்செயலாம்
தனதின்படியென்றுகையினாற் சயித்தோநீங்களினியென்னை
வினவவேண்டாமறுமாற்றம் விளம்பவேண்டாந்திருமாலே
கனதிவரமேநாங்கொடுத்தோ மதனைக்குறைக்கக்காரியமென்.

(இ-ள்.) முன்னே யென்னுடனேயெதிர்த்துத் தர்க்கம்பேசினீர் இப்போது நாம்சொன்னபடி கணக்கிலிருக்கையினாலே நாமே மெய்யாயினோம் இனிநீங்கள் என்னை ஒன்றுங்கேட்கவேண்டாம் இனி மறுமொழியுஞ் சொல்லவேண்டியதில்லை ஓய்விஷ்ணுவே என்றுநிலையான வரமே நாம்கொடுத்தருளினோம் அதைநீங்கள் குறைக்கவேண்டிய காரியமென்ன—எ-று. (௯௫)

அன்றுமொழிந்தபடியதுகா ணய்யனேமாலேயிமையோரே
யென்றும்பதினாறுண்டெனவே யிசைத்தோநந்திதாமறிய
வென்றிவேலன்றானறிய வேழமுகவன்றானறிய
நன்றென்னுமையாடானறிய நாமுமறியநீரறிய.

(இ-ள்.) ஓவிஷ்ணுவே-பிரமாவே-தேவர்களே-இந்தநந்தியுமறிய-வெற்றிவேல்முருகனறிய-யானைமுகவிநாயகனறிய-நன்றாக எனதுபார்வதியுமறிய-நாமுமறிய-நீருமறிய அன்று நாம்சொன்னதப்படியே இப்போதும் என்றும்பதினாறுவயதாகவே சொன்னோம்—எ-று. (௬௬)

வேதக்குலத்திலுதித்தசிறு பாலன்விரும்பிப்பூசைசெய்யு
நீதியறிந்துமவன்றனக்கு நிறைந்தபதினாறுண்டுதந்தோம்
ஆதியயனேதிருமாலே யமரர்க்கரசேதேவர்களே
வாதியாகவென்னுடனே மறுவார்த்தைகணீர்சொலவேண்டாம்.

(இ-ள்.) பிராமணகுலத்திலேபிறந்த சிறுபிள்ளையான மார்க்கண்டன் அன்புகொண்டு நம்மைப்பூசைபண்ணுகிற நன்னடக்கைகள்தெரிந்து அவனுக்கு என்றுநிறைவுள்ள பதினாறுவயதே கொடுத்தருளினோம் ஓ உலகத்துக்குமுதலான பிரமாவே விஷ்ணுவே தேவராஜனே தேவர்களே நீங்களென்னுடனெதிரியாக இனி மறுமொழி ஒன்றுஞ் சொல்லவேண்டியதில்லை—எ-று. (௬௭)

இனிமேலாகவென்னுடனே யெதிர்த்துமொழிகளிசைப்பீரேற்
கனலதாகவெரித்திடுவேன் கணிதமுடனேபொங்களெனச்
சினமதாகச்சிவன்சொலவுந் தேவர்பயந்துநடுநடுங்கிப்
புனிதமாகவெல்லாரு மிருந்தாரொன்றும்புகலாமல்.

(இ-ள்.) இனிமேல் என்னுடனெதிர்த்து வார்த்தைகள் சொல்வீர்களேயானால் உங்களையெல்லாம் நெருப்பாக எரித்துப்போடுவேன் நீங்கணுங்கள் கூட்டத்துடனே போங்களென்று கோபங்கொண்டு கடவுள் சொல்லுமளவில் எல்லாரும்பயந்து நடுநடுங்கி ஒன்றும்பேச வாய்திறவாமல் மௌனமாகவிருந்தார்கள்—எ-று. (௬௮)

ஈசன்மனத்திற்றாங்கல்வந்தா லெமக்குமென்னபிழைவருமோ
பாசக்கயிற்றினெமன்றனக்காய்ப் பரிவாய்ச்சொல்லுவாரில்லை
நாசமாகச்சபித்திடுவா ரொன்றுமாயநடுநடுங்கிப்
பேசப்பயந்துமுன்வந்து பெருமானிடத்திற்பேசலுற்றார்.

(இ-ள்.) கடவுள்மனத்துக்குத் தாங்கலுண்டானால் நமக்குமென்ன கெடுதிவருமோவென்று பாசக்கயிற்றினையுடைய எமனுக்காகப் பரிந்து பேசுகிறவர்களொருவருமில்லையானார்கள் அப்போது அழிந்துபோம்படி சாபங்கொடுப்பாரென்று தெரிந்தும் விஷ்ணுவானவர் மிகவு நடுநடுக்கமாகிப் பேசப்பயந்தும் முன்னேவந்துநின்று கடவுளிடத்திலே பேசத்தொடங்கினார்—எ-று. (௬௯)

நம்புமடியாரிடத்தினிலெந் நாளுமிருக்குநாயகமே
நம்புமடியார்செய்தபிழை நல்லோர்பொறுக்கக்கடனதுவே
தம்பிரானேயெங்களுக்குத் தந்தைதாயாகியுமிருந்து
மும்பர்பிரானேகோபித்தால் வேறுகதிகளுண்டாமோ.

(இ-ள்.) நம்பும் அடியார்கள்பக்ஷத்தி லெப்போதுங் கலந்திருக்குந் தெய்வமே நம்பின அடியார்கள்செய்த குற்றத்தை நல்லோர்கள் க்ஷமிப்பது அவர்களுக்கு முறையல்லவோ சுவாமி எங்களுக்குத் தகப்பனுந்தாயுமாயிருந்தும் ஓதேவர்நாயகனே நீரிப்படிக் கோபங்கொண்டால் எங்களுக்கு வேறேகதியேது—எ-று. (௭௰)

அடியேன்சொல்லைமறுக்காம லரனேயுன்றனருளாலே
கொடியமறலிசெய்தகுற்றம் பொறுத்துமுயிரைக்கொடுத்தருளும்
படியைத்தாங்கும்பூமாது பாரம்பொறுக்கமாட்டாமல்
இடிபோற்கதறியழுகின்று ளேழைக்காகத்தயவுசெய்வாய்.

(இ-ள்.) இனி அடியேன்சொல்லைத் தள்ளிவிடாமல் கடவுளே உமது கிருபையினாலே பொல்லாதவனான யமன்செய்த குற்றமெல்லாம்பொறுத்தருளி அவனுயிரைக் கொடுத்தருளவேணும் உலகைத்தாங்குகிற பூமிதேவி சுமைபொறுக்கமாட்டாமல் இடிபோல்முழங்கி அழுகிறாள் ஆகையா லந்தப்பெண்ணுக்காகவே நீர் தயவுசெய்தருளவேணும் கடவுளே. ()

சிறியோன்செய்தபிழைகளெல்லாஞ் சிவனேயெனக்காய்ப்பொறுத்தருளி, மறலிதனையின்றெழுப்புமையாமனுக்கள்பாரம்பொறுக்காமற்
றறைமானவதிப்படுகின்றாடயவுசெய்வாய்தற்பரனே
நெறிக்ணியமம்பொன்றிவிடுநிமலாசித்தந்திரும்பலையேல்.

(இ-ள்.) மிகவுஞ் சிறியபுத்தியுள்ளவனான யமன்பண்ணின குற்றங்களெல்லாம் அடியேனுக்காக கடவுளே பொறுத்தருள்செய்து இப்போதே எமனையெழுப்பிவிடுமையனே சுமைபொறுக்கமாட்டாமல் பூமிதேவியானவள் மிகவுங்கவலைப்படுகிறாள் ஆகையாலே தயவுசெய்யவேணும் தானே தானானவரே பரிசுத்தரே உமதுள்ளந்திரும்பாதிருந்தால் உலகத்திலே நீதிநெறிகளெல்லாம் அழிந்துபோம்—எ-று. (௭௨)

வையஞ்சுவர்க்கமண்டமெல்லாம்வணங்கிப்படைத்துமளித்தழித்துத்
தூய்யவெளியினின்றாடுஞ்சொரூபானந்தாசண்டனுமே
யுய்யும்படிநான்மனுக்கேட்டேனுகந்தந்தகனையெழுப்பியருள்
செய்யவேணுங்கிருபாநிதியேசிவனேயினியான்செப்புவதென்.

(இ-ள்.) பூமி அந்தர சுவர்க்கமெல்லாம் உம்மைவணங்கவே சிருஷ்டித்தும் ரக்ஷித்தும் சங்கரித்தும் பரிசுத்தாகாயத்திலேநின்று கூத்தாடுகிற சொரூபானந்தசோதியே யமனானவன் பிழைக்கும்படி நான்மிகவும் உம்மைவேண்டிக்கொண்டேன் ஆகையால் நீரினிச் சந்தோஷங்கொண்டு எமனையெழுப்பியருளவேணும் ஓகிருபைக்கடலே சிவனே இனிநான்சொல்லத்தக்கதென்னிருக்கிறது—எ-று. (௭௩)

ஒருத்தனறியாதேசெய்தபிழையாலுயிர்விட்டேகிடந்தா
லொருத்தனதற்குமனுக்கேட்டாலுதவவேணும்பெரியோர்க
ணிருத்தாமன்றிலாடுகின்றநிமலாவடியேன்கேட்டபடி
கருத்தில்வைத்தேயருள்செய்வாய்கடவூர்வாழுங்காரணனே.

(இ-ள.) உலகத்திலே ஒருவன்தெரியாமல் ஒருகுற்றம்பண்ணி இறந்துபோனல் அதற்காக மற்றொருவன்வந்து வேண்டிக்கொண்டால் பெரியோர்கள்தயவுசெய்தே ரக்ஷிப்பதுநியாயம் ஆகையாலே பொன்னம்பலத்திலே கூத்தாடுகின்றபரிசுத்தரே அடியேன் கேட்டுக்கொண்டபடிகிருபைசெய்தருளவேணும் எல்லாவற்றுக்குங் காரணப்பொருளானவரே—எ-று. (எச)

என்றுமாயனயனிமையோரிறைஞ்சியெமனுக்குயிர்கேட்க
நன்றுயெனதுபூசைசெய்புமடியான்றன்னைநாடுவதோ
கன்றால்விளவின்கனியெறிந்தகண்ணாவுமக்குச்சம்மதமோ
என்றுமிவனுக்குயிர்கொடுப்பதிலையென்றுரைத்தாரீசரனே.

(இ-ள.) என்று விஷ்ணு பிரமா தேவர்களெல்லாரும்பணிந்து கேட்டுக்கொள்ள அதற்குக் கடவுள்சொல்லுகிறார் நன்மையுடனே என்னைப் பூசைபண்ணுகிற சிவபத்தனிடத்திலே இந்த யமன் போகலாகுமோ ஓ கன்றினலே விளங்கனியெறிந்த கிருஷ்ணா இது உமக்குச் சம்மதிதானா ஆகையாலினி யெக்காலத்திலுமிவனுக்குஉயிர்கொடுக்கலாகாதென்றார்.

அந்தமொழிகேட்டறிதுயிலோனரனாடியில்வீழ்ந்தெழுந்து
மிந்தப்பிழையைப்பொறுத்தருளுமினிமேலும்மைப்பணிவோரைச்
சிந்தைதனிலுநினையாமலிருக்கும்படியாய்ச்செய்வேன்யா
னெந்தாயேநீகிருபைசெய்தின்றெழுப்புகென்றார்திருமாலே.

(இ-ள.) அந்தவார்த்தையைக்கேட்டு விஷ்ணுவானவர் சிவனுடைய பாதத்திலே விழுந்து வணங்கி யெழுந்து இனிஇந்த ஒருகுற்றத்தை மாத்திரம் பொறுத்தருளினீரானல் உம்மை வணங்கும்பத்தர்களை அவன்மனத்திலுநினையாதிருக்கும்படி நான் கண்டிப்புச்செய்கிறேன் சுவாமி இனி நீர்தயவுசெய்து அவனை யெழுப்பிவிடுமென்றார் திருமால்-எ-று. ()

திருமாலுரைப்பமனதிரங்கிச் சிவனார்தாமுமறலிதனைக்
கிருபையுடனேகடைக்கணருள்செய்யவெழுந்துகிளர்ச்சியதாய்
அருமாமறைதேடியபொருளே யரனேசிவனேயமலவெனப்
பெருமாமரம்போலடியினில்வீழ்ந்தெழுந்தந்தகனும்பேசுவான்.

(இ-ள.) இப்படி விஷ்ணுவானவர்சொல்ல கடவுள்மனமிரங்கி யமனைக்கிருபையுடனே கடைக்கண்ணாலே அருள்கொண்டுபார்க்க பார்த்தவுடனே யமனானவன் எழுந்து சந்தோஷமாய் அருமையும் பெருமையுமுள்ள வேதங்கள் தேடத்தக்கவஸ்துவே அரனே சிவனே அமலாவெ

ன்று சொல்லிக்கொண்டு பெரியமாமரம்போல் பாதத்திலேவிழுந்தெழு ந்திருந்து துதிக்கலானான்—எ-று. (௭௭)

வேறு.

ஒருபுறமலைமகள்கறைமிடறுடனேயுரகமொடலைபுனைமதியணிசடையு மிருவிழியொடுநுதலெரிவிழியொளியு மிளநகையொடுபளபளபளவெ னப், பருகியதிருவொளியரைபுலியதளும் பகன்மதியெனவிருகரமழுமா னுய்த், திருவடியெனதுடல் சிரசினிலாடச் செய்தவமெனவோசிவசிவ சிவனே.

(இ-ள்.) ஒருபக்கத்திலே பார்வதி கூடியிருக்க நீலகண்டத்துடனே பாம்புடன் கங்கையும் அலங்கிருதமான சந்திரனையணிந்த சடையும் சூ ரியசந்திரரான இரண்டுகண்களுடனே நெற்றியிலுள்ள நெருப்புக்கண் ணுமொளியும் புன்சிரிப்புடனே பளபள பளவெனக்கொண்டுள்ள அழ காகிய ஒளியையுடைய இடையிலுடுத்தின புலித்தோலும் சூரியசந்திரர் போல இரண்டுகைகளிலுங்கொண்ட மழுவுமானுமாக விளங்கி உமதுதி ருவடியானது எனதுடலிலும் தலையிலும்படுவதாக நான்பண்ணின தவ ம்யாதோ சிவசிவசிவனே—எ-று. (௭௮)

ஒருபொருளாகிய வொளிவெளியோனே புலகொடுவானமுமா கியமுத லே, பெருகியமலைமகள்மருவியசுடரோபேசருமருமறைதேடியகனமே இருவர்கடேடுதற்கரியமெய்ப்பொருளே யிறைவனேவேதியர்குலமகனு லே, திருவடியெனதுட லுதைபடவருளுந் திருக்கடவூர்நான் செய்தவ மேதோ.

(இ-ள்.) ஓரேவஸ்துவான ஒளிவெளியானவனே பூமியும் அந்தரமு மான முதற்கடவுளே பெருமைகொண்ட பருவதராஜ குமாரிகூடின சோதியே சொல்லுதற்கரிதான அருமையான வேதங்கள் தேடத்தக்க கனமுள்ளவனே பிரமா-விஷ்ணுக்களும் -தேடிக்காணப்படாத மெய்யா னவஸ்துவே தலைவனே ஒருபிராமணகுலப்பிள்ளை நிமித்தியமாக உமது பாதம் என்மேலே உதைபடும்படி அருளின திருக்கடவூரா நான்செய்த தவம்யாதோ—எ-று. (௭௯)

வேறு.

என்னைப்பொருளாய்நினமனத்தி லெண்ணியெழுந்துகோபமதாய்ப்
பொன்னின்பாதமதுநோவப் பொய்யேனுடலிற்சாடினதால்
முன்னைத்தவங்களில்லாத மூடன்கசடன்கதியடைந்தேன்
தன்னையுணர்ந்ததயாநிதியே தடுத்தாளென்னைநீதயாபரனே.

(இ-ள்.) அடியேனை ஒருபொருளாக வும்முடைய மனத்திலேகொ ண்டு கோபத்துட னெழுந்தருளிவந்து உமது பொன்னான பாதமானது வருந்தப் பொய்யேனான என்உடலிலேபட உதைத்ததனால் முன்னாளி லே யாதொருதவமுஞ் செய்யாத மூடனுங் கசடனுமான நான் சிவகதி யைப்பெற்றேன் தானே தானாகத்தெரிந்து விளங்குகின்ற கருணைக்கட

லே தனக்குமேலில்லாதவனே இனிநீரே என்னைத் தடுத்தடிமைகொண்டருளவேணும் என்று—எ-று. (௮௧)

மறலிபணிந்துமுறையிடவேமங்கைபாகன்மனமிரங்கிச்
சிறுபுன்முறுவல்செய்தெமனைத்திருக்கண்ணோக்கியஞ்சலெனப்
பொறுமையுடனேகையமைத்துக்கருணைபுரிந்துபுரமெரித்த
விறைவனவனையழைத்தருகேயினியமொழிகளிசைக்கின்றார்.

(இ-ள்.) இப்படி யமனவன்வணங்கி அபயமிடும்போது பார்வதிசமேதரானகடவுள் மனமிரங்கி கொஞ்சம் மந்தகாசம்பண்ணி யமனைத்திருக்கண்ணாலேபார்த்து பயப்படாதியென்று பொறுமையுடனே தமது கையாலே யமையச்செய்து கிருபைகூர்ந்து திரிபுரதகனரானகடவுள் அந்தயமனைப்பக்கத்தேவரக்கூப்பிட்டு நல்லவார்த்தைகள்சொல்லுகிறார்.()

ஏடாவெமனேநமதடியானென்பதறிந்துமதியாமற்
கோடாபாசந்தனைவிட்டாய்கொலைசூழ்பாவிசண்டாளா
நாடாதிருமேலெனையெவரும்பூசித்தவரைநமஸ்கரித்துப்
போடாவிஞ்சிச்சென்றக்காலிதனிற்கடியபொல்லாங்கே.

(இ-ள்.) ஏடா எமனே நம்முடைய அடியானென்பதை நீ தெரிந்தும் அவனைக் கணிசியாமல் நீகொண்டுவந்த பாசக்கயிற்றைவீசினாய் அடே கொலைசெய்கிற பாவியானசண்டாளா இனி நமதடியாரிடத்திலே செல்லாதிரு யாராயினும் என்னைப் பூசைபண்ணுகிறவர்களைக்கண்டால் அவர்களை வணங்கிக்கொண்டு தூரப்போய்விடு மிஞ்சி அவர்களிடஞ் சென்றாயானால் இப்போதுவந்த மரணத்திலும் கொடியபொல்லாங்குஉனக்குண்டாகும்—எ-று. (௮௨)

காமனென்மேற்கணைதொடுத்துக்கனலாயெரிந்ததறியாயோ
வாமிதகப்பனைதக்கன்மடிந்ததுனக்குத்தெரியாதோ
சேமமாகச்சிவபூசைபண்ணுஞ்சிறுவன்றனைப்பிடிக்க
வேமாபோனாயழிந்திட்டாயினிமற்றவர்பாலேகாதே.

(இ-ள்.) மன்மதன் என்மேலேஅம்புதொடுத்து அவனெருப்பாயெரிந்தது நீயறியவில்லையோ, உமையவள்தகப்பனானதக்ஷன் என்னை அசட்டைபண்ணி அவனிறந்ததுனக்குத்தெரியாதா, தனக்கு ரக்ஷகமாகச்சிவபூசைபண்ணுகிற பிள்ளையைப்பிடிக்க யமனே நீ போயல்லவோ இப்படி அழிந்துபோனாய் இனிமேலாவது என்னடியார்களிடத்திலே செல்லாதிரு—எ-று. (௮௩)

உந்தன்மனத்தாற்செய்தகுற்றமும்பரயன்மாறனக்காகப்
புந்திமகிழ்ந்துபொறுத்துயிரைத்தந்தோமினிமேற்புவிமீதி
லெந்தவுயிர்களானாலுமென்னைநினைத்தாலவரிடத்தி
லந்தகாநீபோகாதேயவரோநானென்றறிகண்டாய்.

(இ-ள.) நீ உன்மனமறிந்துபண்ணின உன்குற்றத்தை இந்தத்தேவர்கள் பிரமா விஷ்ணுக்களுக்காக நான்பொறுத்து மனமகிழ்ந்து உனக்குயிராக்கொடுத்தேன் இனி உலகத்திலே எந்தஜீவர்களானாலும் என்னைத் தியானித்தால் அவரிடத்திலே யமனே போகாதே அந்தச் சிவத்தியானிகள் நானென்று விசுவசித்துக்கொள்—எ-று. (அசு)

கோளுங்கொலையுங்கட்காமங்கோபம்பாபந்தனைநீக்கி
நாளுமென்னையேயஞ்செழுத்தானவின்றுபூசைசெய்திட்டென்
றாளைப்பணியுமடியார்கடவத்தைக்குலைத்துப்பிடிப்பாயேல்
வாளுக்கிரையாக்கிடுவோநாமென்றார்மறலிதனைப்பார்த்து.

(இ-ள.) கோள், கொலை, கள், காமம், கோபம், பாபம் ஆகிய இவைகளையெல்லாம்விட்டு எப்போதும் என்னையே பஞ்சாக்ஷரத்தினாலே துதிசெய்து பூசைபண்ணி என்பாதங்களைவணங்குகிற அடியார்கள்தவத்தைக்கெடுத்து அவர்களைப் பிடிப்பாயானால் இதோ எனதுகத்திக்குஇரையாகப்பண்ணுவேன் என்று எமனைப்பார்த்துக்கடவுள்சொன்னார்—எ-று.()

வாவிகூவஞ்செய்திடுவோர்மடஞ்சத்திரங்கணந்தவனங்
கோவிலமைத்துச்சிவலிங்கங்கொண்டுவந்துபூசைசெய்வோர்
மேவித்திருநாணடத்திடுவோரவரைவிரும்பிமேற்சென்று
லாவியுன்னைத்துணித்திடுவோமறிந்துசண்டாபிழைப்பாயே.

(இ-ள.) குளம் கிணறு வெட்டிவைக்கிறவர்கள், மடம் சத்திரம் நந்தவனம் கோயில் உண்டாக்கி சிவலிங்கஸ்தாபனஞ்செய்து வைத்துப் பூசைபண்ணுகிறவர்கள் இன்னமும்விரும்பித் திருநாள்நடத்துகிறவர்கள் ஆகிய இவர்களைவேண்டி மேலே போவாயானால் உன்னுடலைவெட்டித் துண்டுதுண்டுபண்ணிவிடுவேன் இவையெல்லாந்தெரிந்து யமனே நீ அதிகரிக்கக்கடவை—எ-று. (அகூ)

பசித்தோர்க்கன்னமளித்திடுவோர் பள்ளிக்கூடஞ்செய்திடுவோர்
நசித்தகுடியைவளரவைப்போர் நல்லோர்பெரியோரன்புள்ளோர்
விசிட்டரிரக்கமானவர்கள் மெய்யர்சாந்தகுணமுள்ளோர்
வசிக்குமிடத்தினீசென்றால் வலதுகாலாலுதைபடுவாய்.

(இ-ள.) பசித்துவந்தவர்களுக்கு அன்னமிடுவோர்கள் பள்ளிக்கூடங்கள்வைத்துப் படிக்கவைப்பவர்கள் இளைத்தகுடிகளை வலுக்கச்செய்கிறவர்கள் நல்லோர் பெரியோர்களிடத்தில் விசுவாசமுள்ளவர்கள் யோக்கியகுணமுள்ளவர்கள் இரக்கமுள்ளவர்கள் சத்தியவாதிகள் சாந்தகுணமுள்ளவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்களிருக்குமிடத்திலே நீபோனாலும் எனது வலதுகாலாலே உதைபடுவாயாக—எ-று. (எஅ)

நீதிவழுவாதிருந்தோர்க ணெறிசேர்கற்புநிறுத்தினவ
ராதியயன்மாறனைநோக்கி யரியதவங்கள்செய்வோர்கள்
பூதியணிந்தஞ்செழுத்தினையே போற்றுமடியாரெளியோரைப்
பாதுகாப்போரிவர்கள்மேற் சென்றான்மோசப்படுவாயே.

(இ-ளை.) நீதிதப்பாதிருக்கிறவர்கள் நன்மார்க்கத்தைச்சேர்ந்த ஒருத்தி கற்புநிலையை நிறுத்தினவர்கள் முதன்மையான பிரமா - விஷ்ணுக்களைக் குறித்து அருமையான தவஞ்செய்கிறவர்கள் விபூதியணிந்துகொண்டு பஞ்சாக்ஷரஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிற அடியார்கள் எளியவரை ஆபத்துக்காலத்திலே ரக்ஷிக்கிறவர்கள் ஆகிய இவர்கள்மேலே நீபோனால் மிகவு மோசப்படுவாயாக—எ-று. (அஅ)

நமையெந்நேரநினைந்திருப்போர் நமதாலயங்கள்வலம்வருவோர்
சுமைதாங்கிகளைவைத்திடுவோர் சுருதிநூல்களாய்ந்திடுவோர்
அமைவாநன்றிகுன்றாதா ரைந்துபொறியையடக்கினர்மே
லெமனேநீயுஞ்சென்றக்கா லினிமேலுனக்குவாய்ப்பில்லை.

(இ-ளை.) எந்நேரமும் என்னையே தியானிக்கிறவர்கள் எனதுகோயிலை வலம்வருகிறவர்கள் வழிநடைகளிலே சுமைதாங்கிக்கற்களை நிறுத்தி வைத்தவர்கள் வேதசாஸ்திரங்களை ஆராய்ந்துகொண்டிருக்கிறவர்கள் அமைவாக ஒருவன்செய்த நன்றியைமறவாதவர்கள் பஞ்சேந்திரிய நிக்கிரகம் பண்ணியிருக்கிறவர்கள் ஆகிய இவர்கள்மேலே நீபோனால் இனிஉனக்கு மன்னிப்புக்கிடைக்காது—எ-று. (அகூ)

வேளவிசெய்வோர்மலர்மாலை நமக்குவிரும்பிச்சாத்தினவர்
தாழ்விலாமலந்தணர்க்குத் தானம்வீடுகட்டிவைப்போர்
வாழ்வைவிரும்பாயோகியரை மாதவங்களுடையோரை
யேழையென்னாதுகப்போர்மே லெமனேசென்றாலிறந்திடுவாய்.

(இ-ளை.) யாகஞ்செய்கிறவர்கள் புஷ்பமாலைகளை எனக்கு அன்புகொண்டு சாத்துகிறவர்கள் யாதொருகுறைவுமில்லாமல் பிராமணர்களுக்குத்தானமாக வீடுகட்டிக்கொடுக்கிறவர்கள் இல்வாழ்க்கையை வேண்டாதயோகிகளையும் பெரிதான தவங்களுள்ளவர்களையும் எளியவர்களென்றுநினையாமல் பத்திசெய்கிறவர்களாகிய இவர்கள்மேலே எமனேநீபோனாலழிந்துபோகக்கடவை—எ-று. (கூ0)

கன்னிதானம்பசுத்தானங் கனகதானம்பூதான
மன்னுமன்னதானமிட்டு மகாவாலயங்கள்விளக்கிடுவோர்
என்னைநினைந்தேயிருப்போர்க ளென்றனடியார்க்கேவல்செய்வோர்
தன்னையணுகிநீசென்றா லெமனேயுன்னைச்சங்கரிப்பேன்.

(இ-ளை.) கன்னிகாதானம் கோதானம் சுவர்ணதானம் பூமிதானம் நிலையான அன்னதான முதலானவைகள்செய்து பெரியகோயில்களில் விளக்குவைக்கிறவர்கள் என்னையே தியானித்திருக்கிறவர்கள் என்னடியார்க்கேவல்செய்கிறவர்கள் ஆகிய இவர்களை நீகிட்டி நெருங்கினால் எமனே உன்னை அழித்துவிடுவேன்—எ-று. (கூக)

இவ்வாறேமாவுனக்கு நாமிசைத்தபடியேநடந்துகொள்வா
யிவ்வாறெனதுமொழிதவறி யிசைகேடாகநீநடந்தா

லொவ்வாதொருவரினியுனக்கு முபரிபேசவரமாட்டா
ரிவ்வாறறிந்துபிழையெனவே யீசன்மகிழ்ந்துமொழியுங்கால்.

(இ-ள்.) எமனே உனக்கு நான் இவ்விதமாகச்சொன்னபடியே நடந்துகொள்ளு இப்படியான என்சொல்லைக்கடந்து முறைபிறழ்வாக நடந்தாயானால் அது ஒருவருக்கும் சம்மதமாகாது இனிமேல் உனக்குமேலுதவியாக ஒருவருந் தெரிந்துசொல்லமாட்டார்கள் ஆகையால் இப்போது நான் சொன்னவகைகளெல்லாந் தெரிந்து நடந்துகொள்ளென்றுகடவுள் சந்தோஷித்துச் சொல்லும்போது---எ-று. (௬௨)

வேறு.

என்றுமெம்பிரானேமனுக் குரைத்திடப்பயந்து
நின்றமாமரம்வீழ்ந்தது போலவேநிலத்தில்
வென்றிவெள்விடையோ னடிக்கீழ்விழுந்திறைஞ்சி
நன்றுபுத்தியென்றுரைத்துட னவிலுவானெமனும்.

(இ-ள்) என்றுசொல்லிக் கடவுள் விடைதருமளவில் மிகவும் பயங்கொண்டு அங்கெநின்ற பெரியமரம்விழுந்தாற்போல் வென்றிகொண்ட வெள்ளைநிறமுள்ள இடபவாகனக்கடவுள் பாதங்களின் கீழேநிலத்திலே விழுந்துவணங்கி நல்லபுத்தியென்று சொல்லிப் பின்னும் யமன் சொல்லுகிறான்—எ-று. (௬௩)

கட்டளைப்படியிட்டது போதுமப்படியே
யிட்டமாகநானடப்பனென் றிசைத்திடவொளிசேர்
வட்டமாகியமதியணி வேணியார்மகிழ்ந்து
திட்டமாகவேமறலிக்குப் பின்னருஞ்செப்பும்.

(இ-ள்.) சுவாமி கட்டளையிட்டருளினபடி போதும் அப்படியே சுவாமி திருவுள்ளத்துக்குச் சந்தோஷமாகும்படி நடந்துகொள்ளுகிறேன் என்றுசொல்ல அதற்கு ஒளிபொருந்தி வட்டமாகிற சந்திரனையணிந்த ஜடையையுடைய கடவுள் சந்தோஷித்துப் பின்னும் அந்தயமன்நிதானமாகும்படி சொல்லுகிறார்—எ-று. (௬௪)

முன்னைநாளதிகாரஞ்செய் முத்திரைமோதிரமும்
பொன்னின்மாமதில்சூழ்ந்திடும் பொற்சிங்காசனமு
மன்னுகின்றநன்மகுடமும் வழங்கிமாதவத்தா
லென்னைப்பூசைசெய்வோர்களி னிடமணுகாதே.

(இ-ள்.) முன்னாளிலே யமனதிகாரஞ் செலுத்திக்கொண்டு வருகிற முத்திரைமோதிரமும் பொன்னாலான மதிலாலே சூழ்ந்திருக்கிறகொலுமண்டபத்திலிருக்கிற அவனுடைய பொன்மயமான சிங்காசனமும் நிலைபெற்ற வாகனமான எருமைக்கடாவும் கொடுத்துப் பெரிய தவத்தைக் கொண்டு என்னைப் பூசைபண்ணுகிறவர்களிடத்திலே இனி நெருங்காதே—எ-று. (௬௫)

அந்தகாவினியுன்னுடைப்பதியடைந்தவனிச்
செந்துஜீவபிராணியிறகாய்மலர்பிஞ்சா
மிந்தவர்க்கம்விட்டிலங்கியப்பழங்களையுதிர்த்து
வந்திடும்படிசாற்றினன்மாதுமைபாகன்.

(இ-ரை.) அடா எமனே இனி உன்னுடையவூருக்குள்ளேபோய் உலகத்துள்ள ஜீவசெந்துக்களான பிராணிகளிலே பூ பிஞ்சான இந்தவகைகளை விட்டுவிட்டு நன்றான பழம்போல்வார்களை உதிரப்பண்ணிக் கொண்டுவாவென்றுசொன்னார் பார்வதிசமேதரானகடவுள்—எ-று. (கூசு)

ஈதுநம்மையாளிறைவன்சொற்கேட்டெமனிறைஞ்சி
யாதிநாயகன்விடைகொடுபோகவேகமல
மாதுமார்பனுமலரயனிமையவர்வணங்கிப்
பூதநாதனுர்விடைகொடுமவர்பதிபுகுந்தார்.

(இ-ரை.) இப்படி நம்மையெல்லாம் ஆளுமவரான கடவுள் சொல்லைக் கேட்டு வணங்கிக்கொண்டு அந்தமுதலானகடவுள் விடைபெற்று யமன் போனபின்பு லட்சுமிவிளங்குகிறமார்பனுன திருமால் பிரமா தேவர்களெல்லாரும் வணங்கிக் கடவுள்விடைபெற்றுக்கொண்டு அவரவரிடம் போய்ச்சேர்ந்தார்கள்—எ-று. (கூஎ)

இரவிகாதலனிருணிறப்பகட்டின்மேலேறி
விரவுகட்டியமொலித்திடவிருதுகள்பிடிக்கப்
பரன்கொடுத்திடும்வரங்களும்பக்கமேயிலங்க
நிரைநிரையதாய்ச்சேனைகணெருங்கியேநடக்க.

(இ-ரை.) சூரியன்குமாரனானயமன் இருள்போலுநிறத்தையுடையகடாவாகனத்தின்மேலேறிக்கொண்டு போகும்போது கலந்து கட்டியங்கள் முழங்கவும் விருதுகள்பிடிக்கவும் கடவுள்கொடுத்த வெகுமானங்கள் பக்கத்திலேவிளங்கிவரவும் வரிசைவரிசையாய்ச் சேனைகள்நெருங்கிக் கூடநடந்துவரவும்—எ-று. (கூஅ)

பஞ்சகன்னிகள்வந்துமாலாத்திகள்பரிக்க
விஞ்சைவானவரிருடிகளாசிகள்விளைக்க
நஞ்சுவேல்விழியரம்பைகணடனங்கள்புரியக்
கஞ்சமாமுதலஞ்சுநற்கருவிகள்கலிக்க.

(இ-ரை.) பஞ்சமகாகன்னிகள் எதிரேவந்து ஆலாத்திகளேந்தவும் விஞ்சையர்கள் தேவர்கள் இருஷிகள் ஆசீர்வாதங்கள்சொல்லவும் நஞ்சுபோலவும் வேல்போலவும் கண்களுள்ள அரம்பையர்கள்முன்னே நடனஞ்செய்யவும் கஞ்சத்துக்கருவிமுதலான ஐந்துகருவிகளும் முன்னே முழங்கவும்—எ-று. (கூகூ)

சேனையோடெமனனந்தமாகவேசிறப்பாய்
மானையேந்தினர்கிருபையான்மணிநகரொப்பிக்

காணராகங்கள்பாடிடக்கனகத்தாற்சமைத்த
மேனைமண்டபம்புகுந்தனன்விளங்குகோளரிபோல்.

(இ-ளை.) இப்படிச் சேனைகளுடனே யமனானவன் சந்தோஷத்துடன் சிறப்புக்கொண்டு கடவுள் கருணையினாலே தனது அழகான பட்டணத்திற்குள்ளேபோய் கானமுள்ளபாட்டுகள்பாடச் சுவர்ணத்தினாலே யமைத்திருக்கிற மேம்பாடுள்ள தனதுகொலுமண்டபத்திலே போய்ச்சேர்ந்தான் சிங்கம்போல் விளங்குதலுடனே—எ-று. (௱)

வந்தன்மணவாளனைக்காதலாய்மனையா
ளெந்தனாதனேயெனைப்பிரிந்திருந்துமேயிவிடஞ்
சுந்தரோசர்தங்கிருபையாலுடலுயிர்தோன்றிச்
சிந்தைவாட்டந்தீர்த்தனையெனச்சேவடிவணங்கி.

(இ-ளை.) அப்படிவந்த தனது நல்லநாயகனை அன்புடனே அவன்மனைவியானவள் எனது நாயகா என்னைப்பிரிந்து வெகுநாளிருந்தும் இவிடத்திற்குவரும்படி கடவுள் கிருபையினாலே உமதுடலுக் குயிருண்டாகி என்மனோவாட்டத்தை நீக்கி னீரல்லவோவென்று அவனது சிவந்தபாதத்தைவணங்கி—எ-று. (௱௧)

இருகைலாகுகொண்டேந்தியேகொண்டுபோயினிதா
யருகுசெம்மணிமண்டபத்தழகெழவிருத்திப்
பருகவேநலபோசனமளித்திடப்பரிவாற்
பிரியமாகவேசாப்பிட்டுமறலியும்பின்பால்.

(இ-ளை.) இரண்டுகைகளையும் லாகுகொண்டேந்திக் கூட்டிக்கொண்டு போய்ப் பக்கத்திலுள்ள சிவந்த மாணிக்கமண்டபத்திலே அழகாகவிருக்கப்பண்ணிஉண்ணும்படி நல்லபோசனம்பரிமாற அதைஅன்புடனேபிரியமாகச் சாப்பிட்டுப் பின்பு யமனானவன்—எ-று. (௱௨)

பகட்டின்மேலெழுந்தனனகர்பார்ப்பதற்கிசைந்தே
தகைமையோடெழுந்தெமன்வரப்பார்த்தெமபுரத்தார்
நகரமானதையலங்கிருததோரணநாட்டி
முகனையாகவேமங்களவாத்தியமுழங்க.

(இ-ளை.) எருமைக்கடாவாகனத்தின்மேலேறித் தனது பட்டணமுழுதும் பார்க்கிறதற்கெண்ணங்கொண்டு மிகப்பெருமையுடனே எமன்வருகிறதைக்கண்டு அந்த யமலோகத்தார் பட்டணமுழுதும் அலங்காரம்பண்ணித் தோரணங்கள்கட்டி முன்னாக மங்களவாத்தியங்கள்முழங்க. ()

சோடினையதாய்வீதிகடோறுமேதுலங்க
வேடிக்கையதாயந்தகனவ்விடம்விளங்க
நீடுமந்நகர்ப்பதியுளார்வந்தனர்நிறைவாய்க்
காடுகொண்டதோர்மறலியைக்கண்டடிதொழுதார்.

(இ-ள்.) அப்படி வீதிகளெல்லா மிகுந்தசோடிப்பாகவிளங்க யமனு னவன் மகாவேடிக்கையாக அவ்விடமெல்லாம்பவனிவரும்போது அந்த ரெடிதான அந்த வூரிலுள்ளவர்களெல்லாரும் வந்து இறந்துபிழைத்த ய மனைக்கண்டு வணங்கினார்கள்—எ-று. (௱௪)

நகரிலுள்ளபேர்களையெல்லாநயனத்தாற்பார்த்தும்
பகரொணுதொருமண்டபநடுவினிற்பதித்த
நகைதுலங்குசிங்காசனத்தினினளினமதாய்
நகநகென்னவேயிருந்தனன்மகிழ்வுடனடுவன்.

(இ-ள்.) அந்தப்பட்டணத்திலுள்ளவர்களையெல்லாம் தன் கண்களா லேபார்த்துச் சொல்லிமுடியாத பெருமையுள்ள ஒரு மண்டபமத்தியி லே நிறுத்தியிருக்கிற ஒளிவிளங்குகின்ற ஒரு சிங்காசனத்தின்மேலே உ ல்லாசமாக நகநகென்றுவிளங்க யமன்சந்தோஷத்துடனிருந்தான்-எ-று

எங்குள்ளோர்களுமஞ்சிடவிமையவர்வணங்கத்
தங்கல்தங்கலாய்ச்சேனைகளிருபுறந்தயங்கப்
பொங்குகட்டியங்கிரைகிரையாகவேபுகழ
விங்கிதத்துடனேமனுமரசிருந்தனனே.

(இ-ள்.) எங்கேயிருக்கிறவர்களும் பயப்படும்படி தேவர்களும் வண ங்கப் பந்திபந்தியாய் இருபுறத்திலுஞ் சேனைகள்விளங்க மிகுந்த கட்டிய ங்கள் வரிசைவரிசையாகக்கொண்டாட இவ்விதஅலங்காரத்துடனேயெ மன் அரசிருந்தான்—எ-று. (௱௬)

வேறு.

அம்பிலுங்கொடியவேவ லாளரையழைத்துநன்று
யம்புவியோர்க்கும்விண்ணோர் யாவர்க்குமேமசொர்க்கஞ்
சம்பிரமதாகநீங்கள் சமைத்திடுமெனவேயேம
தம்பிரான்மகிழ்ந்துசொல்லச் சடுதியிற்றூதர்புக்கு.

(இ-ள்.) அம்பைப்பார்க்கிலும் பொல்லாத ஏவலாளிகளை யழைத்து நன்றாக உலகத்தார்க்கும் தேவர்களெல்லாருக்கும் எமசொர்க்கமென ஒன்று வெகுவேடிக்கையாக நீங்க ளுண்டுபண்ணுங்களென்று யமதரும ராஜன் சந்தோஷித்துச்சொல்லவே விரைவிலே தூதர்கள்போய்—எ-று.

விளக்கெனவடக்குவாசல் விவரமாய்ப்புதுக்கிச்செம்பொன்
றுளக்கியமணியுமுத்துந் துலங்கிடவிமானநாட்டித்
தளிர்த்ததோரணங்களிட்டுத் தகும்புபொன்னுகைவைத்து
வழுச்சொலாக்கயிலைவாசல் வகைசெய்தார்வடக்குவாசல்.

(இ-ள்.) விளக்கைப்போல் வடக்குவாசலை நன்றாகப் புதுசுபண்ணிச் சிவந்த பொன்னிலே விளங்குகின்ற ரத்நங்களு முத்துகளும் விளங்க வி மானம் அமைத்து தழைப்பாகத் தோரணங்கள்கட்டி பொன்னாலே குட-

ங்கள்வைத்து யாதொருதோஷமுஞ் சொல்லப்படாதகயிலையைப்போல் வடக்குவாசல்விளங்கும்படி பண்ணினார்கள்—எ-று. (௱௮)

வேறு.

கீழைவாசலைப்புதுக்கிடத்தூதர்கள்கிட்டி
மாழையான்மகாதோரணநாட்டியேவைத்துக்
தாழைமாமலர்தூக்கியேசந்தனக்குடங்கள்
வாழையானதும்வீடுகடொறுங்கட்டிவைத்தார்.

(இ-ள்.) அப்படியே கீழைவாசலையும் அலங்கரிக்கத் தூதர்கள்போய் சுவர்ணகசிதமாகப் பெரிய மகாதோரணங்கள் கட்டிவைத்து தென்னோலைமுதலான தாமரைமலர்களைத் தொங்கவிட்டுச் சந்தனக்குடங்களெங்கும் வைத்து வாழைகமுகுகள் விடுகடோறுங் கட்டிவைத்தார்கள் (௱௯)

மங்கியதெற்குவாசற்புதுக்கியேமழுத்தூணூட்டிப்
பொங்கியநாற்றக்கேணிபுழுவொடுமரணைதேட்கள்
எங்கினுமில்லாக்கஷ்ட மெரிநரகங்கள்சேர்த்துச்
சங்கரன்பூசைசெய்யாவாழ்க்கைபோற்சமைத்தார்தென்பால்.

(இ-ள்.) மங்கும்படியான தெற்குவாசலிலே புதிதாயிருக்க மழுவாக அநேகந்தூண்கள்நிறுத்திப் பொங்குகின்ற நாற்றக்கேணிகளும் புழுக்களும் அரணைகளும் தேள்களும் எங்குமில்லாதகஷ்டங்களும் எரிகிற் நரகங்களும் உண்டுபண்ணிச் சிவபூசைபண்ணாதவர்கள் இல்வாழ்க்கைபோல்தென்புறம் உண்டுபண்ணினார்கள்—எ-று. (௱௰)

சிக்கியமேலைவாயில்புதுக்கினர்செக்குநாட்டி
மிக்கபக்கழுக்களுன்றிவெடிப்பதாய்நாற்றஞ்சேர்த்துக்
குக்கனுஞ்சூழக்கட்டிக்கொடுந்தொழிலாளருக்குத்
தக்கநல்லறத்துக்கீனஞ்செய்பவர்தலம்போற்செய்தார்.

(இ-ள்.) மேலைவாசலுக்குப்போய் நெருக்கமுள்ளதாகப் புதுசுபடுத்தி அங்கே செக்குஊன்றி மிகுந்த இரும்புக்கழுக்களை நிறுத்தி வெடிப்பு நாற்றங்கள் அதிகமாக உண்டுபண்ணி சுற்றிலு நாய்கள்கட்டிவைத்துக்கொடிதான தொழில்செய்கிற ஏவலாளிக்குத்தகுதியாக நல்லதருமத்துக்குக் கெடுதல்செய்கிறவர்களிடம்போல் இடங்களும் உண்டுபண்ணினார்கள் ( )

நான்கெனும்வாசற்குள்ளநடத்தையுஞ்செய்துதூதர்
பாங்கொடுமறலிபக்கம்வந்தவர்பணிந்துநின்றார்
ஆங்கவர்தம்மைப்பார்த்தேயகமகிழ்ந்தன்பனாக
வோங்கியதூதருக்குப்பின்னுமேயுரைக்கலுற்றான்.

(இ-ள்.) அப்படி நான்குபுறத்துமுள்ள வாசல்களுக்குத் தக்கபடி சட்டங்களும் உண்டுபண்ணிப் பின்பு தூதர்கள் பயபத்தியுடனே யமனிடத்திலேவந்து வணங்கிநின்றார்கள், அப்படி நிற்கிறதூதர்களைப்பார்த்துமன

மகிழ்ச்சியுடனே அன்புகொண்டு உயர்வுள்ள தூதனைப்பார்த்துப் பின்னும் யமன்சொல்லுகிறான்—எ-று. (௩௰௨)

உலகினினரர்கள்பொன்றவொருநிமிடத்திலேநீர்
இலகும்வள்ளுவனைக்கூட்டியிக்கணம்வருவீரென்னச்
சொலுமுனேதூதரோடித்தொல்லுலகெல்லாந்தேடிப்
பலகலைபுணர்ந்தஞானப்படிவவள்ளுவனைக்கண்டார்.

(இ-ள்.) இனி உலகத்திலுள்ள மனிதரெல்லாஞ் சாவும்படி ஒருநிமிடத்துக்குள்ளே நீங்கள்போய் விளங்குகின்ற வள்ளுவனை அழைத்துக்கொண்டு இந்தக்ஷணமே நீங்கள் வரக்கடவீர்களென்று சொல்ல அப்படிச்சொல்லுமுன்னே தூதர்களோடிப் பழையதான வுலகமுழுதுந்தேடிப் பலவிதமான கலைஞானங்களெல்லாங் கரைகண்ட ஒருவள்ளுவனைக்கண்டார்கள்—எ-று. (௩௰௩)

அங்கவன்றன்னைநோக்கி யரனுடைத்தூதனுகத்
தங்கியமறலியுன்னைச் சடுதியில்வரச்சொன்னானென்
றங்கவர்கூறக்கேட்டு மவனெழுந்தெமன்பால்வந்து
மிங்கிதமாகநின்றே யிணையடிதொழுதுசொல்வான்.

(இ-ள்.) அந்தவள்ளுவனைப்பார்த்துத் தூதர்கள் சிவனுடையதூதனாயிருக்கிற எமனானவர் உன்னைச் சீக்கிரத்தில்வரும்படி சொன்னாரென்று சொல்ல அப்படி அவர்சொன்னதைக்கேட்டு அந்தவள்ளுவ னெழுந்திருந்து எமனிடம்வந்து பயபக்தியுடனேநின்று அவனிரண்டுபாதங்களையும்வணங்கிச் சொல்லுகிறான்—எ-று. (௩௰௪)

அரனடிக்காளாய்நின்ற வன்பனைத்துணிந்துநீங்கள்
விரவியேபிடிக்கவிந்த வேதனைவருமோவென்று
பரவியேவிசனப்பட்டு வள்ளுவன்பரிதபிக்கக்
கரமலரமைத்துச்சண்டன் மொழிந்தனன்கபடமற்று.

(இ-ள்.) சிவனதுபாதத்துக் கடிமையாயிருந்த பத்தனைத்துணிவுகொண்டு போய்ப்பிடித்தா லிப்படிப்பட்ட துன்பங்கள் வரலாமோவென்று மிகவும் விசனப்பட்டு அந்தவள்ளுவன் உபசாரமாகத்துன்பப்படும்போது யமனானவன் தனதுகையாகிய புஷ்பத்தாலமையச்செய்து கபடமில்லாமற் சொல்லுகிறான்—எ-று. (௩௰௫)

கெடுதிநாள்வரும்போதந்தக் கெடுமதிகண்டோற்றுது
விடுவனேசனியன்வந்தால் வெல்லுவாரொருவருண்டோ
கடுவிடமுண்டோன்பக்கந் தண்டனைக்காளாய்நின்றே
னிடுகதிப்பேறும்பெற்றே னெனையொழிந்தொருவருண்டோ.

(இ-ள்.) கெடுதிக்காலம்வரும்போது அந்தக்கெடுபுத்தி கண்ணுக்கொன்றுந் தோன்றச்செய்யாது சனியன்பிடித்தால் விடுவானோ அந்தச்சனியனை வெல்லுகிறவர்களு முலகத்திலுண்டோ ஆகையால் கடுமையான

நஞ்சுண்டகடவுளாலே தண்டனைசெய்யும்படியானேன் பின்பு எனக்குக்கிடைக்கத்தக்க என்அதிகாரபலனையும் பெற்றேன் என்போலொருவ்ர் பெற்றதுண்டோ—எ-று. (௱௰௬)

ஆகையானலமேயென்று மரியவள்ளுவனைத்தேற்றி
வாகையோடன்பாய்ச்சொல்ல வள்ளுவன்பணிந்துநின்று
வேகமாயடியேன்றன்னை யழைத்ததும்விளம்பாயென்னத்
தாகமாயவனைநோக்கி மறலியுஞ்சாற்றலுற்றான்.

(இ-ள்.) ஆனபடியினாலே எனக்கு நன்மையேயுண்டாயிற்றென்று அந்த அருமையானவள்ளுவனைத் தேறும்படிசொல்லி தானே வெற்றிகொண்டதாக அன்புடனேபேச அதற்கு வள்ளுவனானவன் வணங்கிநின்று கொண்டு அவசரமாக என்னைஅழைத்தகாரணத்தையும் நீர்சொல்லக்கடவீரென்று வள்ளுவன்கேட்க அதற்குப் பிரியத்துடனே அந்த வள்ளுவனைப்பார்த்து யமன்சொல்லுகிறான்—எ-று. (௱௰௭)

தவசுளவள்ளுவாநீ சங்கரன்மொழிதப்பாமற்
புவனங்கடன்னிலுள்ள மனிதர்கள்பொன்றுதற்குச்
சிவன்செயலாலேமிக்க வாரணப்பிடரிலேறி
யவனியைவலமாய்ச்சுற்றி யாவர்தேவர்களுங்கேட்க.

(இ-ள்.) மிக்க தவசுசெய்கிற வள்ளுவனே நீ சிவன்கட்டளைதப்பாமல் உலகத்திலுள்ள மனிதர்கள் சாவுதற்குச் சிவாக்கினையினாலே நீயானைப்பிடரின்மேலேறிக்கொண்டு உலகமெல்லாம் வலமாகச்சூழ்ந்துவந்து தேவர்களும் யாவர்களும் கேட்கும்படி—எ-று. (௱௰௮)

கருமலர்பிஞ்சுகாய்க டவிரநீபழங்களெல்லாம்
பெருகியேயுதிரவென்றுன் பெரும்பறையதனைச்சாற்றி,
மருளிலாய்வருவாயென்ன வள்ளுவனதனைக்கேட்டுத்
தருமனைவிடைகொண்டேகி வந்தனன்றனதில்லத்து.

(இ-ள்.) பூக்கிறபுஷ்பம் பிஞ்சுகாய்கள் ஆகிய இவைகள்தவிர நீ பழம்போன்றவைகளெல்லாம் மிகவுமுதிரக் கடவனவென்று உனது பெரிய பறையை முழக்கி மயக்கமில்லாதவனாக வரக்கடவையென்று சொல்ல அதைக்கேட்டு யமதருமராஜனிடத்திலே உத்தரவுபெற்றுக்கொண்டு தனதுமனைக்குவந்தான் வள்ளுவன்—எ-று. (௱௰௯)

மதுதனைப்பானஞ்செய்து வாரணப்பிடரிமேலேறி
அதிரிடப்பறையைக்கொட்டி யார்ப்பரித்தொலித்துவாயின்,
முதிரொரிபறக்கக்கண்கள் சிவந்துநெட்டுயிர்ப்புமூட
மதியதுமயங்கிநாவுங் குழறிடவழங்கலுற்றான்.

(இ-ள்.) அவன்பின்பு கள்ளை அதிகமாகக்குடித்துக்கொண்டு யானைதுகின்மேலே யேறி எங்கும்அதிரும்படி பறையைமுழக்கி ஆரவாரஞ்

செய்து தெரிவிக்கிற தன்வாயிலே அதிகமான நெருப்புப்பொறிபறக்கக் கண்கள்சிவந்து பெருமூச்சு அதிகமாய்ப் புத்திமயங்கி நாவுமூழறிச்சொல்லுகிருன்—எ-று. (ாஉ௰)

எத்திசைப்புவனந்தன்னி லிருந்திடுநரர்கள்சீவ
சத்துகள்மலர்காய்பிஞ்சு பழமொடுசதாவதாக
இற்றைநாளிறக்கவென்று மெழிற்சாம்பன்பறையடிக்க
மற்றுளநரர்கள்விணேர் மடிந்தனரடித்தகாலே.

(இ-ளை.) எங்கெந்தத்திக்கிலுள்ள மனிதர்கள் ஜீவஜெந்துகள் பூ-காய் பிஞ்சு-பழத்துடனே - எல்லா மொருசேர்க்கையாக இன்றைத்தினமே மடியக்கடவதென்று யானைமேலேறின சாம்பன் பறைமுழக்க அப்போதே உலகத்துள்ள மனிதர்கள் தேவர்களெல்லா மடிந்தார்கள்—எ-று.()

அவனியிலுள்ளோர்விண்ணோ ரலறியேகதறுமோசை
சிவபிரான்செவியிலுற்றுத் திருக்கணனந்தியைப்பார்த்
தவனியின்முழக்கமேதென் றறைந்திடவவனும்போற்றிச்
சிவகணநாதர்முன்பாய் நந்தியுஞ்செப்பலுற்ருர்.

(இ-ளை.) பூலோகத்துள்ளவர்களும் தேவர்களும் அலறிக் கதறுகிறசத்தமானது சிவபெருமான் காதுகளிலேகேட்டுத் தமது திருக்கண்களாலே நந்தியைப்பார்த்து உலகத்திலே இந்தச்சத்தமேதென்றுகேட்க அதற்கு நந்திதேவரானவர் கடவுளைப்பார்த்துத்துதித்துச் சிவகணதிபர்கள் முன்னே சொல்லுகிருர்—எ-று. (ாஉஉ)

வள்ளலேயென்னையாண்ட மங்கைபங்காளாகேண்மோ
எள்ளியமறலிதானு மிறைவனேயுன்சொன்மீறி
நள்ளிருட்கடல்சூழ்பூமி நரரெல்லாமடித்தான்பாவி
யுள்ளநைந்தலறுமோசை யென்றுநந்தியுமுரைத்தார்.

(இ-ளை.) ஓ-மஹாப்பிரபு-என்னை அடிமைகொண்டருளின பார்வதிசமேதா கேளும் எல்லாரு மிகழத்தக்க எமனானவன் சுவாமி உமதுசொல்லைக்கடந்து நடுராத்திரிபோ லிருண்டிருக்கிற கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மனிதர்களையெல்லா மடித்துவிட்டான் அந்தப்பாவி அதனாலே மனம்வருந்தி அவர்க ளலறுகிற சத்தமிதுவென்று நந்திதேவர்சொன்னார்-எ-று.

இறப்பிறப்பில்லாவெங்க ளெம்பிரான்முனிந்துபொல்லா
மறக்கொடும்பாவியான வஞ்சனைக்கொணர்மினென்ன
வுறைத்தசொன்மாருமுன்னங் கணங்களுமோடிக்கிட்டிப்
பிறைச்சடைப்பெருமானுன்னை யழைத்தனரென்ருர்பின்னும்.

(இ-ளை.) இறப்பும் பிறப்புமில்லாத எங்கள்கடவுள் கோபங்கொண்டு முழுதும் பொல்லாதபாவிகளிலும் கொடியபாவியான அந்தவஞ்சகனை யமனைக் கூட்டிவாருங்களென்றுசொல்ல அவரப்படி அழுத்தமாகச்சொ

ல்லியவாய் மூடுமுன்னே சிவகணங்க ளோடிப்போய் நெருங்கி யமனைப் பார்த்து உன்னைச் சந்திரசேகரக்கடவுளானவர் வரச்சொன்னுரென்று சொன்னுர்கள்—எ-று. (௱௨௪)

சண்டனுந்துணுக்கமுற்றுச் சடுதியிற்பயணமாகத்
தெண்டனைசெய்வாரென்று தியங்கியேயயன்மாறேடு
முண்டகப்பதத்தான்பேரின் முயற்சியாயோடிவந்து
வண்டணிகுழலாள்பாகன் றன்னையேவணங்கிச்சொல்வான்.

(இ-ள்.) யமனுனவன் பயங்கொண்டு விரைவிலே பிரயாணமாய்வந்து கடவுள் தெண்டிப்பாரேயென்று தியங்கினவனுகி பிரமா விஷ்ணுக்கள் தேடுவதான தாமரைமலர்போன்றகடவுள் பாததியானமாக ஓடிவந்து வண்டுகள்மொய்க்கிற கூந்தலையுடைய பார்வதிசமேதனைவணங்கிச் சொல்லுகிறுன்—எ-று. (௱௨௫)

கடுவிடமுண்டநாதா கங்காளரூபாநாயே
னடியவர்க்கிடர்களொன்றுஞ் செய்திலேனழைத்தென்னக்
கடுமையாய்மறலிதன்னைக் கடைக்கண்ணுற்பார்த்துமிக்க
அடியவர்மனத்தில்வாழு மையனுமுரைக்கலுற்றுர்

(இ-ள்.) கடுமையான நஞ்சுண்டசுவாமீ எலும்பாபரணம்பூண்டவரே நாய்போன்ற யான் உமதடியார்களுக் கியாதொருதுன்பமுஞ் செய்திலேனுயிருக்க என்னை அழைத்தகாரிய மென்னவென்றுகேட்க அதற்குக்கடுரமாக எமனைக் கடைக்கண்ணுலேபார்த்து மிகவும் அடியார்களுள்ளத்திலே வாழ்கிறகடவுள் சொல்லுகிறுர்—எ-று. (௱௨௬)

என்னடாநமதுசொல்லை யிகழ்ந்துநீபயமில்லாம
லுன்னியசீவராசி யொருமிக்கவதைத்தாய்பாவி
முன்னநானுனக்குச்சொன்ன முறைப்படிசெய்திடாம
லிங்கிலந்தனிற்பூகாய்பிஞ் சிறந்திடச்செய்திட்டாயே.

(இ-ள்.) என்னடா எமனே நம்முடைய சொல்லைக்கடந்து நீ பயமில்லாமல் நினைக்கத்தக்க சீவராசிகளையெல்லாம் ஒருமிக்கக் கொன்றுயே பாவி முன்னே நான் சொன்னபடிசெய்யாமல் இந்த வுலகத்துள்ள-பூ-காய்-பிஞ்சுகளெல்லா மடியும்படிபண்ணினுயே—எ-று. (௱௨௭)

என்றுமெம்பெருமான்சீறி யேமனைத்தண்டஞ்செய்யக்
கன்றியவேளைதன்னிற் கலக்கமுற்றந்தவேமன்
மன்றினினடனமாடும் வள்ளலேயென்றன்மேலே
கன்றிடவேண்டாமென்று கழலிணைதொழுதுசொல்வான்.

(இ-ள்.) என்று நமதுகடவுள் கோபங்கொண்டு எமனைக்கண்டிக்கக் கோபங்கொண்டபோது அந்த யமனுனவன் மிகவுங் கலக்கங்கொண்டு-பொன்னம்பலத்திலே கூத்தாடுகிற பிரபுவே யென்மேற் கோபங்கொள்ளவேண்டாமென்று கடவுள் பாதங்களை வணங்கிச்சொல்லுகிறுன். ()

சொற்படிதவறுநாயேன் றூயவள்ளுவனைக்கூவி
அற்புதப்பரனேநீங்க ளருளியபடியேசொல்லச்
சொற்படிமீறிச்செய்தா னென்றனுற்றுேடமில்லை
முற்பொருளானதேவே முனிந்திடவேண்டாமையா.

(இ-ள்.) சுவாமி உமதுசொல்லின்படியே நான் நல்லவனென்று வள்ளுவனைக்கூப்பிட்டு ஆச்சரியரூபங்கொள்ளவல்ல கடவுளே நீர்சொன்னபடியே நான்சொல்ல அதற்கு அந்தவள்ளுவன் என்சொல்லைக்கடந்து நடந்தான் என்னலெ யாதொருகுற்றமுமில்லை முதற்பொருளான சுவாமி தெய்வமே என்மேற் கோபங்கொள்ளவேண்டாம்—எ-று. (௱௨௯)

என்றந்தவியமன்சொல்ல விசனுமிகுகோபத்தோ
டொன்றியகணங்களைப்பார்த் தொருநொடிதனக்குள்ளாகச்
சென்றுவள்ளுவனைக்கொண்டு வருகெனத்திடுக்கிட்டோடி
யன்றவன்றன்னைத்தேடி யழைத்திடவவனும்வந்தான்.

(இ-ள்.) என்று அந்தயமன்சொல்லக் கடவுள்மிகுந்த கோபத்துடனே தமதருகேநிற்கிற கணங்களைப்பார்த்து ஒருநொடிக்குள்ளேபோய் வள்ளுவனைப் பிடித்துக்கொண்டு வாருங்களென்று சொல்ல உடனே அந்தவள்ளுவனைத்தேடிக் கூப்பிட அவனும்வந்தான்—எ-று. (௱௩௰)

அன்னவன்றன்னைப்பார்த்தே யாதியானனல்போற்சீறி
யென்னடாவேமன்சொல்லு மென்சொல்லுமிகழ்ந்துமிந்தத்
தொன்னிலமாக்கள்காய்பூப் பிஞ்சுடன்றுலைந்துபோக
நின்னதுகெருவத்தாலே நீபறையடிக்கலாமோ.

(இ-ள்.) வந்த அந்தவள்ளுவனைப்பார்த்துக் கடவுளானவர் நெருப்பைப்போற்கொதித்துக் கோபங்கொண்டு என்னடா எமன்சொல்லையும் என்சொல்லையுங்கடந்து இந்தப் பழையதான வுலகத்துள்ள மனிதர்களில் காய் பூ பிஞ்சுமுதலானவைகளையெல்லாம் உன்கெருவத்தாலே இறந்துபோகும்படி நீ பறைஅடிக்கத் தகுமோ—எ-று. (௱௩௧)

உனக்கிந்தவகந்தானேண்டா வென்றுமைபாகன்கேட்க
மனத்தினிற்பயம்வந்துற்று மலரடிவணங்கிப்போற்றி
யெனைக்கொடுத்ததுதான்கள்ளென் றியம்பியேகலங்கிவாடித்
தனக்குள்ளேநொந்துநொந்து தயங்கியேயழுங்கலுற்றான்.

(இ-ள்.) உனக்கிப்படிப்பட்ட கெருவம் எப்படிவந்ததடாவென்றுகேட்க அதற்கு மனத்திலே மிகவும் பயமுண்டாகிக்கடவுளுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்கித் துதித்து என்னைக்கெடுத்ததுகள்ளென்றுசொல்லிக் கலங்கி வாட்டங்கொண்டு தனக்குள்ளே நொந்து நொந்து தயங்குதலாகி வருத்தப்படுதலானான்—எ-று. (௱௩௨)

மனதறியாமற்கள்ளைக் குடித்ததான்மதிமயங்கிச்
சினமதாய்க்கரியிலேறிச் சிவன்சொல்லைமறந்தியானு
நினைவிலாதேசென்றிந்த நேமிசூழுலகந்தன்னின்
மனிதர்களெல்லாமின்றே மடிகவென்றுரைத்தேனையா.

(இ-ள.) நான் கள்ளைக்குடித்ததனாலே என்புத்திக்கு ஒன்றுந்தோன்றாமல் மதிமயக்கமாய் கோபத்துடனே யானைமேலேறிக் கடவுளாக்கினையைமிஞ்சி யோசியாமல் எங்கும்போய் இந்தக்கடல்சூழ்ந்த வுலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் இப்போதேமடியக்கடவதென்றுசொன்னேன் சுவாமி—எ-று. (௩௩௩)

என்றுவள்ளுவனுங்கூற விசனுநந்திதன்னை
நன்றியாய்க்கூவியந்த மதுத்தனைநமதுகிட்ட
வின்றுநீரழையுமென்ன வியல்புடன்கொண்டுவந்தா
ரன்றதைத்துருத்தியிலிட் டருணன்முன்போட்டாரப்போ.

(இ-ள.) என்று வள்ளுவன்சொல்லக் கடவுள் நந்திதேவரை நன்மையுடனேகூப்பிட்டு அந்தக்கள்ளை என்னிடத்திலே யிப்போது நீர் வரச்செய்யுமென்றுசொல்ல உடனே கிரமப்படியே அந்த மதுவைக்கொண்டுவந்தார் அப்போது ஒரு தோல் துருத்தியிலேவார்த்துச் சூரியனுக்கு முன்னேவைத்தார் நந்திதேவர்—எ-று. (௩௩௪)

போட்டிடத்துருத்திதானும் பொம்மெனவெழுந்துசீறித்
தாட்டிகமாகவேதான் றண்டவமாடப்பார்த்துக்
காட்டினினடனஞ்செய்யுங் கண்ணுதல்கிருபைகூர்ந்து
கோட்டுவள்ளுவனேமன்மேற் குற்றங்களில்லையென்று.

(இ-ள.) அப்படி வெயிலிலேவைத்தபோது அந்தத்துருத்தி பொம்மென் றுப்பியெழுந்து கோபங்கொண்டு பலமாகவெழுந்து கூத்தாட அதைக்கண்டு சுடுகாட்டிலே கூத்தாடுகிற கடவுளுக்கு க்கிருபைமிகுந்து பறைகொட்டின வள்ளுவன்மேலும் யமன்மேலும் குற்றமில்லையென்று கொண்டு—எ-று. (௩௩௫)

கள்ளுச்சாறுயந்தன்னை யருந்தினகயவர்தம்மைத்
துள்ளவேநரகந்தன்னிற் றுணுக்கிடத்தள்ளுகென்று
வள்ளலேமற்குரைத்து மாநகர்க்கேகுகென்னத்
தெள்ளியவிடையுமீந்தா ரவனெமதேசம்புக்கான்.

(இ-ள.) இனிமேல் கள்ளுச்சாறுயங்களைக்குடிக்கிற மூடர்களைத் துள்ளித்துடிக்க நரகத்திலே அஞ்சும்படி தள்ளக்கடவாயென்று கடவுள் யமனுக்குச்சொல்லி இனிஉனது பெரியவூருக்குப்போவென்றுதெளிவான உத்தரவு கொடுத்தருளினார் அந்த எமன் தன தெமலோகத்துக்குப் போய்ச்சேர்ந்தான்—எ-று. (௩௩௬)

மறலியும்போனபின்பு மார்க்கண்டன்றந்தைதாய்க்கு
மிறையவன்கருணைகூர்ந்தே யெமதிடத்திருப்பீரென்னக்
கறைமிடற்றண்ணல்பாதந் தொழுதுகைகட்டிநிற்ப
மறைபுகழ்கடவூர்நாதன் மார்க்கண்டன்றனைப்பார்த்து.

(இ-ள்.) அப்படி யெமன்போனபின்பு மார்க்கண்டருடைய தகப்பன் தாய்க்குங் கடவுள் மிகுந்தகிருபைசெய்து என்னிடத்திலேதானே நீங்க ளிருக்கக்கடவீர்களென்றுசொல்ல அப்படியே அந்தநீலகண்டக்கடவுள் பாதங்களைவணங்கிக் கைகள் கட்டிக்கொண்டுநிற்க பின்பு வேதங்கள் கொண்டாடுவதான திருக்கடவூர் அமுதகடேசுரர் மார்க்கண்டரைப்பார்த்து—எ-று. (௱௩௭)

எனதடியிணையைநெஞ்சி லிருத்துமார்க்கண்டாநீயு
முனதுதாய்தந்தைசுற்ற முரியநட்பினர்களோடு
மனகன்வாழ்கைலைசேர்ந்து மன்புடனிருப்பீரென்ன
மனமகிழ்ந்தரனைப்போற்றி வான்பதம்பெற்றாரன்றே.

(இ-ள்.) என்பாதங்களையே மனத்திலேகொண்டு தியானிக்கிற மார்க்கண்டா நீயும் உன்தாய் தகப்பன் பந்து தகுந்த நேசர்களுடனே பரிசுத்தனை எனது கயிலாசகிரிக்குப்போய் பத்தியுடனே இருக்கக்கடவாயென்று கிருபைசெய்ய அப்படியே மனமகிழ்ச்சியாய்க்கடவுளைத்துதித்துக் கொண்டுபோய் மேலான சிவகதியை யடைந்தார்கள்—எ-று. (௱௩௮)

இறையவனந்திகேசர்க் கியம்புவாரின்பமாக
மறைபலவுணர்ந்தஞான மார்க்கண்டமுனிவன்றன்னை
யறிவுடனினைத்தபேர்கட் கருட்கதிநாமேயீவோந்
துறவர்மாதவர்கள்ஞானச் சுகன்குகனறியத்தானே.

(இ-ள்.) பின்பு கடவுளானவர் நந்திதேவருக்குச் சொல்லுகிறார் சந்தோஷமாகப் பலவேதங்களும்தெரிந்த ஞானத்தையுடைய மார்க்கண்ட முனிவரை பத்தியுடனே தியானித்தவர்களுக்கு மேலான நமதருளான கதியை நாமேகொடுக்கக்கடவோம், துறவிகள்-பெரியதவசிகள் - ஞானமுள்ளசுகன்-முருகன்-இவர்களறிய—எ-று. (௱௩௯)

என்றுடன்கணங்கள்சூழ வெம்பிரான்விடையிலேறி
வென்றிசேர்கயிலைமீதில் வீற்றிருந்ததன்பின்வேதந்
துன்றுமாதவரோயிந்த மார்க்கண்டன் * சோமஸ்கந்தர்
தன்றுணைப்பாதஞ்சேர்ந்த கதைசிறிதறிந்துசொன்னோம்.

(இ-ள்.) என்று உடனே சிவகணங்கள்சூழ எமது கடவுள் இடபவாகனத்திலேறிக்கொண்டு வெற்றிபொருந்தின கயிலாசமலைக்கு மேலே போய் வீற்றிருந்தருளினார், பின்புவேதங்களெல்லாந்தெரிந்த மகாமுனி

* சோமஸ்கந்தரென்பது கடவுள் மூர்த்தங்களில் ஒன்று.

வர்களே இந்த மார்க்கண்டர் சோமஸ்கந்தருடைய இரண்டுபாதங்களை யும் சேர்ந்த சரித்திரத்தை நாம் சிறிதறிந்த அளவுசொன்னோம் இனி()

சித்தசன்றனையெரித்த தேவர்கோன்விளையாட்டெல்லா
மெய்த்திசைபடைக்கும்வேத னாவினாலியம்பலாமோ
வெற்றிமார்க்கண்டன்பெற்ற பேற்றினைவிரித்தோர்கேட்போ
ருத்தமராகிவெள்ளிக் கயிலையிலுறைவரன்றே.

(இ-ள்.) காமதகனரான தெய்வநாயகருடைய திருவிளையாட்டல்களை யெல்லாம் மெய்யாகக்கண்டு புகழ்பெற்ற பிரமாவினுடைய நாவாலே தானாவது தெரிந்துசொல்லக்கூடுமோ யமனை ஜெயங்கொண்ட மார்க்கண்டர்பெற்ற கதியைச்சொன்னவர்களும் கேட்டவர்களும் தோஷரஹிதர்களாய் வெள்ளிமலையாகிய கயிலாசத்திலேபோய் வாசஞ்செய்வார்கள்—எ-று. (௩௪௧)

கயிலைவாழ்பரமன்வாழி கடலிடைத்துயில்வோன்வாழி
அயிலுடைமுருகன்வாழி யைங்கரன்வாழிவேத
மியலுநான்முகனும்வாழி யிந்திரன்றேவர்வாழி
செயிரறுமுனிவர்வாழி சித்தர்பத்தர்களும்வாழி. (௩௪௨)

உமையவள்வாழிசெந்தா மரையுதித்தவளும்வாழி
யிமையவர்புகழும்வேத மியற்றிருமகளும்வாழி
சமையகோளரியும்வாழி சதுமறையவரும்வாழி
கமையுறுமரசர்வாழி காசினியெல்லாம்வாழி. (௩௪௩)

மாதமும்மாரிபெய்ய வளர்திருக்கடவூர்வாழி
ஆதவன்றிங்கள்வாழி யருமறைப்பொருளும்வாழி
கோதிலாவடியர்வாழி குருபரன்பாதம்வாழி
நீதிசேர்பெரியோர்வாழி யெனக்கருணிமலன்வாழி. (௩௪௪)

எமனை எழுப்பினசருக்கம்-முற்றிற்று.

ஆக - சருக்கம் - ௰ - க்கு - திருவிருத்தம் - ௯௭௭.

முற்றிற்று.

௨

# சருக்கஅட்டவணை.


| பக்கம். | | பாடற்றொகை. |
|---|---|---|
| ௧. | பாயிரம் ... ... ... ... ... ... ... ... | ௨௰ |
| ௮. | நாட்டுச்சருக்கம்... ... ... ... ... ... ... | ௨௫ |
| ௰௪. | நகரச்சருக்கம்... ... ... ... ... ... ... | ௨௧ |
| ௨௰. | மிருகண்டமாமுனிச்சருக்கம் ... ... ... ... | ௪௩ |
| ௩௨. | மிருகண்டேயர்தவநிலைச்சருக்கம் ... ... ... | ௯௯ |
| ௫௧. | மார்க்கண்டேயருற்பவச்சருக்கம் ... ... ... | ௭௪ |
| ௭௰. | மார்க்கண்டேயர்தவம்புரிசருக்கம் ... ... ... | ௩௮ |
| ௮௰. | யமன்தூதரைவிடுத்தசருக்கம் ... ... ... ... | ௪௮ |
| ௯௨. | நீலிகள்வருகிறசருக்கம் ... ... ... ... ... | ௪௮ |
| ௱௪. | யமன்வருகிறசருக்கம்... ... ... ... ... ... | ௱௪௭ |
| ௱௪௨. | யமனைஎழுப்பினசருக்கம்... ... ... ... ... | ௱௪௪ |


ஆக-பாயிரமுள்பட-சருக்கம்-௰-க்கு-திருவிருத்தம்-௯௭௭.

சருக்கஅட்டவணை-முற்றிற்று.

## விளம்பரம்.

தஞ்சைமாநகரம் கோட்டை வெளிகீழ்வாசல் கடைவீதியில்மேல்சிறகில் (௭௯) வது நெம்பருடையகடையில் புத்தக வியாபாரஞ்செய்யும் - ம-ா-ா- ஸ்ரீ-த - திருவேங்கடம்பிள்ளையினிடத்தில் தமிழ்-தெலுங்கு கிரந்தம் இங்கிலீஷ் முதலானதும், அகஸ்தியர்முதலானவர்கள் அருளிச்செய்த ஆயுள்வேதசாஸ்திரங்களும், சோழமகாராஜாநாடகமும் தமயந்திநாடகமும் மன்மதன் பெரியஒப்பாரியும், இந்தமார்க்கண்டபுராணம் மூலமுமுரையும் இன்னம் பலவிதபுத்தகங்களும் விற்பனைசெய்துவருகிறபடியால் வேண்டியவர்கள் விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாம்,

இப்படிக்கு

த-திருவேங்கடப்பிள்ளை.